
சாண்டில்யன்
ஜீவ பூமி
வானதி
பதிப்பகம்

ஜீவபூமி

(சரித்திர நாவல்)

சாண்டில்யன்

முகவுரை: பேராசிரியர்

கே.வி.ரங்கசாமி ஐயங்கார் அவர்கள்

வானதி பதிப்பகம்
13. தீனதயாளு தெரு
தி.நகர், சென்னை-17.

ஜீவபூமி

அத்தியாயம் 1

ரதன் சந்தாவத்

ரதன் சந்தாவத் ஸலூம்ப்ராவின் சிரிப்பு, அந்தக் கிருஷ்ணபக்ஷத்து இரவின் பயங்கரமான அமைதியைச் சரே லென்று கிழித்து, இடையிலிருந்த எவ்வளவோ இடைஞ்சல்களை ஊடுருவிச் சென்று, உதயசாகரத்தின் அலைகளின் இரைச்சலோடு கலந்துகொண்டது. அந்த இரவில் அவன் அவ்வளவு பலமாகச் சிரித்திராவிட்டால் இந்தக் கதை நிகழ்ந்தே இராது.

அவன் சிரிப்பைக் கண்டு அவன் கூடாரத்திலிருந்த ராஜபுத்திரர்கள், மிதமிஞ்சிய அச்சத்தால் பிரமித்து அசைவற்று நின்றார்கள். டேராவின் மூலையில் மூன்று ஈட்டிகளுக் கிடையில் கட்டப்பட்டு எரிந்துகொண்டிருந்த தீப்பந்தங்கூட, சிறிது பயப்பட்டதுபோல் ஜ்வாலையின் சலனத்தை ஒரு விநாடி நிறுத்திச் செங்குத்தாக எரிந்தது. வெளியே கூப்பிடுதூரம் வரையில் திட்டுத் திட்டாக நெருப்பை மூட்டிக் குளிர்காய்ந்து கொண்டிருந்த மொகலாயச் சிப்பாய்கள், ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள். ஆனால், ரதனுடைய பெயரை உச்சரிக்கமட்டும் ஒருவருக்கும் தைரியம் வரவில்லை. சிப்பாய்களில் சிலர் சற்றுத் தூரத்திலிருந்த இளவரசன் அக்பர் டேராவையும், சேனாதிபதி டைபர்கான் கூடாரத்தையும் தலைநிமிர்ந்து பார்த்தார்கள். அக்கம் பக்கத்தில் எரிந்து நின்ற பந்த ஜ்வாலைகளின் வெளிச்சத்தால், கூடாரத் துணிகளில் விழுந்திருந்த மரத்தின் இலைச் சித்திரங்கள் காற்றால் மெள்ள அசைந்துகொண்டிருந்தனவே யொழிய வேறெந்தச் சலனத்தையும் அந்த கூடாரங்களில் காணோம்.

எந்த இடத்திலும் எந்தவிதமான சத்தமும் கிடையாது. கிருஷ்ணபக்ஷத்து இருள் முற்ற முற்ற, மொகலாய சைன்னியத்தின் ஆபத்தும் முற்றுகிறதென்பதை அறிந்த சேனாதிபதி டைபர்கான், இரவில் எத்தகைய சப்தமும் கேட்கக் கூடாதெனக் கண்டிப்பாக உத்தரவிட்டிருந்தான். உதயசாகரத்தின் அலைகள் நீங்கலாக, இயற்கையின் இதர அம்சங்களும் அவனுடைய உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதாகத் தோன்றின. தூரத்தில் சரேலென்று உயரமாய், பயங்கரமாய் எழுந்த ஹாராவளி மலை உச்சிகள் கூட, மொகலாய சைன்னியத்தில் நடப்பதை அறிய ஆவலுள்ளவைபோல் நிசப்தமாக நின்று கொண்டிருந்தன.

இப்பேர்ப்பட்ட சூழ்நிலையில் ரதன் சிரித்ததை யார்தான் ரஸிக்க முடியும்? குளிர்காய்ந்து கொண்டிருந்த சிப்பாய்களில் ஒருவன், ''இவனை அடக்க நவாப்புக்கு கூடத் தைரியம் வரவில்லையே'' என்றான். மற்றொரு சிப்பாய் பதில் சொல்ல வாயெடுத்தான். ரதன் மீண்டும் சிரித்த பயங்கரச் சிரிப்பு சிப்பாயின் திறந்த வாயை அப்படியே ஸ்தம்பிக்கச் செய்துவிட்டது.

ரதனின் கூடாரத்திலிருந்தவர்கள் தங்கள் தைரியத்தை மெள்ள வரவழைத்துக்கொணடு, தங்களுக்குள் குசுகுசுவென்று பேசிக்கொள்ள ஆரம்பித்தார்கள். ரதன் தன்னுடைய காலில் இருந்த அராபியச் செருப்புக்களைக் கீழே ஊன்றி ஆசனத்தைக் கூடாரத்தின் நடுத் தூணில் சாய்த்துத் தானும் சாய்ந்துகொண்டான். ஓரத்தில் எரிந்து கொண்டிருந்த பந்தத்தின் ஜ்வாலையில் அவனுடைய இரண்டு கண்களும் இரண்டு ஈட்டிகளென ஜ்வலித்தன. தன்னைச் சுற்றிலும் சூழ்ந்திருந்தவர்களின் முகத்திலிருந்த பயச் சாயையைக் கண்டு, சற்று நேரத்துக்கு முன் சிரித்த அவன் உதடுகள் ஒன்றுசேர்ந்து ஒரு வெறுப்பையும், உள்ளடங்கியிருந்த கோபத்தையும் காட்டின.

அந்தக் கூடாரத்தில் சுமார் இருபது ராஜபுத்திர வீரர்கள் இருந்தார்கள். அவர்களில் ஒருவன் கூட, ரதன் சந்தாவத்தின் ஹாஸ்யத்தில் கலந்துகொள்ள இஷ்டப்பட வில்லை. சிரிப்பதற்கும்

சமய சந்தர்ப்பம் உண்டல்லவா? அபாயமான நிலையில் அசந்தர்ப்பமாகச் சிரித்தால் அதனால் ஏற்படும் விளைவுகளைப் பற்றி யோசிக்க வேண்டாமா? இந்த யோசனைதான் கூடாரத்திலிருந்த மற்ற வீரர்களுக்குப் பயத்தையும் சஞ்சலத்தையும் விளைவித்தன. சேனாதிபதி டைபர்கான் எவ்வளவு முரடன், அவன் கட்டளையை மீறினால் அவன் குரூரம் எந்த எல்லைக்குச்செல்லும் என்பதை அந்த வீரர்கள் அறிந்திருந்தார்கள். மொகலாயப் படையிலிருந்த சொற்ப ராஜபுத்திரர்களை ஒழிக்க டைபர்கான் ஏதாவது ஒரு காரணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான் என்பதும் அந்த வீரர்களுக்குத் தெரிந்தே இருந்தது.

இந்த நிலையில் டைபர்கான் உத்தரவை மீறி ரதன் சிரித்ததே அபாயம். அதுவும் டைபர்கான் அடைந்த ஒரு தோல்வியைப் பற்றிச் சிரித்தது அபாயத்திலும் அபாயம்!

ஆகவே ரதனிடம் நீண்ட நாளாக ஊழியம் புரிந்து வந்த மோஹன்தாஸ் அவனை மெள்ளப் பின்புறமாக அணுகி, ''ரதன் மஹராஜ்'' என்றான்.

''என்ன மோஹன்தாஸ்?''

''நாமிருக்கும் நிலையில் தாங்கள் இவ்விதம் பகிரங்கமாக டைபர்கானைப்பற்றி பேசிச் சிரிப்பது யுக்தமல்ல.''

''என்ன நிலை அது?''

''அபாயமான நிலை, மொகலாய சைன்னியத்தில் நமது படை ஒரு சிறுபிரிவு. சமயம் கிடைத்தால் அதை அழிக்க டைபர்கான் தயங்கமாட்டான்.''

''நமக்குச் சாமர்த்தியமிருந்தால் அவனுக்குச் சமயம் எப்படிக் கிடைக்கும்?''

இந்த கேள்விக்கு என்ன பதில் சொல்வதென்று மோஹன்தாஸுக்குத் தெரியவில்லை. அவன் விழிப்பதைக் கண்டு ரதனுடைய உதடுகள் புன்சிரிப்பால் இடைவெளி கொடுத்தன.

ஜெய்ஸிங் என்ற மற்றொரு வீரன் ரதன் சந்தாவத்துக்குப் பதில் சொன்னான்.

''ரதன்! வெறும் சாமர்த்தியம் மட்டுமிருந்தால் பிரயோசனமில்லை. எந்த காரியத்திற்கும் சமயோசித புத்தியும் வேண்டும். இப்பொழுது உன்னை டைபர்கானோ அக்பரோ இஷ்டப்பட்டால் அதை யார் தடுக்க முடியும்?'' என்றான்.

''நமது கத்தி தடுக்கமுடியும் ஜெய்சிங். உயிரை உடம்புக்குள் நிரந்தரமாகச் சிறை வைத்திருக்க இஷ்டப்படும் பயங்காளிகளை அக்பர் சிறைப்படுத்த முடியுமே தவிர, .ம்பிலிருந்து உயிருக்கு விடுதலை அளிக்கத் தயாராக இருக்கும் எந்த ராஜபுத்திரனையும் இந்த அக்பரல்ல, அவன் தகப்பனார் ஔரங்கசீப்பல்ல, யாராலும் சிறை செய்ய முடியாது. வரவர இவர்கள் ஜயத்திலும் எனக்கு நம்பிக்கை போய்விட்டது. ராஜபுத்திரர்கள் மொகலாயர்களைத் தாக்கத் தயங்கியதைக் கண்டு வெறுத்து இவர்களோடு சேர்ந்தேன். இவர்கள் பயத்தைப் பார்த்தால் இந்த ஜன்மத்தில் யுத்தம் கிடையாது போலிருக்கிறதே. சே!'' என்று அலுத்துக் கொண்டான் ரதன்.

''யுத்தம் ஏற்படவில்லை என்பதற்காக டைபர்கானை வலுச்சண்டைக்கு இழுத்துப் பிராணனை விடலாமென்று பார்க்கிறீர்களா, ரதன் மஹராஜ்! அதற்கு இப்படிச் சிரித்துச் சிப்பாய்களைக் கிளப்ப வேண்டிய அவசியமில்லையே. நேராகவே டைபர்கானைக் கூப்பிட்டுத் தாக்கலாமே'' என்றான் மோகன்தாஸ்.

''டைபர்கானை நினைத்தாலே உன் பிராணன் போய்விடும் போலிருக்கிறதே மோஹன்தாஸ்! நீங்கள் ராஜபுத்திரமரபில் எப்படிப் பிறந்தீர்கள்? ஆனால் இந்த அக்பரின் பெரிய பாட்டனார் அந்த பெரிய அக்பர் இருந்தானே, அவன் காலத்துக்குப் பிறகுதான் யார் உண்மை ராஜபுத்திரன், யார் இரண்டுங்கெட்டான் என்பது தெரியாமல் போய் விட்டதே'' என்று ரதனுடைய உதடுகள் முணுமுணுத்தன.

மோஹன்தாஸின் கை, வாளை நோக்கிச்சென்றது. ஜெய்ஸிங் அவன் கையைப் பிடித்துத் தடை செய்துவிட்டு, ரதன் தோள்மேல் மற்றொரு கையைக்கொடுத்து ஓர் உலுக்கு உலுக்கி ''நீ அதிகமாகக் குடித்திருக்கிறாய், ரதன்'' என்றான்.

''நான் என்ன செய்யட்டும் ஜெய்ஸிங்! மொகலாயர் பெண்களைத் தேர்ந்தெடுப்பது போலவே, மதுவிலும் சிறந்ததையே தேர்ந்தெடுக்கிறார்கள்'' என்று சொல்லிக் கொண்டே, கையிலிருந்த கல்லிழைத்த தங்கக்கிண்ணத்தில் கொஞ்ச நஞ்சமிருந்த மதுவையும் பருகிவிட்டு, அதைக் கூடாரத்துக்கு வெளியே விட்டெறிந்தான்.

நிலவொளியில் பளபளவென பிரகாசித்துக்கொண்டு ஓடிய அந்தக் கிண்ணத்தை உற்றுப் பார்த்துக்கொண்டே இருந்த ரதன், தன் கண்களை மீண்டும் ஜெய்சிங்கை நோக்கித் திருப்பி, ''இந்த வீண் பேச்சு எதற்கு? டைபர்கான் ஜெய்மல் ஸிம்ஹனுக்குப் பெண் பேசிய விஷயம் என்னவாயிற்று? அதைச் சொல். பாதியில் நிறுத்தி விட்டாயே'' என்று கேட்டு இதுவரையில் எதுவுமே நடக்காதது போல ஆசனத்தில் சாய்ந்துகொண்டான்.

மேலே ஏதோ பேசப்போன ஜெய்ஸிங்கை மோஹன்தாஸ் இடைமறித்து, ''வேண்டாம், ஜெய்ஸிங்! நீங்கள் அந்தக் கதையை ஆரம்பித்துத்தான் ரதன் மஹராஜ் சிரிக்க ஆரம்பித்தார்கள். இந்தச் சிரிப்பினால் இதுவரையில் என்ன ஆகியிருக்குமோ, சொல்ல முடியாது. ராஜபுத்திரர் யாரிடத்திலும் டைபர்கானுக்கு நம்பிக்கையில்லை. நம்மைச் சுற்று முற்றும் வேவு பார்க்கத் தன் ஆட்களை நியமித்திருப்பது எனக்குத் தெரியும். எந்த ஒற்றன் இதற்குள் என்ன சொல்லிவிட்டானோ, எந்த நிமிஷத்தில் டைபர்கான் இந்தக் கூடாரத்தைச் சூழ்ந்து எரித்து விடுவானோ, சொல்ல முடியாது. ஜெய்மல் ஸிம்ஹன் பெண் கேட்கப் போய்த் தோல்வி அடைந்து திரும்பி வந்ததைத் தன் சொந்தத் தோல்வியாகவே டைபர்கான் நினைக்கிறான். இந்தத் தோல்வி யின் காரணமாக நேற்று முழுவதும் நவாப் அக்பர், டைபர்கானுடன்

பேசவே இல்லையாம். ஆகவே ஜெய்மல் ஸிம்ஹன் கல்யாண விஷயத்தைப் பற்றி நீங்கள் தர்க்கம் செய்வதும், சிரித்துக் கூத்தடிப்பதும் அவ்வளவு கெட்டிக்காரத்தனமாக எனக்குப் படவில்லை. பிறகு உங்கள் இஷ்டம்'' என்றான்.

''மோஹன்! நான் சிரித்தாலே நீ பயப்படுகிறாய். ஆனால் நீ சொல்கிற விஷயம் எப்படியிருக்கிறது பார்! ஜெய்மல் ஸிம்ஹனுக்குக் கல்யாணமாகாவிட்டால் டைபர்கான் அவமானப் படுவானேன்? இந்த அக்பர்தான் கோபிப்பானேன்?''

''இது சாதாரணக் கல்யாணமல்ல ரதன். யுத்தத்துக்காகக் கல்யாணம்'' என்று ஜெய்ஸிங் விளக்கினான்.

''கல்யாணத்திற்காக யுத்தம் செய்வதைப் பாரதத்தின் சரித்திரத்தில் படித்திருக்கிறேன். பிருத்விராஜன் ஸம்யுக்தைக் காகச் சண்டையிட்டான். இன்னும் அநேக ராஜபுத்திரர்கள் பெண் களைத் தூக்கிக்கொண்டு போகச் சண்டை போட்டதுண்டு. ஆனால் சண்டைக்காகக் கல்யாணம் செய்து கொள்ள முயல்வதை ராஜபுதனத்தில் நான் கேள்விப்பட்டதில்லையே'' என்று ரதன் சொன்னான்.

ஜெய்ஸிங்கின் இதழ்களில் புன்முறுவல் தோன்றிற்று. ''ரதன்! நீ சுத்தவீரன். ஆனால் சரித்திர ஞானத்தில் சுத்த முட்டாள். மொகலாயர்கள் சண்டையில் ஜெயிக்கக் கல்யாணம் செய்து கொள்வதுண்டு. அந்தப் பெரிய அக்பர் அம்பர் ராஜகுமாரியை மணந்துகொண்டார். அம்பர் ராஜபுத்திரர்கள் மொகாலயர்களுடன் சேர்ந்துகொண்டார்கள். பிள்ளைக்கு இன்னொரு ராஜபுத்திர ஸ்தீரியை மணம் செய்வித்தார். மற்றும் சில ராஜபுத்திரர்கள் அடிமையானார்கள்...''

ரதன் தன் இரு கைகளாலும் முகத்தை மூடிக்கொண்டான். ''போதும் ஜெய்ஸிங்! போதும் உன் சரித்திர ஞானம்! இந்த அவமானத்தை வாய்விட்டு வேறு சொல்லவேண்டுமா? இதைவிட ஜெய்மல் ஸிம்ஹன் கல்யாணத்தைப்பற்றிச் சொல்'' என்றான்.

''ரதன்! விஷயத்தைச் சொல்ல ஆரம்பித்தபோதே நீ சிரித்தாய். சிரிக்காதிருப்பதானால் சொல்கிறேன்'' என்றான் ஜெய்ஸிங்.

''சரி, சொல்.''

ஜெய்ஸிங்கும் மற்றுமுள்ள ராஜபுத்திரர்களும் ரதனுக்கு அருகில் வந்து உட்கார்ந்து கொண்டார்கள். ஜெய்ஸிங், பாட ஆரம்பிக்கும் சங்கீத வித்வான் போலத் தொண்டையைச் சிறிது கனைத்துக்கொண்டான். ''டேய், யாரங்கே! இன்னும் கொஞ்சம் மது கொண்டு வா'' என்று ரதன் கூவினான். கூடாரத்துக்குள்ளிருந்து இரண்டு அடிமைப்பெண்கள் தட்டுகளில் தங்கக்கிண்ணங்களை ஏந்தி வந்தார்கள். ஒவ்வொரு ராஜபுத்திரனும் ஒவ்வொரு கிண்ணத்தை எடுத்துக்கொண்டனர். ஜெய்ஸிங் மதுவைச்சிறிது உறிஞ்சிவிட்டு, ஜெய்மல் ஸிம்ஹனின் கதையைச் சொல்ல ஆரம்பித்தான்.

''ஜெய்மல் ஸிம்ஹன் டைபர்கானின் கையாள் என்பது தான் உங்களுக்குத் தெரியுமே. அவனை ஆயுதமாக வைத்துக் கொண்டு ராஜபுதனத்தை இரண்டாக வெட்டிவிட டைபர்கான் ஒரு சூழ்ச்சி செய்தான். சுமார் பதினைந்து நாட்களுக்கு முன்பு நடந்த கதை இது. உதயசாகர் ஏரியின் அழகைப் பருகிக்கொண்டே நான் அதன் கரையோரமாக நடந்துகொண்டிருந்தேன். எனக்கு முன்னால் டைபர்கான், அக்பரின் வசைமொழிகளைப் பருகிக்கொண்டே போய்க்கொண்டிருந்தான். தன் தகப்பனார் ஔரங்கசீப் தன்னை ராஜபுத்திரர்களோடு போராட விட்டு ஆஜ்மீருக்கு ஓடி விட்டதைப் பற்றி அக்பர் அசாத்தியக் கோபத்தில் இருந்தான்.

''அக்பரின் வசைமொழிகள் டைபர்கான் மூளைக்கு விசை கொடுத்துத் திருகியிருக்க வேண்டும். இல்லாவிடில் இந்தத் துணிவான யோசனை டைபர்கானுக்கு வர நியாயமே இல்லை....''

''வளர்த்தாதே யோசனையைச் சொல்'' என்றான் ரதன்.

'பொறு, ரதன். அவர்கள் சம்பாஷணையை அப்படியே சொல்கிறேன் கேள்: 'நவாப்! ஒரு பெண் மனம் வைத்தால் நமது கஷ்டம் விடிந்துவிடும்' என்றான் டைபர்கான். 'யார், அந்தப் பெண்? அவளால் நமது கஷ்டம் எப்படி விடியும்?' என்று அக்பர் கேட்டான். 'நவாப்! சித்தூர் மந்திரி தயால்ஸாவை ஏராளமான ராஜ புத்திரர்கள், கண்மூடித்தனமாய்ப் பின்பற்றுகிறார்கள். ஆனால் தயால்ஸாவின் பிராணனெல்லாம் அவன் தங்கையின் பெண் அகிலாதேவியின் மேல்தான். அவளுக்காக தயால்ஸா எதையும் செய்யத் தயார். அவள் நம் பக்கம் கண்ணைத் திருப்பினால் தயால்ஸாவும், அவனைச் சேர்ந்த ராஜபுத்திரர்களும் நமது பக்கம் திரும்பி விடுவார்கள். ராஜபுதனம் இரண்டு பட்டுவிடும். பிறகு வெற்றி நமது கட்சிக்குத்தான்' என்றான்.

''இதைக்கேட்ட அக்பரின் கண்களில் சிறிது நம்பிக்கை ஒளி வீசியதை மங்கலான அந்த வெளிச்சத்திலும் நான் பார்க்க முடிந்தது. ஆனால் மறுபடியும் அந்த நம்பிக்கை மறைந்து விட்டது. அக்பரின் கோபம் பன்மடங்காகி விட்டது...''

'எதற்காகக் கோபம்?'' என்றான் மோஹன்தாஸ். ''அக்பரின் வாயாலேயே சொல்கிறேன், கேள்: 'டைபர்கான்! கொக்கின் தலை யில் வெண்ணெயை வைத்தால் அதைப்பிடித்து விடலாம் என்று கண்டுபிடித்துவிட்டாய். ஆனால், வெண்ணெயை எப்படி வைப்பது என்பதைப்பற்றி யோசித்தாயா?' என்று அக்பர் மிகுந்த கோபத்துடன் கேட்டார். 'நவாப்! அவசரப்பட வேண்டாம், நமது ஜெய்மல் ஸிம்ஹன் அகிலாதேவிக்கு மாமன் முறையாக வேண்டும்' என்று டைபர்கான் விளக்கினான். அக்பருக்கு அப் பொழுதுதான் விஷயம் விளங்கிற்று. ஜெய்மல் ஸிம்ஹனை அனுப்பி, பெண்ணை வசப்படுத்தி விடலாம் என்று டைபர்கான் திட்டம் போட்டான். பிள்ளையார் பிடிக்கப் போய்க் குரங்காக முடிந்தது அந்தத்திட்டம். ஜெய்மல்ஸிம்ஹனின் முகத்தைப் பார்க்கவும் அகிலாதேவி மறுத்துவிட்டாள். திரும்பி ராஜபுதன எல்லைக்குள் வந்தால் அவன் தலைதப்புவது சாத்தியமல்ல என்ப

சம்மதம் தெரிவித்துவிட்டாளாம். மாமன் முறையை உத்தேசித்து இந்த ஒரு முறை அவனை மன்னித்ததாகச் சொன்னாளாம்...''

ரதன் இதழ்களில் புன்முறுவல் தவழ்ந்தது. ''கல்யாணம் மிகவும் ஆபத்தான விஷயம் '' என்றான்.

''அது மாத்திரமா? இன்னும் கேள் ரதன். பெண்வேட்டை முடிந்தது மற்றொரு ஆபத்திலும் வந்து சேர்ந்திருக்கிறது. தயால்ஸா தனது பெரும் படையுடன் மால் வாவிலுள்ள முஸ்லீம் படைகளையெல்லாம் ஹதம் செய்து விடுகிறேனென்று பிரதிக்ஞை செய்திருக்கிறானாம்'' என்றான் ஜெய்சிங்.

ரதன் இந்த முறை லேசாகச் சிரித்தான். ''அடகிரகசாரமே! குதிரை குப்புறத் தள்ளியதுமல்லாமல் குழியையும் பறித்த கதையாக இருக்கிறதே. இந்த ஜெய்மல் ஸிம்ஹன் நிரந்தரமாக விநாயகராக இருக்க வேண்டியவன். ஒரு பெண்ணை வசப்படுத்த முடியாதவன் எந்தக் காரியத்தைதான் செய்யப்போகிறான்? அந்தப் பெண் இஷ்டப்படாவிட்டால் அவளைத் தூக்கிக்கொண்டு வந்து விடுவதுதானே?''

''அதற்கும் பிரயத்தனம் செய்தானாம். ஆனால் அந்த பெண் பலேபேர்வழி என்று தோன்றுகிறது. இவன் தூக்கிக் கொண்டு போய்விடுவதாகப் பயமுறுத்தியவுடன் இவனுக்கு இணங்கி விடுவதாகப் பாசாங்கு செய்து தோட்டத்திலிருந்து மெள்ள அரண்மனைக்காக அழைத்துச் சென்று நாலைந்து வீரர் களை விட்டு ஜெய்மல் ஸிம்ஹனைக் குண்டுக்கட்டாகக் கட்டித் தூக்கிக் கோட்டை மதிலுக்கு வெளியே எறியும்படி உத்தர விட்டாளாம். அந்தச் சமயத்தில் அவள் கோபத்தைக் கண்டு அஞ்சிய ஜெய்மல் ஸிம்ஹன், கெஞ்சிக் கூத்தாடித் தப்பி ஓடி வந்தானாம்..'' என்ற ஜெய்ஸிங்கின் பேச்சை ''அது தவறு ஜெய்ஸிங்'' என்ற சொற்கள் இடையே புகுந்து வெட்டின. தங்கத் தாம்பாளங்களைப் பிடித்திருந்த அடிமைப் பெண்கள் கை நடுங்கித் தாம்பாளங்களைக் கீழே போடவே, அதிலிருந்து

கிளம்பிய சப்தம் இரவின் அமைதியை மின்னல் போல் வெட்டிக் கலைத்தது. எல்லோர் கண்களும் அந்தச் சொற்கள் வந்த திக்கை நோக்கித் திரும்பின. கூடாரத்தின் வாயிலில் ஜெய்மல் ஸிம்ஹன் நின்றுகொண்டிருந்தான்.

கூடாரத்திலிருந்த ராஜபுத்திரர்கள் முகங்களிலும் சரி, இரு அடிமைப் பெண்களின் முகங்களிலும் சரி, பயத்தின் சாயை தாண்டவமாடியது. ரதன் சந்தாவத்தின் முகத்தில் மட்டும் எத்த கைய மாறுதலும் இல்லை. கூடாரத்தின் தூணில் முட்டுக் கொடுத்த ஆசனத்தைச் சிறிது உல்லாசமாக அசக்கிக் கொண்டே, "ஜெய்ஸிங் சொன்னது தவறானால் உண்மை என்ன ஜெய்மல்?" என்று கேட்டான்.

"அவள் கோபத்தைக்கண்ட இந்த ஜெய்மல் பயப்பட வில்லை."

"பின் எதைக் கண்டு பயப்பட்டாய்?" என்று ரதன் குரலில் இகழ்ச்சி தோன்றக் கேட்டான்.

"அவள் தூய்மையைக் கண்டு பயப்பட்டேன். தெய் விகமான அவள் அழகுக்கு அஸ்திவாரமான அவள் தூய்மைதான் என் உறுதி, வீரம் அனைத்தையும் குலைத்துவிட்டது." என்றான் ஜெய்மல்.

"கையாலாகாதவனுக்குக் காரணம் பத்தாயிரம் என்ற பழமொழி சரியாயிருக்கிறது ஜெய்மல். பெண்களுக்குத் தூய்மையாவது! தூய்மையிருந்தா ராஜபுதனம் சுமார் இருநூறு வருஷங்களாக அடிமைப்பட்டுக் கிடக்கிறது? பெண்கள் தூய்மை யெல்லாம் புராணங்களில்தான் இருக்கிறது.நமது நவாபின் அந்தப் புரத்தையும், இந்தக் குட்டி நவாப் அக்பரின் ஆயிரக்கணக்கான ராஜபுத்திர மனைவிகள் ஜஹாங்கீர் சம்சாரங்கள் இவர்களை யெல்லாம் பார்த்தும் கேட்டுங்கூட இன்னும் ஸ்திரீகளின் தூய்மை யில் நம்பிக்கை ஏற்பட வேண்டுமா ஜெய்மல்? உன்னைப் பார்த்தால் அகிலா தேவிக்குப் பிடிக்கவில்லை. உனக்கு சாமார்த் தியம் இல்லை. இதை ஒப்புக்கொள்ள ஏன் வெட்கப்படுகிறாய்?" என்று சொல்லிச் சிரித்தான் ரதன்.

"ரதன்! இங்குள்ள பெண்களைப் பார்த்து பாரத வர்ஷத்தை முடிவு செய்யாதே. நீயும் நானும் நிற்கும் இடம் ஜீவபூமி."

"ஜீவபூமியா?"

"அர்த்தம் புரியவில்லையா ரதன்? ஜீவநதியென்று கேள்விப்பட்டிருக்கிறாயா?"

"கேள்விப்பட்டிருக்கிறேன்."

"ஜீவபூமியும் இப்படிப்பட்டதுதான். ஜீவநதி மேலே மணல் பாங்காக இருக்கும். ஆனால் மணலைத் தள்ளினால், அந்தர் வாஹினியாக இருந்துவரும் அமிருத ஜலம் கிடைக்கும். இந்த ராஜபுதனம் எவ்வளவோ கெட்டிருக்கலாம்.

எவ்வளவோ ராஜபுத்திர ஸ்திரீகள் கற்பிழந்து இருக்கலாம். எவ்வளவோ ராஜபுத்திரர்கள் உன்னையும் என்னையும் போல் அடிமைகளாகச் சேவகம் செய்யலாம். இவற்றால் கற்பும் சுதந்திர உணர்ச்சியும் செத்துக்கிடப்பதாக நினைக்கலாம். ஆனால் ஊடுருவி ஆழ்ந்து கவனித்தால் இந்தப் புண்ணிய பூமியின் மூலை ஏதாவதொன்றில், கற்புக்கரசிகள் எப்பொழுதும் இருப்பார்கள். அடிமையாவதைவிட சுதந்திரத்திற்கு போரிட்டு மடிவதையே விரும்பும் வீரர்கள் எப்பொழுதும் இருப்பார்கள். அந்த மாதிரி பாரத மக்களின் ஜீவன் இந்தப்பூமியில் நடமாடும்வரையில், இது உணர்ச்சி செத்த பூமியல்ல. ஜீவபூமி. சித்தூர் ராணா ராஜஸிம்ஹன் இதற்கு ஓர் உதாரணம். அதற்கு அடுத்த உதாரணம் தூய்மையே உருவாய் அமைந்த அகிலாதேவி. அவள் நம்மைப் போன்ற வர்களுக்கு ஏற்பட்டவளல்ல ரதன். அவளை நாம் ஜெயிக்க முடியாது. ஜயித்து அடையவும் முடியாது" என்றான் ஜெய்மல்.

"நாம் என்று பொதுப்படையாகச் சொல்லாதே ஜெய்மல். நான் உன்னைப் போன்றவனல்ல; கோழையல்ல" என்றான் ரதன்.

"அப்படியானால் உஜ்ஜயினிக்குச் சென்று ஒரு கை பார்ப்பதுதானே! டைபர்கானுக்கும் சந்தோஷமாயிருக்கும்" என்று சிரித்தான் ஜெய்மல்.

"நாளைக்கே புறப்படுகிறேன். அவ்வளவு அழகியை பார்க்காமலிருப்பது நியாயமல்ல" என்று சொல்லிவிட்டு ரதன் தன் ஆசனத்தை விட்டு எழுந்தான்.

"எங்கே அவ்வளவு அவசரமாகப் பயணம்?" என்று கேட்டுக் கொண்டே மொகலாய சேனாதிபதி டைபர்கான் கூடாரத்திற்குள் நுழைந்தான்.

அத்தியாயம் 2

டைபர்கானின் அபயம்!

மேவார் மண்மீது நின்று 'நாம் இப்பொழுதிருப்பது ஜீவபூமி' என்று ஜெய்மல் சொன்னது முற்றிலும் உண்மை. பாரத பூமியின் பெரும் பாகம் மொகலாய சாம்ராஜ்யத்தில் சிக்கி அடிமைப்பட்டுச் செயலற்றுக் கிடந்த காலத்தில், இந்தியாவின் இருதய ஸ்தானத்தில் இருந்துவரும் ராஜபுதனம் மட்டும் துடித்துக் கொண்டுதானிருந்து. அந்த இருதயத் துடிப்பிலிருந்து கிளம்பிய ரத்த வேகம், பாரதத்தாயின் மற்ற அவயவங்களிலிருந்து பாய்ந்து ஜீவசக்தியை அளிக்க ஆரம்பித்தது.

இந்தக் கதை ஆரம்பிக்கும் காலத்தில், பாபர் அஸ்திவாரம் போட்டு, அதன்மேல் அக்பர் எழுப்பிய மொகலாய சாம்ராஜ்ய அரண்மனையை, மேவார் ராணா ராஜஸிம்ஹன் தவிடு பொடியாக்கிக் கொண்டிருந்தான். அவன் தலைமையில் ராஜ புதனம் மீண்டும் எழுந்து புரட்சி செய்ய ஆரம்பித்தது. அக்பர் காலத் தில் ராஜபுத்திரர்கள் மொகலாய ராஜ்யத்தின் தூண்களாக நின்று கொண்டிருந்தார்கள். ஔரங்கசீப் காலத்தில் அந்தத்தூண்கள் விலகிவிட்டன. சாம்ராஜ்யம் ஔரங்கசீப்பின் தலைமேல் இடிந்து விழ ஆரம்பித்தது. மொகலாய சக்கரவர்த்தி ஆரியவர்த்தத்தின் பல பாகங்களிலும் ஏராளமான எதிரிகளுடன் யுத்தம் செய்யும்

பாக்கியத்தைப் பெற்றான். ஆனால் அவன் கோபம் பூராவும் மேவார் ராணா ராஜஸிம்ஹன் மேலேயே லயித்திருந்தது.

பாலைவனத்துப் புஷ்பம் என்று பிரசித்தி பெற்ற ரூபநகர் இளவரசியைத் தன் கைக்குக் கிட்டாமல் ராஜஸிம்ஹன் அடித்துக்கொண்டு போனதிலிருந்து, ராணாவை ஒழிக்காமல் தூங்குவதில்லையென ஔரங்கசீப் சபதம் செய்தான். அவன் சபதத்தில் ஒரு பாதி பலித்தது. அதாவது அன்று முதல் தூங்க முடியவில்லை. மேவாரின்மேல் படையெடுத்த நாட்கள் முதல் அந்திம காலம்வரை போரிட்டே ஔரங்கசீப் மடிய நேரிட்டது.

ராஜஸிம்ஹனை முறியடிக்கப்போய் ஔரங்கசீப் அடைந்த தோல்வி சாமான்யமானதன்று. ராஜஸிம்ஹன் ராஜபுத்திரப் படைகளைப் பல பகுதிகளாகப் பிரித்து ஹாராவளி மலைத் தொடரின் பல உச்சிகளில் நிறுத்தினான். ஹாராவளிக்குள் மொகலாயர்களைப் புகவிட்டுப் பிறகு மலைக்கணவாய்களை அடைத்து உள்ளே மடக்கிக்கொண்டு நிர்மூலப்படுத்தத் தொடங்கினான். இந்த யுத்தங்களில் ஔரங்கசீப் தொடர்ச்சியாகத் தோல்விகளையே அடைந்து வந்தான். மேவார் சேனாதிபதியான ஸவால்தாஸிடமிருந்து உயிருக்குத் தப்பி ஆஜ்மீருக்கு ஓடிய ஔரங்கசீப் தன் பிள்ளை அக்பரையும் டைபர்கானையும் உதயசாக ரத்தின் கரையில் தங்கும்படி உத்தரவிட்டுச் சென்றான்.சீக்கிரம் உதவி அனுப்புவதாகவும் தைரியம் சொல்லிப்போனான்.

உதயசாகரத்தில் கூடாரமடித்துத் தங்கியுள்ள அக்பரின் சைன்னியம் எந்த நிமிஷத்திலும் தாக்கப்படும் நிலையிலிருந்தது. இந்தச் சமயத்தில் மேவாரின் மந்திரியான தயால்ஸாவின் சைன்னியம் சாரங்கபுரி, தேவாஸ் முதலிய நகரங்களைக் கைப்பற்றி, உஜ்ஜயினியில் முகாம் செய்திருப்பதாக அக்பருக்குத் தகவல் கிடைத்தது. அக்பர் நடுங்கினான். ஆனால் அவன் சேனாதிபதி டைபர்கான், 'எப்படியும் நாம் ஜயித்துவிடலாம்' என்று இளவரசனுக்குத் தைரியம் சொன்னான்.

மொகலாய படைகளின் சேனாதிபதி டைபர்கான் சாமான்ய மானவனல்ல. அநேக யுத்தங்களில் சைன்னியங்களை நடத்திப் பிரசித்தி பெற்றவன். ஒரு மனிதனைப் பார்த்தவுடனேயே அவன் யோக்கியதையை நிர்ணயிக்கக் கூடிய சக்தி உள்ளவன். தைரியத்தோடு, யுத்த தந்திரமும் நன்றாகக் கைவரப்பெற்றவன். யாருக்கும் பயப்படாதவன். அப்பேர்ப்பட்ட டைபர்கானே ரதன் சந்தாவத் ஸலூம்ப்ராவைக் கண்டு சிறிது பயந்தான். ரதன் சிசோதயர்களின் கிளையான சந்தாவதர்களின் வம்சத்தில் பிறந்தவன். அந்த வம்சத்தின் மூதாதையான ஸலூம்ப்ராவின் பெயரையும் இணைத்தே ராஜபுத்திரர்கள் அவனை அழைத்து வந்தார்கள்.

பயமே உடம்பில் சிறிதும் இல்லாத மனிதன் உலகத்தில் எவனாவது உண்டென்றால் அத்தகைய ஒருவன் ரதன் சந்தாவத் ஸலூம்ப்ராதான். அபாயமான வேலைகளைத்தேடிச் செல்வதிலேயே ரதன் தன் காலத்தை செலவிட்டு வந்தான். ஔரங்கசீப் மூன்று வருஷங்களுக்கு முன்பு மேவாரை அழித்த சமயத்தில், ராஜபுத்திரர்களின் பயங்காளித்தனத்தைக் கண்டு கோபங்கொண்டு, டைபர்கான் படையில் வந்து சேர்ந்து கொண்டான். அவன் வந்த நாளாக டைபர்கானுக்கு மனநிம்மதியில்லை. பிரதி தினம் மொகலாயப் படைத் தலைவர்களுடன் ஏதாவது ஒரு சண்டையை ரதன் விலைக்கு வாங்கிக் கொள்வான். இவனை நம்பி இவனுடன் வந்த மொகலாய சைன்னியத்தில் சேர்ந்த ஜெய்ஸிங், மோஹன்ஸிங் முதலிய ராஜபுத்திரர்கள் இவனால் தங்கள் தலைக்கும் தீம்பு வந்தால் என்ன செய்வதென்று பயந்தார்கள்.

ரதன் அடிக்கடி மிதமிஞ்சிக் குடிப்பதும், அவன் நிர்ப்பயமாக இரைந்து மொகலாய சிப்பாய்களை பழிப்பதும், பரிகசித்துச் சிரிப்பதும் என்றோ ஒரு நாள் பெரிய ஆபத்தில் கொண்டு போய் விடும் என்று டைபர்கான் படையிலிருந்த மற்ற ராஜபுத்திரர்கள் பயந்தார்கள்.

டைபர்கான் பயந்ததற்கு வேறு காரணமுண்டு. ரதன் சேர்ந்ததனால் தன் படையிலுள்ள மொகலாய வீரர்களுக்கும் ராஜபுத்திரர்களுக்கும் தகராறு ஏற்பட்டால் என்ன செய்வது என்று டைபர்கான் பயந்தான். ஏற்கனவே அபாயத்தில் சிக்கியிருக்கும் தன் சைன்னியத்தில், உள் சண்டையும் ஏற்பட்டுவிட்டால் படையின் கதி அதோ கதியாகிவிடுமே என்று டைபர்கான் அஞ்சினான். ரதனை ஒழித்துவிடுவதும் அவ்வளவு சுலபமல்ல. ரதன் சந்தாவதர்கள் வம்சத்தைச் சேர்ந்தவன். அவனைக் கொன்றால் [illegible] அதையே ஒரு காரணமாகக் கொண்டு மொகலாயப் பிரதேசங்களை அதிகமாகக் கொளுத்தவும் சூறையாடவும் ஆரம்பிப்பார்களோ என்ற பயமும் டைபர்கானைச் சிறிது அடக்கி வைத்திருந்தது.

ஆனால், மேல் அத்தியாயத்தில் ரதன் சந்தாவத் சிரித்த சிரிப்பு டைபர்கானுடைய பொறுமையையும் சோதித்து விட்டது. நடந்த விஷயங்களை ஒற்றன் மூலம் அறிந்த டைபர்கான் இன்று ஏதாவது இரண்டிலொன்று முடிவு கட்டிவிடுவது என்ற தீர்மானத்துடனேயே ரதனுடைய கூடாரத்துக்கு வந்தான்.

டைபர்கான் பிரவேசம் கூடாரத்திலிருந்த மற்ற ராஜபுத்திரர்களின் பீதியைப் பெரிதும் கிளப்பிவிட்டது. ரதன் சந்தாவத்தின் முகத்தில் மட்டும் எந்தவித மாறுதலுமில்லை. சேனாதிபதியை நோக்கி ரதன் புன் முறுவல் செய்தான். ''யாரங்கே, கான்சாகிப்புக்கு ஆசனம் எடுத்துப்போடு. கொஞ்சம் மது கொண்டு வா'' என்று இரைந்தான். அது வரை சிலைகள்போல் நின்றிருந்த அடிமைப்பெண்கள் திரைக்குப் பின்னால் மறைந்தார்கள். டைபர்கான் சிறிதுகூட அசையவே இல்லை. அதிகக் குடியால் சிவந்த அவன் கண்கள் ஒரே வீச்சில் கூடாரத்திலிருந்த ராஜபுத்திரர்களுடைய மன நிலையை அளந்துவிட்டன. ஆனால் ரதன் சந்தாவத்தின் முகத்தில் அவை லயித்த போது அவற்றில் ஒரு ஆச்சரியம் பரிமளித்தது. அடிமைப்பெண்கள் கொண்டு வந்த மதுக்கிண்ணத்தைக் கையில் வாங்கி மதுவை சிறிது உறிஞ்சினான்.

ஆனால் பின்னால் இழுத்துப்போடப்பட்ட ஆசனத்தில் மட்டும் அமரவில்லை. ரதனைப் பார்த்து லேசாகச் சிரித்தான் டைபர்கான் கோபத்தைவிட அவன் சிரிப்பு அபாயமானது என்பது அந்தக் காலத்தில் பிரசித்தம்.

டைபர்கான் மறுமுறை தன் கேள்வியைத் திருப்பினான். ''எங்கு அவ்வளவு அவசரமாகப் பயணம்?''

ரதன், டைபர்கானையும் ஜெய்மல்லையும் மாறி மாறிப் பார்த்துவிட்டு, ''ஜெய்மல் சொல்லியிருப்பானே'' என்றான்.

அவன் சொல்வதன் அர்த்தம் ஜெய்மல்லுக்கு நன்றாகப் புரிந்தது. டைபர்கானின் வேவுகாரனாகத் தான் நடப்பதையே ரதன் சுட்டிக்காட்டுகிறான் என்பதை அறிந்து, ஜெய்மல் ஒரு முறை கோபப்பார்வை பார்த்தான். ஆனால் ரதனுடைய கூர்மையான விழிகளைச் சந்தித்ததும் அந்தப் பார்வையிலிருந்த கோபம் மடிந்து பயத்துக்கு இடம் கொடுத்தது. டைபர்கான் சிறிதும் கோபிக்கவே இல்லை.

''ஜெய்மல் சொல்வதிருக்கட்டும் ரதன்! நீ என்ன சொல்கிறாய்? என்று கேட்டான் ரதன்.

''ஏன்?''

''ஜெய்மல்லைத் திருப்தி செய்வதற்காக,''

ரதன் தங்களைக் கேலி செய்கிறான் என்பதை ஜெய்மல், டைபர்கான் இருவரும் உணர்ந்துகொண்டார்கள். ஆனால் டைபர்கான் உள்ளே கிளம்பிக்கொண்டிருந்த உணர்ச்சிகளைச் சிறிதும் வெளிக்காட்டாமலே, ''ஜெய்மல் அப்படி என்ன உன்னைக் கேட்டான்? '' என்று கேட்டான் டைபர்கான்.

''ஜெய்மல் ! நீதான் இதற்குப் பதில் சொல்ல வேண்டும். எனக்கு வெட்கமாயிருக்கிறது'' என்றான் ரதன். ஜெய்மல் மௌனம் சாதித்தான்.

''அப்படி வெட்கப்படும்படியான விஷயம் என்ன ரதன்?''

''கல்யாண விஷயம்.''

''கல்யாண விஷயமா?''

''ஆம்! கல்யாணம் செய்துகொள்ளும்படி ஜெய்மல் என்னைக் கட்டாயப்படுத்துகிறான்.

''கல்யாண விஷயத்தில் கட்டாயமா?''

''எல்லாம் சேனாதிபதி சாகிபுவால் வந்ததுதான்.''

''என்னாலா?'' என்று கேட்டு, டைபர்கான் ஆச்சரியப் படுவதுபோல் தன் புருவங்களைச் சிறிது உயர்த்தினான்.

''ஆம் சாகிப்! கல்யாணம் செய்துகொள்ளும்படி ஜெய்மல்லைத் தாங்கள் கட்டாயப்படுத்தினீர்கள். அவன் என்னைக் கட்டாயப்படுத்துகிறான். தாங்கள் வரும்போது அதைத் தான் சொல்லிக்கொண்டிருந்தான். அகிலாதேவியை நீ மணந்தால் டைபர்கான் சாகிபுவுக்கு சந்தோஷமாயிருக்கும் என்றான். இப்படி எல்லோருக்கும் சந்தோஷத்தை அளிக்கக்கூடிய காரியத்தை நான் செய்யாமலிருக்கலாமா?''என்று ரதன் சொல்லிவிட்டு ஜெய்மல்லை நோக்கி, ''ஏன் ஜெய்மல், நான் சொல்வது சரிதானே?'' என்று கேட்டான்.

ஜெய்மல் என்ன சொல்வதென்று புரியாமல் விழித்தான். அவன் திகைப்பைக் கண்டு ரதன் இகழ்ச்சியாகச் சிரித்தான். மறுபடியும் தன் உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டு டைபர்கானை நெருங்கி, ''சாகிப்! நீங்கள் இனிமேல் கல்யாணவிஷயத்தில் ஜெய்மல்லைக் கட்டாயப்படுத்திப் பிரயோசனமில்லை. அகிலா தேவியிடம் சென்றுவந்த பிறகு அவனுக்குச் சந்நியாசத்தில் நம்பிக்கை பிறந்துவிட்டது. ஆகையால் அவன் தப்பிய அந்தச்

சம்சாரப்படுகுழியில் என்னைத் தள்ளப்பார்க்கிறான் சாகிப்! என்று சொல்லிவிட்டு மிகவும் வருத்தப்படுகிறவன்போல் பாசாங்கு செய்தான். அது வரை சிரிப்பை எவ்வளவோ அடக்கிக் கொண்டிருந்த மற்ற ராஜபுத்திரர்களும் ஜெய்மல்லைப் பார்த்துக் கொல்லென்று சிரித்துவிட்டார்கள் . ஜெய்மல் முகத்தில் ஈயாட வில்லை.

டைபர்கானும் பலமாகச் சிரித்தான். ஆனால் அவன் சிரிப்பில் குரூரம் பூரணமாகக் கலந்திருந்தது. ''ரதன்! பயப்படாதே! அந்தச்சம்சாரப் படுகுழியிலிருந்து நான் உன்னைக் காப்பாற்றுகிறேன். அகிலாதேவியைக் கல்யாணம் செய்து கொள்ளும்படி நான் ஜெய்மல்லைக் கட்டாயம் செய்தது உண்மைதான். ஆனால் அதே போல உன்னை நான் கட்டாயம் செய்யப்போவதில்லை. உஜ்ஜயினி அழகியை நோக்கி உன்னை ஜெய்மல் விரட்டாமல் நான் பார்த்துக்கொள்கிறேன்'' என்று சொல்லி விட்டுத் தன் கையைத் தட்டினான். உள்ளே நுழைந்த மொகலாயச் சிப்பாய்களிடம் ரதனைச் சுட்டிக்காட்டி, ''எஜமானை யாரும் உஜ்ஜயினிக்கு அனுப்பாமல் பார்த்துக்கொள்ளுங்கள்'' என்று உத்தரவிட்டான்.

ஈட்டி தாங்கிய இரு சிப்பாய்கள் ரதனைக் கைதுசெய்ய அணுகினார்கள்.

அத்தியாயம் 3
பணயம்

மனிதனுடைய புத்தி விசித்திரமானது. ஆபத்துக் காலத்தில் இயற்கையாக உள்ள தன் சோம்பேறித் தனத்தையெல்லாம் உதறிவிட்டு, சுறுசுறுப்புடன் வேலை செய்யும் தன்மை வாய்ந்தது. எப்பேர்ப்பட்ட தூங்கி வழியும் மூளை யானாலும் ஆபத்து நெருங்கியவுடன் உயிரால் அறைந்து எழுப்பப் பட்டுத் தன்னைத்தானே சாணை பிடித்துக்கொண்டு . கூர்மையாகி விடுகிறது. மந்தபுத்திகளின் சுபாவமே இப்படியென்றால் ரதனின் தீட்சண்யமான புத்தியைப் பற்றிச் சொல்லவா வேண்டும்?

மதுவின் வேகத்தினால் ஏற்கனவே சூடேறிச் சிவந்திருந்த ரதனின் கண்கள், சேனாதிபதியின் உத்தரவுக்குப் பிறகு, உள்ளூர எழுந்த உக்கிரத்தால் இரண்டு நெருப்புப் பொறிகளைப் போல மாறி, ஒரு முறை கூடாரத்தைச் சுற்றி வளைத்துச்சுழன்றன. இடையிலிருந்த கச்சையை அவிழ்க்கப்போன அவன் கைகள் கச்சையிலேயே தங்கிவிட்டன. கைகளின் கட்டைவிரல்கள் இரண்டும் கச்சை மத்தியில் செருகப்பட்டிருந்த உடைவாளின் சொர்ணப் பிடியைத் தடவிக் கொடுத்தன. ஏதோ பெருத்த அபாயம் நேரிடும் சமயம் நெருங்கிவிட்டதென்பதை மோஹன்தாஸ் நன்றாகத் தெரிந்து கொண்டான். ரதனின் சலனமான நேத்திரங் களிலிருந்து அவன் புத்தி அந்தச்சமயம் துரிதமாக யோசிக்க ஆரம்பித்து விட்டதென்றுமோஹன்தாஸுக்கு சந்தேகமற விளங்கி விட்டது. ரதனின் கபோலத்தின் உச்சிகளில் பொறிகளை வளைத்துக்கொடுத்தாற் போல் புடைத்து ஓடிய நரம்புகளும் மோஹன்தாஸின் முடிவு சரியென்பதைத் தெள்ளென விளக்கின.

எந்த நிமிஷமும் கூடாரம் அமளி துமளிப் படலாமென்பதை உணர்ந்து கொண்ட மோஹன்தாஸ் ஜெய்ஸிங்கைப் பார்த்தான். ஜெய்ஸிங்குக்கும் நிலைமை புரிந்துதானிருந்தது. ஆனால் அந்தத் தருணத்தில் அவன் என்ன செய்ய முடியும்? சேனாதிபதி ஒரு முறை இட்ட உத்தரவை மாற்றியறியாதவன். அவசரப்பட்டு நிலைமை தெரியாமல் உத்தரவிடுபவனும் அல்ல. எப்பொழுது

துணிச்சலுடன் இவ்வாறு ரதனைச் சிறைசெய்யும்படி உத்தர விட்டிருக்கிறானோ அப்பொழுதே அந்த உத்தரவை நிறைவேற்றுவதற்கு வேண்டிய முன்னேற்பாட்டுடனேயே அவன் வந்திருக்க வேண்டுமென்பதை ஜெய்ஸிங் நன்றாக அறிந்தி ருந்தான். அவன் நினைத்ததில் தவறில்லையென்பதை டைபர் கானின் அடுத்த வார்த்தைகள் நிரூபித்தன.

''ரதன்! தப்புவதற்கு மார்க்கம் ஏதுமிருப்பதாக நினைக்க வேண்டாம். எதிர்ப்பு எவ்விதப்பலனையும் அளிக்காது. நீயாகிலும் சரி, உன்னைச் சேர்ந்த இந்த ராஜபுத்திரர்களில் யாராகிலும் சரி, எந்தவிதமாக எதிர்ப்பைக் காட்டினாலும் உடனே இந்தக்கூடா ரத்தைச் சூழ்ந்து இங்குள்ள அனைவரையும் எலும்புகூட அகப் படாமல் படுசூரணம் செய்து விடும்படி மொகலாய சைன்னி யத்துக்கு உத்தரவிட்டிருக்கிறேன். இங்கு ஏதாவது ரகளை நடந் தால் உன்னுடைய ராஜபுத்திரப்பட்டாளம் உடனே உதவிக்கு வராதபடி அவற்றைச் சைன்னியத்தின் முகப்பில் நிற்கும்படி உத்தரவிட்டனுப்பி விட்டேன். இந்தக் கூடாரத்திற்கும் உன் பட்டாளத்துக்கும் இடையே சுமார் ஐயாயிரம் மொகலாய வீரர்கள் இருக்கிறார்கள். ஆகவே, கண்மூடிக்கண் திறப்பதற்குள் காரியம் முடிந்து விடும், ஜாக்கிரதை!'' என்று டைபர்கான் எச்சரித்துவிட்டு, ''சிப்பாய்! அவனை என் கூடாரத்துக்குக் கொண்டுவா'' என்று சொல்லிப் புறப்படச் சித்தமானான்.

டைபர்கான் தன் ஏற்பாடுகளைப் பற்றி விவரித்த விஷயங்கள் மற்றவர்கள் மனத்தில் எந்தவித உணர்ச்சிகளைக் கிளப்பிவிட்டனவோ தெரியாது. ஆனால் ரதன் சந்தாவத்தின் மனத்தில் எந்தவித பயத்தையோ ஆயாசத்தையோ அவை உண்டாக்கியதாகத் தெரியவில்லை. புறப்படத் துவங்கிய சேனாதி பதியின் காலை உள்ளுக்கிழுக்க ரதன் ஒரு சந்தேகம் கேட்டான். ''டைபர்கான்! கண்ணை மூடித்திறக்க எவ்வளவு நேரம் பிடிக்கும்?'' என்றான்.

டைபர்கான் சற்றுத்திரும்பி ரதனை ஒருமுறை பார்த்தான். இத்தனை ஆபத்திலும் விளையாட்டாகப் பேசும் துணிச்சலான எதிரியைப் பார்த்து டைபர்கான் ஆச்சரியப்பட்டான்.

''அதைத் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் என்ன ரதன்?'' என்று டைபர்கானும் சிறிது நகைச்சுவையைக் காட்டினான்.

''கண்ணை மூடித்திறப்பதற்குள் ஒரு வீரன் பத்தடி தூரம் ஓட முடியுமா?'' என்று ரதன் கேட்டான். அதோடு நிற்காமல் மேலே சொன்னான்: ''இதோ பார் டைபர்கான்! கண்ணை மூடி கண்ணைத் திறப்பதற்குள் காரியம் முடிந்துவிடும் என்றாயே, அது யார் காரியம் என்பதை நிர்ணயிக்கவே இந்தக்கேள்வியைக் கேட்டேன். அந்தத் திரைச்சீலையை விலக்கிப் பார். நீ நின்று கொண்டிருக்கும் இடத்திற்கும் எனது பட்டாளம் இருக்கும் இடத்திற்கும் பத்தடி தூரம் கூட இருக்காது. டைபர்கான்! உன்னுடன் மூன்று வருஷங் காலமாகப்பழகியும் உன்னுடைய தந்திரங்களைத் தெரிந்து கொள் ளாத அடி முட்டாளென்றா என்னை நினைக்கிறாய்? என்னுடைய ஆணையின் கீழிருக்கும் ராஜபுத்திரர்கள் நீ உத்தரவிட்டதும் 'கப்சிப்'பென்று அணிவகுப்பின் முன்னணிக்குச் சென்று விடுவார் களென்று மனப்பால் குடிக்கிறாயா? என்னிடம் தயாரான ராஜ புத்திர சைன்னியத்தின் தன்மை உனக்குத் தெரியாது டைபர்கான். அவர்களுக்குத் தலைவன் ஒருவன்தான். ஒருவன் ஆணைக்குத் தான் அவர்கள் கீழ்ப்படிவார்கள். என் உத்தரவைத் தவிர கடவுளே நேராக வந்து உத்தரவு போட்டாலும் அவர்களிடத்தில் பலிக்காது. சந்தேகமிருந்தால் கூடாரத்துக்கு வெளியே பார்த்து உன்னை நீயே திருப்தி செய்துகொள்'' என்றான்.

ரதன் சொன்ன வார்த்தைகள் பூராவும் உண்மை என்பது டைபர்கானுக்குத் தெரியும். மொகலாய சைன்னியத்திலிருந்த ராஜபுத்திரர்கள் சேனாதிபதியான தன்னுடைய ஆணையைவிட, தங்கள் தலைவனுடைய வார்த்தையையே பெரிதாக மதிப்பார்கள் என்பதை டைபர்கான் உணர்ந்திருந்தான். ஆனால் இந்தச்சமயத் தில் டைபர்கான் எதற்கும் தயாராகவே ரதனுடைய கூடாரத்திற்கு வந்திருந்தான். ரதனுடைய பட்டாளத்தால் ஏற்படக்கூடிய உதவி யைவிட, அதனால் ஏற்படக்கூடிய ஆபத்தே அதிகம் என்ற காரணத்தால் ரதனைச் சிறை செய்து அவன் பட்டாளத்தை

ஒடுக்குவதே சரியான வழி என்று டைபர்கான் தீர்மானித்துக் கொண்டான். ஆகையால் ரதனை மீண்டும் ஒருமுறை நோக்கி, "ரதன்! சேனாதிபதி என்ற முறையில் நான் கட்டளை யிட்டாகிவிட்டது. அதற்கு உன் பட்டாளம் கீழ்ப்படியாவிட்டால் அதன் விளைவை அவர்கள் கண்டிப்பாய் அநுபவிப்பார்கள். மொகலாய சைன்னியத்தைப் பற்றியும், சேனாதிபதியைப் பற்றியும் உனக்கும் உன் சைத்தியத்திற்கும் இருக்கும் அலட்சியத்தை நான் அறிவேன். இந்த விஷயத்தை இரண்டி லொன்று முடிவு செய்ய வேண்டும் ரதன். இந்த சைன்னியத்தில் இரண்டு சேனாதிபதிகள் இருக்கமுடியாது. ஆகையால் இந்த முறை நமது பட்டாளங்கள் கை கலப்பதாயினும் சரி, உன்னைச் சிறை செய்வதெனத் தீர்மானித்து விட்டேன்" என்றான்.

"நம்முடைய தீர்மானப்படி உலகத்தில் எல்லாம் நடக்கிறதா என்ன? அது கிடக்கட்டும். உன்னுடைய இந்தத் தீர்மானம் நவாபுக்கும் சம்மதந்தானா?" என்று ரதன் கேட்டான்.

டைபர்கான் இந்தக் கேள்வியை எதிர்பார்க்கவில்லை. இந்தக் கேள்வியால் மிகுந்த அபாயம் விளையக்கூடுமென்பதை டைபர்கான் உணர்ந்துகொண்டான். அக்பரிடம் இந்த விஷயத் தைப் பற்றிக் கலந்திருந்தால் முடிவு என்னவென்பது டைபர் கானுக்குத் தெரியும். பயங்கொள்ளியான அக்பர் எந்தக் காரணத்தை முன்னிட்டும் சைன்னியத்துக்குள் சச்சரவை விரும்ப மாட்டானென்பது டைபர்கானுக்குத் தெரியாதா? டைபர்கானுக்கு மட்டும் இந்தத் தலைவலியைச் சம்பாதித்துக் கொள்ள இஷ்டமா என்ன? ரதனுடைய உபத்திரவமும், அதனால் தினசரி மொகலாயச் சிப்பாய்களிடையே ஏற்பட்டு வரும் கொந்தளிப்புமே இந்தத் தீவிரமான நடவடிக்கையை எடுக்க அவனைத் தூண்டின. ஆனால் அக்பரிடம் இதைப்பற்றிக் கலந்தால் அக்பர் ஒரு நாளும் ரதனைச் சிறைசெய்யச்சம்மதிக்க மாட்டானென்பதை அறிந்தே இரண்டாம் பேர் அறியாமல் காரியத்தை முடித்து விட்டுப் பிறகு அக்பரிடம் சொல்லிக்கொள்ளலாம் என்று டைபர்கான் திட்டம் போட்டிருந்த

மறுநாள் டைபர்கான் ரதனைப் பார்த்து, "ரதன்! முடிவாகச் சொல்லி விடுகிறேன். நான் உத்தரவை மாற்றும் உத்தேசமில்லை. அவசிய மானால் நாளைக் காலையில் அக்பரிடம் நீ விடுதலைக்கு விண்ணப்பம் செய்து கொள்ளலாம்" என்று சொல்லிவிட்டுத் திரும்ப யத்தனித்தான்.

டைபர்கான் ரதனுடன் சம்பாஷணையில் ஈடுபட்டிருந்த முகூர்த்தத்தில் கூடாரத்தில் ஏற்பட்ட சில மாறுதல்களைக் கவனிக்க வில்லை. ரதனுடைய கண்களிலிருந்து அந்த ராஜபுத்திரர்கள் என்ன தெரிந்து கொண்டார்களோ தெரியவில்லை. ஒவ்வொரு வனும் கையிலிருந்த மதுக்கிண்ணத்தை வைப்பதுபோலவும், தீபத்துக்கு எண்ணெய் விடுவது போலவும் பல பணிகளில் ஈடுபட்டு, கூடாரத்தின் பல மூலைகளில் நகர்ந்து நின்று கொண்டார்கள். இந்த நுணுக்கங்களை டைபர்கானோ, ரதனுக்கு அருகில் ஈட்டி பிடித்து நின்ற இரு சிப்பாய்களோ கவனிக்க வில்லை. பாம்பின் கால் பாம்புக்குத் தெரியும் என்பதுபோல, சேனாதிபதிக்கு அருகில் நின்று கொண்டிருந்த ஜெய்மல் ஸிம்ஹன் மட்டும் விஷயத்தை நொடிப்பொழுதில் உணர்ந்து கொண்டான். இருபது ராஜபுத்திரர்களும் வெகு சீக்கிரம் கூடாரத்தின் ரந்திரஸ்தானங்களில் நகர்ந்து நின்று விட்டதைக் கண்ட ஜெய்மல்ஸிம்ஹன் முகம் பயத்தால் குப்பென்று வியர்க்க ரதனை நோக்கினான். ரதன் சந்தாவத்தின் முகத்திலிருந்து கோபம் மறைந்து, இகழ்ச்சி ததும்பும் சிரிப்பு ஒன்று தாண்டவமாடியது.

"என்னைப் பார்த்து என்ன பிரயோசனம் ஜெய்மல்? டைபர்கானுக்கு விளக்கிச்சொல்!" என்றான் ரதன்.

"எதை விளக்கவேண்டும்?" என்ற டைபர்கான் குரலில் ஆத்திரம் சிறிது தொனித்தது. "அதைத்தான் ஏற்கனவே சொல்லி விட்டாயே."

"அது உண்மைதான் என்பதற்கு ருசு வேண்டாமா?"

"என்ன பிதற்றுகிறாய் ரதன், விளையாட இது நேரமா?"

''இது விளையாட்டல்ல டைபர்கான். உன்னைச் சூழ்ந் திருக்கும் வினையை உணர்ந்துகொள். நீ புத்திசாலி என்று உன்னிடம் எனக்கு மதிப்பு உண்டு. அதையும் கெடுத்துக் கொள் ளாதே. கண்ணிருந்தால் சுற்றிப்பார். புத்தியிருந்தால் உன் நிலைமையை ஊகித்துக்கொள்'' என்றான் ரதன்.

டைபர்கானுடைய கண்கள் கூடாரத்தை வட்டமிட்டன. சுற்றிலும் ராஜபுத்திரர்கள் தங்கள் வாட்களின்மேல் கை வைத்துக் கொண்டு நிற்பதைக்கண்டான். உண்மையில் சிறையாகியிருப்பது, தானும் தன் சகாக்களுந்தான் என்பதைச் சந்தேகமறப் புரிந்து கொண்டான்.

அடுத்த விநாடியில் சிப்பாய்களிடமிருந்து ஈட்டிகள் அப்புறப்படுத்தப்பட்டன. ரதனுடைய உத்தரவின் பேரில் ஆசனங்களை மீண்டும் நிமிர்த்தி வைக்கப்பட்டன. ''சேனாதிபதி சாகிப்! உட்காரவேண்டும்'' என்று ரதன் ஓர் ஆசனத்தைச் சுட்டிக் காட்டினான். மற்றோர் ஆசனத்தில் அமரப்போன ஜெய்மல் ஸிம்ஹனைத் தடைசெய்து ''ஜெய்மல், நீ உட்காரவேண்டாம். நவாப் அக்பரிடம் சென்று இங்கு சேனாதிபதி சாகிப் என்னுடைய விருந்தினராயிருக்கும் விஷயத்தைத் தெரியப்படுத்தி, நவாபை யும் நான் இங்கு அழைப்பதாகத் தெரிவி'' என்றான்.

அவன் துணிச்சல் டைபர்கானுடைய அமைதியைக் கூடக் குலைத்து எரிச்சலைக்கிளப்பவே, ''ரதன்! நீ கூப்பிட்டவுடன் ஓடிவர அக்பர் உன்னுடைய வேலைக்காரனென்று நினைக்கிறாயா?'' என்று சீறினான்.

''அக்பர் எடுப்பார் கைப்பிள்ளை. அதுவும் தன் சேனாதிபதியின் உயிர் ஆபத்திலிருக்கிறதென்பதை அறிந்தால் கூடாரத்தில் நிம்மதியாகத் தூங்க அக்பரால் முடியமா? தவிர ஜெய்மல் லேசுப்பட்டவனா? அவன் இஷ்டப்பட்டால் அக்பரை என்ன, ஔரங்கசீப்பையே கொண்டுவந்துவிடுவானே'' என்றான் ரதன்.

''ஜெய்மல் இஷ்டப்பட வேண்டிய அவசியம்?''

''தங்களுடைய உயிர்த்தோழன், தங்களுடைய உயிரை அவ்வளவு அல்பமாகவா நினைப்பான்? அக்பர் வரச்சிறிது தாமத மானால் மொகலாய சைன்னியத்திற்குப் புது சேனாதிபதியைத் தேட வேண்டிய அவசியம் ஏற்பட்டு விடுமென்பது ஜெய்மல்லுக்குத் தெரியாதா சாகிப்?''

இப்பொழுது இடைமறித்தவன் ஜெய்மல். ''ரதன்! நவாபை எழுப்புவது சாத்தியமா? நான் கூப்பிட்டால் உடனே அவர் இங்கு வருவதுதான் நடக்கக்கூடிய காரியமா?'' என்றான்.

''இங்கிருக்கும் நிலையைச் சொன்னால் அக்பர் தாமாகவே வருவார். சாதாரண நஷ்டமானால் அக்பர் சட்டை செய்யாதி ருக்கலாம். சேனாதிபதி நஷ்டம், சைன்னியத்திற்குள் சண்டை இவற்றையெல்லாம் சகித்துக் கொண்டு அக்பர் தூங்கமாட்டார். நீ போ ஜெய்மல், டைபர்கான் என்னிடம் சிறையிருப்பதாகச் சொல். அவர் வரத் தாமதமானால் சைன்னியத்திலுள்ள ராஜபுத்திரர்கள் மொகலாயர்களுடன் கைகலப்பார்கள் என்று சொல். அக்பர் நாலுகால் பாய்ச்சலில் வருவார்'' என்றான் ரதன். ஜெய்மல் வேறு வழியில்லாமல் வெளியே நடந்தான். அக்பரை அழைத்து வருவதைத் தவிர வேறு மார்க்கமில்லை என்பதை ஜெய்மல் தெரிந்து கொண்டான். மொகலாயத் துருப்புகளைத் தூண்டி, கூடாரத்தை வளைத்தால் உடனே டைபர்கான் யமலோக யாத்திரை செய்யவேண்டியிருக்கும் என்பது ஜெய்மல்லுக்குத் தெரியும். ஆகவே அக்பர் கூடாரத்தை நோக்கி வெகு வேகமாக நடந்தான்.

இதற்கிடையில் நவாபை வரவேற்க ரதன் ஏற்பாடுகளைத் துரிதமாகச் செய்து முடித்தான். கூடாரத்துக்கு நடுவில் இருந்த தனது ஆசனத்தில் நவாப் உட்காருவதற்கு இரண்டு மெல்லிய தலையணைகளைப் பொருத்தினான். பயத்தினால் திரைச் சீலைக்குப்பின் பதுங்கிக்கிடந்த பணிப்பெண்களைக் கூப்பிட்டு, புதிதாக மதுப்பாத்திரங்களைக் கொண்டு வரும்படி உத்தர

விட்டான். சிறிது நேரத்தில் கூடாரம் கன கச்சிதமாகவே, அக்பரின் வரவை ரதன் எதிர்பார்த்து நின்றான் ஜெய்மல்.

இளவரசன் அக்பர், ஜெய்மல் பின் தொடர மிகுந்த கோபத்துடன் உள்ளே நுழைந்தான். ஔரங்கசீப்பின் புத்திரன் அக்பரின் முகத்தை ஒரு முறை பார்த்தவர்கள் அவன் வீரனான பாபர் வம்சத்தில் எப்படிப்பிறந்தான் என்று ஆச்சரியப்படுவார்கள். சுமார் இருபத்தைந்து வயதுக்கு மேற்படாத இளைஞன். ராஜ போகத்தை மிதமிஞ்சி அனுபவித்து, சதா சிற்றின்பத்தில் திளைத்ததால் ஜீவசக்தி வறண்டுபோன கச்சலான சரீரம்; நரம்புகளின் பலவீனத்தினால் லேசாக நடுங்கிய விரலுடன் இணைந்த கரங்கள்; சற்றே வெளுத்த உதடு; பயம் தவழும் சலித்த கண்கள். இத்தகைய இளவரசனுக்கு ரதன் மிகுந்த மரியாதையுடன் தலை குனிந்து, ''மஹராஜ்! மன்னிக்கவேண்டும். வரவேண்டும். தங்கள் வரவால் இந்தக் கூடாரம் பாக்கியம் பெற்றது'' என்று வரவேற்றான்.

எதிர்ப்பையும், உருவிய கத்திகளையும் எதிர்பார்த்த நவாப்புக்கு இந்த வரவேற்பு சிறிது ஆறுதலளிக்கவே, மெள்ள ரதன் காட்டிய ஆசனத்தில் அமர்ந்தான்.

அக்பர் உள்ளே நுழைந்ததும் ரதன் செய்த சமிக்ஞை யிலிருந்து கூடாரத்தின் மூலைகளில் சக்கர வட்டமாக நின்றிருந்த ராஜபுத்திரர்கள் தங்கள் வாட்களின் மேலிருந்த கையை எடுத்து நவாபுக்கு தலை வணங்கினார்கள். இந்தமாதிரி சூசகங்களிலிருந்து நிலைமை மிகவும் பயங்கரமானதல்லவென்ற நினைப்பு அக்பருக்கு உண்டாகவே, அவன் பயந்த இருதயத்தில் சிறிது தைரியம் முளைத்தது.

''இங்கென்ன சச்சரவு ரதன்? நாலா பக்கத்திலும் எதிரி சைன்னியங்கள் சூழ்ந்திருக்கும் நிலைமையில் நமக்குள் சச்சரவு உசிதமா?'' என்று அக்பர் சற்று அதிகாரக்குரலிலேயே கேட்டான்.

''உசிதமில்லை நவாப்! அத்தகைய சச்சரவு கூடாது என்பதற் காகவே இந்த அர்த்த ராத்திரியில் தங்களை எழுப்பத் துணிந்தேன். சச்சரவைத் தடுக்கும் நோக்கத்துடனேயே தங்களை இந்த ஏழையின் கூடாரத்துக்கு அழைக்கும்படி ஜெய்மல் ஸிம்ஹனை அனுப்பினேன். சச்சரவை விரும்புவது நானல்ல நவாப்! தங்கள் சேனாதிபதிதான் விரும்புகிறார்'' என்றான் ரதன். அக்பருக்கு முதலில் அபாயத்தைக் காட்டி, பிறகு நடந்த விஷயத்தை விவரித்தால்தான், அக்பர் தன் பக்கம் பேசுவான் என்பதற்காகவே ரதன் நடந்ததை இப்படித் திருப்பிக் கூற ஆரம்பித்தான்.

''நடந்தது என்ன? விளக்கிச் சொல்'' என்றான் அக்பர்.

''மஹராஜ்! சேனாதிபதி சாகிப் தங்கள் உத்தரவின்றி என்னைக் கைது செய்ய வந்தார்கள். நான் தங்கள் உத்தர வில்லாமல் கைதியாக மறுத்தேன். எல்லாம் ஒரு பெண் விஷயம் மஹராஜ்! ஒரு பெண்ணுக்காக என்னைக் கைது செய்து சைன்னியத் திலுள்ள ராஜபுத்திரர்களும் மொகலாயச் சிப்பாய்களும் கைகலக்க அனுமதிப்பது உசிதமில்லை என்றேன். சேனாதிபதி சாகிப் என் வார்த்தையைக் கேட்க மறுத்தார்கள். தாங்கள் விசாரித்து இடும் எந்தக் கட்டளைக்கும் ரதன் கீழ்ப்படியத் தயார்'' என்று ரதன் விண்ணப்பித்துக் கொண்டான்.

சைன்னியத்திற்குள் சண்டை யென்ற விஷயத்தைக் கேட்டதும் அக்பரின் கை சிறிது நடுங்கியது. ''என்ன டைபர்! இது நிஜந்தானா?'' என்று கேட்டான். அந்தச் சமயத்தில் பயம் தவழும் அவன் கண்களிலுமே சிறிது கோபத்தணல் வீசியது.

டைபர்கான் எதையும் சொல்லாமல் மௌனம் சாதித்தான். ரதனே விஷயத்தை எடுத்துச்சொன்னான்: ''நவாப் சாகிப்! தாங்கள் அகிலாதேவியை வசப்படுத்தித் தயால்ஸாவை நமது பக்கம் இழுக்க, ஜெய்மல் ஸிம்ஹனை அனுப்பியதைப்பற்றி நாங்கள் பேசிக்கொண்டிருந்தோம். ஜெய்மல் ஸிம்ஹன் தோற்றுவிட்டதால் நான் போய் அந்தப் பெண்ணை ஜயித்து வருவதாகச் சொன்னேன்.

இதில் என்ன தவறு மஹராஜ்? தவறு இருந்தால் அடிமையைத் தண்டியுங்கள்'' என்று சொல்லிக்கொண்டே ரதன் அக்பருக்கு ஒரு கிண்ணத்தில் மதுவைச் சிறிது ஊற்றிக் கொடுத்தான்.

''இது வாஸ்தவந்தானா டைபர்?'' என்றான் நவாப் மெள்ள மதுவை உறிஞ்சிக்கொண்டே.

''ஆம்! ஆனால்..'' என்று டைபர்கான் ஆரம்பித்தான். ஆனால் அக்பர் அவனை 'ஆனா'லுக்கு அப்புறம் பேசடவிடவில்லை. ''அரே அல்லா! யார் அந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டால் நமக்கென்ன டைபர்? நமக்கு வேண்டியது காரியந்தானே? அவள் யார் மனைவியானால் நமக்கென்ன? நமக்குவேண்டியது தயால்ஸாவின் உதவி தானே?'' என்று அக்பர் கேட்டான்.

சச்சரவை விரும்பாத அக்பர், தான் என்ன சொன்னாலும் ரதன் பக்கமே சாய்வான் என்பதை அறிந்த டைபர்கான், தான் பேசாமலிருப்பதே உசிதம் என்று மௌன விரதம் அநுஷ்டிக்க ஆரம்பித்தான். ஆனால் ஜெய்மல் குறுக்கிட்டு,''நவாப்! தாய் மாமனான என்னையே லட்சியம் பண்ணாத பெண், இவனை மட்டும் லட்சியம் பண்ணுவாளென்பது என்ன நிச்சயம்?'' என்று மெல்லக் கேட்டான்.

''ஜெய்மல்! நீ தோற்றால் அவனும் தோற்கவேண்டுமென்று விதியா என்ன? ரதன் பிரயத்தனம் செய்யட்டுமே. பலித்தால் நமக்கு நல்லது தானே?'' என்று அக்பர் கூறினான்.

''அந்தப் பெண்ணிடம் யார் பிரயத்தனமும் பலிக்காது நவாப்! அவள் சாதாரணப் பெண்ணல்ல. உங்களுக்கு ஹிந்துஸ்தானத்தைப் பற்றி அதிகம் தெரியாது. அந்தப்பெண், நெருப்புக்குச் சமானம். அவளை அணுகுவதே கஷ்டம். அணுகினாலும் அவள் மனத்தை அறிவது மிகவும் கஷ்டம். மிக ஆழமான மனம். சமுத்திரத்திலும் ஆழமானது...''

ரதன் இடைமறித்து, ''சாகத் துணிந்தவனுக்குச் சமுத்திரம் முழங்கால் அளவு நவாப்! இந்த முயற்சியில் நான் எதையும் தியாகம் செய்யத்தயார். ஜெய்மல் தன் தோல்விக்குச் சப்பைக்கட்டுக்கட்ட அந்தப்பெண்ணைப்பற்றி இல்லாத கதைகளை அளக்கிறான். சரியான ஆண்மகன் கைவசப்பட்ட பெண், குயவன் கைக் களிமண்ணுக்குச் சமானம். அவன் இஷ்டப்படியெல்லாம் வளைவாள்; இதுதான் இயற்கை'' என்றான்.

ஜெய்மலின் கோபம் அத்துமீறிவிட்டது. ''நவாப்! இவன் அந்தப் பெண்ணை வசப்படுத்த முடியாது. இதற்காக என் தலையைக் கூடப் பணயம் வைப்பேன்'' என்று கூவினான்.

''அந்தத் தலையில் என்ன இருக்கிறதென்று பணயம் வைக்கிறாய் ஜெய்மல்? அதைவிட நவாப் உனக்களித்திருக்கும் ஜாகீர்களைப் பணயம் வைப்பதுதானே?'' என்றான் ரதன்.

அந்தக்காலத்து மொகலாய ராஜாங்கங்களில் இவ்விதம் பணயப் பைத்தியம் மிக அதிகம். கோழிச் சண்டை முதல் மனிதர் உயிர் வரையில் எல்லாவற்றுக்கும் பணயம் உண்டு. அக்பருக்குப் பந்தயம், பணம் என்றவுடன் உற்சாகம் பிரமாதமாகி விட்டது.

''அச்சா! அச்சா! என்ன சொல்கிறாய் ஜெய்மல்?'' என்றான் அக்பர்.

''ரதன் தோற்றுவிட்டால் பதில் பணயம் அவன் என்ன வைக்கிறான் நவாப்?.

''நான் இந்தப் பெண்ணை என் வசப்படுத்தாவிட்டால் என்னுடைய தகப்பனார் அளித்துள்ள ஜாகீர்கள், சொத்து, சுதந்திரம் எல்லாவற்றையும் ஜெய்மல் ஸிம்ஹனுக்குக் கொடுத்து விடுகிறேன். மேலும் தங்கள் படையிலுள்ள இந்த உபசேனாதிபதி பதவியையும் விட்டு விலகிவிடுகிறேன். போதுமா நவாப்? என்றான் ரதன்.

''பலே பலே! என்ன ஜெய்மல்?'' என்று அக்பர் உற்சாகத்துடன் கேட்டான்.

''சரி சாகிப்! இந்தப் பந்தயத்திற்கு ஒப்புக்கொள்கிறேன். ஆனால் இவன் முயற்சியால் ஏற்படக்கூடிய விபரீத விளைவு களுக்கு நான் பொறுப்பல்ல'' என்றான் ஜெய்மல்.

இப்படி விசித்திரமாக முடிந்த இந்த நாடகத்துக்குப் பின் வெளியே வந்த டைபர்கானிடம் ஜெய்மல் சொன்னான், ''சேனாதிபதி சாகிப்! இதுவும் ஒரு விஷயத்தில் நல்லது'' என்று.

''என்ன நல்லது'' என்று டைபர்கான் எரிந்து விழுந்தான்.

''நான் உஜ்ஜயினியிலிருந்து திரும்பி வந்தபொழுது தங்களிடம் ஒரு விஷயம் சொல்ல மறந்துவிட்டேன். இனி மேல் அக்பர் சைன்னியத்தைச் சேர்ந்த எந்த ராஜபுத்திரன் உஜ்ஜயினியில் தலையை நீட்டினாலும் வழக்கு விசாரணையின்றி தலையைச் சீவிவிடும்படி தயால்ஸா உத்தரவிட்டிருக்கிறான். இவன் அங்கே போனால் இறப்பது நிச்சயம். நாம் சிரமப்படாமலே இந்தத் தொல்லை ஒழியும். போதாததற்கு இவன் பெண்ணை ஜயிப்பதாகப் பந்தயம் போட்டுவருவதைத் தால்ஸாவுக்கு முன்ன தாக அறிவிக்கவும் ஏற்பாடு செய்கிறேன். இதைத் தெரிவித்தால் தயால்ஸாவுக்கு எரிகிற கொள்ளியை ஏறத் தள்ளியது போலி ருக்கும். அப்புறம் இவன் உயிரை இங்கு திருப்பிக்கொண்டு வர வேண்டுமானால் யமனுக்குச் சிபாரிசுக் கடுதாசி வாங்கினால்தான் முடியும்'' என்று ஜெய்மல் விவரித்தான். ஆனால் டைபர்கானுக்கு அப்பொழுதிருந்த கோபத்தில் இவன் சொன்னது எதுவும் காதில் ஏறவில்லை.

அந்த இரவில், வெள்ளி முளைக்கும் நேரத்தில் ரதன், மோஹன்தாஸைக் கூப்பிட்டு,''மோஹன்தாஸ்! சீக்கிரம் குதிரை களுக்குச் சேணம் போட்டுத் தயார் செய். அக்பர் மனம் மாறுமுன்பு நாம் இவ்விடத்தை விட்டுப் புறப்பட வேண்டும்'' என்று உத்தர விட்டான்.

அத்தியாயம் 4

சாரங்கபூர் ரஸ்தா

வாழ்க்கை முறையை நிர்ணயிக்க மனிதன் பல விதிகளை ஏற்படுத்தியிருக்கிறான். அந்த விதிகளை மீறினால், தண்டிப்ப தற்கும் பல விதிகளைச் சிருஷ்டித்திருக்கிறான். ஆனால் இந்த விதி களனைத்தும் யுகத்துக்கு யுகம், வருஷத்துக்கு வருஷம் மாறிக் கொண்டே வந்திருக்கின்றன. சமூகத்துக்குத் தகுந்த விதிகள் சமயத்துக்குத் தகுந்த நீதிகளாக மாறின. பன்மையில் மனித சமூகத்தில் படர்ந்த இந்த 'விதிகள்' ஒருமையில், அநாதி காலமாகத் தனித்து நின்ற அந்தத் தலைவிதியை மட்டும் மாற்ற முடியவே இல்லை. கடவுள் எப்படி ஒருவனோ அப்படியே அவன் கட்டளையான அந்த விதியும் பன்மைத் தொடரின்றி 'விதி' என்ற ஒற்றைச் சொல்லாகவே தனித்து நின்று வருகிறது. மனிதன் வாழ்க்கை இப்படித்தான் ஓட வேண்டும் என்று பரம்பொருள் விதித்த விதி, எந்த நிலையிலும் எந்த யுகத்திலும் ஆடாமல் அசங்காமல் தன்னிஷ்டப்படியே மனிதனை இழுத்துச் செல்கிறது. அந்த விதிதான் ரதன் சந்தாவத்தையும் நேராக உஜ்ஜயினியை நோக்கிப் போகவொட்டாமல் அவன் புத்தியை சாரங்கபூருக்காக இழுத்தது.

உதயசாகரத்திலிருந்து நேரே தென்கிழக்காகப் பிரயாணம் சென்றால் ஐந்து நாட்களில் உஜ்ஜயினியை அடையலாம். அந்த மார்க்கமாகப் பிரயாணம் செய்வதுதான் உசிதம் என்று மோஹன்தாஸும் யோசனை சொன்னான். ரதன் அதற்கு இஷ்டப் படாததற்கு முக்கியமாக ஒரு காரணமுண்டு. ஒளரங்கசீப் ஆஜ்மீரை நோக்கிப் பின் வாங்கியிருந்தாலும் ஹாராவளிக்குக் கிழக்கில் உஜ்ஜயினி ரஸ்தாவைக் கத்தரித்தே படைகளை நிறுத்தி இருக்கிறான். அந்த வழியில் பிரயாணம் செய்தால் தன்னிடம் ஏற்கனவே கோபங்கொண்டிருக்கும் டைபர்கான், தான்

உயிரோடு உஜ்ஜயினி போகாததற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து, அந்தப் படைகளுக்குச் செய்தியனுப்பினாலும் அனுப்பு வான் என்று ரதன் சந்தேகித்தான். ரதன் சந்தாவத் சுபாவமாகவே சந்தேகப் பேர்வழி. அதுவும் தான் சபதம் செய்து புறப்பட்டிருக்கும் காரியத்தில், சித்தியடையும் விஷயத்தில் அதிகமான முன் னெச்சரிக்கையுடன் நடந்து கொண்டான். ஆகவே மோஹன் தாஸைப் பார்த்து, "மோஹன்தாஸ்! நாம் நேரே சென்றால் ஔரங்கசீப்பின் துருப்புகளின் வாயில் நுழையவேண்டியிருக்கும். யுத்த சமயத்தில் அக்பர் படையிலிருக்க வேண்டிய உபசேனாதிபதி ஏதோ பந்தயம் வைத்துக்கொண்டு பெண் வேட்டைக்குப் போகிறா னென்றால் அங்குள்ள படைத்தலைவன் நம்புவதும் கஷ்டம். ஆகையால் அந்தச் சைன்னியங்களின் பாதையிலிருந்து விலகிச் சிறிது தெற்கில் திரும்பிச் சாரங்கபூருச்குப் போய், அங்கிருந்து உஜ்ஜயினிக்குப் பிரயாணம் செய்தாலென்ன?" என்றான்.

ரதன் இந்தக் கேள்வியைக் கேட்டபோது அவ்விருவரும் ஹாராவளி மலைத் தொடரிலிருந்து வெகுதூரம் வந்தாகி விட்டது. மோஹன்தாஸ் தன் குதிரையின் கடிவாளத்தைச் சிறிது இழுத்துப் பிடித்துப் பின்னால் திரும்பி ஹாராவளியைப் பார்த்தான். சிறிது நேரம் யோசித்தான் பிறகு "மஹராஜ்! சாரங்கபூர் வழி மிகவும் சுற்று வழியாயிற்றே. தவிர தயால்ஸாவின் படைகள் அந்த நகரத்தைச் சூறையாடிக் கொளுத்திவிட்டதாகவும் கேள்வி. அந்த வழியாகப் போனால் நாளை இரவு தங்குவதற்கு இடம் அகப்படுவது கூடக் கஷ்டமாயிற்றே." என்று ஆடசேபித்தான்.

"இரவு தங்குவதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம் மோஹன்தாஸ், உனக்கு அந்த சுற்று வழி தெரியுமல்லவா?"

"தெரியும் மஹராஜ்! நாம் நிற்கும் இடத்திலிருந்து நேர் தெற்கில் ஐந்து காதம் போனால் சாரங்கபூரை நாளை இரவு முதல் ஜாமம் முடியும் சமயத்தில் அடையலாம். ஆனால் வழி மிகவும் மோசமாயிற்றே."

"வழி எப்படியிருந்தாலும் சரிதான் மோஹன்தாஸ்" என்று ரதன் தனது அசுவத்தின் லகானை ஒரு இழுப்பு இழுத்துக் கொடுத் தான். சற்று நேரத்தில் குதிரைகளிரண்டும் சாரங்கபூரை நோக்கி வாயு வேகத்தில் பறந்து கொண்டிருந்தன.

பிரயாணம் செய்த அந்த ஒன்றரை நாளும் ரதன் எந்த இடத்திலும் இளைப்பாறவில்லை. வழியிலிருந்த நிலைமை இளைப்பாறச் சந்தர்ப்பமும் அளிக்கவில்லை. தயால்ஸா மொகலாய மன்னர் ஔரங்கசீப்புக்கு எந்தவிதமான பதிலை அளித்திருக்கிறான் என்பதைச் சாரங்கபூர் வழி சந்தேகமற நிரூபித்தது. வழி நெடுகக் கிராமங்கள் அழிந்து கிடந்தன. கட்டடங்கள் எரிக்கப்பட்டு பெரிய வீடுகள் குட்டிச்சுவராகக் காட்சியளித்தன. பல மசூதிகளின் சிகரங்கள் இடிக்கப்பட்டுத் [illegible] சிதறி நாலு சுவர்களுடன் நெற்குதிர்கள்போல் நின்று கொண்டிருந்தன. எந்தக்கிணற்றில் தண்ணீர் குடிக்கப்போனாலும் [illegible] டுகள் கிடந்தன. நேற்று முஸ்லிமாயிருந்தவர்கள் இன்று பயத்தால் ராமபஜனை செய்தார்கள். ஔரங்கசீப் செய்த ஒவ்வொரு கொடுமைக்கும் பதில் கொடுமைகளைச் செய்து காட்டி [illegible] தயால்ஸா. இந்தக் காட்சிகளெல்லாம் ரதன் [illegible]ன் மனத்தில் கூட சிறிது பீதியைக் கிளப்பின. 'இப்பேர்ப் [illegible]டு மந்திரியின் மருமகளை நான் அணுகுவது அவ்வளவு [illegible]? என்ன சொல்லிக்கொண்டு மந்திரியைப் பார்ப்பது? [illegible] ரதன் சந்தாவத் என்று சொன்னால் தயால்ஸா சும்மா விடுவானா? என்றெல்லாம் ரதன் யோசித்தான். இந்த யோசனைகள் அவனுடைய வாழ்க்கையைப் பற்றி அவனே [illegible] கசப்படையக் கூடிய நிலைமையை உண்டு பண்ணி [illegible].

அந்தக் காலத்தில் ரதன் சந்தாவத்தைப்பற்றி அறியாதவர்கள் ஹிந்துஸ்தானத்தில் கிடையாது. இரண்டொரு [illegible] காரியங்களில் பிரவேசித்ததால் அவன் பெயர் [illegible] பிரசித்தி பெற்றிருந்தது. ரதன் இதுவரை இண்டு தடவை

கட்சி மாறியாகிவிட்டது. பதினாறாவது வயது முதலே யுத்த களத்தில் இறங்கிய ரதன், யுத்த பூமியையே பெரும்பாலும் குடியிருக்கும் இடமாக ஆக்கிக் கொண்டான். தீவிரமாகச் சண்டையில் இறங்கிய கட்சிகளிலேயே அவன் சேவை செய்து வந்தான். ஆகவே எப்பொழுதும் எந்தப் பக்கமும், நிலைக்காமல் சிறிது காலம் ராஜபுத்திரர்களின் பக்கமும் சிறிது காலம் மொகலாயர் பக்கமும் அவன் வாள், மனிதர் தலைகளை அறுவடை செய்து வந்தது. வாள்போரில் நிகரற்றவன் என்ற பெயர் அவனுக்கு வந்ததற்கு இந்த யுத்த சேவைகள் மட்டுமே காரணமில்லை. முதல் முதலில் டில்லியில் இருந்த காலத்தில் ஔரங்கசீப்பின் சேனாதிபதிகளில் ஒருவனான திலேகர்கான் மகனை ரதன் கொன்றுவிட்டான். அந்தச் சம்பவத்தால் அவனுக்கு வாள்போரில் நிகரற்றவன் என்ற பெயர் கிடைத்ததோடு நன்னடத்தையற்றவன் என்ற பெயரும் கிடைத்தது.

டில்லி வட்டாரங்களில் அப்பொழுதிருந்த ரஜனி என்ற ராஜபுத்திர வேசியை திலேகர்கான் மகன் மானபங்கப் படுத்த முயன்றான். ரதனுக்கு அப்பொழுது சுமார் இருபது வயது இருக்கும். அந்த ராஜபுத்திரியின் கற்பு கணக்கற்ற முறை அழிந்திருக்கிறது என்பதை அறியாத ரதன், அவளுடைய கற்பைக் காக்க எண்ணி திலேகர்கான் மகனை வழி மறித்து சண்டைக்கிழுத்துக் கொன்றுவிட்டான். திலேகர்கான் மகன் கத்திச் சண்டையில் அசகாய சூரன் என்று பெயர் பெற்றிருந்தான. அவனை ரதன் ரஜனிக்காகக் கொன்றவுடன் இவனுக்கும் ரஜனிக்கும் ராஜ்ய வட்டாரங்கள் முடிச்சுப் போட்டுவிட்டன. இப்படி ஒரு கெட்ட பெயரைச் சம்பாதித்துக் கொண்ட சில நாட்களுக்குள் திலேகர்கான் கோபத்திலிருந்து ரதன் தப்பியோடிவிட நேர்ந்தது. பிறகு சுமார் பத்து வருஷ காலம் மொகாலாயரை விட்டு ராஜபுத்திரர்களின் பக்கத்தில் இருந்து சண்டையிட்டான். மீண்டும் சென்ற மூன்று வருஷ காலமாக மொகலாயர் பக்கம் சேர்ந்து கொண்டான்.

இப்பொழுது ரதன்சந்தாவத்துக்கு முப்பத்து மூன்று வயதிருக்கும். இந்த வாலிப வயதுக்குள் அவன் வாழ்க்கையில் எத்தனை விபரீதங்கள்! எத்தனை மாறுதல்கள்! தூய்மையான ராஜபுத்திரர்களின் வழக்கங்கள் போய், டில்லி வட்டாரத்துக் குடிப்பழக்கம், வேசிலோலன், சண்டைக்காரன்,குடிகாரன் என்ற பட்டப் பெயர்கள்! குழந்தையும் பெண்ணும்,குடித்தனக்காரனும் கிட்டே சேர அஞ்சும் விபரீதமான ஒரு கீர்த்தி!

''இத்தகைய ஒரு கீர்த்தியுள்ள என்னை தயால்ஸா கிட்டே சேர்ப்பாளா? இளமையின் சபலமும், டில்லி நகரத்தின் ராஜாங்க சேவையும் என்னை ஓரிரண்டு சமயங்களில் வழி தவறச் செய்துவிட்டன என்பது வாஸ்தவம். ஆனால் அதைச் சமூகம் எவ்வளவு பெரிதாகச் செய்து விட்டது! வம்பளப்பதில் சொல்லொண்ணா ருசி படைத்த சமூகத்தின் விஷமத்துக்கு நானா பொறுப்பாளி? ஆண்களை மயக்கவே, இல்லாத வேஷங்களைப் போடும் டில்லி பட்டணக் குடும்ப வேசைகளின் விபரீத வாழ்க்கை, ஆண்களை எவ்வளவு தூரம் பாதித்து விடுகிறது! ரஜனி வேசி யென்று எனக்கு அப்பொழுது தெரிந்திருந்தால், திலேகர்கான் மகனை நான் ஏன் கொல்லப் போகிறேன்? பெண்களின் போலிவேஷத்தைக் கண்டு, நாணமென்னும் பொய்ப் போர்வையைக் கண்டு, கண் வலைகளிலும் கொடியிடைகளிலும் ரதன் சிக்கி விட்டானே தவிர, அவன் அயோக்கியனா? எல்லாம் தெரிந்த அந்தக் கடவுளுக்குப் பெண்களில்லாமல் ஓர் உலகத்தைப் படைக்கச் சாமர்த்தியமில்லையே. பெண்!கற்பு! என்ன பிரமையான வார்த்தைகள்! இவற்றைக் கண்டு பயந்து ஓடி [illegible] விட்டான் ஜெய்மல் ஸிம்ஹன். அகிலாதேவி மட்டுமென்ன ஆகாசத்திலிருந்தா குதித்துவிட்டாள்? மற்ற எல்லாப் பெண் [illegible] வெளிவேஷம் சிறிது அதிகமாயிருக்கும்; அவ்வளவு தான். அதைப்பற்றி நான் அஞ்சவில்லை. ஆனால் இந்தக்கொடிய தயால்ஸா என்னை வீட்டிற்குள் அனுமதிக்க வேண்டுமே. ரஸ்தா இருக்கிற நிலைமையைப் பார்த்தால் மந்திரி பெரிய கொலையாளி

மாதிரி தோன்றுகிறதே!'' என்று இப்படிப் பலவிதமான யோசனைகள் ரதன் சந்தாவத்தின் மூளையைக் கலக்கிக் கொண்டிருந்தன. இந்த யோசனைகள் மாறி மாறி எழுவதிலும் அதற்குச் சில மாற்றுகளையும் முடிவுகளையும் சிருஷ்டிப்பதிலும் ரதன் புத்தி வேலை செய்து கொண்டிருந்தபடியால் ரதனும் மோஹன்தாஸும் ஒருவருக்கொருவர் அதிகமாகப் பேசாமலே ஒன்றரை நாள் பிரயாணத்தை முடித்தார்கள்.

சாரங்கபூருக்குக் கிட்டே வந்துவிட்டதாகவே மோஹன் தாஸுக்குத் தோன்றியது. ஆனால் சிறிது சந்தேகத்துடன் கடிவாளத்தை இழுத்துக் குதிரையை நிறுத்தி, ''மஹராஜ்! இந்தப் பாதை அதோ அந்தக் கட்டடத்தோடு முடிவடைந்துவிடுகிறது போல் தோன்றுகிறது'' என்றான்.

ரதன் யோசனையிலிருந்து சிறிது விழித்துக்கொண்டு ''என்ன சொல்கிறாய் மோஹன்தாஸ்?'' என்று கேட்டான்.

''இந்த வழி அதோ அந்தக் கட்டடத்துக்கு அப்பால் போகாது போலிருக்கிறதே'' என்று, எட்ட இருந்த ஒரு சிறு தோப்பின் நடுவில் தெரிந்த ஒரு கட்டடத்தைச் சுட்டிக் காட்டினான் மோகன்தாஸ்.

''மோகன்தாஸ்! போகாத ஊருக்கு வழி காட்டவா உன்ன அழைத்துக்கொண்டு வந்தேன்?'' என்று ரதன் சீறினான்.

''மஹராஜ்! எனக்குச் சாரங்கபூர் ரஸ்தா நன்றாகத் தெரியும்.....''

''சந்தேகமென்ன!அதோ அந்தக் கட்டடந்தானே சாரங்கபூர்? ஒரே ஒரு வீட்டுக்கு ஓர் ஊரின் பெயரை வைப்பார்களென்பதை இதுவரை நான் கேட்டதில்லை மோஹன்தாஸ்!''

''மஹராஜ்! வழி எனக்குத் தெரியும். ஆனால் எப்படி வழி தவறினேன் என்று சொல்ல முடியவில்லை. நாம் இன்றிரவு சாரங்க பூரில் தூங்கவே திட்டம் போட்டிருந்தேன்.''

''சாரங்கபூர் வராததாலும், பாதி ராத்திரியாகிவிட்ட படியாலும் குதிரைமேலே நாம் தூங்கலாமென்று புதுத்திட்டம் போடுகிறாயா மோஹன்தாஸ்?'' என்று ரதன் எரிச்சலுடன் சொல்லிவிட்டு, ''வா! அந்தக் கட்டடத்திலாவது இந்த இரவைக் கழிப்போம்'' என்று எதிரே தெரிந்த தோப்புக்குள் குதிரையை நடத்தினான்.

நல்ல இருட்டு. கட்டடத்தின் ஒரு பாதி இடிந்து கிடந்தது. வௌவால்கள் 'கிரீச் கிரீச்' சென்று சத்தமிட்டு பறந்து கொண்டிருந்தன. கட்டட வாயிலில் இருந்த ஒரு மரத்தில் குதிரைகளைக் கட்டிவிட்டு இருவரும் படிகளில் ஏறினார்கள். முன்னால் சென்ற ரதன் பிரம்மாண்டமாக இருந்த வாயிற் கதவைப் பலமாகத் தன் வாளால் அழுத்தித் திறந்தான். அடிக்கடி இந்த உபசாரம் கிடைக்கப்பெறாத அந்தப் பழங்கதவு 'ஙொய்...' என்று செக்குபொல் பெரிதாகச் சத்தம் போட்டுச் சந்தாவதர்களின் வம்ச திலகத்தை வரவேற்றது.

''மோஹன்தாஸ்! இந்த மாதிரி இடத்தை கண்டுபிடிக்க உன்னால்தான் முடியும். இங்கு யமன்கூட வரப் பயப்படுவான். அப்படியிருக்க எந்த மனிதனும் இங்கு வந்து நம்மைத் தொந்தரவு செய்யபோவதில்லை'' என்றான் ரதன்,

மோஹன்தாஸ் பதில் சொல்ல வாயெடுத்தான், அதற்குள் அந்தக் கட்டடத்திற்குள்ளிருந்து யாரோ ஒரு மனிதன் ''ஐயோ-ஹா'' என்று முனகும் சத்தம் கேட்டது. ரதன் சற்றே பிரமித்து நின்றான். மோஹன்தாஸ் சிறிது புன்முறுவலுடன், ''மஹராஜ்! நமக்குத் துணைகூட இருக்கிறது மாதிரித் தோன்று கிறதே'' என்றான்.

''ஆம் மோஹன்தாஸ்! இந்த மாதிரி ஒரு துணையைச் சம்பாதிக்க உன்னைத் தவிர வேறு யாரால் முடியும்? சாரங்கபூருக்குப் பதில் ஒரு பாழடைந்த வீடு. அர்த்த ராத்திரியில் 'ஐயோ,அப்பா' என்று முனகும் துணைவன். மனநிம்மதிக்கு

வேண்டிய சகலத்தையும் சம்பாதித்து விட்டாய். வா, யாரென்று பார்க்கலாம்'' என்று, இரண்டாம் கட்டின் கதவையும் ரதன் திறந்தான். உள்ளே மங்கலான ஒரு தீபவெளிச்சம் தெரிந்தது. அதன் பக்கத்தில் ரத்தம் ஆறாகப் பிரவகிக்க ஒரு மனிதன் விழுந்து கிடந்தான்.

அத்தியாயம் 5

நிலவொளியில் ஒரு குல விளக்கு

யுத்த வீரனுக்கு ரத்ததைக் கண்டு என்ன பயம்? ரதன் சந்தாவத் அந்த மனிதனருகே சென்று சற்று நேரம் அவனைப் பார்த்துக்கொண்டு நின்றான். இருதயத்துக்கு அருகில் இருந்த கத்திக் காயத்திலிருந்து ரத்தம் கசிந்து கொண்டிருந்தது. அவனுக்குச் சற்று தூரத்தில் கிடந்தது அவ்வீரனின் போர்ச் சட்டை. அந்தச் சட்டையின் மேல் புறத்தில் சக்கரமாகச் சூரியனைப்போல் செய்யப்பட்டிருந்த சரிகை வேலைப்பாட்டிலிருந்து அந்த வீரன் தயால்ஸாவின் படையைச் சேர்ந்தவன் என்பதை ரதன் ஊகித்துக் கொண்டான். இத்தகைய ஆபத்து வேளைக்கு யாராயிருந்தா லென்ன? அவன் நண்பனாயிருந்தாலென்ன, ஜன்ம வைரியா யிருந்தாலென்ன? உதவி செய்யவேண்டியது க்ஷத்திரிய தருமந்தானே? இந்த எண்ணங்கள் உதயமாகவே ரதன் தன்னுடைய சட்டையைக் கழற்றி ஒருபுறம் வைத்துவிட்டு, ''மோஹன்தாஸ்! இப்படி வா, ஒரு கை கொடு'' என்று சொல்லிக் கொண்டே அந்த வீரனின் பக்கத்தில் மண்டியிட்டு உட்கார்ந்தான். மெள்ள அவனை மோஹன்தாஸ் உதவியால் திருப்பி, அவன் தலையைத் தன் மார்பில் சாத்திக்கொண்டு காயத்தைப் பரிசோதித்தான். ''காயம் பலமாயிருக்கிறது மோஹன்தாஸ்! மனிதன் பிழைப்பானா பார்'' என்றான்.

மோஹன்தாஸ் வைத்தியம் நன்றாகத் தெரிந்தவன். இந்த ஒரு விஷயத்தில் ரதன் தனக்கு நிகராகமாட்டான் என்ற பெருமையில், கைச் சட்டைகளை மடக்கிக்கொண்டு அங்குமிங்கும் எதையோ தேடலானான்.

''என்ன தேடுகிறாய்?'' என்றான் ரதன்

''காயத்திலிருக்கும் ரத்தத்தைத் துடைக்கவும், காயம் ஆழமாயிருந்தால் அதில் திணித்து ரத்தத்தை நிறுத்தவும் துணி வேண்டும். அதற்காகத்தான் பார்க்கிறேன்'' என்றான் மோஹன்தாஸ்.

''என் சட்டையை எடுத்துக் கிழி.''

''தங்களுக்கு அப்புறம் சட்டை?''

ஆத்மாவின் சட்டையான ஓர் உடல் சின்னாபின்னப் பட்டிருக்கும்போது துணிச் சட்டையைப்பற்றிக் கவலைப் படாதே. சீக்கிரம் கிழி.''

மோஹன்தாஸ் அதற்கு மேல் எஜமானனிடம் வாதாடத் துணியாமல், ரதன் சட்டையைக் கிழித்து, எதிரி வீரனின் மார்பிலிருந்த ரத்தத்தைத் துடைத்தான். பிறகு துணியைத் திரிதிரி சுற்றிக் காயத்துள் லேசாகத் திணித்தான். அதனால் ஏற்பட்ட வலியால் அந்த வீரன் 'ஹ, ஹ' என்று பெரிதாகக் கத்த ஆரம்பித்தான். அந்த ஹிம்சையைப் பொறுக்காத ரதன் , ''மோஹன்தாஸ், உன் வைத்தியத்தை நிறுத்து. இவன் தானாகச் சாகட்டும், நீ கொல்ல வேண்டாம்'' என்றான்.

''நான் என்ன செய்வது மஹராஜ்? உள்ளே மூன்று விரல் ஆழத்துக்குக் கத்தி நுழைந்திருக்கிறது! இருதயத்தைக் காத்து நிற்கும் எலும்புகளில் ஒன்று முறிந்திருக்கிறது. அவன் பிழைப்பது குதிரைக் கொம்புதான். எதற்கும் சிறிது பிரக்ஞையை வரவழைப்போம்'' என்று சிகிச்சையை மேற்கொண்டு நடத்தினான் மோஹன்தாஸ். அவன் திணித்த துணி வெளியே வந்து

கொண்டிருந்த ரத்தத்தைச் சிறிது நிறுத்தியது. ரதனின் சட்டையை மறுபடியும் தாறுமாறாகக் கிழித்து, அந்த வீரனின் மார்பில் சுற்றி , ஒடிந்த எலும்பையும் சேர்த்துப் பதமாகக் கட்டினான். பிறகு ''மஹராஜ்! அப்படியே இருங்கள். இங்கு எங்காவது சிறிது குடிநீர் கிடைக்கிறதா, பார்க்கிறேன். பங்களாவுக்கு வெளியில் ஒரு கிணற்றைப் பார்த்தேன்.இதோ வந்துவிட்டேன்'' என்று வெளியே ஓடிச் சிறிது நேரத்தில் சொட்டச் சொட்டத் தண்ணீரில் துணியை நனைத்துக்கொண்டு வந்தான்.

வாயில் தண்ணீரைப் பிழிந்ததாலும் முகத்தைத் துடைத்ததாலும் அந்த வீரன் சிறிது கண்களை விழித்தான். ஏதோ பேச வாயெடுத்தான். ஆனால் உள்ளேயிருந்து சத்தம் கிளம்ப வில்லை. தன் தலையை அவன் காதருகில் தாழ்த்தி, ''பயப்பட வேண்டாம், நாங்களும் ராஜபுத்திரர்கள்தாம்'' என்று கூறினான் ரதன்.

வீரன் ரதனை நன்றாகக் குனியும்படி ஜாடை காட்டி மெள்ளச் சிரமப்பட்டுப் பெருமூச்சு வாங்க அவன் காதில் சொன்னான்:''எனக்குப் பயம் ஏதுமில்லை...என் பிராணன் போய்க்கொண்டிருக்கிறது..ஓர் உதவி செய்ய வேண்டும்.''

''சொல், என் வாளின்மேல் ஆணையாக எது வேண்டு மானாலும் செய்கிறேன்'' என்று ரதன் பரிதாபத்துடன் கூறினான்

''நீ யார்... உன் பெயரென்ன?'' என்றான் அந்த வீரன்.

''என் பெயர் ரதன் சந்தாவத்.''

இதைக் கேட்டதும் அந்த வீரனின் விழிகள் அவநம்பிக்கையால் அகன்று ரதன் முகத்தைக் கவனித்தன.

''ரதன் சந்தாவத் ஸலூம்ப்ராவா..?

''ஆமா''

' நீங்கள்.... ஒளரங்கசீப்பின் கட்சியல்லவா?...இருந்தாலென்ன?...உங்களைப்பற்றிக்

கேள்விப்பட்டிருக்கிறேன்... ரதன் சந்தாவத் சொன்ன சொல் தவறாதவன்...அதுவும் வாளின்மேல் ஆணை வைத்த பின் சந்தேகமில்லை..''

''பயப்படாமல் சொல். நான் உயிரோடு இருந்தால் உன் கோரிக்கையை நிறைவேற்றிவிடுவேன்.''

''ரதன் சந்தாவத... அதோ என் சட்டைப் பையில்... சில கடிதங்கள் இருக்கின்றன.. அவற்றை ஜாக்கிரதையாக காப்பாற்றுங்கள்...எல்லாம் ராஜாங்கக் கடிதங்கள்...உங்கள் வாளின்மேல் ஆணை, அவற்றை நீங்கள் படிக்க வேண்டாம். அப்படியே சாரங்கபூரில் சேர்த்து விடுங்கள்'' என்றான். சாரங்கபூரில் எங்கே யாரிடம் என்று சொல்ல அவனுக்குச் சக்தியில்லை. பெருமூச்சு அதிகமாக வர ஆரம்பித்தது. பேசிய தன் அயர்ச்சி சிறிது கண்களையும் மூடியது. மோஹன்தாஸ் மீண்டும் இரண்டு சொட்டுத் தண்ணீர் பிழியவே, சிறிது ஸ்மரணை வந்தது. அந்த வீரன் உயிருக்கு மன்றாடிக்கொண்டே பேசலானான்:

''என் பெயர் மகாதேவ் சிம்ஹன். எனக்கு விவாகமாகி ஒரு வருஷம் ஆகிறது...என் கையில் கட்டியிருக்கும் தங்கக் கங்கணத்தைக் கழற்றுங்கள்..''என்றான்.

ரதன் மெள்ள கைச் சங்கிலியைக் கழற்றினான். அதன் முகப்பில் இருந்த மோஹராச் சிமிழைத் தன்னிடம் கொடுக்கும்படி அவன் சமிக்ஞை செய்தான்.அந்த மோஹராவைக் கையில் வாங்கிக்கொண்ட அந்த வீரன், அதன் சிமிழைத்திறந்தான்.''ரதன் சந்தாவத்...இதோ பாருங்கள்...இவள் தான் என் மனைவி...இந்தச் சித்திரம் நானே செதுக்கியது...இதைக் கொண்டுஅவளை நீங்கள் சுலபமாகக் கண்டு பிடிக்கலாம்...பார்த்தால் சொல்லுங்கள்...நான் கடைசிவரை ராஜபுத்திர சுதந்திரத்துக்காகவே சண்டையிட்டு மடிந்தேன் என்று...'' என்று சொல்லியதும் அந்த வீரனின் கண்கள் கண்ணீரால் மூட ஆரம்பித்தன. மெள்ள அவன் சமாளித்துக் கொண்டு ரதனைப் பார்த்தான்.

''உங்கள் மனைவியின் பெயரென்ன?'' என்று ரதன் மிகுந்த பரிதாபத்துடன் கேட்டான்.

வீரன் உதடுகள் அசைந்தன. ''அவள் பெயர்..'' என்ற வார்த்தைகள் ரதன் காதில் விழுந்தன. மேற்கொண்டு சொல் ஏதும் கிளம்பவில்லை. அந்த வீரனின் கண்கள் மூடின. தலை துவண்டு ஒருபுறமாக விழுந்தது. சட்டென்று மோஹன்தாஸ் நாடியைப் பிடித்துப் பார்த்து, ''மஹராஜ்! மஹாதேவ் ஸிம்ஹனுக்கு இன்னும் சில விநாடிகள்தான் இந்த உலகத்தோடு பாத்தியதை இருக்கிறது'' என்றான்.

இருவருமாக அந்த வீரனைக் கீழே படுக்க வைத்தார்கள்.

''இனி நிச்சயமாகப் பிழைக்கமாட்டானென்று தெரியுமா மோஹன்தாஸ்?''

''கையில் நாடி அடங்கிட்டது மஹராஜ்! காலில்தான் சிறிது தெரிகிறது. வைத்திய சாஸ்திரத்தில் இது அந்திமத்தின் குறி'' என்றான்.

''அப்படியானால் இங்கே இருப்பதால் பிரயோசனமில்லை. புறப்படுவோம். ஓகோ, என் சட்டையைக் கிழித்து எறிந்து விட்டாயோ? சரி. மகாதேவ் ஸிம்ஹன் சட்டையை எடு. அந்த மோஹராச் சிமிழையும், கங்கணத்தையும் எடு'' என்று கிடுகிடுவென்று கட்டளையிட்டுக் கொண்டே, மகாதேவ் ஸிம்ஹனின் சட்டையை அணிந்து கொண்டான் ரதன். மகாதேவ் ஸிம்ஹன் மனைவியின் சித்திரம் செதுக்கப்பட்ட சிமிழைச் சங்கிலியுடன் தன் கச்சையில் பத்திரப்படுத்திக் கொண்டான். பிறகு சிறிது நேரம் யோசித்துவிட்டு, ''மோஹன்தாஸ்! இவனை இந்த நிலைமையில் விட்டுச் செல்வது தர்மமல்ல. நான் சாரங்கபூருக்கு முன்னால் செல்கிறேன். நீ சற்று நேரம் இங்கிருந்து இவன் உயிர் போன பிறகு சாரங்கபூருக்கு வா. ஒரு வேளை மீண்டும் கண் விழித்துத் தண்ணீர் கேட்டானானால் யார் கொடுப்பார்கள்?'' என்றான்.

''இவன் இனிமேல் கண் விழிப்பதேது மஹராஜ்?''

''ஏன் விழிக்கக்கூடாது? எவ்வளவோ பேருக்குப் பிராணன் பிரிந்து திரும்பி வருவது உண்டு. இவனை அனாதையாக விட்டுச்செல்வது பிசகு. நீ இருந்துவிட்டுக் காலையில் வா. என்னைச் சாரங்கபூரின் பெரிய தர்மசாலையில் சந்தி'' என்று முடிவாக உத்தரவிட்டான்.

''மஹராஜ்! உங்களுக்குச் சாரங்கபூரின் வழி தெரியாதே. எதற்கும் நாம் வரும்பொழுது இருந்த கூட்டு ரஸ்தாவுக்குத் திரும்பிச் செல்லுங்கள். அங்கிருந்து தெற்கில் போகும் மார்க்கத்தில் திரும்புங்கள். அநேகமாக அது சாரங்பூர் ரஸ்தா தான் என்று நினைக்கிறேன்'' என்றான் மோஹன்தாஸ்.

''நினைக்கிறாயா? சரி; இருக்கட்டும். கடவுள் விட்ட வழியாகிறது'' என்று சொல்லிக்கொண்டே ரதன் கிளம்பினான்.

இரவின் மூன்றாம் ஜாமம் ஆரம்பமாகிவிட்டதால் கிருஷ்ண பக்ஷத்துச் சந்திரன் மெள்ள உதயமானான். ஆகவே ரஸ்தா முன்பிருந்ததுபோல அவ்வளவு பயங்கரமாக இல்லை. ரதன் வந்த வழியே சிறிது தூரம் போய், கூட்டு ரஸ்தாவை அடைந்து, சரியான மார்க்கத்தில் திரும்பிச் சாரங்கபூருக்கு அருகில் வந்துவிட்டான். சாரங்கபூர் அவன் நினைத்தது போல் அவ்வளவு அமைதி யாயில்லை. மொகலாயத் துருப்புக்கள் சில அடிக்கடி இவனைக் கடந்து சென்றன. நகரத்தின் சில பகுதிகள் விழித்துக் கொண்டிருந்ததற்கு அடையாளமாக ஓரிரண்டு இடங்களில் விளக்குகள் தெரிந்தன. அந்த விளக்குகளில் ஒன்றை நோக்கி ரதன் குதிரையை நடத்திச் சென்று, ஒரு சிறிய தர்மசாலையை அடைந்தான்.

இந்த தர்மசாலைகள் மௌரியர்களின் காலம் முதலே நாட்டில் ஏற்பட்டவை. ஆங்காங்கு பிரயாணிகளை உபசரிப் பதற்காகவே அந்தக் காலத்தில் அரசர்களால் ஏற்படுத்தப் பட்டவை. ரதன் இறங்கிய தர்மசாலையில் குதூகலமும் சிரிப்பும் ஆர்ப்பாட்டமும் அதிகமாயிருந்தன.

ரதன் குதிரையை வாசலில் கட்டி உள்ளே நுழைந்தான். மொகலாயப் பட்டாளத்தைச் சேர்ந்த சிலர் உள்ளே குடித்துக் கூத்தடித்துக் கொண்டிருந்தார்கள். 'சாரங்கபூரைத்தான் தயால்ஸா சூறையாடிவிட்டானே. மொகலாயத் துருப்புகள் இங்கு எப்படி வந்தன?'' என்று யோசித்துக் கொண்டே ரதன் ஒரு மூலையில் சென்று உட்கார்ந்து கொண்டான். இவன் வந்ததைப் பார்த்த இரு சிப்பாய்கள் , ''அரே அரே! அதோ பார்!'' என்றார்கள்.

அவர்களின் தலைவன் அவர்கள் காட்டிய திசைக்காகத் திரும்பிப் பார்த்தான். ரதன் சட்டையிலிருந்த சூரிய அடையாளத்தைக் கவனித்ததும் குடி மயக்கத்திலிருந்து சிறிது நிதானித்துக் கொண்டான். மெள்ளத் தடுமாறி எழுந்து ரதன் அருகில் வந்து, ''டேய்! நீ யார்'' என்றான்.

ரதன் சிறிது நேரம் அவனை உற்றுப்பார்த்தான். முதலில் தன் பெயரைச் சொல்லலாம் என்றுதான் நினைத்தான். ஆனால், டைபர்கான் இவர்களுக்குத் தன்னைப்பற்றி என்ன செய்தி அனுப்பினானோ என்ற யோசனை உண்டாகவே சிறிது நிதானித்தான். ஒரு புது யோசனை அவன் புத்தியில் உதயமாயிற்று. ''என் பெயர் மஹாதேவ் ஸிம்ஹன்'' என்று கூறினான். மறுகணம் அவன் எத்தகைய தவற்றைச்செய்து விட்டான் என்பதைத் தெரிந்துகொண்டான்.

அந்தப் பெயரைக் கேட்டதும் மொகலாயச் சிப்பாயின் குடிவெறி அடியோடு போய்விட்டதாகத் தோன்றியது. ''மகாதேவ்ஸிங்! நீ மிகவும் துணிச்சலுள்ளவன் என்று கேள்வி. இவ்வளவு துணிச்சலுள்ளவன் என்று எனக்குத் தெரியாது. உன்னைக் கைது செய்து பிடித்து வரும்படி நவாப் உத்தரவு. உன் வாளைக் கொடுத்துவிட்டுப் புறப்படு'' என்று சொல்லிக் கொண்டே தன் வாளை உருவினான். இதற்குள் மற்ற மொகலாயச் சிப்பாய்களும் அவன் இருந்த இடத்தை அணுகினார்கள்.

ஆனால் தாங்கள் சமாளிக்க வேண்டிய மனிதன் ரதன் ரதன்தான் என்று அவர்களுக்கு எப்படித் தெரியும்? கண்மூடிக் கண் திறப்பதற்குள் பிரமிக்கத்தக்க காரியங்கள் நடந்தன. ரதன் கை [illegible] கச்சையில் பாய்ந்து அதிலிருந்து உடைவாளை எடுத்து [illegible] உருவின வாளுடன் நின்ற மொகலாயனின் வலது கரம் [illegible] தொங்கிவிட்டது. 'ஹா'என்ற மொகலாயத் தலைவனின் கூச்சல் முடியுமுன்னமே ரதன் சந்தாவத் எழுந்து வாளை உருவினான். வழிமறித்த பத்துப் பன்னிரண்டு வீரர்களைச் சமாளித்துக் கொண்டே வாயிற்படியை நோக்கி முன்னேற ஆரம்பித்தான். ஆனால் எதிர்ப்பு பலமாயிருந்தது. தர்ம சாலையின் வழியும் மிகக்குறுகல்.

ரதனுடைய வலது தோளில் ஒரு வாள் நன்றாகப் பாய்ந்தது. இடையில் ஒரு வாள் புகுந்தது. ரதன் வாளை இடது கைக்கு மாற்றிச் சுழற்றிக்கொண்டே வாயிலுக்கு ஓடினான். குதிரையை அவிழ்க்கவும் நேரமில்லாததலால் பாதசாரியாகவே சாரங்கபூரின் சந்துகளில் நுழைந்து வேகமாக ஓட ஆரம்பித்தான். பின்னால் மொகலாய வீரர்கள் துரத்தினார்கள்.

ரதன் எவ்வளவு தூரம் ஓடினான் என்பது அவனுக்கே தெரியாது. இடையிலும் வலது தோளிலும் ஏற்பட்ட கத்திக்குத்துகளிலிருந்து ரத்தம் நீர்வீழ்ச்சிபோல் வந்து கொண்டிருந்தது. ரதன் அன்று பிழைத்ததற்கு அவன் போர்த்திறமைகூடக் காரணமில்லை. சாரங்கபூரை ஏராளமான சந்துபொந்துகளுடன் நெருக்கமாகவும், அந்த ஊரில் பழகியவனுக்கே வழி தெரியாதபடியும் அமைத்த நகரச் சிற்பிதான் ரதன் உயிரைக் காப்பாற்றினான். மொகலாயச் சிப்பாய்களும் ரதனை விடவில்லை. ரத்தத்தை அடையாளம் வைத்துக்கொண்டு பின் தொடர்ந்தார்கள்.

ரதன் பல இடங்களில் திரும்பித் திரும்பி ஓடினான். அவன் கால்கள் ரத்த நஷ்டத்தால் சோர்வடைய ஆரம்பித்தன. தன் முடிவு

காலம் கிட்டிவிட்டதாகவே ரதன் நினைத்தான். எதிரே ஏதோ ஒரு தோப்பு தெரிந்தது; அதில் புகுந்து ஓடினான். உள்ளே மாடிப்படிகள் போல் ஏதோ சில கண்ணுக்குத் தெரிந்தன. சிரமப்பட்டுப் பத்துப்படிகள் ஏறினான். அந்தச் சமயத்தில் படிகளின் உச்சியிலிருந்த ஒரு கதவு திறந்தது. அதன் வாயிலில் ஒரு பெண் தோன்றினாள்.

அந்த முகத்தை ஏறெடுத்துப் பார்த்த ரதன் அசைவற்றுச் சிலையென நின்றான். தள்ளாடிய உடம்புக்கு ஊன்று கோலாகக் கத்தியைப் படியில் ஊன்றிக்கொண்டான். அந்த முகத்தைப் பார்த்ததும் அவன் பிராண பயம் எப்படியோ பறந்துவிட்டது. சில விழிகளில் அமிருத தாரை உண்டு என்று சொல்லும் பிராசீன சாஸ்திரத்தில் தவறில்லை என்றே அந்த நிமிஷத்தில் ரதன் நினைத்தான். கிருஷ்ண பக்ஷத்துச் சந்திரன் அப்பொழுது மயங்கிய தற்குக் காரணம் சின்னஞ்சிறு மேகம் ஒன்று மறைத்துச் சென்றதுதான். ஆனால் ரதன் உள்ளம் அந்த உண்மையை அங்கீகரிக்க மறுத்தது. அந்த பெண்ணின் சந்திரமுகத்தின் ஒளியாலேயே சந்திர கிரணங்கள் பிரகாசத்தை இழந்தன என்ற கற்பனைக்கே அவன் மனம் இடம் கொடுத்தது. இரண்டாயிரம் வில் வீரர்களை உதவிக்குத் தந்திருந்தால் கூட ஏற்படாத தைரியத் தையும், மனச்சாந்தியையும் அவளுடைய விற்புருவங்கள் அவனுக்கு அளித்தன. அந்த முகத்தில் ஒரு சாந்தி, ஒரு கௌரவம், யாரும் நெருங்க அஞ்சும் ஒரு நிதானம் இவற்றை ரதன் கண்டான். மான்போல் மருட்சியில்லாத விழிகள்தாம். ஆனால் புண்ணியமான விக்கிரகத்தின் அருள் சொரியும் விழிகளை ரதன் ஞாபகப்படுத்திக் கொண்டான்.

"ரதனுக்கா இந்த நினைவுகள்! வேசிலோலன்! பெண்களின் தூய்மையில் நம்பிக்கையே இல்லாதவன்! அப்பேர்ப்பட்ட ரதனா விக்கிரகத்துக்கும் புண்ணியத்துக்கும் பெண்ணை இணைக் கிறான்! ஏதோ பிரமை! சித்தப்பிரமைதான்" என்று ரதன் தன்னைத் தானே கண்டித்துக்கொண்டான். அந்த நிமிஷத்தில் வெளியே

வேகமாகச் செல்லும் குளம்புச்சத்தங்கள் காதில் விழுந்தன. ரதன் காதிலல்ல. அவன் நினைவுதான் எதிரே படி உச்சியில் சலவைக்கல் சிலையென நின்ற பெண்ணின் முகத்தில் லயித்திருந்ததே! அந்தப் பெண்ணுக்குத்தான் குதிரைகளின் காலடிச்சப்தம் கேட்டது. அவள் மெள்ளப் படிகளில் இறங்கினாள்.

ரதனுடைய விழிகள் அவளை மீண்டும் நோக்கின. 'அவள் படிப்படியாக இறங்கித்தான் வருகிறாளா? அல்லது அந்த இடையின் ஒய்யார அசைப்பே அவளைத் தானாக இறக்கிக்கொண்டு வருகிறதா? இடையும், அதற்கு மேலும் தாமாகவா அப்படி அசைகின்றன! நாட்டிய சாஸ்திரத்தின் அசைவுகள் சில உத்தம ஜாதி ஸ்திரீகளின் உடம்பில் இயற்கையிலேயே இணைந்து கிடக்கின்றனவென்று சொல்வதிலும் உண்மை உண்டுபோல் தெரிகிறதே! இந்த அசைவுகளை மிகைப்படுத்தும் பரத சாஸ்திரம் எவ்வளவு வெறுப்பாக இருக்கிறது!' என்றெல்லாம் அவன் நினைவுகள் ஓடின. அத்துடன் ரத்தமும் ஓடிக்கொண்டிருந்ததால் கை துவண்டு வாள் கீழே விழுந்தது. ரதனும் கீழே விழப்போனான். அந்தப் பெண் அதிவேகமாகப் படிகளில் ஓடிவந்து, ஏதோ தேவதை கை கொடுப்பதுபோல் அவனைத் தன் இரு கைகளாலும் தாங்கினாள். அவன் ஸ்மரணை தப்பும் தறுவாயிலிருந்தான். "நீ யாரம்மா?" என்று தடுமாறினான், மேற்கொண்டு நாக்குப் பேச மறுத்தது. புத்தியில் இருள் கவிந்துகொள்வது போன்ற உணர்ச்சி!

தூரத்திலிருந்து யாரோ, " அகிலா! அகிலா!" என்று கூப்பிடுவது அவன் காதில் விழுந்தது. அதற்குப்பிறகு ஒரே அந்த காரம். நினைவு எங்கோ பறந்துவிட்டது.

அத்தியாயம் 6

அகிலாவின் தகப்பனார்.

ரதன் கண்ணை விழித்தபோது கூர்மையான விழிகள் அவனை உற்று நோக்கிக்கொண்டிருந்தன. மங்கலான நிலவொளியில் மாடிப்படிகளில் கண்ட அந்த மாதரசியின் விழிகளல்ல. கருணைசொட்டும் அந்தக் கட்டழகியின் விழிகளல்ல. முரட்டு மனிதன் ஒருவனின் மூர்க்கத்தனமான விழிகள் தன் முகத்தை ஆராய்ச்சி செய்து கொண்டிருப்பதை ரதன் அறிந்தான். கழுகுப் பார்வையாக அந்த மனிதன் தன்னைப் பார்த்துக் கொண்டிருப்பதையும் அவன் கையில் கத்தியொன்று மின்னிக் கொண்டிருப்பதையும் கண்டான். அந்த மனிதன் கத்தியின் கூர்மையைப் பரிசோதித்துத் தன்னையும் நோக்குவதைக் கண்டதும் ரதன் புத்தியில் தன் நிலைமையைப் பற்றிய சந்தேகம் உதயமாகத் தொடங்கியது.

மீண்டும் ரதன் கண்களை மூடிக்கொண்டான். புத்தியில் என்ன என்னவோ யோசனைகள் அலை அலையாக எழுந்து ஊசலாடின. 'இந்த மனிதன் யார்? கத்தியும் கையுமாக என் பக்கத்தில் எதற்காக உட்கார்ந்து கொண்டிருக்கிறான்? என்னைக் காவல் புரிந்து கொண்டிருக்கிறானா? என்னைத் துரத்தி வந்தவர்கள் கையிலா நான் அகப்பட்டுக் கொண்டேன்? அப்படியானால் அந்தப்பெண் என்ன ஆனாள்? ஒருவேளை அவள்தான் என்னைக் காட்டிக் கொடுத்துவிட்டாளா? அவளும் ஒரு வேளை மொகலாய வட்டாரங்களைச் சேர்ந்தவளா?சே! சே! இருக்க முடியாதே. அந்த வட்டாரத்து ராஜபுத்திரிகளைப் பார்க்கும் போதே எனக்கு அடையாளம் தெரியுமே. இந்தப்பெண் புது மாதிரியாக இருந்தாளே. காயமடைந்து காலடியில் விழும் வீரனைக் காட்டிக் கொடுக்கும் கேவலமான பெண்ணாக அவள் எனக்குத் தோன்றவில்லையே. எவ்வளவு அழகான முகம்! அதில் என்ன தெளிவும்

கருணையும் இருந்தன! எப்படி நிர்ப்பயமாக என்னைத் தாங்கிப் பிடிக்க ஓடி வந்தாள்! அப்பேர்ப்பட்ட பெண்ணா எனனைக் காட்டிக் கொடுத்திருப்பாள்? ஒருகாலும் இருக்காது. ஒரு வேளை அந்தப் படிகள் எல்லாம் என் சித்தப் பிரமையாயிருந்தால்? அதெப்படி இருக்கும்? நான் படிவரையில் ஓடி வந்தது ஞாபகமிருக்கிறது. அதற்கப்புறம் அந்த கதவு திறந்தது. அவள் வந்தாள். கடைசியில் யாரோ பெயர் சொல்லிக் கூப்பிட்டார்கள். ஆம் ஆம்! அந்தப் பெயர்தான் அகிலா! அகிலா! அந்த அகிலா யார்? நான் தேடி வந்த அகிலா தேவியாயிருக்குமா? அதெப்படி இருக்க முடியும்? அகிலாதேவி உஜ்ஜயினியிலல்லவா இருக்கவேண்டும்? இங்கு எப்படி வர முடியும்? அது கிடக்கட்டும். இந்த ஆசாமி யார்? இவனிடம் நான் எப்படி அகப்பட்டுக் கொண்டேன்?...' என்று ரதன் யோசித்துக் கொண்டிருந்தான். எந்த வழியில் யோசித்தாலும் தான் இருக்கும் நிலைமைப் பற்றி ஒரு முடிவுக்கு வரக்கூடாதவனாய், 'எப்படி இருந்தாலும் இவனையே கேட்போம்' என்ற தீர்மானத்தோடு ஒருபுறமாக ஒருக்களிப்பதற்காக இடது கையைப் படுக்கையில் சினத்துடன் ஊன்றினான். படுக்கை மகாமிருதுவாயிருந்ததைக் கண்டு வியந்தான். மொகலாய வட்டாரங்களில் கைதிகளுக்கு இந்த மாதிரிப் பஞ்சணையைப் போடுவது வழக்கமில்லையே என்று யோசித்துக்கொண்டே திரும்ப முயன்றபோது தனது தோளில் 'சுரீ' ரென்று வலி உண்டாகவே தான் அசையக் கூடச் சக்தியற்றிருப்பதைத் தெரிந்துகொண்டான்.

ரதன் விழித்ததையும் ஒருபுறம் புரள முயன்று, முடியாமல் தள்ளாடியபடி படுக்கையில் விழுந்ததையும் பக்கத்தில் கத்தியுடன் உட்கார்ந்திருந்தவன் கண்டான். அவன் வேறு ''யாரையோ கூப்பிட்டு ''மஹராஜ்! நான் சொன்னதென்ன? இந்த மனிதன் என்னிடமிருந்து தப்பி யமனிடம் போய்விட முடியாதென்று சொன்னேனல்லவா?'' என்றான். 'ஓகோ! இவன் என்னைத் தன் கைப்படக் கொல்லவேண்டுமென்று ஆசைப்படுகிறான் போலிருக்கிறது' என்று ரதன் நினைத்தான்.

அந்த மனிதன் மறுபடியும் சொன்னான்; "மஹராஜ் இனி மேல் ஆபத்தில்லை. இன்னும் நாலைந்து நாட்களில் இந்த ஆசாமி எழுந்து நடக்கலாம். அதுவரையில் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். இப்படி அப்படி அசங்காமல் பார்த்துக்கொள்ளுங்கள். அசங்கினால் மீண்டும் சஸ்திர சிகிச்சை செய்ய வேண்டியிருக்கும்" என்றான்.

"அதெல்லாம் நான் பார்த்துக்கொள்கிறேன். உயிருக்கு ஒன்றும் ஆபத்தில்லையென்றால் சரிதான். இவர் சாதாரண மனிதரென்று நினைக்க வேண்டாம். நமக்கு மிகவும் வேண்டியவர். இவர் மாமனாரும் நானும் பால்ய நண்பர்கள். இவர் இவ்விடம் வந்த பிறகு ஆபத்து ஏதேனும் நேர்ந்தால் என் நண்பருக்கு நான் என்ன பதில் சொல்ல முடியும்? ஆகையால் பண்டித்ஜீ! இன்னும் இரண்டு மூன்று நாள் நீர்தான் வந்து கவனித்துக்கொள்ள வேண்டும்" என்றான் அந்த இன்னொரு மனிதன்.

ரதன் தனக்கு ஸ்மரணை வரவில்லையென்றே நினைத்தான். 'எனக்கு மாமனாராவது! இதென்னடா கிரகசாரம்? எனக்கு எப்பொழுது கல்யாணமாயிற்று? கல்யாணமானால் என் மனைவி யார்? இதெல்லாம் சொப்பனம். சொப்பனந்தான் சந்தேகமில்லை' என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டான். 'சொப்பனமானால் இரண்டு மனிதர்கள் பேசுவதை நான் கேட்கிறேனே, அதெப்படி முடியும்? அதுவும் சொப்பனமானால் சொப்பனம் என்ற உணர்ச்சி எனக்கு எப்படி ஏற்படுகிறது?' என்று மனம் குழம்பிக்கொண்டே இருந்ததைத் தாங்கமாட்டாமல், "யாரது?" என்று கூப்பிட்டான்.

கையும் கத்தியுமாக இருந்த மனிதனும் மற்றொரு பெரியவரும் அவன் கட்டிலை நோக்கி வந்தார்கள். "இப்பொழுது வலி எப்படியிருக்கிறது?" என்று அன்புடன் கேட்டுக்கொண்டே அந்தப் பெரியவர் ரதன் பக்கத்தில் கட்டிலில் உட்கார்ந்து கொண்டார். "இவர்தாம் எங்கள் குலவைத்தியர் பண்டித்ஜீ. இவரது ஆயுத சிகிச்சையால்தான் நீங்கள் பிழைத்தீர்கள். உங்களுக்கு

ஏதாவது நேர்ந்தால் உங்கள் மாமனார் இந்திரஸிங்குக்கு என்ன பதில் சொல்வதென்ற கவலையால் நான் இரண்டு நாளாகத் தூங்கவில்லை. யமனிடம் இந்த உயிரை விடுவதில்லை என்று பண்டித்ஜீ வேடிக்கையாகச் சொல்லி என்னை ஊக்கப்படுத்திக் கொண்டு தானிருந்தார். இருந்தாலும் நீங்கள் இன்று கண்விழித்த பிறகுதான் எனக்கு உயிர் வந்தது" என்றார் பெரியவர்.

"இரண்டு நாட்களாகவா நான் ஸ்மரணை இல்லாமல் இருந்திருக்கிறேன்?" என்றான் ரதன் ஆச்சரியத்துடன்

"ஆம், அதனாலென்ன? இனிமேல் ஒன்றும் பாதகம் இல்லை. இன்னும் ஒரு வாரத்தில் பூரணமாகக் குணமாகி விடும். அப்புறம் உங்களிஷ்டப்படி நீங்கள் உலவலாம்" என்றார் அந்தப் பெரியவர்.

"இன்னும் ஒரு வாரமா உங்களைக் கஷ்டப்படுத்த வேண்டும்?" என்று ரதன் கேட்டான்.

"சே! சே! இதென்ன பேச்சு? நீங்கள் என் பிள்ளை மாதிரி. உங்களைப் பற்றிநான் எவ்வளவோ கேள்விப்பட்டிருக்கிறேன். என் மைத்துனன் தயால்ஸா நீங்கள் ராஜபுதனத்துக்குச் செய்துள்ள சேவையைப் பற்றி எவ்வளவோ சொல்லியிருக்கிறான். அம்மாதிரி மகாவீரனைக் காப்பாற்றும் பாக்கியம் கிடைத்தது எனக்கு எவ்வளவோ பெருமையாயிற்றே" என்றார் பெரியவர்.

தயால்ஸாவின் பெயரைக் கேட்டதும் ரதன் சந்தாவத்தின் மனம் ஒரு விநாடி சலித்தது. இருந்தபோதிலும் விஷயத்தைப் பூரணமாக விசாரித்தறியப் பேச்சுக் கொடுத்தான்.

"தயால்ஸா தங்கள் மைத்துனரா?"

"ஆம்! என் பெயர் ராஜபுதனத்தில் அவ்வளவு பிரசித்தமில்லை. என் புத்திரி அகிலாவின் பெயர்தான் எல்லோருக்கும் தெரியும். என் பெயர் பிரசித்தமில்லாததும் ஒரு காரியத்துக்கு நல்லதுதானென்று வைத்துக்கொள்ளுங்கள். இல்லா

விட்டால் சாரங்கபூர் இப்பொழுது மொகலாயர் கையில் இருப்பதற்கு, இந்த வீட்டை சூறையாடியிருப்பார்கள். அதுவும் தயால்ஸாவின் மைத்துனனும் தயால்ஸா மருமகளும் இந்த இடத்தில் இருக்கிற விஷயம் ஔரங்கசீப்பிற்குத் தெரிந்தால் என்ன கொண்டாட்டம் என்று நினைக்கிறீர்கள்? அப்படியே இந்த வீட்டைச் சுற்றி வளைத்துக்கொள்ளுவதில்லை யென்றாலும், என் பெண் அகிலாவைத் தூக்கிக்கொண்டு போவதற்காவது முயற்சி கண்டிப்பாய் நடக்கும்.''

''தங்கள் பெண்ணைத் தூக்கிக்கொண்டு போகவா?''

''தங்களுக்கு விஷயம் தெரியாது போலிருக்கிறது. முதலில் என் உறவினான ஜெய்மல் ஸிம்ஹனை அனுப்பிப்பெண்ணை அபகரிக்கப் பார்த்தார்கள். அது பலிக்காமல் போகவே இப்பொழுது மற்றொரு கஜப்போக்கிரியை அனுப்பியிருக்கிறார்களாம். அவன் யாரென்று நினைக்கிறீர்கள்?''

''யார்?''

''ரதன் சந்தாவத். ஸலூம்ப்ரா தோன்றிய உத்தம வம்சத்தில் தோன்றியவன். ஆனால் இப்பொழுதோ மகாஅதமன். மொகலாயர் களின் கைக் கருவியாகப் பிழைத்து வரும் மிகக் கேவலமான மனிதன்.''

ரதன் இதழ்களில் புன்முறுவல் அரும்பியது. தன்னைப் பற்றிய அபிப்பிராயங்களை நேருக்கு நேர் தெரிந்து கொள்ளும்படியான பாக்கியம் எந்த மனிதனுக்கும் கிடைப்பது துர்பலமல்லவா? எவ்வளவு அயோக்கியனைப் பார்த்தாலும் முகஸ்துதியாகப் பேசிவிட்டுப் போவதுதானே உலகத்தின் இயல்பு? முகஸ்துதி செய்ய இஷ்டமில்லாவிட்டாலும் தன்னைப் போன்ற ஒரு வீரனை அவனைப் பற்றி உலகம் என்ன நினைக் கிறதென்று சொல்ல யார்தான் துணிவார்கள்?

அந்தப் பெரியவர் அவன் புன்முறுவலைத் தப்பர்த்தம் செய்துகொண்டு பேசலானார். ''ரதன் சந்தாவத்தைப் பற்றி நான் சொன்ன விஷயங்களில் தவறு ஏதும் இல்லை. அவன் வாள் போரில் நிகரற்றவன் என்று சொல்கிறார்கள். அதைப் பற்றி நாம் பெருமைப்பட என்ன இருக்கிறது? அவன் வாள், குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக்காம்பாக ராஜபுத்திரர்களை வெட்டு வதற்கே உபயோகப்படுகிறது. அது செயலற்றுப்போகும் காலமும் நெருங்கிவிட்டது. அகிலா உஜ்ஜயினியிலிருப்பதாக ரதன் சந்தாவத் அங்கு செல்லுகிறான். ஆனால் அவன் கழுத்துக்குக் கத்தி அங்கு தயாராயிருக்கிறது. இந்த ஓர் உபகாரம் ஜெய்மல் ஸிம்ஹன் செய்துவிட்டான். இதற்காக ஜெய்மல் ஸிம்ஹனை நான் மன்னிக்கக்கூடத் தயார்.''

''ஜெய்மல் ஸிம்ஹனா!''

''முந்தி சொன்னேனே என் உறவினன் என்று, அந்த ஜெய்மல் ஸிம்ஹன்தான். ரதன் சந்தாவத் அகிலாவை அபகரிக்கப் பந்தயம் வைத்துக்கொண்டு புறப்பட்டிருப்பதை ஜெய்மல் உஜ்ஜயினிக்கு எழுதியனுப்பியிருக்கிறான்.''

''அவன் எழுதியனுப்பியது உங்களுக்கு எப்படித் தெரிந்தது?''

''தயால்ஸாவை லேசானவனென்று நினைக்கிறீர்களா? அவனுடைய ஒற்றர்கள் இல்லாத இடமே கிடையாது. மௌரியர்கள் காலத்தில் சாணக்கியன், மொகலாயர் காலத்தில் தயால்ஸா என்பது ராஜபுதனத்தில் பழமொழியாயிற்றே. மொகல் சாம்ராஜ்ய வட்டாரங்களில் நடக்கும் சகலவிஷயங்களைப் பற்றியும் தயால்ஸாவுக்கு மறுநிமிஷம் தகவல் வந்துவிடும். உஜ்ஜயினி செல்லும் ஒற்றன் ஒருவன் இங்கு வந்து எங்களை எச்சரித்துப் போனான். ஆனால் ரதன் சந்தாவத் இங்கு எங்கு வரப்போகிறான்? தாங்கள் இங்கு இருக்கும் விஷயம் அவனுக்கு எப்படித் தெரியும் பாவம் ரதன் சந்தாவத்! அவன் தலை, நாளைக் காலை அநேகமாக உஜ்ஜயினியில் உருளும்'' என்றார் பெரியவர்.

தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயிற்று என்பதுபோல தன் தலைக்கு வர இருந்த தீம்பு விதியின் உதவியால் கையிலும் இடையிலும் ஏற்பட்ட காயத்தோடு போயிற்

றென்பதை ரதன் தெரிந்துகொண்டான். அத்துடன் ஜெய்மல் ஸிம்ஹனின் மித்திரபேதமும் அவன் மனத்தில் பெரிய கொந்தளிப்பை உண்டுபண்ணிவிட்டது. திரும்பி ஜெய்மல் ஸிம்ஹனைச் சந்திக்க நேர்ந்தால் அவன் தலையைத் தோள்மேல் திடமாக உட்கார்ந்திருக்க அனுமதிப்பதில்லையென ரதன் மனத்திற்குள் சபதம் செய்து கொண்டான். பெரியவரை மீண்டும் சந்தேகம் கேட்டான்.

''ஆம்! என்னிடம் இதையெல்லாம் எப்படி நம்பிச் சொல்கிறீர்கள்...''

''மகாதேவ்ஸிங்! உங்களை யாரென்று அறிந்து கொள்ளாமலா நானும் என் பெண்ணும் இங்கிருக்கும் ரகசியத்தைச் சொன்னேனென்று நினைக்கிறீர்கள்? என்னை அவ்வளவு முட்டாளாக நினைக்கவேண்டாம். நீங்கள் யாரென்பதை உங்கள் போர்ச்சட்டையிலிருந்தே ஊகித்தேன். தவிர உங்கள் சட்டைப் பையிலிருந்த கடிதங்கள் கொஞ்ச நஞ்சமிருந்த சந்தேகத்தைப் போக்கடித்து விட்டன. இல்லாவிட்டால் நீங்கள் இத்தனை நாழிகை இந்தக் கட்டிலில் உயிருடன் படுத்திருக்க முடியும் என்று நினைக்கிறீர்களா? உங்களுக்குப் பதில் அந்த ரதன் அகப்பட்டிருந்தால் அவன் கழுத்தை இந்தப் படுக்கையிலேயே அறுத்துப் போட்டிருப்பேனே'' என்றார் அந்தப் பெரிய மனிதர்.

ரதன் மெல்ல இடது கையால் தன் கழுத்தை தடவிக் கொண்டான். பெரியவர் சமயத்தில் பெரிய கொலைகாரராக மாறுவார் என்பதில் சந்தேகமில்லை யென்பதைத் தீர்மானமாகத் தெரிந்துகொண்டான். தான் ரதன் சந்தாவத் என்னும் உண்மையைச் சொன்னால் முடிவு என்ன என்பதையும் புரிந்துகொண்டான். ஆனால் என்றும் பொய் சொல்லாத ரதன் இப்பொழுது பொய் சொல்வதா? கௌரவத்தை மீறி உயிர் அவ்வளவு அவசியமானதா? என்று யோசித்தான்.

சாதாரண சமயமாயிருந்தால் இந்த மாதிரி ஒரு நிலைமையை ரதன் சகிக்கவே மாட்டான். நான்தான் ரதன் என்று

சொல்லித்தானிருப்பான் . அப்பேர்ப்பட்ட பட்டவர்த்தனப் பேச்சி [illegible] அவனைத் தடுத்து நிறுத்தியது அகிலாவின் நினைவு தான். அந்தச் சுந்தர முகம் அவன் சுபாவத்தில் சொல்ல வொண்ணா மாறுதல்களை விளைவிக்க ஆரம்பித்தது. 'தான் மகாதேவ் ஸிங்கின் பெயரிலே மறைந்து எத்தனை நாள் வசிப்பது? உண்மை வெளியாகும் போது அகிலா தன்னைப் பற்றி எவ்வளவு கேவலமான எண்ணம் கொள்வாள்!' என்றெல்லாம் ரதன் நினைக்க ஆரம்பித்தான். நான் ரதன் சந்தாவத் என்று சொன்னால் அந்த அழகியை இன்னொரு முறை பார்க்கும் முன்பு மேல் உலகத்திற்குப் பிரயாணம் செய்ய நேர்ந்தால் என்ன செய்வது?' என்ற எண்ணம் அவன் புத்தியைப் பெரிதும் நிதானப்படுத்தியது.

விதி எப்படியெல்லாம் தன்னை ஆட்டி வைக்கிறது என்பதை நினைத்து, ரதன் பெருமூச்சு விட்டான். அவன் பெருமூச்சு விடுவதைப் பார்த்த அந்தப்பெரியவர், ''மகாதேவ்ஸிங் உங்களுடன் நான் பேச்சுக் கொடுத்தது தவறு. அன்றிரவு என் பெண் உங்களைத் தாங்கிக்கொண்டு கூப்பிடும்போது நாங்கள் அதற்குள்ளேயே நீங்கள் மூர்ச்சையாகி விட்டீர்கள். இன்னும் உடம்பு தேறவில்லை. ஆயாசமாகத்தான் இருக்கும். சிறிது ஆகாரம் அருந்தி விட்டுக் கண்ணை மூடித் தூங்குங்கள். நான் இவ்வளவு நாழிகை உங்களோடு பேசினது தெரிந்தால் அகிலாகூடக் கோபித்துக் கொள்வாள். அவள் உத்தரவின்றி நாங்கள் இங்கு எதுவும் செய்வது கிடையாது. அவள் ராணி மாதிரி எல்லோரையும் அதிகாரம் செய்வாள். நீங்கள் மட்டும் அவள் ஆணையை மீற முடியுமா என்ன? அவளிடம் கட்டுப்பட்டிருப்பது சிறையிலிருப்பதற்குச் சமானம்'' என்று சொன்னார்.

''நோயாளியை அதிகம் பயப்படுத்தாதீர்கள் அப்பா. வீண் அதிர்ச்சி ஏற்படப் போகிறது'' என்று சொல்லிக் கொண்டே காய்ச்சிய பாலை ஒரு பாத்திரத்தில் ஏந்தித் துணியால் பிடித்துக் கொண்டு மோஹனப் புன்னகையுடன் உள்ளே நுழைந்தாள் அகிலாதேவி.

அத்தியாயம் 7

திரை மறைவில்

காயத்தின் வலிமையை ஆற்றும் சக்தி கைக்குத்தான் உண்டு, குரலுக்குக்கூட உண்டோ? நோய்வாய்ப்பட்ட மனித சரீரத்தைக் கையால் தடவிக் கொடுத்தால் இதமாகத் தானிருக்கும். ஆனால் அந்த மென்மையும் ஆதரவும் அகிலாவின் குரலில்கூட இருந்திருக்க வேண்டும். ரதன் வலியில் முக்கால்வாசியை அவள் குரல் போக்கடித்துவிட்டது. வீணையை மிக மெதுவாக மீட்டினால் ஏற்படக்கூடிய சாந்திக்கு மீறிய ஒரு சாந்தியை அகிலாவின் குரல் அவனுக்கு அளித்தது. பூர்ணமான சுய உணர்வுடன் அகிலாவை முதல் முதலாக ரதன் கவனித்தான்.

பாரத பூமியின் சக்கரவர்த்தியான ஔரங்கசீப்பே அச்சப்பட்டு நிற்கும் மந்திரி தயால்ஸாவின் மருமகள், அக்பரும் டைபர்கானும் மற்ற மொகலாயர்களும் எப்படியாவது இவளைத் தங்கள் பக்கம் இழுத்துவிட வேண்டும் என்று ஆசைப்படும் அகிலாதேவி, கேவலம் பணிப்பெண்ணுக்கும் சாதாரணமாகவே ஆடையணிந்திருந்தாள். ஆபரணங்களும் அதிகமில்லை. கையில் இரண்டொரு தங்கவளையல்கள். காதில் மெல்ல ஆடிக் கொண்டு அவள் கபோலங்களை ஆசையுடன் தடவிக் கொடுத்துக் கொண்டிருந்த இரண்டு ஜிமிக்கிகள், கழுத்தில் புலிநகம் கோத்த ஒரு தங்கச் சங்கிலி. ஆனால் தாழ்ந்து தொங்கி, அவள் மார்பகத்தை வகுத்து நின்ற அந்தத் தங்கச் சங்கிலியின் முனையில் மட்டும் நெருப்புத் தணல்போலப் பெரிய சிவப்புக் கல் ஒன்று மின்னிக் கொண்டிருந்தது. ஆயிரக்கணக்கான மோஹராக்கள் விலை மதிக்கக்கூடிய அந்த அபூர்வ கெம்புக் கல்லில் ரதன் கண்கள் ஒரே நிமிஷம்தான் நிலைத்தன. பிறகு விலை மதிப்பற்ற கெம்பிலும் சிவந்த அவள் உதடுகளில் சஞ்சரித்தன. அதற்கப்புறம் எங்கும் நிலைகொள்ளாமல் அவள் பூவுடலில் ஒரு பாகத்திலிருந்து

மற்றொரு பாகத்துக்கு மாறி மாறித் தாவிக்கொண்டிருந்தன. கல் பரீட்சைக்காரன் வைரத்தின் குணங்களை ஆராய்வதுபோல, அகிலாதேவியின் ஒவ்வோர் அசைவையும் ரதன் கண்கள் ஆராயத் தொடங்கின.

அகிலாதேவி உள்ளே வந்து பால் பாத்திரத்தை ஜன்னலில் வைத்தாள். டில்லிப் பட்டணத்துப் பெண்கள் நடைக்கும் அகிலாவின் நடைக்கும் இருக்கும் வித்தியாசத்தை ரதன் கவனித்தான். பட்டணத்துப் பெண்கள் யாராவது புருஷனைப் பார்த்ததும் பிரமாதமாக நாணத்தைக் காட்டுவார்கள். அசாத்தியமாக நெளிவார்கள். ஒதுங்கிக் காட்டுவார்கள். கண்களோ வெறி கொண்டு தடுமாறும். பார்க்காததுபோல் திடும் திடும் என்று திரும்பிப் பார்வைகளை மின்னல்போல் வீசும். அதிகமான அந்தச் செயற்கை நாணத்தில் அடங்க மாட்டாத சிற்றின்ப வெறி பிரதிபலிக்கும். அகிலாவின் நடையில் நிதானமிருந்தது. அந்த நிதானத்தில் இயற்கையாகவே அடக்கம் பிரதிபலித்தது. 'பளிச், பளிச்' சென்று திரும்பிப் பார்க்கும் திருட்டுத்தனமான பார்வை அவள் கண்களில் இல்லை. சாதாரணமாக லேசாகத் தரைப் பக்கமே பார்த்து நிற்கும் பார்வை மெள்ள நிமிர்ந்து அவன்மீது திடமாக நிலைத்தது! அந்தப் பார்வையைத் தொடர்ந்து இதழ்கள் லேசாக விரிந்து புன்முறுவல் செய்தன.

பாத்திரத்திலிருந்த பாலை வேறு இரண்டு கிண்ணங்களில் மாற்றி ஆற்றினாள் அகிலாதேவி. பாலை ஆற்றும்போது அவள் கைகள் இடுப்புக்கு மேல் உயராததால் ஆடை சிறிதும் அலங்க வில்லை. காரியத்தில் அழகு இருந்தது. அடக்கம் இருந்தது. நிதானமும் இருந்தது. ஆற்றிய பாலை எடுத்துக் கொண்டு ரதன் படுக்கையருகில் வந்தாள். ரதனுக்கு சந்தோஷத்தால் பிராணனே போய்விடும்போல் இருந்தது. மிதமிஞ்சிய மதுவைக் குடித்த போதிலும் நிதானம் இழக்காத அவன் புத்திகூட, அவள் உடல் பட்டதால் நிலை கொள்ளாமல் தவித்தது. பெண்களை மிகச் சிறிதாக எண்ணிய அவன் உள்ளம் 'அகிலா கிட்டே

வருகிறாளே' என்று சிறிது வெட்கப்பட்டது. ''அப்பா! நீங்கள் சிறிது எழுந்திருங்கள், ஆகாரம் கொடுத்துவிடுகிறேன்'' என்றாள் அகிலா.

''அகிலா! அப்படியானால் நீயே இவரைச் சிறிது நேரம் கவனித்துக்கொள். நான் ஊருக்குள் போகவேண்டிய வேலை இருக்கிறது'' என்று சொல்லிக்கொண்டு பெரியவர் எழுந்திருந்தார்.

ரதன் மஞ்சத்துக்குப் பக்கத்திலிருந்த ஆசனத்தில் ஒரு புறமாக ஒருக்களித்துக்கொண்டு அகிலா உட்கார்ந்தாள்.

ரதனுக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை.'இந்த மனிதனுக்குப் பைத்தியமா என்ன? பர்தாவுக்குள் திரை மறைவில் இருக்கவேண்டிய பெண்ணை சிசுருஷை செய்யச் சொல்கிறான். போதாக்குறைக்கு என்னுடன் தனியாக விட்டு ஊருக்குள் போகிறானாமே' என்ற கோபத்தில் பெரியவரைப் பார்த்து, ''நீங்களும் கொஞ்சம் இருங்களேன், ஊருக்குள் என்ன அப்படி அவசரமான வேலை'' என்று கேட்டான்.

பெரியவர் ரதனை உற்றுப் பார்த்தார். அகிலாதேவியின் விழிகளும் ஆச்சரியத்தால் சிறிது அகன்றன. பெரியவர் தம்மைத் தாமே சமாதானப்படுத்திக்கொண்டு சொன்னார்: ''மகாதேவ் ஸிங்! அகிலாவைவிட நான் பெரிய துணை என்று நினைக்கிறீரா? அப்படி ஏதாவது எண்ணமிருந்தால் அதை விட்டுவிடும். சென்ற மூன்று இரவுகளாக அவள் சிசுருஷையில்லாவிட்டால் இன்று உம்மிடம் நான் பேச வேண்டிய அவசியமே இருக்காது, தெரியுமா? சித்ரகுப்தனிடமல்லவா நீர் வாழ்க்கை வரவு செலவுக் கணக்குப் பார்த்துக்கொண்டிருப்பீர்? அகிலா இல்லாமல் பண்டிதர் யாருக்கும் வைத்தியம் செய்யமாட்டார். உம்மைப் பார்த்துக் கொள்ள அகிலா ஒருத்தி போதுமையா!''

ரதனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. '' ஐயோ, நான் அதற்காகச் சொல்வில்லை. அகிலாதேவி பர்தாவுக்குள் இருக்கவேண்டியவள்...'' என்று ரதன் இழுத்தான். இதைக் கேட்டதும் தகப்பன், பெண் இரண்டு பேரும் கொல்லென்று சிரித்துவிட்டார்கள்.

அகிலா முதலில் சிரிப்பை அடக்கிக்கொண்டாள். அவள் தகப்பனார் ரதனை நோக்கி, ''அப்படியானால் நீர் இப்பொழுது [illegible]இருக்கிறதாக ஞாபகம்?''என்று கேட்டார்.

ரதனுக்கு எல்லாம் ஒரே புதிராக இருந்தது. அகிலா தேவி விஷயத்தை விளக்கிச் சொன்னாள்: ''நீங்களும் இப்பொழுது பர்தாவுக்குப் பின்னால்தான் இருக்கிறீர்கள். நீங்கள் இருக்கிற இடம் இந்த ஊர் பெரிய தர்மசாலை. இந்தத் தர்மசாலையின் அதிகாரி என் மாமா தயால்ஸாவின் ஒற்றர்களில் ஒருவா. மாமா இந்த ஊரைக் கொளுத்திவிட்டுத்தான் உஜ்ஜயினி போனார். ஆனால் அவர் அங்கு போனதும் மொகலாயப் படைகள் இந்த ஊரைத் திரும்பவும் பிடித்துக் கொண்டு விட்டன. உஜ்ஜயினியிலிருந்து உதயபூர் புறப்பட்ட நானும் என் தகப்பனாரும் இது தெரியாமல் இங்கு வந்து அகப்பட்டுக் கொண்டோம். ஆகையால் இந்தத் தர்மசாலையில் பர்தாவுக்கு பின்னால் மறைந்து வசிக்கிறோம். இங்கு இருப்பவர்களெல்லாம் [illegible] ஸ்திரீகள் என்று தர்மசாலை அதிகாரி மொகலாயப் படைத் [illegible]னிடம் உறுதி கூறி!'இருக்கிறார்..'

''இவர் உறுதி கூறினால் அவன் நம்புவானா? பெண், [illegible]யென்று மொகலாயர்கள் தயாதாட்சிண்யம் பார்க்க [illegible]களே'' என்றான் ரதன்.

''மாமா அவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தபின் [illegible] உஷாராகிவிட்டார்கள். இங்கு ஒரு பர்தாவைக் கிழித்தால் [illegible] இடங்களில் மாமா நுறு முஸ்லீம் பர்தாக்களைக் [illegible] என்று ஔரங்கசீப்புக்கு இப்பொழுது தெரிந்து [illegible]. ஆகையால் யாரும் நம்மிடம் அண்டமாட்டார்கள். [illegible]லோரும் திரைக்குப் பின்னால்தான் இருக்கிறோம். இது [illegible] காலம் மகாதேவ் ஸிங்! இப்பொழுது பர்தாவையும் திரை[illegible] பார்க்க முடியுமா? தவிர பர்தாவும் திரை[illegible] பெண்கள் கற்பைக் காப்பாற்றும் என்று [illegible]? அந்தத் தப்பான எண்ணங்களை விட்டு

விடுங்கள். கற்பு சந்ததியைப் பொறுத்தது; மனத்தின் தூய்மையைப் பொறுத்தது. அதைக் காப்பாற்றத் திரைவேண்டாம்; திறமைதான் வேண்டும்'' என்றாள் அகிலாதேவி.

''சரி அகிலா! நீ இவரிடம் பேசிக்கொண்டிரு நான் போய் வருகிறேன்'' என்று விடை பெற்றுக்கொண்டு அகிலாவின் தகப்பனார் அறையைவிட்டு வெளியேறினார்.

அகிலா கிண்ணத்திலிருந்த பாலை விரலால் தொட்டுப் பார்த்தாள். ''இதைச் சாப்பிடுங்கள். இத்தனை நாழிகை பேசிய களைப்பை போக்கும்'' என்று சொல்லிப் பாலை அவன் வாயில் ஊற்றப் போனாள்.

''வேண்டாம். இப்படிக் கொடுங்கள், நானே சாப்பிடுகிறேன்'' என்று இடது கையை நீட்டினான் ரதன்.

''நீங்கள் அசையக் கூடாதென்று பண்டிதர் உத்தரவிட்டிருக்கிறார்...ஆகையால் இன்னும் இரண்டொரு நாள் பிடிவாதத்தை விட்டு வையுங்கள். அப்புறம் உங்கள் இஷ்டம் போல் நடக்கலாம்'' என்று அகிலா ஆசனத்தை விட்டு எழுந்து கட்டிலின்மேல் சிறிது குனிந்து கிண்ணத்தை அவன் வாய்க்கருகில் நீட்டினாள். விகல்பமில்லாத அகிலாவின் தெளிந்த மனத்தில் இந்தச் சந்தர்ப்பங்கள் எந்தவிதச் சூறாவளியையும் கிளப்ப வில்லை. தயால்ஸாவுடனேயே பல யுத்த அரங்கங்களில் இருந்து அடிபட்ட எவ்வளவோ வீரர்களுக்குச் சிசுருஷை செய்திருக்கும் அகிலாதேவி, ஒரு குழந்தையைப் பராமரிப்பது போலவே ரதனைப் பராமரிக்க ஆரம்பித்தாள். ஆனால் ரதன் நிலைமை அப்படி நிச்சலனமான தாயில்லை. அகிலா தேவியின் வரவாலும் அவள் அவயவங்களின் சோபித்ததாலும் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்த அவன் மனம், அவள் கட்டிலுக்கருகில் மஞ்சத்தில் உட்கார்ந்த சமயத்திலேயே பெரும் கொந்தளிப்பை அடைந்தது. என்றும் பயப்படாத அவன் மனத்தில் பயம் ஏற்பட்டது. ஸ்திரீகள் விஷயத்தில் வெகு அலட்சியமுள்ள அவன் புத்தியிலும் இந்த

ஸ்திரீயைப் பற்றி லட்சியம் உதித்தது. கற்பில் நம்பிக்கையில்லாத அவன் மனமும் கற்பென்பது ஒன்று உண்டு அதன் வேகம் கற்புடைய ஸ்திரீகளை நெருங்கும் போதுதான் தெரியும் என்று [illegible]க்காட்டியது. அவளுடைய தெய்வீக அழகு அவனை [illegible]த்தது. அவள் தூய்மை அவனைப் பயமுறுத்தியது. அவள் [illegible]க்கை அவனை 'ஜாக்கிரதை' என எச்சரித்தது. இப்படி [illegible]த உணர்ச்சிகளால் பீடிக்கப்பட்டிருந்த அவன் மீது அகிலாதேவி குனிந்து பாலைக் கொடுக்க வந்தபோது, ரதன் [illegible] வெகு வேகமாக அடித்துக்கொண்டது. குனிந்த தலை [illegible] புரண்டு தோளில் வளைந்து தொங்கிய அவள் பின்னல் அவன் மேல் லேசாக உராய்ந்தது. ஜாக்கிரதையாய்ப் போர்த்தி [illegible] சேலையின் ஒரு பாகம் தேகம் வளைந்ததால் சிறிதே [illegible] வெளி கொடுத்தது. மிதமிஞ்சிய இன்ப வேதனையால் ரதன் [illegible]த்தான். மெள்ளப் பாலைக் கொடுத்துவிட்டுக் கிண்ணத்தை [illegible] வைத்தாள் அகிலா. மீண்டும் மஞ்சத் தினருகில் வந்து [illegible]ந்து கொண்டு, ''இப்பொழுது உடம்பு கொஞ்சம் [illegible]ாக இருக்கிற தல்லவா?'' என்று விசாரித்தாள்.

''கொஞ்சமென்ன, எவ்வளவோ கலகலப்பாயிருக்கிறது'' [illegible] ரதன். அப்பொழுது அவன் குரலில் சிறிதே விசனம் [illegible]த்தது. ''இன்னும் சிறிது பால் தேவை'' என்று சொல்ல [illegible] இஷ்டந்தான். ஆனால் சொல்ல நா வரவில்லை. அவள் [illegible] அருகில் இழுக்கும் சூழ்ச்சியல்லவா அது? இந்த மாதிரி [illegible]த்தில் சூழ்ச்சி செய்யலாமா? என்று அவன் மனம் [illegible] பிடித்து இழுத்து நாக்கை ஓட வொட்டாமல் [illegible] சிறிது நேரம் இருவரும் மௌன மாயிருந்தனர்.

கடைசியில் அகிலாதேவி ரதனை நோக்கி, ''நான் உங்களை [illegible] கேட்கிறேன். உண்மையாகப் பதில் சொல்வீர்களா?'' என்று [illegible]

ரதன் வாளின்மேல் ஆணை வைக்க நினைத்தான். ஆனால் கேள்வி எப்படியிருக்குமோ என்ற பயத்தில் ''கண்டிப்பாய்ச் சொல்கிறேன், கேளுங்கள்'' என்றான்.

அவள் கேட்ட கேள்வி அவனை அப்படியே திக்பிரமை அடையச் செய்துவிட்டது. ''ரதன்சந்தாவத்தை உங்களுக்குத் தெரியுமா? என்று அகிலாதேவி கேட்டாள்.

அத்தியாயம் 8

அகிலா உன் அடைக்கலம்

பெரிய இடியொன்று தலையில் விழுந்திருந்தால் கூட உண்டாகாத அதிர்ச்சி அந்தக் கேள்வியால் ரதனுக்கு உண்டா யிற்று. இருந்தபோதிலும் மெள்ளச் சமாளித்துக் கொண்டு, ''எதற்காகக் கேட்கிறீர்கள்?'' என்று கேட்டான்.

''நீங்கள் நினைவிழந்திருந்த இரண்டு நாளும் அவரைப் பற்றித்தான் பிதற்றிக் கொண்டிருந்தீர்கள். என்ன என்னவோ சொன்னீர்கள். ஏதோ பணயம், பந்தயம் என்று கூறினீர்கள். ரதன் சந்தாவத்தைச் சில சமயங்களின் வாயில் வந்தபடி வைது தீர்த்தீர்கள். எனக்கே ஆச்சரியமாயிருந்தது. அந்த ரதன் சந்தாவத் உங்களுக்கு அப்படி என்ன தீங்கைத்தான் செய்திருக்க முடியும் என்று. தவிர அவர் என்னைத் தூக்கிக் கொண்டுபோகப் பணயம் வைத்துச் சில நாட்களே ஆகும்போது உங்களுக்கு அந்தத் தகவல் எப்படித் தெரிந்தது என்பதும் ஆச்சரியமாக இருந்தது.''

பேச்சு ஆபத்தான மார்க்கத்தில் திரும்புவதை அறிந்த ரதன் அதை மாற்ற, ''ரதனை, நன்றாக வைதேனா?'' என்றான்

''அதுதான் சொன்னேனே. நீங்கள் வைததை விடத் தீவிரமாக யாரும் வைதிருக்க முடியாது. உங்களுக்கும் ரதன் சந்தாவத்துக்கும் அவ்வளவு விரோதமா?''

''அகிலாதேவி! இப்போழுது ரதனைவிட எனக்கு விரோத மானவன் உலகத்தில் யாருமே கிடையாது. அவன் எதற்காக உலகத்தில் ஜன்மமெடுத்தான் என்பதே எனக்குப் புரியவில்லை. இதுவரை அவன் செய்ததெல்லாம் துஷ்டச் செயல்கள். சதா மதுபானம். யாரைக் கண்டாலும் ஓர் இகழ்ச்சி. உலகத்தின் நல்ல அம்சங்களே கண்ணில் படாத ஓர் பாவி.''

''ஆனால் இந்தப் பாரத நாட்டின் மிகச் சிறந்த வாள் வீரனல்லவா அவர்?'' என்றாள் அகிலாதேவி.

அவள் அப்படித் தனக்காகப் பரிந்து பேசுவது ரதனுக்கு எவ்வளவோ ஆனந்தத்தை அளித்தது. ஆனால் அவள் உள்ளத்தைச் சரியாக அறிய மேலும் தன்னைத்தானே கடிந்து கொண்டு பேசலானான்.

''ஆம், அகிலாதேவி! அந்த வாள் எதற்குப் பிரயோசனம்? ராஜபுத்திர குலத்தை அல்லவா அது வேரறுத்து வருகிறது.''

''அதுதான் எனக்கும் கஷ்டமாயிருக்கிறது. ரதன் சந்தாவத்தைப்போல் ஒரு சேனாதிபதி ராஜபுத்திர சைன்னியங் களுக்கு மட்டும் இருந்தால், இத்தனை நாள் மொகலாய சாம்ராஜ்யம் சிதறிப் போய் இருக்குமே'' என்று அகிலாதேவி சொன்னாள்.

'' உங்களுக்கு ரதனைத் தெரியுமா?''

''எனக்குத் தெரியாது. என் அத்தானுக்குத் தெரியும், ரதன் சந்தாவத்தைப் பற்றித்தான் அவன் அடிக்கடி பேசுவது வழக்கம். என் தகப்பனாருக்கு ரதனை அடியோடு பிடிக்காது; ஆனால் என் அத்தானுக்கு ரதன் சந்தாவத் தெய்வம். ரதன் சந்தாவத்தின் துஷ்கிருத்தியங்களைக்கூட மிக உயர்வாகவே பேசுவான்.''

''யார் அந்த அத்தான், பெயர்?''

''அவன் பெயர் மால்தேவ். சில நாட்கள் டில்லியில் இருந்திருக்கிறான். அவனுக்கு டில்லி வட்டாரங்களில் தெரியாதவர்கள்

யாருமே கிடையாது. இப்பொழுது அவனை அழைத்து வரத்தான் அப்பா போயிருக்கிறார்.''

''அவரும் சாரங்கபூரில்தான் இருக்கிறாரா?''

''ஆம், அவன் மூலம்தான் இப்பொழுது சகல காரியமும் நடக்கிறது. சாமான் செட்டு எல்லாவற்றையும் அவன்தான் வாங்கி அனுப்புகிறான்.''

''அவரைப்பற்றி மொகலாயர்கள் சந்தேகப்படுவதில்லையா?''

''கிடையாது. அவனுக்குத்தான் மொகலாய வட்டாரங்களில் எல்லோரும் சிநேகமாயிற்றே'' என்று அகிலாதேவி சொல்லிக் கொண்டிருக்கும்போதே இருபது வயது மதிக்கக் கூடிய ஒரு வாலிபனுடன் அகிலாவின் தகப்பனார் உள்ளே நுழைந்தார். யாராவது தெரிந்தவன் வந்து கேட்டால் என்ன செய்வதென்று திகில்பட்டுக்கொண்டிருந்த ரதன் சந்தாவத்துக்கு, அகிலாவின் அத்தானைப் பார்த்ததும் மனம் மிகவும் சாந்தி பெற்றது. அந்த வாலிபனை ரதன் எப்பொழுதும் பார்த்ததே இல்லை! அப்பேர்ப் பட்டவன் தன்னைத் தெரிந்தவன் மாதிரி பேசக் காரணம் என்னவென்று ரதன் யோசித்தான்.

அவன் யோசனைகளைத் தடை செய்த அகிலா, அத்தானை ரதனுக்கு அறிமுகப்படுத்தி வைத்தாள். ''இவன்தான் என் அத்தான். உன்னைப் பற்றியும் உன் ரதன் சந்தாவத்தைப் பற்றியும் தான் இதுவரை பேசிக்கொண்டிருந்தோம். இவர் தாம் மகாதேவ்சிங். அப்பா சொல்லியிருப்பாரே'' என்றாள்.

அந்த வாலிபன் மெல்லக் கட்டிலை நெருங்கி வந்தான். ''வாருங்கள் உங்களைப்பற்றி அகிலாதேவி இத்தனை நேரம் செய்த ஸ்தோத்திரம் சொல்லி முடியாது. உங்களுக்கு ரதன் சந்தாவத்தோடு நெருங்கிய பரிச்சயமாமே'' என்றான் ரதன். அப்படிக் கேட்கும்போது ரதன் இதழ்கள் ஒரு புறமாக நெகிழ்ந்து இகழ்ச்சிப் புன்முறுவல் செய்ததை அகிலா கவனித்தாலும் அதற்குக் காரணம் மட்டும் அவளுக்கு விளங்கவில்லை. அவள்

ஒரு நிதானத்துக்கு வருமுன்பு அத்தான் தன் பெருமையை ஆரம்பித்து விட்டான்.

''பரிச்சயமா என்றா கேட்கிறீர்கள்? நன்றாக இருக்கிறது. ரதனும் நானும் அண்ணன் தம்பி மாதிரி. இப்பொழுது அவன் என்னைப் பார்த்தால் அப்படியே தாவிக் கட்டிக் கொண்டு விடுவானே!'' என்றான் மால்தேவ்.

இந்த கோட்டைப் புளுகைக் கேட்டு ரதன் அசந்து போனான். உள்ளே எழுந்த இகழ்ச்சி அவன் புன்னகையை விஸ்தரித்தது. ''மால்தேவ்! இப்பொழுது எனக்கே உங்களைக் கட்டிக் கொள்ள வேண்டும் போலிருக்கிறது'' என்றான் ரதன்.

மால்தேவின் வார்த்தையை ரதன் துளிக்கூட நம்பவில்லை என்பதையும், கேலி செய்கிறானென்பதையும் உணர்ந்து கொண்ட அகிலா 'கொல்'லென்று சிரித்துவிட்டாள்.

மால்தேவ் முகத்தில் கோபத் தணல் வீசியது. ஏதோ பேச வாயெடுத்தான்;அகிலாவின் தகப்பனார் இடைமறித்து, ''அந்த ரதன் சந்தாவத் எக்கேடு கெட்டால் நமக்கென்ன. நமக்கு வேலை தலைமேலிருக்கிறது. அகிலா, மால்தேவ்,நீங்கள் போய் வீட்டுக்கு வேண்டிய சாமான்களைக் கவனியுங்கள்'' என்று உத்தரவிட்டு அனுப்பினார். அவர்கள் சென்ற பின்பு மெள்ளக் கதவைச் சாத்திவிட்டு ரதன் அருகில் வந்தார். ''மஹாதேவ்சிங், மால்தேவிடம் மிக ஜாக்கிரதையாக இருங்கள்; அவனிடம் விளையாடுவது விஷப் பாம்பிடம் விளையாடுவதற்குச் சமானம். சுத்த பயங்காளிதான். ஆனால் பயங்களிகளுக்குள்ள விஷமம் அவனிடம் பூரணமாக உண்டு. அவன் இஷ்டப்பட்டால் நம்மைக் காட்டிக்கொடுத்து விடலாம். அவசியமானால் அவன் காட்டிக் கொடுக்கவும் தயங்கமாட்டான்'' என்று எச்சரித்தார்.

அப்படி அவர் எச்சரித்துக் கொண்டிருக்கையில் தர்ம சாலை அதிகாரிஉள்ளே வந்து, ''மஹாராஜ்! ரதன் சந்தாவத் சாரங்கபூருக்கு வந்துவிட்டான்'' என்று அறிவித்தான்.

''சாரங்கபூருக்கா?'' என்றார் அகிலாவின் தகப்பனார்.

''ஆம் மஹாராஜ்! இந்த தர்மசாலைக்குத்தான் வருகிறான்.''

''உனக்கெப்படித் தெரியும்?''

''அவனுடைய வீரன் ஒருவன் தர்மசாலை வாசலில் உட்கார்ந்து கொண்டிருக்கிறான். பெயர் மோஹன்தாஸாம்'' என்றான்.

பெரியவருக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. ''அவன் போகவேண்டிய இடம் உஜ்ஜயினியல்லவா?'' என்றான்.

''உஜ்ஜயினிக்குத்தான் கிளம்பினார்களாம். ஆனால் திடீரென்று சாரங்கபூர் செல்வதென ரதன் சாந்தாவத் முடிவு செய்தானாம். இங்குதான் தன்னை சந்திக்கும்படி உத்தர விட்டிருக்கிறானாம்'' என்றான் தர்மசாலை அதிகாரி.

''ரதன் சந்தாவத்தின் ஆள் இங்கு எப்பொழுது வந்தான்?'' என்று ரதன் விசாரித்தான்.

''இரண்டு நாளாக வந்து போய்க் கொண்டிருக்கிறான்'' என்று தர்மசாலை அதிகாரி சொன்னான்.

''இரண்டு நாளாக இங்குவந்து சேராத அவன் எஜமான் இனிமேல் எங்கு வரப்போகிறான்? அவனுக்கு என்ன ஆபத்து நேரிட்டுவிட்டதோ என்னவோ என்று சொல்லி, ஊரின் சுற்றுப் புறங்களில் தேடச் சொல்லுங்கள்'' என்று ரதன் யோசனை சொன்னான்.

''ஆமாம், அதுதான் சரி'' என்று பெரியவரும் ஆமோதிக்கவே தர்மசாலை அதிகாரி அந்த தந்திரத்தைக் கையாள வெளியே சென்றான். அவன் சென்றவுடன் அகிலாவின் தகப்பனார் ரதன் கட்டிலுக்கருகில் வந்து உட்கார்ந்துகொண்டு, ''மஹாதேவ்ஸிங்! நம்மை ஆபத்து மிகத் தீவிரமாக நெருங்கி வருகிறது'' என்றார்.

''ஏன்? புதிதாக ஏதாவது தகவல் கிடைத்திருக்கிறதா?'' என்று கேட்டான் ரதன்.

''ரதன் சந்தாவத் இவ்விடம் வரப்போகிறானே; அதுவே போதாதா?'' என்று பெரியவர் கேட்டார்.

ரதனுக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. பொய்யே சொல்லியறியாத அவன் இருதயம் பொய்யான இந்தவாழ்வை உதறிவிட்டுக் கிடைக்கும் பலனை எதிர் பார்க்கவே தூண்டியது. பொன்போன்ற மனமுள்ள இந்தப் பெரியவரையும் தூய்மையான இதயமுள்ள அகிலாவையும் ஏமாற்றி இவர்கள் பணிவிடைகளை ஏற்பது எத்தகைய பாதகச் செயல் என்று எண்ணி ரதன் ஏங்கினான். 'உண்மையைச் சொல்லவிடு. வீரனான ரதனுக்கு இது அழகல்ல!'' என்றது நேர்மை. 'அசட்டு தைரியத்தால் இந்த அழகியை நிரந்தரமாக இழந்து விடாதே; பொறு. காலம் எதையும் சரிப்படுத்தி விடும்' என்றது ஆசை.

ஆசைக்கே இடங்கொடுத்தான் ரதன். சிறது நேரம் மௌனம் சாதித்தான். பிறகு பெரியவரைப் பார்த்து, ''ரதன் சந்தாவத் அவ்வளவு கேவலமானவனென்று நினைக்கிறீர்களா? சுத்த வீரனான ஒரு ராஜபுத்திரன், வயோதிகரான உங்களுக்கும் பேதையான அகிலாவுக்கும் தீங்கு விளைவிப்பானென்று நம்புகிறீர்களா? ரதன் எதிரிகள்கூட அவனைப்பற்றி இம்மாதிரி அபிப்பிராயப்படமாட்டார்களே!'' என்றான்.

''அவன் இங்குவருவது என் பெண்ணை அபகரித்துச்செல் வதற்காக. இதைவிட வேறு என்ன தீங்கை ஒரு ராஜபுத்திரன் செய்யவேண்டும்? மஹாதேவ்ஸிங்! ரதன் சந்தாவத் பாரத நாட்டின் இணையற்ற வீரனாக இருக்கலாம். ஆனால் அவன் இந்த நாட்டுக்குத் துரோகம் செய்து, ஹிந்து சமுதாயத்தை நாசம் செய்வதைப் புண்ணியமென நினைக்கும் கூட்டத்தின் கையாளாக இருக்கும்வரை என் பெண்ணை அவன் தீண்ட அநுமதிக்கவே மாட்டேன். அதைவிட அகிலாவை என் கைகளாலேயே கண்ட துண்டமாக வெட்டிக் கிணற்றில் எறிந்து விடக்கூடத் தயார்''

என்றார் பெரியவர். அப்பொழுது அவர் முகத்தில் சொல்ல வொண்ணாத கோபம் எழுந்து தாண்டவமாடிக் கொண்டிருப்பதை ரதன் கவனிக்கத் தவறவில்லை.

இரண்டு பேரும் சற்று நேரம் மௌனமாக இருந்தனர், பெரியவர் மீண்டும் அவனை நோக்கி, ''மஹாதேவ்ஸிங்! நான் உங்களிடம் ஒருவரம் கேட்கப் போகிறேன்'' என்றார்.

''அதென்ன அப்படிக் கேட்கிறீர்கள்? நீங்கள் என் உயிரையே காப்பற்றியிருக்கும்போது உங்களுக்கு நான் எதைத்தான் செய்யமாட்டேன்?'' என்றான் ரதன்.

''ரதன் சந்தாவத் இங்கு வருவது ஒருபுறமிருக்க நானும் அகிலாவும் இங்கு மறைந்து வசிக்கும் விஷயம் இந்த ஊர் மொகலாய அதிகாரிகளுக்குத் தெரிந்துவிட்டதாகத் தோன்றுகிறது. இரண்டுநாளாக இந்த வீட்டின்மேல் கண்ணோட்டம் இருப்பதாகத் தர்மசாலை அதிகாரி சொல்கிறான். இன்னும் இரண்டு மூன்று நாட்களில் இங்கு ஏதாவது நிகழக்கூடும் என்று தோன்றுகிறது. எனக்கோ வயதாகிவிட்டது. கத்தியை பிடித்தால் கை நடுங்குகிறது. மால்தேவை நம்புவது மண் குதிரையை நம்புவதற்குச் சமானம். அகிலா தாயில்லாத பெண். எனக்கு ஏதாவது நேரிட்டால் அவளை நீங்கள்தாம் பாதுகாக்க வேண்டும். அவளுக்கு மொகலாயர்களாலோ, இந்த ரதன் சந்தாவத்தினாலோ எவ்விதக் கெடுதியும் நேராதபடி நீங்கள் பாதுகாப்பீர்களா?'' என்று பெரியவர் கேட்டார். அவர் கண்களில் ஜலம் துளிப்பதை ரதன் கண்டான். தர்ம சங்கடமான நிலைமையில் என்ன செய்யவதென்று தெரியாமல் தத்தளித்தான்.

மறுபடியும் பெரியவர் கேட்டார். ''என்ன யோசிக்கிறீர்கள் மஹாதேவ்ஸிங்! ஒரு ராஜபுத்திரன் செய்யக்கூடிய கடமையை நிறைவேற்றத்தானே உங்களைக் கேட்கிறேன். நீங்கள் படுத்த படுக்கையில் என்ன செய்ய முடியுமென்று நினைக்கிறீர்களா? நீங்கள் நடமாட முடிந்தபின்தான் உங்கள் ஆணை உங்களைக் கட்டுப்படுத்தும். என் அரிய பொக்கிஷத்தை உங்களிடம் ஒப்படைக்கிறேனே, தெரியவில்லையா? அகிலா உன் அடைக்கலம். இந்த ஆபத்துக் காலத்தில் நம்பிக்கையான ஒரு வீரனிடம் அவளை ஒப்புவித்துவிட்டால் நான் மனநிம்மதியுடன் இறப்பேன்.'' என்றார் பெரியவர்.

ரதன் தன் இடது கையால் அவருடைய கையைப் பிடித்து, ''இதைவிட எனக்கென்ன பாக்கியம் வேண்டுமென்று நினைக்கிறீர்கள்? நீங்கள் சிறிதும் அஞ்சவேண்டாம். என் உடலில் உயிர் இருக்கும்வரை அகிலாவை என் கண்ணுக்குக் கண்ணாகப் பாதுகாக்கிறேன்!'' என்று உறுதி கூறினான். அந்த வார்த்தைகளை அவன் சொன்னபோது அவனுக்கு இருந்த வேகத்தையும் அவன் கண்களில் ஏற்பட்ட பிரகாசத்தையும் கண்டு பெரியவர் மிதமிஞ்சிய சந்தோஷத்தால் பேச வொட்டாமல் பிரமித்துப் போனார். நன்றிக்கு அறிகுறியாக அவர் கை ரதன் கையை இறுகப் பிடித்துக் கொண்டது.

அத்தியாயம் 9

பண்டித்ஜீயின் ஹாஸ்யம்

வஸந்தத்தின் மலர்கள் தர்மசாலைத் தோட்டத்தில் உதிர்ந்தன. கிருஷ்ணபக்ஷம் மாறி சுக்லபக்ஷச் சந்திரன் தலையெடுத்துத் தன் சோபையைச் சாரங்கபூர்மீது சிறிதே வீசத் தொடங்கினான். பின்பனி, இலைகளுக்கும் மலர்களுக்கும் புல் பூண்டுகளுக்கும் சிறுசிறு நீர் முத்துக்களால் ஆபரணம் இழைத்து அழகு பார்த்தது. கோஷாக்கள் நடமாட்டத்தை உத்தேசித்துத் தர்மசாலைத் தோட்டத்தைச் சுற்றி எழுப்பப் பட்டிருந்த உயர்ந்த மதில்சுவர்கள்கூட, இராக்கால ஆரம்பத்தில் வளர்மதியின் குளிர்க் கிரணங்களால் தழுவப்பட்டுப் பின்பனியால் ஆனந்த பாஷ்யங்களை முத்துமுத்தாகச் சொரிந்து நின்றன. வெளியில் இப்படிக் கால

நிலை மாறியதேயொழிய, பெரியவர் பயப்பட்ட தர்மசாலைக்குள்ளே இருந்தவர்களின் வாழக்கை நிலை எந்த விபரீதப் போக்கையும் அடைந்துவிடவில்லை. அகிலாவும் தாமும் தர்மசாலையில் இருக்கும் விஷயம் மொகலாயர்களுக்குத் தெரிந்திருக்கலாம் என்ற ஊகம் வீண்பிரமையாக இருக்குமோ என்று நினைக்கும் அளவுக்கு அவர்கள் வாழ்க்கை நிலை இன்பப்பாதையிலேயே முன்னேறி வந்தது.

ரதனுடைய காயங்கள் அநேகமாக ஆறிவிட்டன. கையை நன்றாகச் சுழற்றுவதற்கு வேண்டிய அளவுக்குத் தோள்பட்டைக் காயம் மறைந்துவிட்டது. இடையிலிருந்த காயம் மிகவும் ஆழமாயிருந்ததால் புண் ஆறிவிட்டாலும் கால் மட்டும் கொஞ்சம் தாங்கி நடக்கவேண்டிய ஸ்திதியிலேயே இருந்தது. இரண்டொருநாள் நடமாடினால் அதுவும் பழைய வலுவைப் பூரணமாக அடைந்து விடும் என்று பண்டித்ஜீ சொன்னார்.

பண்டித்ஜீ மிகவும் ஹாஸ்ய புருஷர் என்பதுதான் உங்களுக்குத் தெரியுமே. ரதனைக் குணப்படுத்திவிட்டதனால் உண்டான சந்தோஷத்தாலோ, அல்லது அவன் குணப்பட்டதால் வெளிப்படையாகக் காணப்பட்ட அகிலாவின் உற்சாகத்தால் ஏற்பட்ட தைரியத்தாலோ தெரியவில்லை, பண்டித்ஜீயின் ஹாஸ்யம் எல்லை கடந்து பிரவகிக்க ஆரம்பித்துவிட்டது. படுத்திருந்த ரதன் சந்தாவத்தைப் பார்த்து, "மகாதேவ்ஸிங்! இன்னும் என்ன படுக்கை? அகிலா மாதிரி ஓர் அப்ஸரஸ் சிசுரூஷை செய்வதற்கு இருக்கும்போது, ஆயுள் பூராவும் ஏன் படுத்துக் கொண்டிருக்கக்கூடாது என்று யோசிக்கிறீரா?" என்று கேட்டார்.

அகிலாவின் முகம் புன்முறுவலால் விகசித்தது. சற்றுத் திரும்பி ரதனைப் பார்த்தாள். மால்தேவின் கண்கள் பண்டித்ஜீயைச் சுட்டெரித்து விடுவன போல் பார்த்தன. ரதனுடைய கண்கள் பழைய சோபையை அடைந்துவிட்டதால் அவற்றில் இயற்கையாகத் துள்ளி விளையாடும் விஷமம் பூரணமாக ஜொலித்துக் கொண்டிருந்தது. ரதன் வழக்கம் போல் சிரித்துக்கொண்டே, "பண்டித்ஜீ, நீர் வைத்தியரல்ல" என்றான்.

"அப்படியானால் பிராணனை விட இருந்த உம்மைக் காப்பாற்றியது யாரென நினைக்கிறீர்கள்?" என்று கேட்டார் பண்டித்ஜீ.

"இந்தக் கேள்வி நீர் வைத்தியரல்ல என்பதை மீண்டும் நிரூபிக்கிறது" என்றான் ரதன்.

அகிலாவின் தகப்பனாருக்குக்கூட ரதனின் இந்தப் பேச்சு சிறிது ஆச்சரியத்தை அளித்தது. பண்டித்ஜீயின் பிதற்றலுக்கு இந்த ஆப்பு அவசியந்தான் என்று மால்தேவ் சிறிது சாந்தியடைந்தான். ரதன் மனத்தை அப்பொது பூரணமாகத் தெரிந்து கொண்டவள் அகிலா ஒருத்திதான். அவனுக்குச் சிசுரூஷை செய்த அந்தப் பத்து நாட்களில் ரதனுடைய விஷமப் பேச்சு பூராவும் அவளுக்கு நன்றாகப் படிந்துவிட்டது. ஏதோ பண்டித்ஜீயைச் சற்றுமடக்கப் பார்க்கிறான் என்பதை உணர்ந்து கொண்ட அகிலா, ரதனைப் பார்த்து, "விஷயத்தை விளக்கமாகச் சொல்லுங்களேன்" என்றாள்.

"பண்டித்ஜீ நான் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லிக்கொண்டு வாரும்" என்றான் ரதன்.

"பண்டித்ஜீக்கே பரீட்சையா? சரி; கேளும்" என்றார் பண்டித்ஜீ.

"வியாதியஸ்தனைக் குணமாக்க மருந்துக்கும் மேலாக வேண்டியது என்ன?"

"தன் வியாதி குணமாக வேண்டும் என்று வியாதியஸ்தனுக்கு இருக்கவேண்டிய நம்பிக்கை; வியாதியை ஒழித்துக் கட்டவேண்டும் என்று வியாதியுடன் போராடக்கூடிய மன உறுதி."

"சரி, அதற்கு அடுத்தபடியாக என்ன வேண்டும்?"

"வியாதியஸ்தனைச் சரியாகக் கவனிப்பவர் வேண்டும். வேளாவேளைக்கு மருந்து, பத்தியம் கொடுக்கவேண்டும். வியாதி வந்துவிட்டாலே மனிதனுக்குப் பிடிவாதமும் கூட வந்துவிடுகிறது. அந்தப் பிடிவாதத்துக்கு இடங்கொடாமல் அதனை அடக்கி

ஆள்பவர் வேண்டும். இதைச்சொல்கையில் பண்டித்ஜீ ஒருமுறை அகிலாவுக்காகக் கண்ணை ஓட்டித் தமது மீசையையும் முறுக்கிவிட்டுக் கொண்டார்.

"எனக்குப் பிராணனுடன் இருக்க இஷ்டமில்லா விட்டாலோ, இந்த அகிலா இல்லாவிட்டாலோ, உம்மால் என்னை குணப்படுத்தியிருக்க முடியுமா?"என்று கேட்டுவிட்டு ரதன் சிரித்தான்.

"முடியாது, முடியாது. சபாஷ். சபாஷ்" என்று உற்சாகித்தார் பண்டித்ஜீ.

"எனக்கு உண்மையில் நீர் வைத்தியரல்ல; அகிலாதான் என்பதை ஒப்புக்கொள்கிறீரா?" என்றான்.

இதை கேட்டுப் பெரியவர், பண்டித்ஜீ இருவரும் சிரித்தார்கள். மால்தேவ் பதில் ஏதும் சொல்லாமல் முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

பண்டித்ஜீக்கு ஒருமுறை உற்சாகம் பிறந்துவிட்டால் அவரை அடக்குவது மிகவும் சிரமம்.

"சரி; மேலே சொல்லும். நான் வைத்தியரில்லா விட்டால் வேறு யார்?" என்று சம்பாஷணையைத் தொடர்ந்தார் அவர்.

"ஜோஸ்யர்" என்றான் ரதன்.

"நான் ஜோஸ்யனா!"

"ஆம். சந்தேகமென்ன? ஜோஸ்யரில்லாவிட்டால் அகிலா சிசுருஷை செய்வதனால் நான் ஆயுள் பூராவும் படுத்துக் கொண்டிருப்பேன் என்பது உங்களுக்கு எப்படித் தெரிந்தது?" என்று ரதன் கேட்டான்.

திரும்பத் திரும்பச் சம்பாஷணை தன்னையே சுற்று வதையும், இந்த சம்பாஷணையும் சிரிப்பும் ஏற ஏற மால்தேவின் முகத்தில் கோபம் ஏறுவதையும் கண்ட அகிலாவின் மனத்தில் சிறிது பயம் உதயமாகத் தொடங்கியது. அந்தப் பயம் நியாயமான தென்பதை மால்தேவின் அடுத்த வார்த்தைகள் நிரூபித்தன.

"ஹாஸ்யத்துக்கும் எல்லையுண்டு பண்டித்ஜீ! விவாக மாகாத, திரை மறைவிலிருக்கவேண்டிய ஒரு ராஜபுத்திர மங்கையைப்பற்றிப் பேசக்கூடிய பேச்சா இது?" என்றான் மால்தேவ்.

பண்டித்ஜீ அவனை இகழ்ச்சி ததும்பப் பார்த்தார். அவருடைய வார்த்தைகளும் காரசாரமாகவே கிளம்பின. "முட்டாள் தனத்துக்கும் எல்லையுண்டு மால்தேவ். ராஜபுதனத்துக்காக உயிரையே அர்ப்பணித்த மஹாதேவ் ஸிம்ஹனைவிட ராஜ புத்திரிகளின் கௌரவத்தில் மற்றவர்களுக்கு அக்கறையிருக்கக் காரணமில்லை. தவிர மஹாதேவ் ஸிம்ஹனுக்கு விவாகமாகி இரண்டு மாதங்களே ஆகின்றன. அதற்குள் அவர் அகிலாவைத் தூக்கிக்கொண்டு போவதற்கு அவர் என்ன மொகலாய வர்க்கமா? மொகலாயர்களிடத்தில் பழகிப் பழகி உனக்குப் புத்தி கெட்டுவிட்டது மால்தேவ். அது இருக்கட்டும்; அகிலாவின் கௌரவத்தில் எனக்கும் அவள் தகப்பனாருக்கும் இல்லாத அக்கறை உனக்கு எதற்காக?" என்று சொல்லிவிட்டுத் தாமாகவே பின்வரும் வார்த்தைகளைப் பேசிக்கொண்டார்; "அகிலாவுக்கும் ஒரு நாள் கல்யாணம் ஆகும். ஆனால் அவளை மணப்பவன் வீண் பொறாமையும், பதற்றப் பேச்சும், காரிய சூன்யமும், மொகலாயர் நட்பும் உள்ளவனாக இருக்கமாட்டான்." வார்த்தைகளை தமக்கே சொல்லிக்கொண்டாலும் எல்லோருக்கும் கேட்கும்படியாகவே சொன்னார்.

பண்டித்ஜீயின் உஷ்ணமான பேச்சு மால்தேவின் வாயை அடக்கிவிட்டது. மால்தேவின் வாயை பண்டித்ஜீ மூடி விட்டார். ஆனால் அது கொதிக்கும் ஜலமுள்ள பாத்திரத்தின் வாயைச் சிப்பல் கொண்டு மூடுவதற்குத்தான் சமானம். அதன் உள்ளே கொதித்து எழுந்து கொண்டிருந்த ஆவி அந்த சிப்பலைத் தூக்கி எறியவே முயன்று கொண்டிருந்தது.

அகிலாவின் மனத்தில் எழுந்த எண்ணங்கள் அனந்தம். எல்லாவற்றையும்விட மேலெழுந்து நின்றது மஹாதேவ் ஸிம்ஹனுக்குக் கல்யாணம் ஆகிவிட்டதே என்ற நினைவுதான். தயால்ஸாவுடன் இருந்த காலத்தில் எவ்வளவோ ராஜபுத்திர வீரர்களைப் பார்த்திருக்கிறாள். எவ்வளவோ பேருக்குச் சிசுருஷை செய்திருக்கிறாள். யாரிடமும் அவள் மனத்தில் சிறிதளவு கூடப்பாசம் எழுந்ததில்லை. அவள் சிசுருக்ஷை செய்த வீரர்கள் பலவிதமாக அவளிடம் நடந்து கொண்டிருக்கிறார்கள். சிலர் தயால்ஸாவின் மருமகள் என்ற காரணத்தால் அவள் கிட்ட நெருங்கும்போதே பயபக்தியுடன் மரியாதையாய் நடப்பார்கள். இன்னும் சிலர் பூரித்து எழுந்த அவள் ரூபலாவண்யத்தை வெறியுடன் நோக்குவார்கள். முந்திய பேர்வழிகளுடன் அவள் அனுதாபத்துடன் நடப்பாள். பிந்திய பேர்வழிகளைப் பார்க்கும் பார்வையிலேயே அவர்கள் வெறித்த யார்வையைச் சாம்பலாக்கி விடுவாள். ரதன் சந்தாவத்தின் நடத்தை இந்த இரண்டு வகையிலும் இல்லாமல் புத்தம் புதிதாயிருந்தது அவளுக்கு.

ஏதோ ஒரு குழந்தையை நடத்துவதுபோலவே அவளை ரதன் நடத்தி வந்தான். உணர்ச்சி எவ்வளவு பீறிட்டு எழுந்தாலும் அதை அடக்கும் சக்தி அவனுக்கு இருந்தது. அவனுடன் பழகும் போது நன்றாகத் தெரிந்த இடத்தில் பழகுவதுபோலவே நினைத்தாள் அகிலா. எப்பொழுதும் விளையாட்டுத்தனமாகவே நடந்து கொண்டான். எப்பொழுதும் நாவில் தயாராக இருக்கும் ஹாஸ்யமும், கண்களில் தாண்டவமாடிய விஷமமும் அவளுக்குப் பெரிதும் பிடித்திருந்தன. அவனிடம் அவளுக்குப் பற்றுதல் உண்டாக உண்டாக நெருங்கிப் பழகுவதைச் சிறிது சிறிதாகக் குறைக்கத் தொடங்கினாள். படுக்கையை மிக நெருங்கிப் பாலை வாயில் ஊற்றி வந்தவள், மஞ்சத்தின் ஓரத்தில் பால் பாத்திரத்தை வைத்துச் சிறிது ஒதுங்கத் தொடங்கினாள். அவனுடைய பௌருஷம் அவளுக்குப் புலனாகப் புலனாக நாணத்தின் இன்பக் கயிறுகள் அவள் கைகளைத் தடை செய்யத் தொடங்கின. நேராக பார்த்த கண்கள் சாய்வான பார்வையில் இறங்கின. சாதாரணமாக

மனம் அவயவங்களை இயக்குகிறது. ஆனால் மனத்தின் இஷ்டத்துக்கு நேர்மாறாக அவயவங்கள் இயங்குவதும் உண்டு. அந்த நேர்மாறான இயக்கம் இன்பமான உணர்ச்சிகள் எழும் போதுதான் ஏற்படுகிறது. ஒருவன்மீது மனம் கோபம் கொண்டால் வாய் வசைமாரி பொழியும். கை அடிக்கும். கண் கோபக் கனல் வீசும். ஆனால் ஒரு பெண்ணுக்கு ஒரு புருஷன்மீது ஆசை ஏற்பட்டு விட்டாலோ அவயவங்களின் நடத்தை மனம் போகும் போக்கை அநுசரிக்காமல் நேர் விரோதமாயிருக்கும். மனம் அவனை அணைக்க ஆசைப்படும். ஆனால் கை அந்த அலுவலைச் செய்யாமல் நேர் விரோதமாயிருக்கும். மனம் அவனைக் காண ஆசைப்படும். ஆனால் கண் அந்த அலுவலைத் தரையில் சாய்த்து விடும். அல்லது வேறுபக்கம் பார்க்கும். இந்த விபரீதத்திற்குக் காரணம் வேறு ஒன்றுமல்ல. புத்திக்கும், மனதுக்கும் ஏற்படும் போராட்டம் தான். புத்தி வேறு மனம் வேறு என்ற வேதாந்தத்திற்கு அத்தாட்சியை இதில்தான் காண்கிறோம். மனம் இஷ்டப் படலாம். ஆனால் மூளை தூண்டித்தானே அவயவங்கள் இயங்க வேண்டும். புத்தியை நாணம் அடக்கும்போது அது எப்படி அவயவங்களை ஓட்ட முடியும்? மனத்துக்கும் புத்திக்கும் இது ஏற்படும் போராட்டம். இந்தப் போராட்டந்தான் இன்பம். மனம் இஷ்டப்பட்டு, அவயவம் பிணங்கும் இன்பப் போராட்டம் தான். இந்தப் போராட்டம் இல்லாவிட்டால் உலகத்தில் இன்பம் என்ற பதத்துக்கு அர்த்தமே இருக்காது.

இந்தப் போரட்டத்தில் அகிலா ஈடுபட்டிருந்த சமயத்தில்தான் பண்டித்ஜீ மறுபடியும் ஒரு இடியை வீசினார். "என்ன அகிலா! நான் சொல்வது புரியவில்லை? இன்றுமுதல் தினம் அரைமணி நேரமாவது மஹாதேவ்ஸிங் உலாவ வேண்டும். இல்லாவிட்டால் கால் சரியாகாது. நீதான் அவரைப் பிடித்து மெல்ல அழைத்துச் சென்று நடத்த வேண்டும். தர்மசாலைத் தோட்டத்தில் யாரும் வரமாட்டார்கள். ஆகையால் இன்றுமுதல் கால் சரியாகும் வரை மஹாதேவ் ஸிம்ஹனுக்கு நீதான் ஊன்றுகோல்'' என்று பண்டிதஜீ எழுந்தார். வேதனை பொறுக்க முடியாமல், ''பண்டித்ஜீ'' என்று ஆத்திரத்துடன் கத்தினான் மால்தேவ்.

அத்தியாயம் 10

வாழ்க்கையின் ஊன்றுகோல்

ஆசனத்தைவிட்டு எழுந்த பண்டிட்ஜீ மால்தேவைப் பார்த்துக்கொண்டு ஒரு நிமிஷ நேரம் நின்றார். மால்தேவும் பண்டிட்ஜீயும் ஒருவரையொருவர் பூரணமாக வெறுக்கிறார்களென்பது பெரியவருக்கும் அகிலாவுக்கும் தெரியும். அப்பொழுதிருந்த கோபத்தில் பண்டிட்ஜீ தமது வெறுப்பை வெளிப்படையாகவே காட்டினார் ''மால்தேவ் ! நான் வைத்தியன். வியாதியஸ்தனுக்கு எது இதம் என்பது எனக்குத் தெரியும். இந்த விஷயத்திலாவது இனிமேல் நீ தலையிடாமலிருந்தால் சௌகரியமாயிருக்கும்'' என்றார்.

''வியாதியஸ்தரைத் தாங்கிச் செல்லப் பெண்தான் வேண்டுமோ?'' என்றான் மால்தேவ் வெறுப்புடன்.

பண்டிட்ஜீயின் முகத்தில் இகழ்ச்சி அதிகரித்தது. ''பெண்தான் வேண்டும் என்பதில்லை. ஆண்கள்கூட அழைத்துப் போகலாம். ஆனால் ஆண்களின் தைரிமும் இல்லாமல் பெண்களின் பொறுமையும் இல்லாமல் சில இரண்டுங்கெட்டான்கள் இருக்கின்றன. அந்தமாதிரிப் பேர்வழிகள்தாம் கூடாது...'' என்றார்.

''அதாவது..'' என்று இடைமறித்தான் மால்தேவ்.

''நீ கூடாது'' என்று வார்த்தையை வீசிவிட்டுப் பண்டிட்ஜீ வெளியேறினார்.

பண்டிட்ஜீ வெளியேறியபின், ''இது உங்களுக்கும் சம்மதம் தானா?'' என்று பெரியவரைக் கேட்டான் மால்தேவ்.

''மால்தேவ்! காயமடைந்த வீரர்களுக்கு அகிலா சிசுருஷை செய்வது இது முதல் தடவையல்ல'' என்று பெரியவர் தமது அபிப்பிராயத்தைத் தெரிவித்தார். மால்தேவ் மூவர்மீதும் ஒரு கோபப் பார்வையைத் திருப்பினான். பிறகு 'உம்' என்று கனைத்துக்

கொண்டு வெளியேறினான்.

ரதன் சந்தாவத்துக்கு இந்த நிலைமை பெரிய சங்கடமாக இருந்தது. மால்தேவுக்கு அகிலாவின்மேல் கண் இருக்கிறதென்பதைச் சந்தேகமறத் தெரிந்துகொண்டான். அவன் மனமோ அகிலாவின் எழில் வலையில் சிக்கிக்கிடந்தது. நாள் ஆக ஆகப் புதுப் புதுச் சோபைகளை அவள் சுந்தர வதனத்தில் கண்டான். ஆனால், அகிலாவின் எண்ணம் எப்படி என்பதை மட்டும் அவனால் ஊகிக்க முடியவில்லை. தான் விவாகமான மஹாதேவ் ஸிங்காயிருக்கும் போது அவளுக்குத் தன்னிடம் எப்படி ஆசை ஏற்படும் என்று சந்தேகித்தான். ஆனால் மாறுபட்டு வந்த அகிலாவின் நடத்தையிலிருந்து அவளுக்குத் தன்மீது ஏதோ பாசம் ஏற்பட்டுத்தான் இருக்கிறது என்று நினைத்தான். அகிலா அன்று முதல் தனக்கு ஊன்றுகோலாயிருக்க வேண்டுமென்று பண்டிட்ஜீ சொல்லிப் போனதைப்பற்றி என்ன என்னவோ எண்ணினான். பண்டிட்ஜீ புண்ணிய புருஷராயிருந்தால் அவர் வாக்குச் சரியாகப் பலித்து, அகிலா தனது வாழ்க்கையின் ஊன்றுகோலாகவே இருக்கக்கூடாதா என்று நினைத்தான்.

இந்த மாதிரி பிரமையிலேயே அன்று பகல் ரதனுக்குக் கழிந்தது. சாயந்திரம் தோட்டத்துக்கு அழைத்துச் செல்ல அகிலா வந்தபோதும் ரதன் இந்த யோசனையிலேயே இருந்ததால் அவள் கூப்பிட்டதுகூட அவன் காதில் விழவில்லை.

''என்ன மஹாதேவ்ஸிங்! உங்களைத்தானே. எந்தக் கோட்டையைப் பிடிப்பதற்கு இவ்வளவு பலமான யோசனை?'' என்றாள் அகிலாதேவி.

தூக்கிவாரிப் போட்டுக்கொண்டு எழுந்தான் ரதன். ''யார்? அகிலாதேவியா!'' என்று ரதன் சொல்லிவிட்டு அவளை விழுங்கி விடுவது போல் பார்த்தான்.

அகிலாவின் சுந்தர ரூபம் அன்றிருந்த ஆடையலங் காரத்தில் ஆயிரம் மடங்கு அதிகமாகப் பிரகாசித்தது. இத்தனை நாளாக

வெளியில் எடுக்கப்படாதிருந்த காஷ்மீர வெண்பட்டு, மலரிலும் மென்னையான அவள் உடலை ஆசையுடன் தழுவி நின்றது. மார்பில் தொங்கிய கெம்புக் கல்லும் அவள் தலையில் செருகியிருந்த ரோஜாப் புஷ்பமும் அந்த வெண்பட்டுக்கு மாற்று வர்ணங்களை அமைத்தன.

அகிலா சாதாரணமாக அலங்காரத்தில் அதிகக் கவனம் செலுத்தாதவள். அப்பேர்ப்பட்ட அகிலாவே அதிஜாக்கிரதையாக ஆடையணிவதிலும் ஆபரணங்களைப் பொறுக்கி யெடுத்துப் பூட்டிக்கொள்வதிலும் சிரத்தை காட்டுவதைக் கவனித்து வந்த பெரியவர்கூட ஆச்சரியப்பட்டார். ரதன் சந்தாவத்துக்கு இது ஆச்சரியமாகவே இல்லை. அதுவரையில் மரத்து நின்ற அகிலாவின் மனத்தில் பெண்மையின் இன்பச் சின்னங்கள் முளைப்பதே இதற்குக் காரணமென்பதைத் தெரிந்துகொண்டான். தன்னிடம் உண்டான பிரேமையால் அவள் உடல் தன்னிடமிருந்து லேசாக விலகுவதும், அதற்கு ஈடு செய்ய ஆடையாபரணங்களை ஏற்றித் தன்னை மேன்மேலும் வசீகரிக்க முயல்வதும் அவனுக்குத் தெள்ளெனத் தெரிந்தது. குவிந்து நிற்கும் தாமரை மலரின் இதழ்களைச் சூரிய கிரணங்கள் பிரித்து அதன் உள் அழகை அனுபவிப்பது போல், அவனுடைய கண்கள் அகிலாவின் தேக இதழ்களைப் பிரித்து உட்புகுந்து அவள் உள்ளத்தில் புதைந்து கிடந்த ஜீவ மகரந்தங்களுடன் உறவாடியதால், அன்பு என்னும் உயிர் வெகுதுரிதமாக அங்கு வளர்ந்து வந்தது.

தன்மேல், வைத்த கண் வாங்காமல் ரதன் தன்னை ஆராய்ச்சி செய்வதைக் கண்ட அகிலா தலை குனிந்த வண்ணமே கேட்டாள். "என்ன? பரிட்சை முடிந்துவிட்டதா?" என்று

"இது முடிகிற பரீட்சையா அகிலா?" என்றான் ரதன் சிரித்துக்கொண்டே.

"பரீட்சையில் மும்முரமாயிருந்தால் உடல் நலம் ஒழுங்காகுமா?"

"எல்லாப் பரீட்சைகளுமா உடல் நலத்தைப் பாதித்து [illegible]? உடலுக்கு ஜீவனளிக்கும் பரீட்சைகளும் உண்டல்லவா?" [illegible] ரதன் பதிலுக்கு.

"ஜீவனை வாட்டும் பரீட்சைகூட உண்டு" என்றாள் அகிலா [illegible].

"உன்னுடன் பேச முடியாது அகிலா."

"அப்படியானால் பேசாமல் எழுந்து வாருங்கள். நான் மரக்கட்டைதானே? என்னுடன் பேச்சென்ன வேண்டியிருக்கிறது?"

"நீ மரக்கட்டையா?"

"பண்டிதஜீதான் என்னை உங்கள் ஊன்றுகோல் என்று சொல்லிவிட்டாரே. ஊன்றுகோல் வெறும் மரந்தானே?"

"ஊன்றுகோல் சங்கிலி, பதக்கம், வளையல் எல்லாம் [illegible]யிருக்குமோ?"

"பணக்காரர்களின் ஊன்றுகோலுக்கு வெள்ளிப்பூண், [illegible] பூண் எல்லாம் கட்டுவதுண்டு."

"ஆனால் நீ சாதாரண ஊன்றுகோலல்ல, நீ ஒரு மந்திரப் [illegible]" என்றான் ரதன்

"ஏன்?" என்று அகிலா கேட்டாள்.

"மந்திரப் பிரம்புதான் தானாக நடக்கும், போ என்றால் [illegible], வா என்றால் வரும். ஆளைப் பயமுறுத்தும். ஒரு முறை [illegible] சுழன்றால் மயக்கம் போட்டுக் கீழே விழுபவர்களும் உண்டு" [illegible] சொல்லிக்கொண்டே ரதன் மெள்ள எழுந்திருக்க [illegible].

அகிலா கட்டிலருகில் வந்து நின்றாள். மெள்ள அவள் கைகளைப் [illegible] கொண்டு ரதன் எழுந்தான். சற்று நிதானித்துக்கொண்டு [illegible] அவள் தோள்மீது ஊன்றிக் கொண்டான். கால்தான் [illegible] சிறிது நடுங்கிற்று. சுத்த வீரனான அவன் கை எதற்காக [illegible]?

அகிலாவுக்கோ ரதனுக்கோ அந்த நிலைமையில் என்ன பேசுவதென்று தெரியவில்லை. அளவுக்கு மீறிய உணர்ச்சி வேகம் அவ்விருவர் உதடுகளையும் பேசவொட்டாமல் தைத்து விட்டது. மௌனமாகவே இருவரும் தர்மசாலைத் தோட்டத்தை நோக்கி நடந்தார்கள்.

தர்மசாலைத் தோட்டத்தைச் சமீபத்தில் யாரும் சிரத்தையுடன் கவனித்ததாகத் தெரியவில்லை. ஒரு பக்கம் ரோஜாச் செடிகள் பெரும் காடாக மண்டிப் பூத்துக் கிடந்தன. தோட்டத்தின் ஒரு மூலையில் தனித்து நின்றது ஒரு பாரிஜாத மரம். அகிலாவின் அழகைப் போலவே அதன் மலர்களும் கேட்பாரின்றி அந்தத் தோட்டத்தில் இத்தனை நாள் சிறைப் பட்டுக் கிடந்தன. அகிலாவின் அழகைப் பருகத்தான் ஒருவன் ஏற்பட்டுவிட்டானே; ஆகையால் நமக்கு விடி மோக்ஷம் வருமோ என்று விகசித்த சில பாரிஜாத புஷ்பங்கள் மரத்தின் மேல் கொட்டை கொட்டையாக விழித்துக்கொண்டு நின்றன.

அந்த மரத்தடியை நோக்கி அகிலாவும் ரதனும் மெள்ள நடந்தார்கள். ரதன் உடம்பில் ஓடிக்கொண்டிருந்த ராஜபுத்திர சுத்த ரத்தம் அந்தப் பெண்ணின் தனிமையைப் பயன் படுத்திக்கொள்ள மறுத்தது. கால் ஊன்றுவதால் இடுப்பில் சுரீல் சுரீலென சற்றே வலி உண்டாவதையும் பொறுத்துக் கொண்டு, அகிலாவிடமிருந்து சற்றுத் தள்ளியே ரதன் நடந்தான். பத்துப் பதினைந்து அடி நடந்தபின் நின்று பாரிஜாத மரம் இன்னும் எவ்வளவு தூரம் இருக்கிறது என்று கவனித்தான்.

''ஏன் நின்றுவிட்டீர்கள்?'' என்று அகிலா மெள்ளக் கேட்டுக்கொண்டே சற்று தைரியத்துடன் தலை நிமிர்ந்து அவன் முகத்தைப் பார்த்தாள். அவன் முகம் சுளித்திருந்ததைப் பார்த்ததும் காரணத்தை உணர்ந்துகொண்டு, ''இன்னும் வலி இருக்கும்போது இந்தப் பிடிவாதம் எதற்கு?'' என்று சொல்லிக்கொண்டே அவனிடம் நெருங்கி அவன் கையைத் தூக்கி மற்றொரு தோள்மேல் வைத்துக் கொண்டு, ''நன்றாகப் பிடித்துக்கொள்ளுங்கள். ஆபத்துக்குப் பாவம் இல்லை'' என்றாள்.

''எந்த ஆபத்துக்கு அகிலா?'' என்று கேட்டுக்கொண்டே ரதன் நடந்தான்.

''எந்த ஆபத்தாயிருந்தாலும் சரிதான் .''

''யாராவது நம்மை இந்த நிலையில் பார்த்தால் என்ன நினைப்பார்கள்?''

''உங்கள் உடம்பு மீண்டும் நலிந்தால்?''

''உன் கௌரவத்துக்கு என்னைப்போல் ஆயிரம் பேரைப் பலியிடுவது தவறில்லை அகிலா.''

அகிலா சிறிதுநேரம் பதிலேதும் சொல்லவில்லை. கடைசியில், ''ஊன்றுகோலுக்குத் தனி கௌரவம் கிடையாது. அதைப் பிடித்திருப்பவரால்தான் அதற்குக் கௌரவம் கிடைக்கிறது'' என்றாள்.

ரதன் பெருமூச்சு விட்டான். ''அகிலா! நீ என் வாழ்க்கையின் ஊன்றுகோலாக இருக்க முடியுமானால் நீ சொல்வதற்கு அர்த்த முண்டு. இது ஏதோ என்னைப்போன்ற ஓர் அபாக்கியவானுக்கு இடையில் ஏற்பட்ட இன்பம், இதை நான் மறந்துவிடவேண்டும்'' என்றான்.

அகிலாவும் ரதனும் அதற்குள் பாரிஜாத மரத்தடிக்கு வந்து விட்டார்கள். மெள்ள உட்கார்ந்துகொண்டாள் அகிலா. ரதனும் அருகில் உட்கார்ந்து கொண்டான். விட்டுப் போன சம்பாஷணையை அகிலா தொடர்ந்தாள்: ''ஆண் உள்ளத்தில் ஏற்படும் அன்பு மறையும். ஆனால் பெண் உள்ளத்தில் அது முளைத்துவிட்டால் அது மறக்குமென்று நினைக்கிறீர்களா?'' என்றாள், தரை மீது கண்களைச் செலுத்திக் கொண்டே.

ரதன் நிலை மிகவும் பரிதாபமாய் இருந்தது. தன் வசப்பட்டு நிற்கும் ஒரு பெண்ணை ஏமாற்ற அவனுக்கு இஷ்டம் இல்லை. மொகலாயர் கையாளாய்ச் சேவகம் புரிந்த தான் இந்தத்

தேவதைக்குச் சிறிதும் தகாதவன் என்று தீர்மானித்துக் கொண்டான். ஆகவே பேச்சை மாற்ற ஏதாவது செய்ய இஷ்டப் பட்டான்: அவள் அழகிய மார்புக்கிடையில் தொங்கிய பதக்கத்தைக் கையால் எடுத்துப் பார்த்து, ''அகிலா! உனக்கு இது ஏது?'' என்று கேட்டான்.

அகிலா பதில்சொல்லவில்லை. பதக்கத்திலிருந்து கையை விலக்கி அவள் பூங்கரத்தை எடுத்துத் தன் கையில் வைத்துக் கொண்டான். புஷ்பக்கொடி, முட்கள் நிறைந்த ஊன்று கோலின்மேல் ஆசையுடன் தாவித்தாவி ஏறி வருவதுபோல், வடுக்கள் நிறைந்த அவன் கரத்தில் அவள் பூங்கரம் சுழன்று விரல்கள் அவன் விரல்களுடன் பின்னிக் கொண்டன. ரதன் சந்தாவத்தும் உணர்ச்சி வசப்பட்டவனாய் அவள் காதுக் கருகில் முகத்தைத் தாழ்த்தி, ''அகிலா!'' என்றான். அவள் பதில் சொல்லவில்லை. கண்களைப் பாதி திறந்து ஓரக்கண்களால் அவனைப் பார்த்தாள்.

''நீங்கள் என்னை யாரென்று நினைக்கிறீர்களோ அந்த மனிதன் நானல்லவென்பது உனக்குத் தெரியுமா அகிலா?'' என்று கேட்டான் ரதன்.

அன்பினால் மலர்ந்த அவள் விழிகளில் சிறிது பயமும் கலந்துகொண்டது.

அத்தியாயம் 11

உன் விழிமேல் ஆணை

அகிலா பேசவில்லை. சஞ்சலத்தால் நிரம்பிய அவள் கண்கள்தாம் பேசின. அபலையின் அந்தப் பரிதாபப் பார்வையும் கெஞ்சிக் கெஞ்சி அவள் கண்களிலிருந்து எழுந்த கேள்விகளும் ரதனுடைய மனத்தைப் பல அரங்களால் அறுத்தன. அப்பொழு திருந்த தேவ போகத்தில், மென்மையான அவள் உடலின் சமீபத்தில், வாஸனைப் பொடிகளுக்கிடையில், பெட்டியில் பல நாள் தூங்கிக் கிடந்த காஷ்மீர வெண்பட்டின் சுகத்தில், தந்தத் தாம்பாளத்தில் கிடக்கும் ரோஜாப் புஷ்பம் போல் அவள் கன்னத்தில் வெட்கத்தால் படர்ந்திருந்த ரத்தச் சிவப்பில், வேகமாக வளைத்து வளைத்து எழுதிய பிரம்ம சைத்திரிகனின் திறத்தால் அவள் உடலில் நிறைந்திருந்த இன்ப வளைவுகளில் மூழ்கிக் கிடந்த அவன் மனம், உண்மையைப் பேச மறுத்தது. ஆனால் சந்தாவதர்களின் வம்ச ரத்தமோ, 'அடபதரே! குலத்தின் பெயரைக் கெடுக்காதே. உண்மையைச் சொல்லிவிடு' என்றது. 'உண்மையைச் சொன்னால் உன் சபதம் என்ன ஆவது? நீ ரதன் சந்தாவத் என்றால் இந்த நிமிஷம் முதல் இவளை விட்டு விலக வேண்டியிருக்குமே. டைபர்கானும் ஜெய்மல் ஸிம்ஹனும் உன்னைப் பார்த்துக் கை கொட்டிச் சிரிப்பார்களே' என்றது மனம். மீண்டும் 'டைபர்கான், ஜெய்மல் ஸிம்ஹன் இன்றிருப்பார்கள், நாளை மண்ணில் மறைந்து விடுவார்கள். ஆனால் சந்தாவதர்களின் பரம்பரைப் பெருமை மறையாததாயிற்றே, அதைக் கெடுத்து விடாதே' என்றது குல ரத்தம்.

ரதன் சந்தாவத் தன்னைப் பெரிதும் திடப்படுத்திக் கொண்டான். என்ன ஆனாலும் இந்த அழகியை ஏமாற்று வதில்லை என்று தீர்மானித்துக்கொண்டான். ரதன் சந்தாவத்திட மிருந்துகூடக் காப்பாற்றுவதாக அவள் தகப்பனாருக்கு அளித்த

வாக்கையும் நினைவுபடுத்திக்கொண்டான். ஆகையால் அகிலாவின் கையைப் பிடித்துக்கொண்டே மெள்ளச் சொன்னான்: ''அகிலா! நான் யாரென்று உனக்குத் தெரியாது. ஆனால் இந்த மாதிரி ரகசியங்கள் நிலைப்பதில்லை. என்றாவது ஒரு நாள் உண்மை வெளிப்படும். அப்பொழுது நான் யாரென்பதைத் தெரிந்து கொள்வாய். தெரிந்தவுடன் உனக்கு என்மீது என்றுமில்லாத வெறுப்பு உண்டாகும். ஆனால் அப்பொழுது இந்த சந்தர்ப்பத்தை ஞாபகப்படுத்திக்கொள். நீ இவ்வளவு அன்பு காட்டியும், உன்னுடன் நான் இவ்வளவு தனிமையிலிருந்தும், உன்மீது எனக்குள்ள ஆசை கடலைவிட அதிவேகத்துடன் கொந்தளித்தும், நான் இந்தத் தனிமையையோ, உன் பலவீனத்தையோ பயன் படுத்திக் கொள்ளவில்லையென்பதை நினைத்துக்கொள். அந்த நினைப்பிலாவது நான் அயோக்கியனல்ல என்று தீர்மானம் செய். நான் ஏதாவது தவறுகள் செய்திருந்தாலும் இந்தச் சந்தர்ப்பத்தை யொட்டியாவது என்னை மன்னித்துவிடு'' என்றான்.

அகிலாவுக்கு அவன் சொல்வதன் அர்த்தம் பூராவும் விளங்கவில்லை. அவனிடத்தில் அவளுக்கு ஏற்பட்டிருந்த அன்பு கரை கடந்து பிரவகித்ததால், அவன் கையைச் சிறிது அழுத்திப் பிடித்துக் கொண்டாள். ''நீங்கள் சொல்வது எனக்கு முழுவதும் விளங்கவில்லை. ஆனால் ஒரு பகுதி புரிந்து கொண்டேன். உங்களுக்கு விவாகமாகியிருப்பதால் என் தனிமையைப் பயன் படுத்திக்கொள்ள இஷ்டப்படவில்லை. மனைவியிடம் அன்பு இருக்கும் எந்தக் கணவன்தான் மற்றொரு மாதின் இன்பத்துக்குத் தன்னைப் பலியிட்டுக் கொள்வான்? அதுவும் சுத்த வீரனான நீங்கள்..'' என்று செல்லிக் கொண்டு போன அகிலாவின் வாயைச் சட்டென்று தன் கையால் பொத்தினான் ரதன்.

''அகிலா! உன் அழகிய வாயிலிருந்தா இந்த நாராசங்கள் வருகின்றன?'' என்று கேட்டான்.

வாயைப் பொத்தியதால் தேகத்தின் குறுக்கே விழுந்த அவன் கரத்தில் சிறிது வளைந்தாள் அகிலா. அவள் முகம் அவனுக்கு வெகு அருகில் வந்தது. ஏதோ ரகசியம் கேட்பது போல், ''உங்களைத் துன்புறுத்தும்படி அப்படி என்ன சொல்லி விட்டேன்?'' என்று வினவினாள்.

''அகிலா! எனக்கு விவாகமாயிற்றென்பது பொய். நீயும் என் தகப்பனாருமாக என்னைப்பற்றி ஏதேதோ நினைத்துக்கொண்டு என்னைக் கிருஹஸ்தனாக்கி விட்டீர்கள். எனக்குக் கல்யாண மாகவில்லை. எனக்கு மனைவி யாரும் கிடையாது!''என்றான் ரதன். அந்தச் சமயத்தில் அவள் முகத்தில் ஏற்பட்ட பிரமிப்பைக் கண்டு, ''ஏன் அகிலா, நான் சொல்வதில் உனக்கு நம்பிக்கையில்லையா?'' என்றான்.

''நம்பிக்கையில்லாமலென்ன? பிச்சைக்காரனுக்கு புதையலைக் காட்டியதுபோல் எனக்கு நம்பிக்கையளிக்கிறீர்களே'' என்று சொல்லிக்கொண்டே அகிலா அவன் மேல் தன் உடம்பைச் சாய்த்துக் கொண்டாள்.

அதற்குமேல் எதிர்க்கச் சக்தியற்ற அவன் இடது கை அவள் உடலைச் சுற்றிச் சென்றது. '' நீங்கள் யார்? அதைத்தான் சொல்லுங் களேன்!'' என்று அகிலா கெஞ்சினாள்.

உண்மையைச் சொல்ல வாயைத் திறந்தான் ரதன். அதற்கு முன்னால் வந்தது மற்றொரு குரல்; ''அவன் யாரென்று என்னைக் கேள். உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யும் அயோக்கியன்'' என்ற வார்த்தைகளைக் கொட்டிக் கொண்டே, உருவிய வாளுடன் அவர்கள் எதிரில் நின்று கொண்டிருந்தான் மால்தேவ்.

அகிலா ரதனுடைய கையினின்றும் விடுபட்டு விலகி எழுந்து நின்றாள். ரதனும் மெள்ள எழுந்து பாரிஜாத மரத்தின் மீது சாய்ந்து கொண்டு நின்றான். அகிலாவின் உடல் பயத்தால் நடுங்கியது. மால்தேவின் உருவியவாளையும், காலைத் தாங்கி வளைத்துத் தன் உடலை மரத்தின் மீது முட்டுக் கொடுத்துநின்ற ரதனையும் கவனித்தாள். சிறிது தைரியத்தை வரவழைத்துக்

கொண்டு, ''மால்தேவ்! நிராயுதபாணியான இவருக்கு எதிரில் வாளை உருவி நிற்க உனக்கு வெட்கமாயில்லையா? க்ஷத்திரியன் செய்யும் காரியமா இது?'' என்றாள்.

மால்தேவின் படபடப்பு முன்னைவிடப் பன்மடங்கு அதிகமாயிற்று. ''க்ஷத்திரியன் இன்னொரு க்ஷத்திரியனோடு சண்டை போடும் சமயத்தில் கவனிக்க வேண்டிய தர்மம் அது அகிலா. திருட்டுப் பயல்களைத் தண்டிக்க அந்தத் தர்மம் அவசியமல்ல'' என்று வேகத்துடன் சொல்லிவிட்டு, ''உன் நடத்தைக்கு என்ன சமாதானம் சொல்கிறாய்?'' என்று ரதனைப் பார்த்தான் மால்தேவ்.

ரதன் உதடுகளில் புன்முறுவல் அரும்பிற்று. டைபர்கானே சமாதானம் கேட்க அச்சப்படும் ரதன் சந்தாவத்தைப் பார்த்து இருபத்திரண்டு வயது மீறாத இந்தச் சிறுபயல் சமாதானம் கேட்கிறானே என்று எண்ணிக்கொண்டே, ''எதற்குச் சமாதானம் கேட்கிறாய் மால்தேவ்?'' என்று வினவினான்.

''மஹாதேவ்ஸிங்! உன் சாமர்த்தியத்தை அகிலாவைப் போன்ற பெண்ணிடம் காட்டுவதோடு நிறுத்திக் கொள். நான் ஆண்பிள்ளை...'' என்ற மால்தேவை இடைமறித்து, ''பார்வைக்கு அப்படித்தான் தெரிகிறது'' என்றான் ரதன். திமிறி வந்த கோபத்தைச் சமாளித்துக்கொண்ட மால்தேவ் கேட்டான்; ''மஹாதேவ் ஸிங்! நீ இறந்துவிட்டதாக ஒரு வதந்தி சாரங்கபூரிலும் சுற்று ஊர்களிலும் உலாவுவது உனக்குத் தெரியுமா?''

''அப்படி இருந்தால் நல்லதுதானே? இங்கு யாரும் வந்து என்னைத் தேடமாட்டார்கள். நான் பத்திரமாயிருப்பேன்.''

''உன் மனைவி, மாமனார் இவர்களும் நீ இறந்து விட்டதாகவே நினைக்கிறார்களென்பதை நீ அறிவாயல்லவா?''

''மனைவியும் மாமனாரும் எனக்குத் தர்ப்பணம் செய்தாகி விட்டதல்லவா. இனி என்ன கவலை?''

''ஆம், கவலையில்லாமல் இந்தக் கன்னியைக் கற்பழிக்கத்தான் நீ திட்டம் போடுகிறாய். ஆனால் மால்தேவ் உயிருடன் இருக்கும் வரையில் அது நடவாது. இந்தா, இதுதான் உன் கடைசிநாள்'' என்று சொல்லிக்கொண்டு உருவிய தன் வாளை அவன் மார்புக்காகச் செலுத்தினான்.

''ஹ!'' என்று அலற வாயைத் திறந்த அகிலா அப்படியே ஸ்தம்பித்து நின்றாள். தன்னுடன் இத்தனை நேரம் சரசமாயிருந்தவன், பாரத நாட்டின் பெரிய வாள் வீரனான ரதன் சந்தாவத் என்றறிந்திருந்தால் அடுத்து வந்த நிகழ்ச்சிகளால் அவள் ஆச்சரியப்படக் காரணம் இருந்திருக்காது. அவள் அலறுவதற்குள் எதிரிகளின் நிலைமை பரிபூரணமாய் மாறி விட்டது.

மால்தேவ் உஷ்ணமாகப் பேசிக்கொண்டிருந்த சமயங்களி லெல்லாம் ரதனுடைய கண்கள் அவன் வாளின்மேலேயே இருந்தன. மால்தேவ் திடீரெனக் கத்தியைப் பாய்ச்சினவுடன், மரத்தின்மேல் சாய்ந்திருந்த ரதன், கையில் பிடித்திருந்த கிளையோடு சரேலென விலகிக்கொண்டதால் மால்தேவின் வாள் மரத்தில் சிக்கி கொண்டது. அவன் கையில் பிடித்திருந்த கிளை திடீரென உடைந்து மால்தேவின் தலை மேல் இறங்கியது. ''ஹ!'' என்று அகிலாவுக்குப் பதில் மால்தேவ் அலறிக்கொண்டு கீழே விழுந்தான்.

அகிலா ரதனை ஆச்சரியத்துடன் பார்த்தாள். அவன் முகத்தில் சண்டை நடந்ததாலோ, மிகுந்த ஆபத்திலிருந்து தப்பியதாலோ உண்டாகக் கூடிய எந்தவிதத் திகைப்போ சந்தோஷமோ காணப்படவில்லை. ஏதும் நடக்காததுபோல் மரத்தில் பாய்ந்த வாளை ரதன் பிடுங்கித் தனது இடது கைக்கு ஊன்றுகோலாக உபயோகப்படுத்திக் கொண்டான். உடைந்த பாரிஜாதக் கிளை அவன் வலக்கரத்தில் காட்சி யளித்துக் கொண்டிருந்தது. மால்தேவின் தலையில் சிறிது ரத்தம் கசிந்து கொண்டிருந்தது. மெள்ள எழுந்திருக்க மால்தேவ் முயன்றான். பாரிஜாதக் கிளையை இரண்டாம் முறை அவன்மேல் உபயோகிக்க ரதன் வலது கையை உயர்த்தினான்.

"நீ ஒரு சுத்த வீரனா? விழுந்து கிடக்கும் எதிரியை அடிக்க முயலும் நீ ஒரு க்ஷத்திரியனா?" என்று மால்தேவ் பயமும் ஆத்திரமும் கலந்த தொனியில் அலறினான்.

"மால்தேவ்! க்ஷத்திரியன் இன்னொரு க்ஷத்திரியனோடு சண்டை போடும் சமயத்தில் கவனிக்க வேண்டிய தர்மம் அது. திருட்டுப் பயலைத் தண்டிக்க அந்தத் தர்மம் அவசியமில்லை" என்று, மால்தேவ் சற்றுமுன் சொன்ன வார்த்தைகளையே திருப்பிச் சொன்னான் ரதன். வார்த்தையைத் தொடர்ந்து பாரிஜாதக் கிளையும் சரேலென இரண்டாம் முறை மால்தேவ் மீது இறங்கியது.

மால்தேவ் பறக்கப் பறக்க எழுந்திருந்து, "உன்னை என்ன செய்கிறேன் பார். அகிலாவை அடித்துக்கொண்டு போய்விடலாம் என்று கனவு காண்கிறாய். இல்லாத பொய்களைச் சொல்லி ஏதுமறியாத இந்தப் பெண்ணை ஏமாற்றியிருக்கிறாய். மஹாதேவ் ஸிங்! இன்னும் நாலுநாளில் உன் குட்டை வெளியாக்குகிறேன். உன் மாமனார் இந்திரஸிங்கை நான்கு நாட்களில் அழைத்து வந்து உன் வேஷத்தைக் கலைக்கிறேன்."என்று கர்ஜித்துக்கொண்டே தர்மசாலைக் கட்டிடத்தை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

ரதன் அவனைச் சிறிதுகூட லட்சியம் செய்யாமலே, "மால்தேவ்! இந்தா, இதை விட்டுவிட்டுப் போய்விடாதே" என்று சொல்லிவிட்டு இடது கையிலிருந்த அவன் கத்தியைத் தன் முழங்காலில் வளைத்து இரண்டாக படீரென உடைத்து வேகமாகக் கம்பி நீட்டிக்கொண்டிருந்த மால்தேவை நோக்கி உடைந்த பகுதி களை வீசியெறிந்தான்.

அதுவரை மௌனமாக அந்த நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த அகிலாவைக் கிட்டே கூப்பிட்டு, "அகிலா, இங்கு ஊன்றிக்கொண்டிருந்த வாள் போய்விட்டது. அதிலும் கூர்மையான உன் விழிகளைக் காட்டு" என்று விளையாட்டுத் தனமாகவே அவள் தோளில் கையை ஊன்றிக் கொண்டான். தோட்டத்துக்குள் நுழைந்ததைவிட, போகும்போது அவன்

அணைப்புப் பலமாக அவள் உடல்மேல் விழுந்தது. அவளும் வெகு சொந்தமாக அவனுடன் இணைந்து நடந்தாள். அப்படி நடந்து கொண்டே கேட்டாள் " உங்களுக்கு மணமாகவில்லை என்று சொன்னீர்களே, அது நிஜந்தானா?"

ரதன் ஒரு நிமிஷம் நின்றான்; தன் இரு கைகளாலும் அந்த அழகியைத் தன் பக்கமாகத் திரும்பி, "அகிலா! தலையைத் தொங்கப் போடாதே. என்னைப் பார். உன்னுடைய இந்த அழகிய விழிகளின்மேல் ஆணையாகச் சொல்கிறேன், எனக்கு மணம் ஆகவில்லை. இங்கு வந்த பின் நான் சொன்ன உண்மை இது ஒன்றுதான்" என்றான்.

அவள் அன்பு ததும்பும் கண்களுடன் அவனை நோக்கி, "க்ஷத்திரியர்கள் வாளின் மேலல்வா ஆணை வைப்பார்கள்..." என்றாள்.

"ஆம்! உன் வாள் விழிகளின்மேல் ஆணை வைத்தேன். அதில் தவறென்ன?" என்றான் ரதன்.

அத்தியாயம் 12

சித்திரம் சிரித்தது!

மனித வாழ்க்கையில் மகிழ்ச்சி சிறிது சிறிதாகத்தான் உண்டாகிறது. பணத்தைச் சேர்க்கும் லோபி போல் நாம் அதை அகப்பட்ட போதெல்லாம் சிறுகச் சிறுகச் சேர்த்து வாழ்க்கையை இன்பமாக்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஒரு பெண்ணின் மேல் நாம் ஆசைப்பட்டால் அவளை அணுகப் பல நாட்களும், அணுகிய பின்பு அவள் தயவைப் பெறப் பல நாட்களும், தயவு கிடைத்தபின் அந்தப் பரிச்சயத்தை நமது இஷ்டத்துக்குத் தக்கபடி விருத்தி செய்யப் பல நாட்களும் ஆகி, கடைசியில் மகிழ்ச்சியின் எல்லையை எட்டவேண்டியிருக்கிறது. மிகுந்த பிரயாசைப்பட்டுப் பெரிய மேட்டை ஏறிக் கடக்க வேண்டியிருக்கிறது.

துன்பம் இவ்வளவு சிரமப்பட்டு அடையவேண்டிய விஷயமல்ல, வாழ்க்கையில் யதேஷ்டமாகச் சுற்றுமுற்றும் இறைந்து கிடக்கும் வஸ்து அது. அதன் தலைமேல் நாம் சதா இடறி விழுந்துகொண்டே இருக்கிறோம். நினைத்த மாத்திரத்திலும் நினைக்காதபோதும் வாழ்க்கையில் நமக்குக் கிடைக்க கூடியது துன்பந்தான். எல்லையற்ற மகிழ்ச்சி கிடைக்க எல்லையற்ற அவகாசம் வேண்டியிருக்கலாம். எல்லையற்ற துன்பம் கிடைக்க ஒரு நொடி போதும். மலைபோன்ற மகிழச்சி ஏற்பட்டபேதிலும் அதை ஒரு நொடியில் உடைத்தெறியக்கூடிய பெரிய அதிர்வேட்டு ஒன்று உண்டென்றால் அது துன்பந்தான். நினைக்காத சந்தர்ப்பத்தில் எதிர்பாராத விதமாய்த் தாக்கும் சக்தி வாய்ந்த துன்பம் திடீரென ரதன் சந்தாவத்தையும் கவ்விக்கொண்டது .

அகிலாவின் அன்பினால் கிடைத்த சந்தோஷ சாகரம் அவ்வளவு சீக்கிரம் வறண்டு வெறும் பாலைவனமாகி விடுமென்று ரதன் சந்தாவத் கனவுகூடக் காணவில்லை. சென்ற அத்தியாயத்தில் கிடைத்த இந்திர போகத்துக்குப்பின் அவன் கண்டதெல்லாம் இன்பக் கனவுதான். இரவு முழுவதும் இன்பக் கனவு கண்டதால் ஏற்பட்ட அரைத் தூக்கம் விடியற்காலையில் அசதியை விளைவித்துச் சூரியோதயத்துக்குப் பிறகும் ரதன் தூங்க ஆரம்பித்தான். தான் எதிர்பார்த்ததற்கு முன்பாகவே ரதனுடைய தேகம் பூரண வலுவையும் பழைய பொலிவையும் அடைந்து விட்டதைக் கண்டு பண்டித்ஜீயே ஆச்சரியப்பட்டார். ''மனிதன் நன்றாகத் தூங்கினால் அவன் உடம்பில் வியாதியில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள்'' என்று பண்டித்ஜீ அடுத்த இரண்டு நாட்களில் அடிக்கடி தெரிவித்தார்.

ரதன் காலைவேளைகளில் நன்றாகத் தூங்கினான். அந்தத் தூக்கமே அவனுக்குப் பெரும் சத்துருவாக வந்து விளைந்தது. ரதன் தூங்கினானே ஒழிய அந்த நாட்களில் மால்தேவ் தூங்கவே இல்லை.. தர்மசாலைத் தோட்டத்தில் சொல்லியபடி இந்திர ஸிங்குக்குத் தர்மசாலையில் நடக்கும் விஷயங்களைப் பற்றி ஒன்றுக்குப் பத்தாக எழுதியனுப்பியிருந்தான். ஆகவே,

இந்திரஸிங் தர்மசாலைக்குத் தம் பெண்ணுடன் வந்தபோது ருத்ர மூர்த்தியாகவே காணப்பட்டார். அவர் வந்த சமயத்தில் ரதன் சந்தாவத் விழித்துக் கொண்டிருந்திருந்தால் அவன் வாழ்க்கையில் பல சிக்கல்கள் அப்பொழுதே அறுபட்டிருக்கும். இந்திரஸிங் விடியற்காலையில் வந்தார். ''மஹாதேவ் ஸிம்ஹன் என்ன செய்கிறார்?'' என்று கடுமையாக விசாரித்தார்.

''வா இந்திரஸிங்! நம் வீடு உனக்குப் புதிதா? குழந்தை ஏன் வாசலில் நிற்கிறாள்? உள்ளே அழைத்துவா'' என்று அகிலாவின் தகப்பனார் பரிந்து கூப்பிட்டார். அகிலாவும் அந்தப் பெண்ணை உள்ளே அழைத்துச் செல்ல வெளியில் வந்து, ''வா அம்மா'' என்று கூப்பிட்டாள். அந்தப் பெண்ணைப் பார்க்கவே அகிலாவுக்குப் பிடிக்கவில்லை. 'மஹாதேவ் ஸிம்ஹன் தமக்குக் கல்யாணம் ஆகவில்லையென்று சொன்னாரே, அப்படியானால் இந்தப் பெண் ஏன் இங்கு வந்திருக்கிறாள்? இந்த மனிதர்தான் ஏன் இப்படிக் குதிக்க வேண்டும்?' என்று நினைத்துக்கொண்டே அப்பெண்ணை அணுகினாள். ஆனால் இந்திரஸிங்கின் பார்வை அவளை அப்படியே நிலைக்கச் செய்துவிட்டது. அவர் பார்வையைத் தொடர்ந்து வார்த்தைகள் நெருப்பைக் கக்கின.

''வேண்டாம் அவளை அணுகாதே. கௌரவமான பெண்களுக்கு இந்த வீட்டில் வேலையில்லை. தயால்ஸாவின் மருமகளுக்குக் கொஞ்சம் கௌரவம் இருக்குமென்று நினைத்தேன். உன் சக்களத்தியுடன் இப்பொழுது சரசம் வேண்டாம்'' என்றான் இந்திரஸிங்.

பெரியவர் கண்களில் தீப்பொறி பறந்தது. ''என்ன சொன்னாய் இந்திரஸிங்?'' என்று சீறினார்.

இந்திரஸிங் அவரை வெகு அலட்சியமாகப் பார்த்தார். ''இந்தச் சீற்றத்தையெல்லாம் உன் புது மாப்பிள்ளையிடம் வைத்துக்கொள். கணவன் இறந்துவிட்டானென்று கதறியழும் இந்தப் பெண்ணைப் பார். அவன் உயிரோடு இருக்கிறா னென்பதைத் தெரிந்துகொண்டும், அவன் தனக்கு இனி கிடைக்க

மாட்டானென்ற எண்ணத்தால் கலங்கி நிற்கும் இவள் கண்களைப் பார்'' என்று தம் பெண்ணைச் சுட்டிக் காட்டிவிட்டு, ''உன்னுடன் எனக்குப் பேச்சென்ன இருக்கிறது? மஹாதேவ் ஸிம்ஹன் எழுந்ததும் நானும் அவன் மனைவியும் அவன் பேட்டிக்காக மால்தேவ் வீட்டில் காத்திருப்பதாகச் சொல்'' என்று கூறிவிட்டுத் தர்மசாலைப்படியை விட்டுக் கீழே இரண்டடி எடுத்து வைத்தார்.

''இந்தப் பெண் அவர் மனைவியா?'' என்றாள் அகிலா. அவள் குரலில் அச்சமும் கோபமும் வெறுப்பும் கலந்து தொனித்தன.

''இன்னும் இவள் யாரென உனக்கு விளங்கவில்லையா? மஹாதேவ் ஸிம்ஹனை நித்தியப் பிரும்மச்சாரியென்று நினைத்துக் கொண்டாயா? என்ன அப்படி ஒன்றுமறியாத குழந்தை போல் பார்க்கிறாய்?'' என்று கடுமையாகப் பேசினார் இந்திரஸிங்.

''அகிலா! என் வாளை எடுத்து வா'' என்று பெரியவர் வேதனை தாங்கமாட்டாமல் கதறினார்.

''உன்னைக் கொல்ல எனக்கு இஷ்டம் இல்லை., அந்த அயோக்கியனை அனுப்பு'' என்று கூறிவிட்டு மடமடவெனத் தம் பெண்ணுடன் இறங்கிச் சென்றார் இந்திரஸிங்.

இந்திரஸிங் சிறிது தாமதித்திருந்தால், ரதன் எழுந்திருக்கும் வரையில் சிறிது நிதானப்பட்டிருந்தால் அகிலாவின் வாழ்க்கைப் பிரவாகம் எவ்வளவோ சீர்பட்டிருக்கும். ஆனால் இந்திரஸிங் தமது வெகு நாளைய நண்பரையோ, அவர் பெண்ணையோ ஏறெடுத்துப் பார்க்கக்கூட இஷ்டப் படவில்லை. மால்தேவ் தன் கதையைச் சரியானபடி ஜோடித்திருந்தான். அந்த ஜோடனையில் சிக்கிய இந்திரஸிங்கின் மனம், தம்முடைய பெண்ணின் வாழ்க்கை அடியோடு பாழ்பட்டுவிட்டதாகவே எண்ணியது. அதற்குக் காரண பூதனான மாப்பிள்ளை மீது மிகுந்த சீற்றமும் கொண்டிருந்தது. கோபத்தால் அந்தகனான இந்திரஸிங் மால்தேவின் வீட்டை நோக்கிச் சரசரவென்று நடந்தார்.

தர்மாசாலைப் படியில் அகிலாவும் அவள் தகப்பனாரும் மௌனமாக நின்றார்கள். தகப்பனார் பெண்ணைப் பாராமலும் பேசாமலும் படிகளில் மெல்ல ஏறிச் சென்றார். அகிலா சற்றுத் திரும்பி மேலே செல்லும் அவரைப் பார்த்துக் கொண்டு நின்றாள். வயதால் ஏற்கனவே குன்றியிருந்த அவர் சரீரம் அவமானத்தால் இன்னும் அதிகமாகக் குன்றிவிட்டது. மனத்தில் ஏறிய பெரும் பாரம் அவர் நடையைத் தளர விட்டது. இதைப் பார்த்த அகிலாவுக்குத் துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது.

அகிலாமட்டும் ஒரு சாதாரணப் பெண்ணாய் இருந்தால் அந்த நிமிஷத்திலேயே கதறியழுதிருப்பாள். உத்தமஜாதி ஸ்திரீகளுக்குத் தன்னை ஒருவன் வேசியென மதிக்கிறான் என்ற நினைப்பு ஏற்பட்டால் அதைவிட துக்கம் தரக்கூடியது உலகத்தில் என்னதான் இருக்கமுடியும்? அத்தனை துக்கத்திலும் அவள் உள்ளம் படீரென வெடித்துவிடும் தன்மைக்கு வந்ததேயொழிய உடல் அந்தத் துக்கத்தைப் பிரதிபலிக்கவே இல்லை. அவள் படிமேல் ஏறிச் செல்லாமல், கால் சென்ற இடம் இறங்கிச் சென்றாள். கால்கள், ஏதோ மந்திரத்தால் இழுக்கப்பட்டவைபோல் தோட்டத்துப் பாரிஜாத மரத்துக்காக அவளை இழுத்துச் சென்றன.

அவள் மனம் பெரிய பரீட்சைக்கூடமாக மாறியிருந்தது. சொல்லவொண்ணாக் கேள்விகளும் பதில்களும் அங்கு எழுந்து தாண்டவமாடிக்கொண்டிருந்தன. எல்லாக் கேள்வி களுக்கும்மேல், 'மஹாதேவ் ஸிம்ஹன் அயோக்கியனா? தனக்கு விவாக மாகவில்லை என்று அவன் சொன்னது கடைசியில் பொய்தானா?' என்ற கேள்விகள் அவள் மனத்தின் முன்னால் பேரிரைச்சலாகக் கிளம்பி நின்றன. 'தன் கால் தூசியைத் தொடுவதைக்கூடப் பெரும் பாக்கியமாக நினைக்கும் ஏராளமான ராஜபுத்திரர்களுக்கு இடங்கொடாத அகிலாதேவி, கடைசியில் பொய்யும் புனை சுருட்டும் நிறைந்த கேவலமான ஒரு மனிதனுக்கா ஆட்பட்டாள்' என்று அகிலா தன்னையே கேட்டுக்கொண்டாள். 'இந்தக் கதையைக் கேட்டால் ராஜபுதனம் சிரிக்குமே அகிலா? இத்தனை

நாள் புருஷவாடையை எதிர்த்து நின்ற உன் உணர்ச்சிகள் இந்தக் கயவனிடம் எப்படிச் சிக்கிக் கொண்டன? உன் கர்வத்திற்குத் தெய்வம் கொடுத்த தண்டனையா இது?' என்று அகிலாவின் மனம் அவளைச் சுட்டெரித்தது. அதே தோட்டத்தில் ரதன் முதல் நாள் சொன்ன வார்த்தைகள்-'அகிலா, ஒரு சந்தர்ப்பத்தில் உனக்கு நான் பொய்யன் எனத் தோன்றும்; இப்பொழுது உன் தனிமையை நான் எனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்பதை அப்பொழுது நினைத்து என்னை மன்னித்துவிடு' என்ற வார்த்தைகள் -அவள் பொறாமைத் தீயில் இந்திரஸிங்கிடம் அவள் பட்ட அவமான அக்கினியில் வெந்து சாம்பலாகிவிட்டன. பாரிஜாத மரத்தடியை நெருங்கிய அவள், அதன் முன்னாலேயே நின்றுகொண்டு விம்மி அழத் தொடங்கினாள்.

அவள் இரு தோள்களையும் ரதன் சந்தாவத்தின் கரங்கள் லேசாகத் தழுவின. "ஏன் அழுகிறாய் அகிலா?" என்று உதிர்ந்தன சொற்கள். கோடை மழையைப்போல் அழுகை திடீரென நின்று விட்டது. படபடவெனக் கிளம்பிய இரண்டொரு தூறல்களைத் தொடர்ந்து வெயில் காய்வதுபோல் உஷ்ணமான இரு விழிகளை அவன்மேல் திருப்பினாள் அகிலா. "விலகி நில்லுங்கள்" என்ற கட்டளையும் பிறந்தது. இத்தனை கோபத்திலும் அவள் பெண் மனம், அவன் சரியான ஆடைகளை அணியவில்லை யென்று கவனித்தது.

ரதனுக்கு அன்று பல ஆச்சரியங்கள் காத்திருந்தன. எழுந்தவுடன் பல் தேய்க்கத் தயாராயிருக்கும் ஜலம் அறையில் இல்லை. தோய்க்கப்பட்ட புது உடை இல்லை. ஆகையால் முதல் நாள் அங்கு வந்து விழுந்தபோது கழற்றிச் சுவரில் மாட்டப்பட்டு அங்கேயே தொங்கிக்கொண்டிருந்த சட்டையையும் அந்தப் பழைய கச்சையையும் அணிந்து கொண்டு அகிலாவைத் தேடக் கிளம்பினான். வீட்டில் எங்குமில்லாததால் தோட்டத்துக்கு வந்தான். புன்சிரிப்புத் தவழும் அவள் முகத்துக்குப் பதில் வெறுப்பும் குரோதமும் கலந்த பார்வையைப் பெற்றான்.

அவளுடைய ஆத்திரச் சொற்களுக்கு ரதன் சந்தாவத் உடனே பதில் ஏதும் சொல்லவில்லை. அவளை ஒரு நிமிஷம் உற்று நோக்கினான். "அகிலா! உன்னை அணுக எனக்கு யோக்கியதை இல்லை என்பதை ஒப்புக் கொள்கிறேன்" என்றான்.

"அப்படியானால் உங்கள் மனைவி இருக்குமிடம் போகலாமே. ராஜபுத்திரனுக்குக் கடமையின் வழியை என்னைப் போன்ற கன்னியா காட்டவேண்டும்?" என்றாள் அகிலா தரையை நோக்கிக்கொண்டே.

ரதன் இதழ்களில் புன்முறுவல் அரும்பிற்று. "இதென்ன பேச்சு அகிலா? என்னை இங்கிருந்து போகச் சொன்னால் போய் விடுகிறேன். ஆனால் என் மனைவியைப் பற்றிய கதையை நேற்றோடுதான் முடித்துக் கொண்டோமே. எனக்குக் கல்யாணம் ஆகவில்லை என்பதை எத்தனை முறை நான் சொல்லட்டும்?" என்றான்.

அகிலாவின் கண்களில் வெறுப்பு அதிகமாயிற்று. " நானும் எவ்வளவோ ராஜபுத்திரர்களைப் பார்த்திருக்கிறேன். ஆனால் உங்களைப்போல் கேவலமான யாரையும் நான் பார்த்ததில்லை. கட்டிய மனைவியிருக்க அதைப்பற்றிப் பொய் ஏன் சொல்கிறீர்கள்? என்னைப்போன்ற எவ்வளவு அபலைகளை இப்படிப் பொய் செல்லி ஏமாற்றியிருக்கிறீர்கள்?" என்றாள் அகிலா.

"அகிலா! நீ ஏதோ என் கல்யாண மண்டபத்தில் பிரசன்ன மாயிருந்தது போலப் பேசுகிறாயே. என் மனைவியை நீ பார்த்தி ருக்கிறாயா?" என்று ரதன் கேட்டுக் கொண்டே, அவளை அணுகினான்.

அகிலா பின்னால் இரண்டடி எடுத்துவைத்துப் பாரிஜாத மரத்தருகேச் சென்றாள். "உங்கள் மனைவியைச் சற்று முன்புதான் பார்த்தேன். அவள் இப்போழுது மால்தேவின் வீட்டில் இருக்கிறாள்" என்றாள்.

ரதன் புன்சிரிப்பில் இகழ்ச்சி கலந்துகொண்டது. "மால்தேவின் வீட்டிலா? என் பெண்டாட்டி இருப்பதற்குச் சரியான

இடந்தான்'' என்று சொல்லிக்கொண்டே அகிலாவைத் தன் இரு கைகளாலும் பிடித்துக்கொண்டு, ''இதென்ன பைத்தியம் அகிலா! எனக்கு மனைவியும் இல்லை, மாமனாரும் இல்லை. இதெல்லாம் சுத்தத் தவறு. நான் யாரோ என்று நினைத்துக்கொண்டு நீயும் உன் தகப்பனாரும் உளறுகிறீர்கள். இதென்ன பிடிவாதம், வா'' என்று அவளைத் தன் பக்கமாக இழுத்தான்.

''போதும்! என்னை விடுங்கள். உங்கள் மாமனார் இந்திரஸிங் உங்கள் மனைவியுடன் சற்று முன்புதான் இங்கு வந்துவிட்டு மால்தேவின் வீட்டுக்குச் சென்றிருக்கிறார். என்னை விட்டுவிடுங்கள். நான் இன்று காலை பட்ட அவமானம் போதாதா? மஹாதேவ் ஸிங்! நீங்கள் உண்மையில் ராஜபுத்திரன் தானா? சே! விடுங்கள் என்னை'' என்று திமிறினாள்.

'' ஐயோ! நான் இந்திரஸிங்கின் மாப்பிள்ளை இல்லை. ஏ அகிலா! பைத்தியமே, பிடிவாதம் செய்யாதே. இப்படி வா, உண்மையைத் தெரிவிக்கிறேன்'' என்று அவளை இழுத்தான் ரதன்.

''அடுத்தபடி நீங்கள் மஹாதேவ் ஸிம்ஹனே இல்லை யென்ற சாதிப்பீர்கள். போதும், விடுங்கள்'' என்று வேகத்துடன் அவன் பிடியிலிருந்து விலக முயன்றாள் அகிலா.

''சந்தேகமென்ன அகிலா? நான் மஹாதேவ் ஸிம்ஹனல்ல. எனக்கு மனைவியும் கிடையாது'' என்று ரதன் அவள் இரு தோள் களையும் பற்றிக்கொண்டு கூச்சலிட்டான்.''இதோ பார், அகிலா! என்னை நன்றாகப் பார். நான் அவ்வளவு அயோக்கியனல்ல. என் முகத்தை பார்'' என்று கூவினான்

பொறாமை சூழ்ந்த அகிலாவின் மனம் காதைச் செவிடாக அடித்துவிட்டது. அவள் பலமாகத் திமிறியதில் ரதன் இடையில் கட்டியிருந்த கச்சைகூட அறுந்து அதிலிருந்து ஏதோ ஒரு வஸ்து கீழே விழுந்தது. அவன் பிடியிலிருந்து விலகிய அகிலா, அதைப் பார்த்தாள். அவள் இகழ்ச்சிப் பார்வை பலப்பட்டது. ரதனைப் பார்த்து ''மஹாதேவ் ஸிங்! நீங்கள் கச்சையில் பத்திரப் படுத்தியிருந்த ஆசை வஸ்து கீழே விழுந்துவிட்டது. சீக்கிரம் எடுத்து மீண்டும் பத்திரப்படுத்துங்கள்'' என்று சொல்லிவிட்டுத் தர்மசாலையை நோக்கி விடுவிடு என்று நடந்தாள்.

ரதன் கீழே பார்வையைச் செலுத்தினான். மஹாதேவ் ஸிம்ஹன் தன்னிடம் ஒப்படைத்த மோஹராச் சிமிழ் கீழே விழுந்து திறந்து கிடப்பதைக் கண்டான். அதில் தீட்டப்பட்டிருந்த அழகிய பெண்ணுருவம் அவனைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தது.

அத்தியாயம் 13

மீண்டும் சந்திப்பு

ரதன் சந்தாவத்துக்கு வாழ்க்கையே சூன்யமாகி விட்டது போல் தோன்றியது. கனவில் கிடைத்த செல்வம் போல் அகிலாவின் அன்பு நொடிப்பொழுதில் மறைந்து விட்டதை நினைக்க அவனுக்குத் துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது. அகிலா ஓடிவிட்டதிலிருந்து தன் உயிரும் ஓடி விட்டதாகவே நினைத்தான். அச்சமயத்தில் மனோபலத்தோடு தேக பலத்தையும் இழந்து நின்றான் ரதன் சந்தாவத்.

பலசாலியான ரதன் சந்தாவத் பலஹீனமாக நின்றான். கீழே விழுந்துகிடந்த மோஹராச் சிமிழைக் குனிந்து எடுக்கக் கூடச் சக்தியற்றவனாய் நின்றான். சுத்த வீரனான அவன் தேகம் ஒரு வினாடி நடுங்கியது. அவன் கண்கள் கூட எந்தப் பக்கமும் திரும்ப வலுவில்லாமல் மோஹராச் சிமிழின் மேலேயே நிலைத்துத் தரைப் பக்கமாகவே நின்று விட்டன. மோஹராச் சிமிழிலிருந்த பெண்ணின் உருவம் அழகாய்த் தானிருந்தது.ஆனால் அப்பொழு திருந்த மன நிலையில் ரதன் சந்தாவத் சொல்லொண்ணாத வெறுப்புடன் அந்த உருவத்தைப் பார்த்தான். காலையில் எழுந்தி ருந்ததும் எழுந்திருக்காததுமாய் இந்தப் பிசாசை மடியில் கட்டிக்

கொண்டு வந்து சேர்ந்தோமே என்று நினைத்தான். அந்த நினைப்புடன் இன்னும் பல நினைப்புகளும் கலந்து கொண்டன.

"நான் அறியாமலே எனக்கு மனைவியாய் வந்து வாய்த்த உன்னால் என் வாழ்க்கையே பாழாய்ப் போய் விட்டதே! அடி பெண்ணே! உன் சக்தியை என்ன வென்று சொல்வேன். உன்னைக் கல்யாணம் செய்துகொண்ட மறுமாதமே மஹாதேவ் ஸிம்ஹன் பிராணனை விட்டான். உன்னை மடியில் கட்டிக்கொண்ட தோஷம் என் சந்தோஷமெல்லாம் காற்றாய்ப் பறக்கும் ஸ்திதிக்கு வந்து விட்டேன். நீ எந்த வேளையில் ஜன்மமெடுத்தாய்! எதற்காக ஜன்மமெடுத்தாய்? தாயே! சனி பகவானுக்கும் மேலான சக்தியை நீ எங்கிருந்து பெற்றாய்?"என்று அந்தச் சித்திரத்தைப் பார்த்துப் பெருமூச்சு விட்டான். இவ்வளவு மனவேதனையிலும் ரதன் சந்தாவத்தின் இதழ்களில் லேசாகத் துக்கங்கலந்த சிரிப்பு ஒன்று தென்பட்டது. மெதுவாகக் குனிந்து அந்த மோஹராச்சிமிழை எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு அந்த உருவத்தை மீண்டும் பார்த்தான்.

"பெண்ணே! இவ்வளவு உதவி செய்த நீ இன்னும் ஓர் உதவி செய். உன்னை மீண்டும் மடியில் கட்டிக்கொள்ளுகிறேன். உன் அதிர்ஷ்டம் பூராவையும் என்மேல் திரும்பி உன் தகப்பனார் கையால் என்னை ஒருவழியாக ஒழித்துவிடு. இதைவிட நீ இப்பொழுது எனக்குச் செய்யக்கூடிய உபகாரம் வேறு எதுவும் இல்லை" என்று சொல்லிக்கொண்டே மோஹராச் சிமிழை கச்சையில் பத்திரப்படுத்திக் கொண்டான். பிறகு தலையைக் குனிந்துகொண்டே தர்மசாலையை நோக்கி நடந்தான்.

யுத்தரங்கத்தில் மகா சிக்கலான நிலைமைகளை ஒரு விநாடியில் சமாளித்திருக்கும் ரதன் சந்தாவத் தன் சுய நிலைமையைச் சரி செய்துகொள்ள முடியாமல் தவித்தான். உலகத்தில் எப்பேர்ப்பட்ட மேதாவியின் கதியும் இதுதான். வீட்டிலிருக்கும் தேவி ,முகம் கோணினால் காவியமெழுதும் கவியும் கற்பனை இழப்பான். ரதன் சந்தாவத்தும் மனிதன் தானே.

அவன் இந்த விதிக்கு எப்படி விலக்காக இருக்கமுடியும்? துக்கம் நெஞ்சையழுத்த மெள்ள நடந்து சென்றான். தடைப்பட்டுத் தடைப்பட்டுப் பீறி எழுந்த யோசனைகளால் தயங்கித் தயங்கி நடந்து தர்மசாலைப் படிக்கட்டுகளில் ஏறினான்.

அகிலா மேல் படியில் நின்றுகொண்டிருந்தாள். அதே படியில்தான் முதன்முதலாக ரதன் இங்கு வந்து விழுந்தபோது அவளைப் பார்த்தான். ஆனால் அன்று பார்த்ததற்கும் இன்று பார்ப்பதற்கும் எவ்வளவு வித்தியசம்! அன்று தேகத்தில் காயமடைந்த அவனைத் தாங்கி பிடிக்க ஓடி வந்தாள். இன்று மனத்தில் காயம்பட்டு நிற்கும் அவனைப் பார்த்துக்கொண்டு அசையாமல் படி உச்சியிலேயே நின்றாள். அன்று அவள் விழிகளில் கருணை கலந்த அமிருததாரை, இன்று கோபங்கலந்த அனல். இத்தனையிலும் அவள் தெய்வீக அழகு மட்டும் அப்படியே தானிருந்தது. ஈட்டிகளைத் தாங்கி அரண்மனையைக் காவல் புரியும் சிப்பாய்களை அணுகப் பயப்படும் குற்றவாளியைப்போல, ஈட்டியிலும் கூர்மையான அவள் விழிகள், காவல் புரிந்த படிக்கட்டின் உச்சியை மிகுந்த தயக்கத்துடனேயே ரதன் அடைந்தான். அவளுடன் இரண்டொரு வார்த்தை பேசித் தன் நிலைமையை விளக்கிச் சொல்ல ஆசைப்பட்டு அவளைப் பார்த்தான். ஓர் ஓரமாக ஒதுங்கி இடம் விட்டதிலிருந்து பேச்சு சாத்தியமில்லை என்பதைத் தெரிந்துக்கொண்டு சரசரவென்று உள்ளே சென்றான் .

அறைக்குள் நுழைந்து, உடுத்தியிருந்த அந்தப் பழைய உடைகளை வேகமாகக் களைந்து புது உடை அணிந்தான். தன் வாளையும் இடுப்பில் கச்சையுடன் சேர்த்து இருகக் கட்டிகொண்டு தர்மசாலையை விட்டு வெளியே கிளம்பினான். வாழ்க்கையே சூன்யமாகி விட்டது என்று நினைப்பவன் எதற்குத்தான் பயப்படப் போகிறான்? தான் ரதன் சந்தாவத் என்றறிந்து டைபர்கான் உத்தரவால் மொகலாய சைன்னியம் தன்னைக் கைது செய்தால் என்ன செய்வது என்ற யோசனையோ, அல்லது மஹாதேவ்

ஸிம்ஹனென்று நம்பிப் பிடித்துக்கொண்டால் என்ன சமாதானம் சொல்லலாம் என்ற சிந்தனையோ இல்லாமல் வெகுவேகமாகத் தர்மசாலைப் படிகளில் இறங்கி ரதன் ஓடினான். எங்கு போகிறோம் என்று தெரியாமலே வேகமாகப் போய்க்கொண்டிருந்தான். மால்தேவ் வீட்டில் இந்திரஸிங்கைச் சந்திக்கவேண்டுமென்ற யோசனை கூட அவனுக்கு அப்போது இல்லை. துக்கப்படுபவர்கள் மனச்சாந்திக்காகக் கால் போகும் இடமெல்லாம் நடந்து போவது இயற்கை. அந்த இயற்கையையொட்டியே ரதன் திக்கு திசையைப்பற்றிச் சிந்திக்காமல் நடந்தான். தெருக்களில் கண்மண் தெரியாமல் யார் யார் மேலோ இடத்துக் கொண்டு சென்றான். சில சமயங்களில், 'ரதன்! நேற்றே ஏன் அவளிடம் உண்மையைச் சொல்லவில்லை? சொல்லியிருந்தால் இவ்வளவு தொல்லைகள் நேர்ந்திருக்குமா? அந்தப் பெண் உன் தயவை நாடி, உன் அன்பை நாடி, காதல் மந்திரத்தில் கட்டுண்டு, நீ சொல்லும் எதையும் கேட்கத் தயாராயிருந்த சந்தர்ப்பத்தை நழுவவிட்டு, விஷயம் மிஞ்சிப் போனபின் உண்மையை உணர்த்த முற்பட்டாயே, உன்னை விட அடிமுட்டாள் எங்காவது உண்டா? நீ உண்மையில் ஸலூம்ப்ராவின் வம்சத்தில் உதித்தவன்தானா? ஒரு பெண்ணின் முன்னால் உண்மை கூறத் தயங்கிய நீ ஒரு வீரனா? உன் தைரியமெல்லாம் எங்கே போய்விட்டது? என்ன விளையுமோ என்ற பயத்தால் வாயை மூடி விபரீதத்தை விளைவித்துக் கொண்டாயே' என்று தன்னைத் தானே நிந்தித்துக் கொண்டே சென்றான்.

சில சமயம் அவன் யோசனை அகிலாவிடம் திரும்பியது. 'அகிலா! உன் செவிகளை நீ நம்பினாயேயொழிய உன் மனத்தை ஒரு வார்த்தை கேட்டுப் பார்த்தாயா? இந்திரஸிங்கும் அவன் மகளும் வந்து தூஷித்ததைக் கேட்ட உன் செவிகளுக்குத்தானே இடம் கொடுத்தாய்? காதல் கனிந்து நிற்கும் உன் உள்ளத்தை, 'அவன் அயோக்கியனா?' என்று ஒரு வார்த்தை கேட்டிருந்தால் அது உண்மையைச் சொல்லியிருக்குமே. மூர்க்கத்தனத்தினால் நம்

இருவர் வாழ்க்கையையும் துன்ப மயமாக்கப் பார்க்கிறாயே அகிலா! இது நியாயமா? நான் அப்படியே மஹாதேவ் ஸிம்ஹனாயிருந்தால் தானென்ன? க்ஷத்திரியர்கள் ஒரு தாரத்துக்குமேல் மணந்து கொள்வதில்லையா? அகிலா! எப்பேர்ப்பட்டவனை நீ இழக்கிறாய் என்பதை அறிய மாட்டாய். எந்த மொகலாயர்களை வேரறுக்க உன் மாமன் தயால்ஸா உறுதி கொண்டிருக்கிறாரோ அந்த வேலையைச் செய்யக்கூடிய ஒரு பெரிய வாளை வீசி எறிகிறாய். 'நீயும் ராஜபுத்திரன்தானே! ராஜபுத்திரர் பக்கம் போரிட உனக்குக் கடமையில்லையா? 'என்று கேட்கிறாயா? அகிலா. நீ இல்லாத இடம் ராஜ புதனமாயிருந்தாலும் சுவர்க்கமாயிருந்தாலும் எனக்குப் பாழ் நரகந்தான். நீ எனக்கு இல்லாவிட்டால் எனக்குக் கொள்கையேன்? கௌரவமேன்? பிள்ளையின் கௌரவத்தைப் பார்த்து சந்தோஷப்பட ஒரு தாயும், கணவன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ள ஒரு மனைவியும் இல்லாதவனுக்கு உலகத்தில் சந்தோஷம் எதற்கு? கௌரவந்தானெதற்கு?' என்று தனக்குள் ஏதேதோ பேசிக்கொண்டான்.

இவ்வளவு யோசனையுடன் எங்கு போகிறொமென்று தெரியாமல் நடந்த ரதன் சாரங்கபூரின் முக்கிய ஸ்தலங்களைச் சுற்றினான். துக்கம் பசியை விரட்டியது.மீதியிருந்த உணர்ச்சி களையும் விரட்டித்தானிருக்க வேண்டும். ராஜபுதனப் பாலை வனத்துக்குரிய வெப்பங்கூட உறைக்காமல் எங்கெங்கோ நடந்து காலத்தைக் கழித்து சூரியாஸ்தமன வேளையில் மொகலாய சைன்னியத் தளபதி தங்கியிருந்த கட்டிடத்துக்கருகில் வந்து சேர்ந்தான். கட்டிடத்தைச் சுற்றிலும் பாரா பலமாயிருந்தது. கட்டிடத்தின் மேல் மொகலாய சாம்ராஜ்யத்தின் கொடி பிறைச் சந்திரனைத் தாங்கிக் கம்பீரமாகப் பறந்து கொண்டிருந்தது. சில நாட்களுக்கு முன்பு அந்தக் கொடியின் கீழ் தனக்கிருந்த அந்தஸ்தையும் தான் இன்றிருக்கும் நிலைமையையும் எண்ணிப் பெருமூச்சு விட்டான். 'அது கிடக்கட்டும் ரதன் சந்தாவத்! உன் கடமையைச் செய். மஹாதேவ் ஸிம்ஹன் இறக்கும்போது உன்னிடம் ஒப்படைத்த மோஹராச் சிமிழையும் கடிதங்களையும் அவன் மனைவியிடம் சேர்ப்பித்துவிடு. மரணத்தறுவாயில் ஒரு

வீரனுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிலைநிறுத்து' என்று மனம் உறுத்தவே, எதிர்க் கட்டிடத்திலிருந்த காவலாளியிடம் சென்று, ''மால்தேவின் வீடு எது?'' என்று விசாரித்தான். மொகலாய சைன்னியத் தலைவன் இருந்த ஒரு வீட்டுக்கு இரண்டு வீடு தள்ளி இருந்த ஒரு பெரிய கட்டிடத்தைக் காவலாளி சுட்டிக்காட்டினான்.

மெள்ள இருளும் சூழ்ந்தது. தெருவில் விளக்குகள் எரிய ஆரம்பித்தன. ரதன் மால்தேவின் வீட்டை அடைந்து''மால்தேவின் வீடு இதுதானா?'' என்று விசாரித்தான். அந்தக் குரலைக் கேட்டு மால்தேவ் வெளியில் வந்தான். ''மாஹாதேவ் ஸிங்! வரவேண்டும்.'' என்று உதடுகளில் இகழ்ச்சிப் புன்முறுவலுடன் ரதனை வர வேற்றான்.

''நான் இந்திரஸிங்கைப் பார்க்க வந்தேன்.'' என்றான் ரதன். அவன் பதிலில் உணர்ச்சி ஏதுமில்லாததை மால்தேவ் கவனித் தான். இருந்தாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமலே, ''இல்லா விட்டால் என்னைப் பார்க்கவா இவ்வளவு சிரமமெடுத்துக் கொண்டு வருவீர்கள்? மாமனார் வந்திருக்கிறார், மனைவி வந்திருக் கிறாள், வந்தீர்கள். ஆனால் அகிலா...'' என்று மால்தேவ் தொடர்ந்தான்.

''மால்தேவ்!''என்ற ரதனின் பயங்கரக் கூச்சல் மால்தேவின் வாயைச் சட்டென்று அடைத்தது. ''உன்னிடம் சண்டையிட நான் வரவில்லை. வீணாக என் கோபத்துக்கு ஆளாகாதே. பக்கத்து வீடுகளில் மொகலாயப் படைகள் நிரம்பியிருக்கும் அசட்டுத் தைரியத்தால் எனக்குக் கோபமூட்டாதே. கேள்விக்குப் பதில் சொல். இந்திரஸிங் எங்கே? அவரை நான் உடனே பார்க்க வேண்டும்'' என்றான்.

மால்தேவ் சிறிது யோசித்தான் பிறகு ''மஹாதேவ்ஸிங்! இந்திரஸிங்கும் தங்கள் மனைவியும் தற்சமயம் இங்கில்லை''என்றான்.

''பின் எங்கே?''

''இரவுவரை வேறிடத்துக்கு அனுப்பியிருக்கிறேன். பக்கத்து வீடுகளில் மொகலாயப் படைகளிருப்பதுதான் உங்களுக்குத் தெரியுமே. இந்திரஸிங் தயால்ஸாவைச் சேர்ந்தவர் என்பதும் பிரசித்தம். அவர்களை நாலுபேர் கண்ணில் படும்படி என் வீட்டில் வைத்துக்கொண்டால் எனக்கும் கஷ்டம்; அவர்களுக்கும் கஷ்டம். ஆகையால் வேறிடத்துக்கு அனுப்பியிருக்கிறேன். ஆயிற்று; இருட்டிவிட்டது. நள்ளிரவுவரை காத்திருக்க முடியுமானால் அவர்கள் இருவரையும் நீங்கள் சந்திக்கலாம். இந்திரஸிங்கைச் சந்திக்க உங்களுக்குள் எவ்வளவு பிரியம் இருக்கிறதோ, அவ்வளவு பிரியம் உங்களைச் சந்திப்பதில் அவருக்கும் இருக்கிறது. ஆனால் உங்களுக்குள் பரஸ்பரம் இருக்கும் இந்த ஆவலைப் பூர்த்தி செய்து கொள்ள நள்ளிரவுவரை காத்துத் தானாக வேண்டும்'' என்றான் மால்தேவ். ''ஆயிற்று. இதோ இருட்டிவிட்டது. இங்கேயே காத்திருப்பதானால் எனக்கு ஆட்சேபணை இல்லை''என்றும் கூறினான். இருளும் மெள்ளக் கவிந்துகொண்டது.

துக்கம் நிரம்பிய ரதன்சந்தாவத்தின் மனம் மால்தேவிடம் சண்டைக்குப் போக மறுத்தது. அங்கு தங்கியிருக்கவும் அவனுக்கு இஷ்டம் இல்லை. திரும்பவும் நள்ளிரவில் வருவதாகக் கூறிவிட்டு ரதன், மால்தேவின் வீட்டைவிட்டு வெளியே வந்தான். சுமார் பத்தடி தூரந்தான் நடந்திருப்பான். வெளுத்து, வாடி, உலர்ந்த உருவமொன்று அவனைத் தாண்டிச் சென்றது. பக்கதிலிருந்த வீட்டு வெளிச்சம் அவன் முகத்தில் விழவே, வேகமாகப் போன ரதன் சந்தாவத் ஸ்தம்பித்து நின்றான். ''ஹா!'' என்ற ஆச்சரியக் கூக்குரலும் அவன் வாயிலிருந்து வெளிப்பட்டது. அந்த உருவம் வேறு யாருமல்ல, ரதன் இறந்து விட்டதாக நினைத்துக் கொண்டிருந்த அந்த மஹாதேவ் ஸிம்ஹனேதான்!

அத்தியாயம் 14

இரவில் வந்த துருப்புகள்

ரதனுக்கு தன் கண்களை நம்பவே முடியவில்லை. 'இறந்த மஹாதேவ் ஸிம்ஹனாவது எழுந்து என்னெதிரில் வருவதாவது! இது சித்தப் பிரமைதான்' என்று நினைத்தான். 'ஆனால் ஒருவேளை அந்த மடையன் மோஹன்தாஸ் தன் ஊகத்தில் தவறியிருந்தால்? மரணமூர்ச்சையாகப் படுத்திருந்தவனை மரணமே அடைந்துவிட்டானென்று நினைத்திருந்தால்? அதுவும் சாத்தியந்தானே?' என்று மடமடவென்று யோசனைகளை ஓட்டியவனாய், ''மஹாதேவ்ஸிங்! மஹாதேவ்ஸிங்!'' என்று இருமுறை குரலும் கொடுத்தான்.

ரதனின் ஆச்சரியக் கூக்குரலால் ஒரு கணம் நின்ற மகாதேவ்ஸிம்ஹனே ரதன் தன் பெயரைச் சொல்லிக் குரல் கொடுத்த மாத்திரத்தில் சரசரவென்று நடையைக் கூட்டி இரண்டு விநாடிகளில் பக்கத்திலிருந்த சந்துகளில் மறைந்து விட்டான். தன்னால் உயிர்ப் பிச்சை பெற்ற மஹாதேவ்ஸிம்ஹன் தன்னைக் கண்டும், தன் குரலைக் கேட்டும் ஏன் ஓடுகிறான் என்பது ரதன் சந்தாவத்துக்குப் புரியாத பெரும் விசித்திரமாயிருந்தது; எப்படியிருந்தாலும் அவனைப் பிடித்து உண்மையை விளக்கித் தன்னைச் சூழ்ந்திருக்கும் மர்மச் சிக்கலைத் துண்டித்துவிட வேண்டுமென்ற அவாவினால் ரதன் வெகு வேகமாக அவனைப் பின்தொடர்ந்தான் ஆனால் சாரங்கபூரின் எந்தச் சந்துகள் முன்பு ரதன் சந்தாவத்தைக் காப்பாற்றினவோ, அந்தச் சந்துகள் இன்று மஹாதேவ் ஸிம்ஹனுக்கு அபயமளித்தன. மஹாதேவ் ஸிம்ஹனைப் பிடிக்க ரதன் செய்த முயற்சிகள் அனைத்தும் பயனற்றுப் போயின.

உண்மையில் மஹாதேவ் ஸிம்ஹன் அதிக தூரம் ஓடவில்லை. பிழைத்ததே புனர்ஜன்மமான அவன் உடலில் ஓடுவதற்கு வேண்டிய வலு ஏதும் இல்லை. பக்கத்தில் இருந்த

சந்தில் திரும்பிச் சுவர் ஓரமாகச் சாய்ந்து இருளில் மறைந்து நின்றுகொண்டான். அந்தப் பக்கம் பலமுறை ஓடியும் திரும்பத் திரும்பத் தேடியும் ரதன் சந்தாவத்தின் கண்ணுக்கு இருளில் நின்ற மகாதேவ்ஸிம்ஹன் உருவம் புலப்படவில்லை. மறைந்து நின்ற மஹாதேவ் ஸிம்ஹனோ ரதன் சந்தாவத்தை நன்றாகப் பார்த்தான். ரதன் சந்தாவத்தின் முகம் தெருவிலடித்த விளக்கு வெளிச்சத்தில் தெள்ளெனப் பலமுறை மஹாதேவ் ஸிம்ஹனுக்குத் தெரிந்தது. எங்கோ பார்த்த முகமாகத் தெரிந்ததேயொழிய, எங்கு பார்த்தோம், எச்சந்தர்ப்பத்தில் பார்த்தோம் என்பதை ஊகிக்க மஹாதேவ் ஸிம்ஹனால் முடியவில்லை. முகத்தைச் சுளித்து இரண்டொரு தடவை ஞாபகப்படுத்திக்கொள்ள முயன்றும் பயனில்லை. நல்ல இருட்டில் ஒரே ஒருநாள் சில விநாடிகள் பார்த்த முகம்; அதிலும் மயங்கி மயங்கி விழுந்து பிராணன் போகும் சமயத்தில் பார்த்த முகம்; புத்தி இருண்டு கண் பஞ்சடைந்த சமயத்தில் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு அவசியத்தினால் பார்த்த முகம்; அந்த முகத்தை மஹாதேவ் ஸிம்ஹன் நினைவுபடுத்திக் கொள்ள முடியாததில் என்ன ஆச்சரியம்?

அவன் ரதனைப் பார்த்து ஒளிந்து கொண்டதிலும் ஆச்சர்யம் ஏதும் இல்லை. தன்னைப் பிடிக்க மொகலாயர் பிரம்மப் பிரயத்தனம் செய்கிறார்களென்பதை மஹாதேவ்ஸிம்ஹன் அறிந்திருந்தான். மஹாதேவ்ஸிம்ஹனைப் பிடித்துக் கொடுப்ப வர்களுக்கு வெகுமதி ஏராளமாகக் கொடுக்கப்படும் என்பதையும் உணர்ந்திருந்தான். ஆகையால் யார் கண்ணிலும் படாமல் மறைந்திருக்க வேண்டிய அவன், தன் பெயரைச் சொல்லி ரதன் கூவியதும் தன்னை யாரோ பிடிக்கத்தான் முனைகிறார்கள் என்ற நினைப்பில் அப்படி ஓடி ஒதுங்கிப் பதுங்கி நின்றான்.

அவனைத் தேடித் தேடி அவன் ஒளிந்திருந்த சந்திலும் அக்கம் பக்கதுப் தெருக்களிலும் பலமுறை அலைந்து திரும்பிய ரதன் சந்தாவத் தன் வாழ்க்கையைப்பற்றி மிகக் கேவலமான அபிப்பிராயங் கொண்டான். விதி தன்னை எப்படியெல்லாம் சதி செய்கிறது என்பதை நினைக்க, அவன் உள்ளத்தில் அளவற்ற

விசனமும் ஏமாற்றமும் கலந்த உணர்ச்சிகள் கவிந்துகொண்டன. தன்னைச் சூழ்ந்திருக்கும் சிக்கலை அறுத்து அகிலாவுக்குத் தன்மேலுள்ள வெறுப்பை நீக்கக்கூடிய ஒரு முக்கிய ருசு தன் கையிலிருந்து நழுவி விட்டதை நினைத்துப் பெருமூச்சு விட்டான். கலியுகத்தில் புண்ணியமெல்லாம் எப்படிப் பாவமாக மாறி நல்லவர்கள் துன்பமடைகிறார்கள் என்ற கற்பனையில் அவன் மனம் ஓடியது. "மஹாதேவ் ஸிம்ஹனை அன்று சாகும்படி விட்டிருந்தால், என் சட்டையைக் கிழித்து அவன் ரத்தத்தை நிறுத்தியிராவிட்டால் இந்த மாதிரி துர்பாக்கிய தசையில் நான் இருப்பேனா? ஒருவனுக்கு உயிர்ப்பிச்சை அளிக்கப் போன புண்ணியம் என் வாழ்க்கையையே நாசமாக அடித்து விட்டதே! உலகத்தில் எது பாவம், எது புண்ணியம்? புண்ணியத்தின் பலன் இதுதான் என்றால் மனிதர்கள் அதை ஏன் செய்ய வேண்டும்?' என்று புண்ணியத்துக்கு ஒரு சாட்டை கொடுத்தான். அடுத்த விநாடி அவன் பிறவிக் குணம், ஸலூம்ப்ரா வம்சத்தின் சிறந்த அம்சங்கள் மனத்தில் எழுந்தன. 'ரதன்! என்ன உளறுகிறாய்! என்ன புண்ணியத்தை நீ வாழ்க்கையில் செய்துவிட்டாய்? நீ செய்த தெல்லாம் பாவத்தைத் தவிர வேறெதுவும் இல்லையே. ராஜ புத்திரர்களை வேரறுக்க மொகலாயர் கையாளாக வாழ்க்கை நடத்தினாய்! குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக் காம்பாக முளைத்தாய். ரதன் மகா கர்வி, ஸ்திரீ லோலன் என்று பெயர் எடுத்தாய். இதெல்லாம் புண்ணியமா? இந்தப் பாவங்கள் கிடக்கட்டும், பதிவிருதா உணர்ச்சிகளும், வீராவேசமும் என்றும் மடியாத இந்த ஜீவபூமியில் கற்புக்கரசிகளே கிடையாதெனப் பந்தயங்கட்டினாய். விலையற்ற மாணிக்கமாகிய அகிலா தேவியைப் பொய்ப் பெயர் சொல்லிச் சூதினால் வெல்ல முற்பட்டாய்.இதெல்லாம் புண்ணியமா? குலமகள் வயிற்றெரிச்சல் உன்னைத் தகிக்கிறது. ராஜபுதனத்தின் க்ஷேமத்தைத் தவிர வேறெதையும் கருதாத அகிலாவின் மனத்துயர், உன்னை இப்பொழுது நடுத்தெருவில் நிறுத்தியிருக்கிறது. சுத்த வீரனான நீ, நிர்மலமான உள்ளம் படைத்த அகிலாவிடம் ஏன் பொய்

சொன்னாய்? பொய் சொல்லி எந்த வஸ்துவைச் சம்பாதிக்க முடியும்?சம்பாதித்தால்தான் அது நிலைத்து நிற்குமா? அதுவும் அகிலாவின் ஈடுஇணையற்ற காதலை அவ்வளவு சுலபமாகத் தட்டிக் கொண்டு போய்விட நீ நினைத்தால் தெய்வத்துக்குத்தான் அது பொறுக்குமா?" என்று அவன் மனம் சுரீல் சுரீலென உணர்ச்சிகளை நெருப்புத் தணல்கள்போல் அவன் ரத்தத்தில் சுழலவிட்டன.

இந்த எண்ணங்களால் தன்னைச் சபித்துக்கொண்டே ராஜபாட்டையை நோக்கித் திரும்பினான். விசாலமான தெருவில் இவனுக்குச் சிறிது புத்தி தெளிவும் ஏற்பட்டது. மேற்கொண்டு நடக்க வேண்டியதைப்பற்றி யோசித்தான். 'நள்ளிரவில்தானே இந்திரஸிங்கைச் சந்திக்க வேண்டும், அதுவரையில் என்ன செய்வது?" என்று யோசித்தான்.

அகிலாவின் அன்பைத் திரும்பப் பெறலாம் என்ற நம்பிக்கை அவனுக்குப் போய்விட்டது. இந்திரஸிங்கைச் சந்தித்தால், நான் மஹாதேவ் ஸிம்ஹன் அல்லவென்பதை மட்டுமே நிரூபிக்கலாம்.'அப்படியானால் நீ யார்' என்று அகிலா கேட்டால் என்ன சொல்வது?' ரதன் சந்தாவத் என்றுதான் சொல்ல வேண்டும். அந்தப் பெயரைக் கேட்டால் அவள் வெறுப்பு அதிகமாகுமே தவிரக் குறையக் காரணமில்லையே' என்று ரதன் சிந்தித்தான். தன்னைத் துச்சமாக நினைத்துத் தூக்கி வரப் பந்தயம் போட்ட அதமனை அகிலா கண்ணெடுத்துக்கூடப் பார்க்க மாட்டாள் என்பதை ரதன் உணர்ந்து கொண்டான். ஆகவே ரதனாயிருந்தாலும் மஹாதேவ் ஸிம்ஹனாயிருந்தாலும் அகிலா சம்பந்தப்பட்ட வரையில் தன் அதிருஷ்டம் ஒரே வகைதான் என்பது அவனுக்குச் சந்தேகமறப் புரிந்தது. அகிலா இருக்குமிடம் விட்டு வெளியேறுவதே கௌரவம் என்று நினைத்தான்.

ஆசை வெட்கமறியாதல்லவா? மீண்டும் ஒரு முறை அகிலாவைப் பார்த்துவிட்டுப் போகவேண்டும் என்ற ஆசை மட்டும் அவனை வாட்டியது. நிமிர்ந்து ஆகாயத்தைப் பார்த்தான்.

இரவின் முன் ஜாமம் ஆரம்பித்துச் சில நாழிகைகளே ஆகி யிருப்பதைக் கவனித்தான். பெரிய தர்மசாலைக்குப் போய் ஒரு முறை அகிலாவைப பார்த்துவிட்டுத் திரும்பலாம் என்று கால்களை ஒட்டினான். சாரங்பூர் மிக நெருக்கமான சந்துகள் கொண்ட நகரம். அதில் ரதனுக்கு வழியும் தெரியாது. திரும்பி ஒருமுறை மால்தேவ் வீட்டைப் பார்த்து அந்த ஸ்தலத்தை மனத்தில் பதிய வைத்துக் கொண்டான். பெரிய தர்மசாலைக்கு வழியை விசாரித்துக் கொண்டே நடந்து மெள்ள அங்கு வந்து சேர்ந்து உள்ளே நுழைந்தான்.

தர்மசாலையின் கீழ்க்கூடத்தில் ஆள் நடமாட்டம் இருந்தாலும் மாடியில் பர்தாவுக்குப் பின்னால் நிசப்தம் நிலவியது. படிகளில் மெள்ள ஏறிக் கதவை லேசாகத் தட்டினான் ரதன் சந்தாவத். யார் என்று குரல் கொடுத்துப் பதில் கிடைத்தபின் பெரியவர் மெள்ளக் கதவைத் திறந்தார். ''யார் மஹாதேவ் ஸிம்ஹனா?''என்று கேட்டு உள்ளே செல்ல வழி விட்டு ஒதுங்கி நின்றார். பெரியவர் அவனிடம் எதுவும் பேசவில்லை. பேசிய இரண்டொரு சொற்களிலிருந்து தன் வரவு அவருக்கு பிடிக்க வில்லை என்பதைத் தெரிந்து கொண்டான்.

பெரியவருடைய மனத்தின் குமுறலையும் அதன் காரணத்தையும் நன்கு உணர்ந்துகொண்ட ரதன் எதுவும் பேசாமல் தன் அறைக்குச் சென்றான். அறைக்குள் நுழைந்ததும் அறையைச் சுற்றுமுற்றும் ஒருமுறை உற்று நோக்கினான். அது அவன் பார்க்காத அறையல்ல. இருந்தாலும் அபூர்வமான சொத்தைப் பிரிகிறவனுக்கு அதைக் கடைசி முறையாகப் பார்ப்பதில் ஒரு மனச்சாந்தி ஏற்படுகிறது. அந்த மனச்சாந்திக்காவோ என்னவோ வெகு நேரம் அந்த அறையைச் சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டு நின்றான்.

சற்று தூரத்தில் கிடந்தது அவன் மஞ்சம். அகிலா சில நாட்களுக்கு முன்பு உட்கார்ந்து சிசுருஷை செய்த மஞ்சத்தின் ஓரத்திலும், அவள் நின்று பாலாற்றிய ஜன்னலின் பக்கத்திலும் அவன் பார்வை மாறிமாறிப் பாய்ந்தது. அந்த அறையின் ஒவ்வொரு இடத்திலும் அவன் அகிலாவைப் பார்த்தான். அந்த அறையில் அகிலா இல்லாத இடம் ஏதும் இருப்பதாக அவனுக்குத் தோன்றவில்லை.

வெகு நேரம் தலையை இரு கைகளாலும் பிடித்துக் கொண்டு மஞ்சத்தின்மேல் குனிந்து உட்கார்ந்துகொண்டான். இதே அறையில் எவ்வளவு இன்பத்தை அடைந்தானோ அதிலும் அதிகமான துன்பத்தை ரதன் அந்தச் சமயத்தில் அடைந்தான். இரவு, ஆமையைவிட நிதானமாக நகர்வது போல் அவனுக்குத் தோன்றியது. மகிழ்ச்சிதான் காலத்தை ஓட்டும் தன்மை வாய்ந்தது. துன்பத்தின் வினாடிகளுக்கு ஆயுசு மிக அதிகம். ஒவ்வொரு வினாடியும் ஒரு யுகம் போல் நகர்ந்து கொண்டிருந்தது. ரதன் உட்கார்ந்திருந்த அறைக்கு எதிரே கூடத்திற்கு அப்பாலிருந்த பெரியவரின் அறைக்கதவு சாத்தப்படும் சத்தமும் தர்மசாலை வெளிக்கதவுகளின் பெரிய இரும்புத் தாழ்ப்பாள்கள் 'கிளாங்' கிரீச்' என்று இழுத்துப் போடப்படும் சத்தமும், ''என்னடா! பெரிய கதவைப் பூட்டினாயா? உஷாராய்ப் பூட்டை இழுத்துப்பார்'' என்ற தர்மசாலை அதிகாரியின் ஆணையும், அதைத்தொடர்ந்த பதிலும் காதில் விழவே ஊர் அடங்கும் நாழியாகிவிட்டது என்று ரதன் தெரிந்துகொண்டான். ஆகவே தான் புறப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்யலானான். முன்பு அங்கு வந்து விழுந்த போது அணிந்திருந்த மஹாதேவ் ஸிம்ஹன் உடைகளையும், அவன் கொடுத்த கடிதங்களையும் மோஹராச் சிமிழையும், ஒரு சிறு மூட்டையாகக் கட்டி மஞ்சத்தில் எறிந்தான். அகிலாவைக் கடைசி முறையாகப் பாத்துவிட்டு வெளியேறி விடுவதெனத் தீர்மானித்து அடிமேலடி எடுத்து வைத்துக் கூடத்தைக் கடந்து, பெரியவரின் அறைக்குப் பக்கத்திலிருந்த அகிலாவின் அறைக் கதவை மெள்ளக் கையால் அமுத்தினான். கதவு தாளிடப்பட வில்லை. திறந்துதானிருந்தது. தகப்பனாரும் தானுமே தனித்தி ருக்கும் இடத்தில் தாளிட அவசியமென்னவென்று அகிலா அறைக் கதவைத் தாளிடவில்லை.

கதவு நன்றாகத் திறந்தது. மஞ்சத்தில் தேவேந்திர சிற்பி செதுக்கிய சிலையென அகிலா ஒருக்களித்துப் படுத்திருந்தாள். மொகலாயர் காலத்தில் பிரசித்தி பெற்றிருந்த லஸ்தர் விளக்கு ஒன்றின் மங்கலான வெளிச்சம் அந்த அறையின் மூலையிலிருந்து அவள்மேல் லேசாக விழுந்து கொண்டிருந்தது. உத்தம ஜாதி ஸ்திரீகளுக்குத் தூக்கத்திலும் நாணம் மறைவதில்லை போலும்! அவள் உடுத்தியிருந்த சேலை சிறிதுகூட விலகாமல் அவள் உடல் பூராவையும் நன்றாக மறைத்தே நின்றது. அவள் சுந்தர முகத்தில் இருந்த தெய்வீக அழகில் ஈடுபட்டு அவன் சிறிது நேரம் நின்றான். தூக்கத்திலும் துக்க உணர்ச்சிகளை அவள் முகம் பிரதிபலித்தது. புருவங்கள் நாணேற்றும் வில்லைப்போல நன்றாக ஒருமுறை வளைந்து நெருங்கின. அவற்றைத் தொடர்ந்து திலகப் பிரதேசம் சிறிது சுளித்தது. துக்கம் நிறைந்த முகத்தில் அடுத்தபடியாக மகிழ்ச்சிக்குறி படர்ந்தது. இதழ்கள் மந்தகாசத்தால் விகசித்தன. தேகம் பூராவும் சந்தோஷத்தின் ஆனந்தச் சாயல்! கன்னங்களில் வெட்கமலர்த்த இரு ரோஜா மலர்கள்!

அகிலாவின் மனத்திலும் தன் மனத்தைப் போலவே துக்கமும் சந்தோஷமும் மாறிமாறிப் பாய்வதனாலும் பழைய நினைவுகள் எழுந்து தாண்டவமாடுவதனாலுமே இந்த முக மாறுதல்கள் ஏற்படுகின்றன என்பதை ரதன் புரிந்து கொண்டு அசைவற்று நின்றான். அபூர்வ சொத்து கிட்டிய திருடனுக்கு அதை அணுகமுடியாத நிலை ஏற்பட்டால் என்ன ஏமாற்றமும் துடிப்பும் ஏற்படுமோ அத்தகைய துடிப்பையும் ஏமாற்றத்தையும் ரதன் அந்தச் சமயத்தில் அடைந்தான். ராஜபுதனத்தின் அபூர்வ சொத்து இரண்டடி தூரத்தில்தான் படுத்துக் கிடந்தது. ஆனால் அதைத் தொடவும் அவனுக்கு அருகதை இல்லையே!

'ரதன்! துரதிருஷ்டம் பிடித்தவனே! உனக்கு எட்டாத வஸ்துவிடத்தில் இன்னும் ஆசையேன்? அவளருகில் செல்லாதே' என்று தனக்குத்தானே ரதன் உத்தரவிட்டுக் கொண்டான். ஆனால் முழு மனத்துடன் சொல்லப்படாத அந்த வாக்கியம் அவன் காலைத் தடை செய்யவில்லை. உடலைச் சுமந்து கால்கள் உள்ளே பிரவேசிக்கத்தான் செய்தன. அவள் மஞ்சத்துக்கருகில் மண்டி யிட்டு உட்கார்ந்தான் ரதன். 'மொகலாயர் கையில் விழுந்தால் இவள் கதி என்ன?' என்று நினைத்தான். அந்தப் பரிதாபத் தினாலும், ஏற்கனவே உள்ள பரிச்சயத்தினாலும், பரிவினாலும் உந்தப் பட்டவனாய்த் தன் நிலையையும் மறந்து அவள் தலையை மெள்ளத் தன் கையால் கோதிவிட்டான்; அவன் உடம்பு நடுங்கியது. அகிலாவின் கண்கள் சரேலென விழித்தன. கோபம் வீசிய அந்தக் கண்களுடன் உதடுகள் மலர்ந்து, "யார்! நீங்களா!" என்ற சொற்களை உதிர்த்தன.

"ஆம் அகிலா! நான் தர்மசாலையை விட்டுப்போகிறேன். போகுமுன் உன்னை ஒருமுறை பார்த்துவிட்டுப் போக வேண்டும் என்ற ஆசையால் வந்தேன்" என்று அவள் காதுக்கு மட்டும் கேட்கும்படியாக மெதுவாகப் பேசினான் ரதன்.

அகிலா படுக்கையை விட்டு அவசரம் அவசரமாக எழுந்து வாசற்படியை நோக்கிச் செல்லத் தொடங்கினாள். ரதன் வாசற் படியை மறைத்து நின்றுகொண்டு, "அகிலா! எதற்கு ஓடுகிறாய்? என்னிடம் உனக்குப் பயமென்ன? இதோ நான் உன் வாழ்க்கை யிலிருந்தே அடியோடு பிரிந்து போகிறேன். போகுமுன் ஒரு வார்த்தை கேள். நீ நினைக்கும் பேர்வழி நானல்ல என்பதை வெகுசீக்கிரம் தெரிந்து கொள்வாய்.." என்று சொல்லிக்கொண்டு போன வாயை, அகிலா தன் பார்வையினாலேயே அடக்கிவிட்டாள்.

"இந்தக் கதையைச் சொல்ல வேண்டியவர்களிடத்தில் சொல்லுங்கள்..." என்று அவள் சொல்லிக்கொண்டேயிருக்கையில் அவள் பேச்சும் சட்டென நின்றது. இருவரும் உற்றுக் கேட்டார்கள். தர்மசாலைக்கு வெளியே குதிரைகள் ஓடிவரும் சத்தம் இருவர் காதிலும் பட்டது. மேற்கொண்டு பேச சந்தர்ப்பப்படாமல் இருவரும் கூடத்துக்கு ஓடிவந்து ஒருவரை யொருவர் மௌனமாகப் பார்த்துக்கொண்டார்கள். கீழே ஏக அமர்க்களம், கூச்சல். தர்ம சாலைக் கதவுகள் மிகுந்த வேகத்தில் திறந்தன. மாடிக்கதவு

தடதடவென இடிபட்டது. ''யார் அது, கதவைத் திறவுங்கள்'' என்று அதிகார தோரணையில் ஒரு குரலும் கேட்டது. இந்தக் கூச்சலில் பெரியவரும் விழித்தெழுந்து வந்து அவசர அவசரமாக கதவைத் திறந்தார். உள்ளே இரண்டு மொகலாயச் சிப்பாய்களுடன் நுழைந்த ராஜபுத்திர வீரன், ''இங்கு மஹாதேவ் ஸிம்ஹன் என்பவர் யார்?'' என்று கேட்டான்.

''இந்தப் பெயருடையவன் நான்தான். என்ன வேண்டும்?'' என்று நிதானமாகப் பெரியவரை ஒருபுறம் ஒதுக்கி விட்டு ரதன் சந்தாவத் அவன் முன்னிலையில் நின்றான்.

''அப்படியானால் சக்கரவர்த்தி ஔரங்கசீப்பின் ஆணைப்படி உன்னைக் கைது செய்கிறேன். மஹாதேவ்ஸிங்! எதிர்ப்பினால் பயன் இல்லை! கீழே என்னுடன் இருபது மொகலாய வீரர்கள் வந்திருக்கிறார்கள்'' என்று சொல்லிக் கொண்டே நுழைந்தான் அந்த ராஜபுத்திரன்.

''எதிர்க்கும் நோக்கமும் எனக்கில்லை. இதோ என் வாள், எடுத்துக்கொள்'' ரதன் வார்த்தையைக் கேட்ட அந்த ராஜபுத்திரன் முகத்தில் பெரிய சந்தேகம் தட்டியதாகத் தோன்றியது. ரதனுக்காக மீண்டும் திரும்பிக் கையில் இருந்த விளக்கைத் தூக்கி அவன் முகத்தை உற்றுக் கவனித்தான் அவ்வளவுதான், ஏதோ பேயறைந்தவன் போல் இரண்டடி பின்னால் நகர்ந்து, ''நீ.. நீங்கள் ...'' என்று இழுக்க ஆரம்பித்தான். அவன் முகத்தில் சொல்லத் தரமற்ற ஆச்சர்ய ரேகை படர்ந்திருந்தது.

''நான் மகாதேவ் ஸிம்ஹன்தான். நான் சொல்லும் போது உனக்கென்ன சந்தேகம்? உன் கடமையைச் செய்'' என்று இரைந்து கர்ஜித்தான் ரதன் சந்தாவத்.

ரதன் சந்தாவத் கண்களிலிருந்து எதையோ தெரிந்து கொண்டவன்போல், ''உங்கள் இஷ்டம் அப்படியானால் நான் என்ன செய்யப் போகிறேன்?'' என்று பின்னால் பயத்துடன் நகர்ந்தான் அந்த வீரன்.

''நான் மகாதேவ் ஸிம்ஹன் என்பதற்கு ருசுக் கடிதங்கள் அதோ அந்த அறையின் மஞ்சத்தின்மேல் இருக்கின்றன. எடுத்துக்கொள்'' என்று ரதன் சந்தாவத் ஆணையிட்டுக் கண்களைத் தன் அறைப்பக்கம் திருப்பிக் குறிப்புக் காட்டினான்.

பிறகு ரதன் உத்தரவுப்படிதான் சகல காரியங்களும் நடந்தன. ரதனைக் கைது செய்ய வந்த ராஜபுத்திரன் விளக்கைத் தூக்கி ரதனைப் பார்த்தபோது, ரதனும் அவனை நன்றாகப் பார்த்துவிட்டான். ஹாராவளி மலைப்பிரதேசத்தில் தனக்குப் பதிலாக சைன்னியத்தை நடத்தும்படி, தான் உத்தரவிட்டு வந்த ஜெய்ஸிங் இங்கு எப்படி வந்து சேர்ந்தான் என்பது ரதனுக்கும் பெரிய புதிராகத்தான் இருந்தது.

அத்தியாயம் 15

பொம்மலாட்டம்

ஆச்சரியத்தினால் ஏற்பட்ட அதிர்ச்சியால் ஜெய்சிங் மிகவும் நிலை கலங்கியிருந்தான். ரதன் சந்தாவத்தின் விபரீதப் போக்குக்கு எந்த அர்த்தமும் கற்பிக்க முடியாமல் அவன் புத்தி திணறிக்கொண்டிருந்தது. 'ரதன் இங்கு எப்படி வந்து சேர்ந்தான்? எதற்காக மஹாதேவ் ஸிம்ஹன் பெயரில் தன்னைப் பலியிட்டுக் கொள்ளப் பார்க்கிறான்?' என்ற கேள்விகள் மீண்டும் மீண்டும், அவன் மனத்தில் எழுந்து ஊசலாடிய போதிலும் ரதன் உத்தரவை மீறத் தைரியமற்றவனாய் அறைக்குள்ளேயிருந்த துணி மூட்டையை எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

ரதன் உள்ளத்திலும் ஆயிரம் உணர்ச்சிகள் கொந்தளித்துக் கிளம்பிக் கொண்டுதானிருந்தன. ஆனால் ரதன் சந்தாவத் அவையனைத்தையும் அடக்கி மனத்தை இரும்பாக்கிக் கொண்டு மௌனமாக நின்றான். அன்புமலரில் இந்த முட்கள் பல எதற்காகத் தான் முளைக்கின்றனவோ? எல்லையற்ற அன்பு கிளைக்கும்போது

தொட்டதற்கெல்லாம் சந்தேக முட்களும் கிளம்பி மனத்தைக் குத்திப் புண்ணாக அடிப்பதில் விதிக்கு அதிகச் சந்தோஷ மிருப்பதாகத் தோன்றுகிறது. அந்தச் சந்தோஷத்துக்குப் பலியான இரு காதலர்களும் பேச்சு ஏதுமில்லாமல் நின்று கொண்டிருந்ததில் ஆச்சரியமென்ன இருக்கிறது? ஜெய்சிங்கின் ஒரு வார்த்தை அப்பொழுதிருந்த நிலைமையை எவ்வளவு சீர் படுத்தி யிருக்கும்! ஆனால் அந்த ஒரு வார்த்தைக்கு ரதன் சந்தாவத்தின் கட்டளை வேண்டும். அகிலாவின் ஒரு சொல் அல்லது பார்வையால் அந்த கட்டளை பிறந்தே இருக்கும். ஆனால் அகிலாவைப் பிடித்திருந்த சந்தேகப் பேய் அன்பின் உன்னத உணர்ச்சிகளுக்குச் சிறிதும் இடம் அளிக்க மறுத்தது.

அகிலாவின் முகத்தில் எந்தவிதமான மாறுதலும் இல்லை. சலவைக்கல்லால் செதுக்கப்பட்ட சிலையைப்போல அசைவற்று நின்று கொண்டிருந்தாள். அவள் முகம் துக்கக் குறியையோ சந்தோஷச் சாயலையோ காட்டாமல், ஏதோ உணர்ச்சியற்ற தந்தப் பிம்பம்போல் இருந்தது. ரதனைப் பார்த்து ஜெய்சிங் முதன் முதலாக அதிர்ச்சியடைந்த சமயத்தில் மட்டும் அவள் கண்கள் சிறிது ஆச்சர்யத்தால் மலர்ந்தன. அடுத்த வினாடி அந்த ஆச்சரியமும் மின்னல் போல் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டது. வாழ்க்கையில் அதிகம் கசப்புத் தட்டிவிடும் சமயங்களில் சுகதுக்க உணர்ச்சிகள் எதையுமே மனம் வாங்குவதில்லை. அப்படி மனம் மரத்து நிற்கும் சமயங்களில் கண்கள் உணர்ச்சி ஏதுமின்றி வெறித்துப் பார்க்கும். அப்பேர்ப்பட்ட ஒரு வெறித்த பார்வையே அகிலாவின் கண்களிலும் அந்தச் சந்தர்ப்பத்தில் தென்பட்டது.

ரதன் கண்கள் அவள் கண்களை ஒரு நிமிஷ நேரம் சந்தித்தன. தனக்கு நம்பிக்கை அளிக்கக்கூடிய எந்த அம்சமும் அவற்றில் பிரதிபலிக்காததால் ஜெய்சிங்கை நோக்கி, ''கிளம்பலாமே'' என்று சொல்லிக்கொண்டு வாயிற்படியைத் தாண்டி நடந்தான். ஜெய்சிங், கையிலிருந்த மூட்டையைச் சிப்பாய் ஒருவன் கையில் கொடுத்துவிட்டு ரதனைப் பின்தொடர்ந்தான்.

பெரியவர் மாடிப்படிக் கதவைத் தாளிட்டுக் கொண்டு உள்ளே சென்றார். அகிலா கூடத்தின் நடுவில் நின்ற இடத்திலேயே சிறிது நேரம் தலை குனிந்து நின்று கொண்டிருந்தாள். தரையில் இரண்டு பொட்டுக் கண்ணீர் விழுந்தது. நின்றிருந்த இடத்திலிருந்து மெள்ளத் திரும்பி அறைக்கு வந்து ஜன்னல் கதவுகளைத் திறந்து வெளியே பார்த்தாள். தர்மசாலை வெளி முற்றத்திலிருந்து இருபது மொகலாய வீரர்களின் காவலில் ரதன் வெளியே சென்று கொண்டிருந்தான். அவள் கண்களில் கண்ணீர் துளித்துப் பார்வையைப் பஞ்சடையச் செய்தது. ஏதோ நிழல்கள்போல் சில குதிரை வீரர்கள் செல்வது அவளுக்குத் தோன்றியதே தவிர ஸ்பஷ்டமாக எதுவும் தெரியவில்லை. வேகமாகச் செல்லும் குதிரை களின் குளம்புச் சத்தம் மட்டும் அவள் செவிகளில் விழுந்தது.

தர்மசாலைக் கதவு பின்னால் மூடியதுதான் தாமதம்; ஜெய்சிங் ரதனைப் பார்த்து ஏதோ பேச வாயெடுத்தான். ''இப்பொழுது ஒன்றும் பேச வேண்டாம் ஜெய்சிங். தனிமையில் பேசிக் கொள்வோம். தற்சமயம் நான் மஹாதேவ் ஸிம்ஹன் என்பது மட்டும் உனக்கு ஞாபகம் இருக்கட்டும்'' என்று ரதன் ஜெய்சிங்கின் காதோடு காதாகச் சொன்னான்.

ஜெய்சிங் மற்ற வீரர்களைக் கூப்பிட்டு, "எங்களுக்குப் பின்னால் காவல் தேவையில்லை. எல்லாக் குதிரைகளும் பத்தடி தூரம் முன்னால் போய்க் கொண்டிருக்கட்டும் " என்று உத்தரவிடவே சில வினாடிகளில் ஜெய்சிங்கும் ரதனும் மட்டும் தனித்திருக்கும்படியான நிலைமை ஏற்பட்டது. ஜெய்சிங் தன் குதிரையை ரதன் குதிரைக்கு வெகு சமீபத்தில் செலுத்தி ரகசியமாகப் பேசாலானான்;

''இதென்ன நாடகம் ரதன்?''

''உலகமே ஒரு பொம்மலாட்டம், ஜெய்சிங்; அதில் நாம் பொம்மைகள், கடவுள் சூத்ரதாரி. விதிதான் நம்மை அசைக்கும் கறுப்புக் கயிறு'' என்று பதில் சொன்னான் ரதன். ஜெய்சிங் அர்த்தம் ஏதும் புரியாமல் ரதனைப் பார்த்தான். ''என்ன பார்க்கிறாய்

ஜெய்ஸிங்! பொம்மலாட்டத்தில் பொம்மைகளை இயக்கக் கறுப்புக் கயிறுகள் தேவை. ஏனென்றால் அந்தக் கயிறு கண்ணுக்குப் புலப்படாது. விதி நமது புறக் கண்ணுக்கும் புலப்படு வதில்லை, அகக்கண்ணுக்கும் புலப்படுவதில்லை ஆகையால் அது எந்தெந்தச் சமயத்தில் எப்படி எப்படி நம்மை ஆட்டும், எந்தச் சிக்கலில் மாட்டி வைக்கும் என்பதை நாம் அறிய முடியாது.''

''சிக்கல் என்று தெரிந்தபின் அறுத்துவிட முடியுமல்லவா?''

''சாதாரணச் சிக்கலாயிருந்தால்தான் அதை அறுக்கலாம். விதியின் சிக்கலை அறுக்க முடியாது. உனக்கு அறுக்கச் சக்தி யிருந்தாலும் அறுக்க முடியாத ஒரு நிலைமையை அது சிருஷ்டித்து விடும். விதி விசித்திரமானது ஜெய்ஸிங்!''

''அப்பொழுது மஹாதேவ் ஸிம்ஹன் நீயல்ல என்று நிரூபித்து விடலாம். ஆனால் உனக்கு அது இஷ்டம் இல்லை. அவ்வளவுதானே விஷயம்?'

''அதேதான் விஷயம். தற்சமயம் நான் மஹாதேவ் ஸிம்ஹன் ஸ்தானத்திலிருந்து விலகத் தயாராயில்லை. விலகினால் நான் யாரென்று கேள்வி பிறக்கும். நான் யாரென்று தெரிந்தால் அந்தப் பெண் என்னை மதிக்க மாட்டாள்.''

''உன்கூடப் பொம்மை மாதிரி அசையாமல் நின்று கொண்டிருந்தாளே, அந்தப் பெண்ணா? அவள் யார் ரதன்?''

''அவள் யாராயிருந்தாலென்ன? அவளைவிட என் உயிர் எனக்கு அவ்வளவு பெரிதல்ல ஜெய்ஸிங்.''

ஜெய்ஸிங்கின் கண்கள் ஆச்சரியத்தால் பெரிதாகத் திறந்தன. ''ரதன்! நீயா இப்படிப் பேசுகிறாய்! ரதன் சந்தாவத் ஒரு பெண்ணின் வலையில் சிக்கிவிட்டான் என்றால் யாரும் நம்பக்கூட மாட்டார்களே'' என்றான்.

''ஜெய்ஸிங்! நம்பத்தகாத காரியங்கள் உலகத்தில் எவ்வளவோ நடக்கின்றன. அப்படி நடக்காவிட்டால் ஆச்சரியம்

என்ற வார்த்தையே ஏற்பட்டிருக்காது. தர்மசாலையில் என்னைச் சந்திக்க நீ நினைத்தாயா? அல்லது உன்னைச் சந்திக்க நான் நினைத்தேனா? நீ என்னைக் கைது செய்தாய் என்று சென்னால் யாராவது நம்புவார்களா? என்னைக் கைது செய்ய நேரிடும் என்று சொப்பனமாவது கண்டாயா? அந்த மாதிரிக் காரியங்களில் இதையும் ஒன்றாக வைத்துக் கொள். நான் உலகத்தில் ஆசை வைத்த பொருள்கள் அதிகம் இல்லை. ஏதோ ஓரிடத்தில் என்னையும் மீறிப் பாசம் விழுந்தது. ஆனால் ஆசை நிராசை யாகிவிட்டது!'' என்று ரதன் கூறிப் பெருமூச்சு விட்டான்.

''அதற்காக மஹாதேவ் ஸிம்ஹன் என்ற பொய்ப் பெயரில் உயிர்விட நினைக்கிறாயா? அதற்கு நான் அனுமதிப்பேனென்று தான் உன் அபிப்பிராயமா?'' என்றான் ஜெய்ஸிங்.

''ஜெய்சிங்! ரதன் சந்தாவத் ஓர் ஆணையிட்டு அவன் கீழுள்ள வீரர்கள் அதை மீறினார்கள் என்ற அபக்கியாதி இதுவரை கிடையாது. பிறகு உன் இஷ்டம்.''

''இதென்ன பிடிவாதம் ரதன்? அநியாயமான ஒரு கொலைக்கு உடந்தையாயிருப்பது ராஜபுத்திர தர்மமா? இதனால் ஏற்படும் பலன்களை நன்றாக யோசித்துப் பார் ரதன். உஜ்ஜயினிக்குத் தயால்ஸாவின் மருமகளை வசப்படுத்தச்சென்ற ரதன் சந்தாவத், ஏதோ ஒரு சாதாரண சிறுக்கி கையில் சிக்கி விட்டானென்றால் டைபர்கானும் ஜெய்மல்லும் கைகொட்டிச் சிரிப்பார்கள். மொகலாய சைன்னியத்தில் ராஜபுத்திரப் பட்டாளத்தைப் பார்த்துச் சாதாரண மொகலாய சிப்பாய்கூட இகழ்ச்சியாகச் சிரிப்பான். ராஜபுத்திரர்கள் வீராவேசம் பேசும் சமயங் களிலெல்லாம், 'இது ரதன் சந்தாவத் வீறாப்பு' என்ற பட்டப்பெயர் வந்துவிடும்.இதெல்லாம் உனக்குச் சம்மதந்தானா? ராஜலக்ஷ்மி யான அகிலாதேவியைக் கொண்டுவரப்போனவன் ஓர் அஷ்ட தரித்திரத்தைப் பிடித்துக்கொண்டு வந்தான் என்றால் ராஜபுதனம் சிரிக்குமே ரதன்?''

ஜெய்ஸிங்கின் பேச்சில் உஷ்ணம் ஏறஏற ரதன் சந்தாவத்தின் முகத்திலும் சிறிது புன்முறுவல் தவழ்ந்தது. "நீ அகிலாதேவியைப் பார்த்திருக்கிறாயா ஜெய்ஸிங்!".

"இல்லை."

"அப்படியிருக்க இந்தப் பெண் அகிலாதேவியைவிட அழகிலோ சம்பத்திலோ குறைந்தவள் என்று எப்படி உனக்குத் தெரியும்?"

ஜெய்ஸிங் ரதனைப் பிரமிப்புடன் பார்த்தான். "ரதன் அடுத்தபடி இவள்தான் அகிலாதேவியென்றுகூடச் சத்தியம் செய்வாய் போலிருக்கிறதே!" என்றான்.

இடையில் இவ்வளவு நாளாகச் சிரிக்காத ரதன் சந்தாவத் பலமாக வாய்விட்டுச் சிரித்தான். உதயசாகரத்தின் கரையில் சிரித்த சிரிப்பைவிடப் பலமான சிரிப்பு. தன் விதியை நினைத்துச் சிரித்த சிரிப்பு. அந்தச் சிரிப்பு, முன்னால் சென்றுகொண்டிருந்த மொகலாய வீரர்களையும் க்ஷண நேரம் திகைக்க வைத்தது.

"ஜெய்ஸிங்! நான் எதைச் சொன்னாலும் உலகத்தில் இப்பொழுது யாரும் நம்பமாட்டார்கள். கலி முற்றுகிறது; சத்தியம் மறைகிறது; விதி விசித்திரமானது. பொய்யே சொல்லியறியாத ரதன் சந்தாவத்தையும் பொய்யனாக்கிவிட்டது. கடவுளின் பொம்மலாட்டம் அற்புதமானது" என்று சொல்லிவிட்டு லகானை இழுத்து சேணத்தில் பின்புறமாக சிறிது சாய்ந்து மீண்டும் பலமாகச் சிரித்தான் ரதன் சந்தாவத்.

அத்தியாயம் 16

அசலும் போலியும்

ஜெய்ஸிங்குக்கு ரதன் சந்தாவத்தின் சிரிப்புக்கு காரணம் தெரியவில்லை. ஆனால் தர்மசாலையிலிருந்த பெண்ணின் மேல் அவன் மனம் தீவிரமாக லயித்திருக்கிறதென்பதை மட்டும் சந்தேகமறத் தெரிந்துகொண்டான். அப்படிப் பெண் பைத்தியம் பிடித்திருக்கிற மனிதன் காதில் உசிதமான எந்த வார்த்தையும் ஏறாது என்ற காரணத்தால் மௌனமாகவே தன் குதிரையை நடத்தினான். அந்த மௌனத்தை ரதன் சந்தாவத்துதான் கலைத்தான்.

"அது கிடக்கட்டும் ஜெய்ஸிங்! நீ இங்கு எப்படி வந்து சேர்ந்தாய்? ஹாராவளி மலைப் பிரதேசத்தில் யுத்தம் எப்படி இருக்கிறது?" என்று கேட்டான்.

ஹாராவளியில் சித்தூர் ராணாவின் படைகளால் மொகலாய சைன்னியத்துக்குப் பெருத்த சேதம்தான். ஆனால் அந்த சைன்னியங்களை இன்னுமொரு பெரிய ஆபத்துச் சூழ்ந்திருக்கிறது. மால்வாவுக்குத் தீ வைத்துப் பொசுக்கிக் கொண்டிருந்த தயால்ஸா திடீரென என்ன காரணத்தாலோ மால்வா யுத்தத்தை நிறுத்தி விட்டுத் தமது படைகளைச் சாரங்கபூர் பக்கம் திருப்பியிருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. தயால்ஸா தமது படைகளுடன் உஜ்ஜயினியிலிருந்து புறப்பட்டுவிட்டதாகவும் சாரங்கபூருக்கு வெகு அருகில் முகாம் செய்திருப்பதாகவும் ஒற்றர்கள் கூறியதின் மேல், ஜெய்மல் ஸிம்ஹன் தலைமையில் மொகலாய சைன்னியத்தின் ஒரு பிரிவை டைபர்கான் சாரங்கபூருக்கு அனுப்பியிருக்கிறான். அந்தப் பட்டாளத்தில்தான் நானும் வந்து சேர்ந்தேன்" என்றான் ஜெய்ஸிங்.

ரதன் சந்தாவத்தின் புருவங்கள் சிறிது சுளித்து, முகம் தீவிர யோசனையைக் காட்டிற்று. 'தயால்ஸா சாரங்கபூர் மீது படையெடுக்கிறாரென்றால் அதற்குக் காரணம் அகிலாவாகத்தான்

இருக்கவேண்டும்' என்று மனத்திற்குள் நினைத்துக்கொண்டான். படையெடுப்பு என்றால் சாரங்கபூரில் ஹிந்துக்கள் வீடுகளைச் சோதனை போட்டுச் சந்தேகப் பேர்வழிகளையெல்லாம் பிடித்து மொகலாயர் மடக்குவார்களே, அப்பொழுது அகிலாவின் கதி என்ன? அவளை எப்படிக் காப்பாற்றுவது? யார் காப்பாற்று வார்கள்?''என்று எண்ணத் தொடங்கினான்.

ஜெய்ஸிங்கோ ரதன் யோசனைகளைப்பற்றிச் சிறிதும் சிந்திக்காமலே, ''கேட்டாயா ரதன்? நான் இங்கு வந்து சேர்ந்ததும் முதன்முதலில் கிடைத்த கட்டளை உன்னை கைது செய்வதுதான்'' என்று தன் கதையைச் சொல்லி முடித்தான்.

''ஜெய்மல் சாரங்கபூருக்கு வந்துவிட்டானா?'' என்று ரதன் விசாரித்தான்.

''இல்லை. நாளைதான் வருகிறான். ரதன், நான் சொல்வதைக் கேள். அநாவசியமாக என் வாயை மூடாதே. மகாதேவ் ஸிம்ஹனாக நீ சிறையில் அடைக்கப்பட்டால் பிறகு நான் உனக்கு எந்தவித உதவியும் செய்ய முடியாமல் போகலாம். தவிர நமது பட்டாளம் இங்கு வரப்போவதில்லை. டைபர்கான் துருப்புகள்தான் ஜெய்மல் தலைமையில் வருகின்றன. மொகலாயர்களில் உன்னை விரும்புகிற சிப்பாய் ஒருவன் கூடக் கிடையாது. உன்னைக் கொல்ல ஜெய்மல் தயங்கவே மாட்டான்'' என்று ஜெய்சிங் மன்றாடினான்.

அவன் சொன்ன வார்த்தைகளை ரதன் லட்சியம் செய்யவில்லை.''ஜெய்சிங்! நீ ராஜபுத்திரப் படையுடன் வர வில்லையென்றால் ஹாராவளியில் அந்தப் படைக்குத் தலைவன் யார்?'' என்று கேட்டான்.

''டைபர்கானே தலைமை வகிக்கிறான்'' என்றான் ஜெய்சிங். ரதன் சந்தாவத்தின் கண்களில் கோபத்தணல் வீசியது. ''ஜெய்சிங்! ராஜபுத்திரப் பட்டாளத்தை மொகலாயன் நடத்துகிறானா? இனிமேல் மொகலாயர்களுக்கும் நமக்கும் இருந்த சம்பந்தம்

அறுந்துவிட்டது. டைபர்கானுக்குத்தான் என்ன தைரியம்! உன்வசம் நான் ஒப்புவித்துவிட்டு வந்த படையை உன்னை இங்கு தள்ளிவிட்டு அவனே தலைமை தாங்கி நடத்துகிறானா?'' என்றான்.

''டைபர்கானுக்கு ராஜபுத்திரர் யாரிடத்திலும் நம்பிக்கையில்லை ரதன்.''

''டைபர்கானுக்கு என்ன, எந்த மொகலாயனுக்கும் அவ்வளவுதான். உதவும் கையை வெட்டி எறியப் பார்க்கிறான் டைபர்கான். இதற்கு நீயும் ஒத்துக்கொண்டாயா ஜெய்சிங்?''

''ஒப்புக்கொள்ளாவிட்டால் ராஜபுத்திரப் படையை நிர்மூலப்படுத்த அவனிடம் பலமிருக்கிறதே.''

''பலமிருக்கிறதா? அதைத்தான் பார்த்துவிடுவோம்'' என்று சீறினான் ரதன் சந்தாவத். அந்தச் சமயத்தில் அவனுக்கு அகிலாவின் ஞாபகம் போய்விட்டது. தன்கீழ் போரிட்டு மடிவதையே கௌரவமாகக் கொண்ட ராஜபுத்திர வீரர்களின் நலன் அவன் கண்முன்னால் நின்றது. சந்தாவதர்களின் வீராவேசம் அவன் உடம்பு பூராவும் மீண்டும் எழுந்து சிங்கநாதம் செய்தது. இந்தச் சமயத்தில் மால்தேவின் வீட்டிற்கருகில் இருவரும் வந்து விட்டார்கள். அதைப்பார்த்த ரதன், ''ஜெய்சிங்! இந்த வீட்டில் எனக்குச் சிறிது வேலை இருக்கிறது. கொஞ்சம் அந்தச் சிப்பாய்களை நிற்கச் சொல்'' என்றான்.

ஜெய்சிங்கின் உத்தரவின்மேல் குதிரைகளின் மேலிருந்த வீரர்கள் இறங்கினார்கள். ஜெய்ஸிங்கும் ரதன் சந்தாவத்தும் படியேறி மால்தேவின் வீட்டிற்குள் நுழைந்தார்கள். உள்ளே இருவர் மிகுந்த கோபத்துடன் சச்சரவிட்டுக் கொண்டிருப்பது அவர்கள் காதில் விழவே, ரதன் சற்று நின்று உள்ளே யார் பேசுகிறார்கள் என்பதை உற்றுக் கேட்டான்.

''அடே அயோக்கியா, இந்தப் பொய்ச் சாக்குகளால் என்னிடமிருந்து தப்ப முடியுமென்று நினைக்காதே. என்

பெண்ணின் கண்ணீர் உதிர்ந்த அளவுக்கு உன் ரத்தமும் சொட்டவேண்டும். எடு வாளை!'' என்றது ஒரு பயங்கரக்குரல்

''மாமா! நான் பொய் ஏதும் சொல்லவில்லை. நான் தர்மசாலையில் இருந்ததில்லை. நீங்கள் சொல்லும் பெண் யாரென்றும் எனக்குத் தெரியாது. சண்டையில் எனக்கு ஆட்சேபணை இல்லை. என்மீது வீண் பழி சுமத்துவதை நான் விரும்பவில்லை'' என்றது மற்றொரு குரல்.

ரதன் ஒரு விநாடியில் மர்மத்தைப் புரிந்துகொண்டான். தான் வரவேண்டிய சமயத்தில், அசல் மகாதேவ் ஸிம்ஹனே வந்து இந்திரஸிங்கிடம் சிக்கிக்கொண்டான் போலிருக்கிறது என்பதை ஊகித்து வாயிற் கதவைத் படபடவென்று இடித்தான். வேலையாள் வாயிற் கதவைத் திறக்கவே, வெகு வேகமாக ஜெய்சிங் பின்தொடர உள்ளே ஓடிவந்து இந்திரஸிங்கிற்கும் மகாதேவ் ஸிம்ஹனுக்கும் இடையே நின்றான்.

''நீ யார்?'' என்று இந்திரஸிங் கர்ஜித்தார்.

அசல் மகாதேவ் ஸிம்ஹனும் போலி மகாதேவ் ஸிம்ஹனும் ஒருவரை யொருவர் சிறிது நேரம் பார்த்துக் கொண்டு நின்றார்கள். பிறகு ரதன் இந்திரஸிங்கை நோக்கி, ''நீங்கள் எந்த மகாதேவ் ஸிம்ஹனை இங்கு இரவு பன்னிரெண்டு மணிக்கு எதிர் பார்த்தீர்களோ அந்த மகாதேவ் ஸிம்ஹன் இவரல்ல'' என்றான்.

இந்திரஸிங் பிரமித்தார். ''பிரமிக்க வேண்டாம் இந்திரஸிங்! சந்தேகமிருந்தால் என்னைத் தர்மசாலையில் கைது செய்த இந்த ஜெய்சிங்கைக் கேளுங்கள். இன்னும் சந்தேகமிருந்தால் இவருடன் தர்மசாலையைச் சூழ்ந்த இருபது மொகலாய வீரர்கள் வெளியே இருக்கிறார்கள்; அவர்களைக் கேளுங்கள்'' என்று ரதன் விஸ்தாரமாகச் சொன்னான்.

''அப்படியானால் நீங்களும் மகாதேவ் ஸிம்ஹன் தானா?''

''சந்தேகமென்ன? ராஜபுதனத்தில் எவ்வளவோ மகாதேவ் ஸிம்ஹன் களிருக்கலாம். ஆகையால் அவர்களை யெல்லாம் உங்கள் மாப்பிள்ளை என்று சொல்லி விடுவதா? அதற்காக மாப்பிள்ளையைப் பிடித்திழுத்துக் கொல்வதா?'' என்றான் ரதன்.

ரதன் விளக்கியதாலும் ஜெய்சிங்கின் சாட்சியத்தாலும் சிறிது உண்மையைப் புரிந்துகொண்ட இந்திரஸிங் எல்லோரையும் உள்ளே அழைத்துப் போய் ஆசனங்களில் உட்கார வைத்தார். அவர் ஏதோ தன்னிடம் தனிமையில் பேச முயலுவதை அறிந்த ரதன், ஜெய்சிங்கைச் சிறிது நேரம் வாசலில் இருக்கும்படி கேட்டுக்கொண்டான்.

ஜெய்சிங் போனதும் இந்திரஸிங் ரதனைப் பார்த்து, ''நீங்கள உண்மையில்-வேறு மகாதேவ் ஸிம்ஹனாயிருந்தாலும் சரி, அல்லது யாராயிருந்தாலும் சரி, நீங்கள் கைதாகிச் செல்லக்கூடாது. உங்கள் ஸ்தானத்தில் சிறைக் கூடத்துக்குப் போகவேண்டியது என் மாப்பிள்ளைதான்'' என்றான்.

இந்திரஸிங்கின் பெருந்தன்மையை ரதன் வியந்தாலும் அதற்கு அவன் ஒப்புக்கொள்ளவில்லை. ''இந்திரஸிங்! நீங்கள் சொல்வது தவறு. உங்கள் பெண்ணின் வயதென்ன! இதற்குள் அவள் விதவையாவது சம்மதமா? மகாதேவ் ஸிம்ஹன் மொகலாயர் சிறைக்குப்போனால் திரும்ப முடியாதென்பது தெரியுமா?'' என்று கேட்டான்.

''தெரியும் மகாதேவ்ஸிங்! பெண்ணையும் மாப்பிள்ளையின் உயிரையும்விடப் பெரியதான க்ஷத்திரிய தர்மம் இருக்கிற தல்லவா? தனக்குப் பதில் இன்னொருவனைத் தூக்கு மேடைக்கனுப்ப எந்த க்ஷத்திரியன் சம்மதிப்பான்? அதெல்லாம் முடியாது'' என்றார் இந்திரஸிங் தீர்மானமாக.

''இந்திரஸிங்! உங்கள் எண்ணங்கள் உயர்ந்தவை. ஆனால் அவற்றால் தற்சமயம் யாருக்கும் பயனில்லை. மொகலாய வீரர்கள் தர்மசாலையில் என்னைத்தான் கைது செய்திருக்கிறார்கள்.

மகாதேவ் ஸிம்ஹன் நானல்ல என்று சொன்னால் எங்கள் இருவரையும் கைது செய்து கொண்டு போவார்களே தவிர என்னை விடமாட்டார்கள். அங்கே கொண்டு போனால் ஔரங்கசீப்பின் நியாயம்தான் உங்களுக்குத் தெரிந்திருக்குமே! இருவரும் சமாதி தான். ஒரு குற்றத்துக்கு இருவர் இறப்பது மதியீனம். அது தவிர நான் இறக்கவும் போவதில்லை. அங்கு சென்றதும் தப்பித்துக் கொள்ள எனக்கு ஒரு மார்க்கமும் இருக்கிறது'' என்று இந்திர ஸிங்கைச் சமாதானப்படுத்தினான். இஷ்டமில்லாமலே இந்திரஸிங் சம்மதித்தார்.

''இந்திரஸிங்! கடைசியாகத் தாங்கள் ஓர் உதவி செய்ய வேண்டும், செய்வீர்களா?'' என்று கேட்டான்.

''கட்டாயம் செய்கிறேன். கட்டளையிடுங்கள்'' என்றார் இந்திரஸிங்.

''தங்கள் மாப்பிள்ளை நானல்லவென்பதை அகிலாவிடம் தெரிவித்துவிடவேண்டும்'' என்றான் ரதன்.

இந்திரஸிங்கின் மனத்தில் எண்ணங்கள் வெகுவேகமாக ஓடின. அவர் முகத்தில் பிரமை தட்டியது. ''என்ன, அகிலாவிடமா!'' என்றார்.

''ஆம்! ஏன்?''

''அகிலாவிடம் உங்களுக்கு மிகவும் பற்றுதல் உண்டா?''

''அதில் ஆச்சரியமென்ன? அகிலாவிடம் யார்தான் ஆசை கொள்ளமாட்டார்கள்?''

''அவளுக்கும் உங்கள்மேல் ஆசைதானா என்பதைத் தெரிந்து கொண்டீர்களா?'''

''அப்படிச் சந்தேகப்படக் காரணம் என்ன?''

'' விஷயம் உங்களுக்குத் தெரியாது போலிருக்கிறது.''

''என்ன விஷயம்?''

''உங்களை யார் அதிகாரிகளுக்குக் காட்டிக் கொடுத்தது தெரியுமா?''

'' தெரியாமலென்ன, மால்தேவ்தான்.''

''மால்தேவ் அல்ல'' என்று அழுத்தந் திருத்தமாகச் சொன்னார் இந்திரஸிங்.

ரதன் ஸ்தம்பித்துப் போனான். ''அப்படியானால்?.'' என்று ஏதோ சொல்லப்போய், இந்திரஸிங்கைப் பார்த்தான்.

இந்திரஸிங் மிகுந்த துக்கத்துடன் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டார். ''ஆம். உங்களைக் காட்டிக் கொடுத்தது அகிலாதான். நேற்று இங்கு வந்து நீங்கள் தர்ம சாலையில் இருக்கும் தகவலை அதிகாரிகளிடம் சொல்லச் சொல்லி மால்தேவை வற்புறுத்திச் சென்றது -நீங்கள் ஆசை கொண்டுள்ள அந்த உத்தமி அகிலாதேவிதான்'' என்று மெள்ளச் சொன்னார்.

அத்தியாயம் 17

ஜெய்மல்

ரதனுக்கு உலகமே தலைகீழாகச் சுற்றுவது போலிருந்தது. தலையில் இடி விழுந்தவன் போல் பிரமை தட்டிச் சற்று நேரம் மஞ்சத்தின்மேல் உட்கார்ந்திருந்தான். அகிலா தன் மார்பில் கூரிய கத்தியைச் செலுத்தியிருந்தால்கூட அவ்வளவு வேதனையை அவன் அடைந்திருக்க மாட்டான். அவன் மனம் என்னவோ செய்தது. தெளிவான அவன் அறிவு கூட கலங்கியது. கடைசியாக ஏதோ முடிவுக்கு வந்தவன் போல் பெருமூச்சு விட்டான். அவன் மனத்தில் எழுந்த எண்ணங்களை இந்திரஸிங் நன்றாகப் புரிந்து கொண்டு அவனருகில் வந்தார். கருணையே காட்டாத அவர் முகத்தில் கூடச் சிறிது அனுதாபம் உதயமாயிற்று. சொந்தப் பிள்ளையைத் தகப்பன் தொடுவதுபோல் ரதனைத் தொட்டு,

''மஹாதேவ்ஸிங்! அதைரியப்படாதீர்கள். உங்கள் இருவருக்கும் இடையில் ஏற்பட்ட இந்தக் கசப்புக்கு என் பதற்றமும் முட்டாள்தனமும்தான் காரணம். அதைச் சரிப்படுத்தும் பொறுப்பை என்னிடம் விட்டுவிடுங்கள். எப்பேர்ப்பட்ட ஓர் உயர்ந்த மனிதனைச் சந்தேகத்துக்குப் பலியிட அகிலா துணிந்தாள் என்பதை அவள் இதயத்தில் படும்படியாக நிரூபித்து விடுகிறேன்.'' என்றார்.

ரதன் உதடுகளில் துக்கங் கலந்த புன்சிரிப்பு ஒன்று தென்பட்டது. ''இந்திரஸிங்! என் கஷ்ட காலத்துக்கு நீங்கள் என்ன செய்வீர்கள்? நான் மனத்திருப்தியுடன் தூக்கு மேடைக்குச் செல்ல இன்னும் ஒரு காரணம் ஏற்பட்டிருக்கிறது'' என்று சொல்லிக் கொண்டு ஆசனத்தை விட்டு எழுந்தான்.

இந்திரஸிங் அவனைக் கையைப் பிடித்துச் சிறிது நிறுத்தினார். ''மஹாதேவ்ஸிங்! ஏன் இப்படி மனம் உடைந்து போகிறீர்கள்? அகிலாவின் மனத்தைத் திருப்புவது என் பொறுப்பு'' என்றார்.

''இந்திரஸிங்! பெண் உள்ளத்தில் ஏற்கனவே இல்லாத ஓர் ஆசையை கிளப்புவது சாத்தியமா?'' என்றான் வெறுப்புடன்.

''அவளுக்கும் உங்கள் மேல் பூரண அன்பு இருக்கத்தான் வேண்டும். இல்லாவிடில் நீங்கள் இன்னொருத்தியின் கணவன் என்று கேள்விப்பட்டதும் உங்கள் மீது இவ்வளவு கோபம் ஏற்படுவானேன்? பொறாமையால்தான் பெண்களுக்குப் புருஷர்கள்மேல் கோபம் ஏற்படுகிறது மகாதேவ்ஸிங், உங்கள் உயிரைமட்டும் காப்பாற்றிக் கொள்ளுங்கள். அகிலாவின் பொறாமையைத் துடைத்துச் சுத்த இருதயத்துடன் அவளைத் தங்களிடம் நான் சேர்ப்பிக்கிறேன்'' என்று இந்திரஸிங் தைரியம் சொன்னார். ரதன் அவருக்கு நன்றி தெரிவித்து விட்டு வெளியில் வந்து ஜெய்ஸிங்குடன் சேர்ந்து கொண்டான். குதிரைகள் மீண்டும் கிளம்பி மொகலாயப் பிறைக் கொடி பறந்து கொண்டிருந்த கட்டிடத்துக்காகச் சென்றன.

நள்ளிரவு தாண்டிவிட்டது. சேனாதிபதி மாளிகை வாசலில் கட்டப்பட்டிருந்த மணியில் மூன்றாவது ஜாமத்துக்கான மணி 'டாங் டாங்' என்று அடிக்கப்பட்டது. சாரங்கபூர் பெரும் பாலும் விழித்துக்கொண்டுதானிருந்தது. சேனாதிபதி மாளிகை யில் விளக்குகளும் பந்தங்களும் எரிந்தவண்ணமிருந்தன. யுத்த உடுப்பு அணிந்த மொகலாய வீரர்கள் எங்கும் வட்டமிட்டுக் கொண்டிருந்தார்கள். ஊரில் காவலும் சைன்னிய சஞ்சாரமும் பலமாயிருந்தன. பெண்டுபிள்ளைகளுடனிருந்த சாதாரணக் குடித்தனக்காரர்கள் கதவைத் தாளிட்டுக் கொண்டு பயந்து பதுங்கியிருந்தார்கள்.

ஊரின் நிலைமையை ரதன் சந்தாவத் வெகு சீக்கிரம் ஊகித்துக் கொண்டான். தயால்ஸா படை வெகு அருகில் இருப்பதாலும் புதிய சேனாதிபதி ஜெய்மல் ஸிம்ஹன் மறுநாள் வரப்போவதாலும் யுத்த சன்னத்தங்கள் நடந்துவருவதை எல்லா இடங்களிலும் கண்டான். சாரங்கபூர் எந்த நிமிஷத்திலும் போர்க் களமாகும் ஸ்திதியிலிருப்பதைத் தெரிந்து கொண்டான். இந்தச் சமயத்தில் தன்னுடைய நடவடிக்கை எப்படி இருக்க வேண்டும் என்பதை அவன் மனம் ஆராயத் தொடங்கியது. 'நான் மகாதேவ் ஸிம்ஹன் பெயரால் மடிவது உசிதமா? அல்லது ரதன் சந்தாவத்தாக மீண்டும் பகிரங்கமாக வெளிவந்து டைபர்கான் கையிலிருந்து ராஜபுத்திரப் படையை மீட்பதா? ராஜபுத்திரப் படையை மீட்பதானால் இங்கிருந்து அந்தக் காரியத்தை நான் எப்படிச் செய்ய முடியும்? அகிலாதேவியை ஜயிக்காமல் திரும்பி னால் உபசேனாதிபதி பதவியை இழப்பதாகச் சபதம் செய்தி ருக்கிறேனே. ஆகையால் டைபர்கான் என்னைப் பதவியை விட்டு விலக்கிக் கைது செய்ய மாட்டானா? கைதே செய்ய வில்லை யென்று வைத்துக்கொண்டாலும் மீண்டும் மொகலாயர் தலைமை யில் அவர்கள் கையாளாகத்தானே சண்டையிட வேண்டும்? ராஜபுத்திரர்களுக்கு எதிராகக் கத்தியைப் பிடித்தால் அப்புறம் அகிலா முகமெடுத்தும் பார்க்க மாட்டாளே. இதென்ன தர்ம சங்கடமான நிலைமை' என்று அவன் மனம் குழம்பியது.

ஆனால் அவன் மனத்தில் ஒரு விஷயம் நிச்சயமாகிவிட்டது. மாறுபெயரில் இனிமேல் உலகத்தை ஏமாற்றுவது கண்ணியமல்ல என்று மட்டும் அவன் உள்ளம் திட்டமாகச் சொல்லியது. 'ரதன், ஏதோ சந்தர்ப்ப விசேஷங்களால் நீ மாறு பெயரில் வசிக்க நேர்ந்தது. இனி அந்தப் பெயர் அவசியமில்லை. ஆகையால் உன் உண்மைப் பெயரை மீண்டும் ஏற்றுக்கொள்' என்று வற்புறுத்தியது மனம். இத்தகைய யோசனைகளில் உழன்றுகொண்டே, சேனாதிபதி மாளிகைக்கு எதிரில் ரதன் இறங்கினான். ஜெய்ஸிங்கும் குதிரையிலிருந்து இற்ங்கி ரதனை அழைத்துக்கொண்டு உள்ளே நுழைந்தான்.

சேனாதிபதியை உடனே பார்க்கமுடியவில்லை. ஜெய்ஸிங் வந்துள்ள விஷயத்தை அறிவிக்கச் சென்ற சிப்பாய் உடனே திரும்பி வந்து, "சேனாதிபதி சாகிப் அவர்கள் முக்கிய காரியமாய் ஒற்றர்களுடன் பேசிக் கொண்டிருக்கிறார்களாம். கைதியைச் சிறையில் அடைத்து வைக்கும்படி உத்தரவிட்டார்கள். நாளை புது சேனாதிபதி வந்ததும் விசாரணை செய்கிறார்களாம். இதோ உத்தரவு" என்று கடிதத்தை நீட்டினான்.

பந்தத்தின் வெளிச்சத்தில் ஜெய்ஸிங் உத்தரவை வாசித்துவிட்டு ரதனுடம் வெளியே வந்தான். "இப்பொழுது என்ன சொல்கிறாய் ரதன்? மகாதேவ் ஸிம்ஹனாகச் சிறைக்குள் போக உத்தேசமா? அல்லது ரதன் சந்தாவத்தாக வெளியே உலாவ இஷ்டமா?" என்று ஜெய்ஸிங் கேட்டான்.

"இந்தச் சேனாதிபதி யார்?" என்றான் ரதன்.

"யாரோ புதிதாக ஆஜ்மீரிலிருந்து வந்திருக்கிறான்."

"அப்படியானால் நீ சொல்வதை அவன் எப்படி நம்புவான்? இருபது மொகலாய வீரர்களுடன் வந்து என்னை மகாதேவ் ஸிம்ஹனாகக் கைது செய்திருக்கிறாய். நான் மகாதேவ் ஸிம்ஹன் என்று ஒப்புக்கொண்டபோது இரண்டு மொகல் சிப்பாய்கள் கூடவே இருந்திருக்கிறார்கள். திடுதிப்பென்று இங்கு வந்தவுடன்

இவன் மகாதேவ் ஸிம்ஹனல்ல, ரதன் சந்தாவத் என்றால் யாராவது நம்புவானா?" என்று கேட்டான் ரதன்.

ஜெய்ஸிங் யோசித்தான். "ஆமாம் ரதன்! இப்பொழுது என்ன செய்யலாம்?"

"செய்வதென்ன இருக்கிறது. சாரங்கபூர்ச் சிறையில் இன்று இராப்பொழுதை மஹாதேவ் ஸிம்ஹனாகக் கழித்து விடுகிறேன். நாளைக் காலை ஜெய்மல் வந்ததும் நிலமையைத் திருத்திக் கொள்வோம்."

ஜெய்ஸிங்குக்கும் வேறு வழி தோன்றவில்லை. அவனை அழைத்துக்கொண்டு வாசற்படியில் இறங்கும்போது சற்றுத் தூரத்தில் பேரிரைச்சல் கேட்டது. பெரிய பட்டாளமொன்று வருவதற்கு அறிகுறியாகத் தூள் பறந்தது. குதிரைகள் வரும் சத்தமும் பீரங்கி வண்டிகள் இழுபடும் ஓசையும் அவர்கள் காதில் விழுந்தன. ஜெய்ஸிங் சற்றுத் தாமதித்தான். பட்டாளம் வெகு வேகமாக, சேனாதிபதி கட்டிடத்தை அணுகியது. ஜெய்சிங் ஆச்சரியத்துடன், "ரதன்! உனக்கு அதிருஷ்டந்தான். அதோ பார், ஜெய்மல் வந்துவிட்டான். நீ ரதன் என்பதற்கு ருசு வந்துவிட்டது" என்று சற்றுத் தூரத்தில் குதிரையிலிருந்து இறங்கிய ஜெய்மல் ஸிம்ஹனைச் சுட்டிக் காட்டினான். இதற்குள் மற்ற குதிரை வீரர்கள் அக்கம் பக்கத்திலிருந்த வீரர்களை ஒதுக்கிப் புதிய சேனாதிபதி ஜெய்மல் ஸிம்ஹனுக்கு வழிவிட்டார்கள். ஜெய்மல் ஸிம்ஹன் சேனாதிபதி மாளிகைப் படிகளில் ஏறும் போது, அவனை மால்தேவ் மாளிகைக்குள்ளிருந்து வெளிவந்து வரவேற்று, "தங்களை நாளைக்குத்தான் எதிர்பார்த்தோம்" என்று உபசார வார்த்தைகள் கூறினான்.

"நாளைக்குத்தான் வருவதாயிருந்தேன். ஆனால் போர் நிலைமை மிகத் தீவிரமாயிருப்பதால் கொஞ்சம் முன்பாகவே வந்து விட்டேன்" என்று சொன்ன ஜெய்மல் சுற்றுமுற்றும் திரும்பித் தனக்குச் சலாம் செய்த மொகலாய் வீரர்களுக்குப் பதில் சலாம்

செய்தான். அப்படி அவன் பார்வை சுழன்ற போது ரதன் முகத்தில் ஒரு வினாடி நிலைத்துத் திகைத்தது. மால்தேவ் அவன் அருகில் வந்து. ''ஜெயமல் மகராஜ்! அவன்தான் தயால்ஸாவின் வலதுகை போன்ற மகாதேவ் ஸிம்ஹன்'' என்றான்.

ரதன் ஜெய்மல்லின் முகத்தைக் கூர்மையாகக் கவனித்தான். ஜெய்மல்லின் உள்ளத்தில் ஏதோ பெரிய மாறுதல் ஏற்படுவதை முகம் விளக்கியது. ரதனைப் பார்த்துக் கொண்டிருந்த ஜெயமல் சட்டென்று தன் முகத்தைத் திருப்பிக் கொண்டு, ''அவனைச் சிறையிலடைத்து வையுங்கள், நாளை விசாரித்துக் கொள்கிறேன்'' என்று உத்தரவிட்டு, சரசரவென்று உள்ளே சென்றுவிட்டான்.

ரதன் கோபம் எல்லை கடந்து விட்டது. ''அடே அயோக்கியா! என்னைத் தெரியாததுபோல் பாசாங்கு செய்கிறாயா? உன்னை இந்த இரு கைகளாலும் இப்பொழுதே கொன்று விடுகிறேன்'' என்று இரைந்து கொண்டு, ஜெய்மல் சென்ற திசையில் பாய்ந்தான். அடுத்த வினாடி மிகவும் முரடான பல கைகள் அவன்மீது விழுந்து அவனை இழுத்துச் சென்றன. ''கைதியை விடுங்கள், விடுங்கள்' என்று ஜெய்ஸிங் பிறப்பித்த உத்தரவை எந்த மொகலாயச் சிப்பாயும் கவனிக்கவில்லை. ரதன் சந்தாவத்தைப் பலவந்தமாகக் கரகரவென்று இழுத்துச் சென்றார்கள்.

அத்தியாயம் 18

வஞ்சகம்

மொகலாயர்களின் மிகப்பயங்கரமான ஒரு சிறைக்குள் ரதன் சந்தாவத் அடைக்கப்பட்டான். முழுக்க முழுக்கக் கடினமான இரும்பால் மனத்தை வார்ப்படம் பிடித்திருந்தாலொழிய மொகலாயர்களின் சிறை வேதனையைச் சகிப்பது கஷ்டம். சிறையில் பிரவேசிக்கும்போதே கைதிகளின் வேதனைக் கூக்குரல்கள் காதைத் துளைக்கும். குற்றமே செய்யாதவர்களையும் அதிகாரிகளுக்கு இஷ்டமான குற்றங்களை ஒப்புக்கொள்ளச் செய்வதற்கான குரூர சாதனங்கள் பலவும் மொகலாயர்களின் சிறைகளில் உண்டு. கசையடி கொடுப்பவர்கள், இரும்பைக் காய்ச்சி இழுப்பவர்கள், இரும்பு வளையங்களில் தலைகீழாக ஆட்களைத் தொங்கவிட்டுத் தோலை உரிப்பவர்கள், விரல்களில் துணிசுற்றிஎண்ணெய் வார்த்து நெருப்பு வைப்பவர்கள் எனப் பலவிதமான யமகிங்கரர்கள் சதா அந்தச் சிறையில் வேலை செய்து வந்தார்கள். இத்தகைய சிசுருக்ஷைகளால் அடிக்கடி கிரீச் கிரீச்சென்றும் ஹ!...ஹ!...வென்றும் கத்தும் கைதிகளின் பயங்கரக் கூக்குரல்கள் வெளியில் கேட்டு நகரவாசிகளைத் துன்புறுத்தா திருப்பதற்காகக் காருண்ய மொகலாயர்கள் சிறைச் சுவர்களைக் கனமாக எழுப்பியிருந்தார்கள். யமபட்டணம் எப்படியிருக்கும் என்பதை ஹிந்து நூல்களில் மாத்திரம் படித்துவிட்டு, அதன் உண்மைச் சொரூபத்தை அறியாமல் தவிக்கும் இந்துக்களுக்கும் அதைத் தத்ரூபமாகக் காட்டும் பொறுப்பை ஒளரங்கசீப் சக்கரவர்த்தி ஏற்றுக் கொண்டே இந்த மாதிரிச் சிறைகளைச் சிருஷ்டித்திருந்தார்.ஒளரங்கசீப் நூதனமான பல தத்துவங்களை நம்பியிருந்தார். உதாரணமாக அவர் கடைசியாக உலகுக்கு ஒரு போதனையை எழுதி வைத்துவிட்டு இறந்தார். ''உங்கள் பிள்ளைகளை மாத்திரம் நம்பாதீர்கள். அவர்கள் உங்களை ஏமாற்றுவதிலும் கொல்லுவதிலுமே நம்பிக்கையுள்ளவர்கள்'' என்ற அருமையான யோசனையை அழுத்தமாக எழுதி வைத்துள்ள சக்கரவர்த்தி ஒளரங்கசீப்புதான். இந்த உக்கிர சக்கரவர்த்தி

சிறைகள் விஷயத்திலும் நூதனமான சில கொள்கைகளை உடைய வராயிருந்தார். 'சிறைகள்தான் உண்மையான நீதிஸ்தலங்கள். அங்குதான் மனிதர்கள் உண்மையைக் கக்குகிறார்கள்' என்பது சக்கரவர்த்தியின் திடமான சித்தாந்தம். அல்லாவின் கருணை யாலும் சிறைக் கிங்கரர்களின் சாமர்த்தியத்தாலும் கைதி களிடமிருந்து தமக்கு அநுகூலமான பதில்கள் கிடைக்கும் என்பதில் ஔரங்கசீப்புக்குச் சந்தேகமே இருந்ததில்லை.

இத்தகைய சிறந்த தத்துவங்களின்மேல் எழுப்பப்பட்ட மொகலாயச் சிறைக்குள் இழுத்துச் சென்று, அறையொன்றில் தள்ளப்பட்ட ரதன் சந்தாவத், தன் நிலைமையைப் பற்றி மிகத் தீவிரமாக யோசிக்க ஆரம்பித்தான். அந்தச் சமயத்தில் அவனுக்குச் சாவைப் பற்றிச் சிறிதும் கவலை இல்லை. அனால் தனக்குத் துரோகம் செய்த அந்த ராஜபுத்திர காதகன் ஜெய்மல்லைக் கொல்லாமல் இறப்பது மாத்திரம் தெய்வத்துக்கும், தன் மனச் சாட்சிக்கும், தான் பிறந்த சந்தாவதர்களின் குல கௌரவத்துக்கும், தன்னை நம்பி மொகலாய சைன்னியத்தில் சேர்ந்திருக்கும் ராஜ புத்திரப்பிரிவுகளின் நன்மைக்கும் உகந்ததாகாது என்பதை ரதன் தீர்மானித்துக் கொண்டான். 'ஒரு வினாடி ஜெய்மல்லை நெருங்க முடியுமானால் அத்தனைக்கும் பரிகாரம் தேடிவிட முடியும். ஆனால் எப்படி அவனை நெருங்குவது? அவன் இப்பொழுது சேனாதிபதி, நானோ அவன் உத்தரவின் கீழுள்ள சாதாரண கைதி' என்று நினைத்து ரதன் பெருமூச்சு விட்டுக்கொண்டு சிறையில் உலாவினான்.

சிறையில் சாளரத்துக்காக ஒருமுறை கண்ணைச் செலுத்தினான் ரதன். நாலைந்து ஆள் உயரத்தில் வைக்கப் பட்டிருந்த அந்தச் சிறு சாளரத்தை எட்ட எந்த வழியும் இல்லை. 'அப்படி எட்டினாலும், அந்தச் சாளரத்தை அடைத்துள்ள கம்பிகளை முறித்தாலும், அதற்கு அப்பாலுள்ள பயங்கரமான அகழியைத் தாண்ட வழி ஏதும் இல்லை' என்ற நினைப்பு அவன் மனத்தில் சிறிது ஏக்கத்தையும் விளைவித்தது. அவன் மனத்தில் என்னென்னவோ சந்தேகங்கள், என்னென்னவோ கேள்விகள்

வலம் வந்தன. எந்தெந்த உருவங்களோ எழுந்து தாண்டவமாடின. அகிலா இப்பொழுது என்ன செய்து கொண்டிருப்பாள் என்ற யோசனை முதலில் மனத்தைத் தாக்கியது. 'அகிலா! என் புண்ணியமான காதலுக்கு என்ன பரிசளித்தாய்? நீயும் மற்ற பெண்களைப் போலத்தானா? சாதாரணப் பெண்களுக்குள்ள சிறு பொறாமைகள் உன்னையும் வாட்டியதாலா என்னைக் காட்டிக் கொடுத்தாய்? மொகலாயச் சிறைக்குப் போகிறவன் உயிரோடு திரும்பமாட்டான் என்பது உனக்குத் தெரியாதா? தெரிந்தா என்னை இந்தக் கதிக்கு ஆளாக்கினாய்? உன் அன்பில் இவ்வளவு குரூரம் விளைகிறதா? அது என்ன அன்பு அகிலா?' என்று சில நிமிஷங்கள் மனம் வெறுத்துக் கொண்டது. அதற்குப் பிறகு இந்திரஸிங்கைப் பற்றிய எண்ணங்கள் எழுந்தன. இந்திரஸிங் எப்படியாவது அகிலாவின் மனத்தை மாற்றுவார். மணமான மஹாதேவ் ஸிம்ஹன் நானல்லவென்பதை அறிந்தும் அப்புறம் அவளே என்னை நாடி வருவாள்' என்று மனம் தன்னைத்தானே ஆற்றிக் கொண்டது. அடுத்தபடியாக ஜெய்மல், மால்தேவ், ஜெய்ஸிங், மோஹன்தாஸ் எல்லோரும் எழுந்து சுழன்றார்கள். மோஹன்தாஸின் ஞாபகம் ரதன் மனத்தில் சிறிது நம்பிக்கையை ஊட்டலாயிற்று. என் நிலைமை மட்டும் எப்படியாவது மோஹன்தாஸுக்குத் தெரிந்து விட்டால், ஜெய்மல்லின் திட்டங்களை நான் கண்டிப்பாய்த் தவிர்க்க முடியும். இந்த மோஹன்தாஸ் எங்குதான் தொலைந்து போயிருப்பான்?' என்று ரதன் தன்னைத்தானே கேட்டுக்கொண்டான். 'ஜெய்மல் என்னைச் சிறையிலடைத்து விட்டானே தவிர, ஜெய்ஸிங் இன்னும் வெளியில்தானே இருக்கிறான். ஜெய்ஸிங் சுதந்திரமாயிருக்கும் வரையில் ஜெய்மல்லைச் சும்மா விடமாட்டான்' என்று நினைத்தான். இந்த மாதிரி ஏதேதோ நினைப்பதும் அறையில் உலாவுவதுமாக ரதன் இரவைக் கழித்துக் கொண்டான்.

அந்த இரவில் ஜெய்மல்லும் கையைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்து விடவில்லை. துணிச்சலுடன் பயங்கரமான

குற்றத்தைச் செய்யும் உள்ளம், அந்தக் குற்றத்துக்கு நாலா பக்கத்திலும் சப்பைக்கட்டு கட்டி, அதை மறைப்பதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்யுமேயொழிய, நிம்மதியாக நிஷ்களங்கமாக உறங்கவா முடியும்? ரதன் சந்தாவத்தைத் தெரியாததுபோல் பாசாங்கு செய்துவிட்டுச் சேனாதிபதி மாளிகைக்குள் நுழைந்த ஜெய்மல்லின் முகத்தில் பயத்துக்கான அறிகுறிகள் பூரணமாக எழுந்து நின்றன. கண்கள் சலனத்துடன் அக்கம் பக்கத்திலிருப்பவர்களைச் சந்தேகத்துடன் நோக்கின. சின்னஞ்சிறு வியர்வைத் துளிகள் முகத்தில் அரும்பி நின்றன. மஞ்சத்தின் பக்கங்களைப் பிடித்துச் சிறிது நேரம் மௌனமாகச் சிந்தனையை ஓட்டி எந்த மாதிரி தான் நடந்து கொள்ள வேண்டும் என்பதை ஒருவழியாகத் தீர்மானித்துக் கொண்டான். ரதன் சந்தாவத்தைப் போன்றவனை எல்லோர் முன்னிலையிலும் உதறித் தள்ளிவிட்டு மீண்டும் அகப்பட்டுக் கொண்டால் தன் ஆயுசுக்கு அதிக மதிப்பை வைப்பதில் அர்த்தம் இல்லை யென்பதை ஜெய்மல் நன்றாக அறிந்திருந்தான். ஆகையால் தான் துவங்கிய நாடகத்தைத் திறமையாகக் கடைசி அரங்கம்வரை நடத்தித் துரிதமாக ரதனைத் தொலைத்து விடுவதாலேயே தான் பிழைக்கலாம் என்பதை ஜெய்மல் சந்தேகமறத் தெரிந்து கொண்டான். அதற்குண்டான நடவடிக்கைகளையும் ஜரூராய் செய்யத் தீர்மானித்தான்.

புதிய சேனாதிபதி ஜெய்மல் தீவிர யோசனை யிலிருப்பதைப் பக்கத்தில் பார்த்துக் கொண்டு நின்ற மால்தேவ் மெள்ள, "சேனாதிபதி சாகிப்!" என்று கூப்பிட்டு அவன் யோசனையைக் கலைக்கவே, ஜெய்மல் கண்களைச் சிறிது அவனுக்காக உயர்த்தி, "நீங்கள்தானே மால்தேவ் என்பது?.. உங்களைப் பற்றி இங்கு உள்ள அதிகாரிகள் அடிக்கடி எழுதியனுப்பியிருக்கிறார்கள்" என்றான்.

"சேனாதிபதியவர்களும் என்னுடன் சிறிது நாள் பழகினால் என் குணம் நன்றாகத் தெரியும்" என்று மால்தேவ் தன் புராணத்தை ஆரம்பித்தான்.

ஜெய்மல் உதடுகளில் சிரிப்புத் தவழ்ந்தது. "அடாடா! உங்கள் குணத்தைப்பற்றிச் சொல்ல வேண்டுமா மால்தேவ்? அதைப்பற்றி எவ்வளவோ கேள்விப்பட்டிருக்கிறேன். போகப் போக என்னைப்பற்றியும் நீர் நன்றாக அறிந்து கொள்வீர், அது கிடக்கட்டும். வாசலில் ஒரு கைதியிருந்தானே, அவன் பெயர் என்னவென்று சொன்னீர்கள்?"

"அவன்தான் மஹாதேவ் ஸிம்ஹன். தயால்ஸாவின் வலதுகை என்று சொல்வார்கள்.."

"அப்படியா? அவனைத் தொலைத்துவிட்டால் தயால்ஸாவின் வலதுகை போனமாதிரி தானென்று சொல்லுங்கள்."

"சந்தேகமென்ன சேனாதிபதி சாகிப்? தயால்ஸாவுக்கு மொகலாய சைன்னியத்தின் சகல உளவுகளையும் சேகரித்து அனுப்பிக் கொண்டிருந்தது இவன்தான்.."

ஜெய்மல் சிறிது நேரம் சிந்தித்தான். பிறகு அவன் முகத்தில் சந்தேகக்குறி உதயமாகவே மீண்டும் மால்தேவைப் பார்த்து, "இந்த மஹாதேவ் ஸிம்ஹனிருக்குமிடத்தைக் கண்டுபிடித்தது யார்?" என்று கேட்டான்.

மால்தேவ் முதலில் மௌனம் சாதித்தான். பிறகு மெல்லப் புன்முறுவல் செய்து, "அதை நான் சொல்வது சுய ஸ்தோத்திர மாகும் சாகிப்!" என்றான்.

ஜெய்மல் விடவில்லை "மஹாதேவ் ஸிம்ஹன் இருந்த இடம் உமக்கு எப்படித் தெரிந்தது?" என்று கேட்டான்.

மால்தேவ் இதற்கெல்லாம் மசிபவனா? "சேனாதிபதி சாகிப்! அதில் சொந்த விஷயம் கலந்திருக்கிறது. அதை மட்டும் கேட்காதீர்கள்" என்றான்.

ஜெய்மல் முகத்தில் கோபத் தணல் வீசியது. "நான் கேட்கவில்லை மால்தேவ், உத்தரவிடுகிறேன்; கேட்பது ராஜாங்க சம்பந்தமான கேள்வி. நீர் தயால்ஸாவுக்குத் தூரபந்து என்பது

எங்களுக்கு ஏற்கனவே தெரியும். ஆகையால் மஹாதேவ் ஸிம்ஹனைக் காட்டிக்கொடுத்ததற்கு உமக்கு நமது சக்கரவர்த்தியிடமுள்ள பக்திமட்டும் காரணமா, அல்லது வேறு காரணமும் உண்டா என்பதை அறிய ஆசைப் படுகிறேன்'' என்றான் ஜெய்மல்.

மால்தேவ் சிறிது யோசித்துவிட்டுப் பதில் சொன்னான். "இதைச் சொல்ல எனக்கு இஷ்டம் இல்லை சாகிப். இருந்தாலும் தாங்கள் உத்தரவிடுவதால் சொல்லுகிறேன். நான் விவாகம் செய்து கொள்ள உத்தேசித்த ஒரு பெண்ணை இந்த மஹாதேவ் ஸிம்ஹன் பலவந்தம் செய்து தட்டிக்கொண்டு போகப் பார்த்தான். அதற்குப் பரிகாரமாகத்தான் இந்த உதவியை அவனுக்கு நான் செய்தேன்'' என்றான்.

ஜெய்மல் மேற்கொண்டு கேள்வி எதுவுமே கேட்க வில்லை. 'ரதன் சந்தாவத் எப்படியோ சாரங்கபூர் வந்து ஒரு பெண் வலையில் விழுந்துவிட்டான். உஜ்ஜயினிக்குத் தான் போகாததை மறைப்பதற்காக மாறுபெயர் வைத்துக்கொண்டிருக்கிறான். அந்த மாறுபெயரில் வசித்த காலத்தில் மால்தேவின் விரோதத்தைச் சம்பாதித்துக்கொண்டு தன் வலையில் வந்து விழுந்து விட்டான்' என்று ஜெய்மல் முடிவு கட்டினான். ரதன் சந்தாவத் யார் என்பது மால்தேவுக்குத் தெரியாது என்பதையும் ஊர்ஜிதம் செய்து கொண்டான். 'ரதன் சந்தாவத்தைச் சாரங்கபூரில் தெரிந்தவன் இப்பொழுது ஜெய்ஸிங் ஒருவன்தான். அவனை இந்த அரங்கத்திலிருந்து நீக்கிவிட்டால் ரதனை மஹாதேவ் ஸிம்ஹனாகவே விசாரித்துத் தூக்கு மேடைக்கு அனுப்பிவிடலாம்' என்று ஜெய்மல் தீர்மானித்தான்.

அதற்கு மேல் ஜெய்மல் தாமதம் செய்யவில்லை. அவசரமாக ஆஜ்மீருக்கு ஒரு கடிதம் எழுதிவிட்டுச் சிப்பாயைக் கூப்பிட்டான். "டேய்! இந்தக் கடிதத்தை ஆஜ்மீரில் சின்ன நவாப் ஆஸிமிடம் சேர்ப்பிக்க வேண்டுமென்று ஜெய்ஸிங்கிடம் சொல். அரை வினாடி தாமதிக்கக்கூடாது. உடனே குதிரை ஏறி ஆஜ்மீர் செல்ல வேண்டும் என நான் உத்தரவிட்டதாகச் சொல். இனி

இன்றிரவு எக்காரணத்தை முன்னிட்டும் யாரையும் பார்க்க முடியாதென்று கண்டிப்பாய்க் கூறிவிடு'' என்று சொல்லிவிட்டு ஜெய்மல் தன் சயன அறைக்குச் சென்று, இடுப்பிலிருந்த கச்சை, கத்திகளை அவிழத்துவிட்டுப் படுக்கையில் படுத்துக் கொண்டே விதியை எண்ணிச் சிரித்தான்! 'ரதன்! உன் கடைசித் துணையான ஜெய்ஸிங்கை நீக்கிவிட்டேன். உனக்குத் துணை இந்த உலகத்தில் இனி யாருமில்லை. ஜெய்மல்லை நீ இகழ்ந்த தற்கும் சிரித்ததற்கும் சரியான பலனை நாளை அடையப்போகிறாய். அகிலாதேவியுடன் மணப்பந்தலில் இருக்கத் திட்டம் போட்டயால்லவா? மணப் பந்தல் கிடைக்காவிட்டால் என்ன, உனக்கு மரணப் பந்தலை இந்த என் இருகைகளாலும் ஜோடிக்கிறேன் பார்' என்று எண்ணிக் கொண்டே குரூரமான புன்முறுவலுடன் நித்திரையில் கலந்தான்.

அத்தியாயம் 19

மொகலாய நீதி

சாதாரணமாக மொகலாயர்களின் சிறைகளில் தள்ளப் படுபவர்கள் திரும்பி வெளியில் வருவதில்லை. ஆயுள் இருக்கு மட்டும் அவர்கள் சிறையிலேயே நாட்களைக் கழிக்க வேண்டியது தான். அந்தச் சிறைகளில் பிரவேசிப்பவர்களுக்கு ஆயுள் இருக்கக் கூடிய காலம் மிகச் சொற்பமாகையால், சிறை வாசம் யாருக்கும் அதிக நாள் நீடிக்காது. அங்கு நடக்கும் சித்திரவதைகளால் பிராணன் போகாமல் தவிக்கும் கல்லுளிமங்கர்கள் ஆயுளோடு நடமாடினாலும் சித்த ஸ்வாதீனத்தையாவது இழந்துதான் ஜீவிப்பார்கள். சிறையில் சேரும் முக்கால்வாசிப் பேருக்கு விசாரணையே இருக்காது. விசாரணை இருப்பவர்களின் கதிக்கும் இல்லாதவர்தளின் கதிக்கும் அதிக வித்தியாசம் கிடையாது. எப்பொழுதாவது ஒரிருமுறைகள் நடக்கும் விசாரணைகளும் ராஜாங்க சௌகரியத்தை உத்தேசித்து நடக்குமாகையால், நீதி

ஸ்தலங்களின் தீர்ப்புகளும் ராஜாங்க சௌகர்யத்தை உத்தேசித்து தான் இருக்கும்.

இந்த நீதிநிர்வாக முறைகளை நன்றாக அறிந்திருந்த ரதன்சந்தாவத் தன் வாழ்க்கைக் காலம் முடிந்துவிட்டதாகவே கருதினான். சீக்கிரம் தன்னை நீதி ஸ்தலத்துக்குக் கொண்டு போய் விசாரிப்பார்களென்றோ, தன்னைப்பற்றி ஏதாவது ஒரு முடிவு ஏற்படும் என்றோ அவன் நினைக்கவே இல்லை. யாரும் மீளாத சிறைக்குள் தள்ளிவிட்டதால் எதிரி தொலைந்தான் என்று ஜெய்மல் நிம்மதியாகத் தன் வேலைகளைக் கவனிப்பான் என்று ரதன் எண்ணினான். இடையிடையே ஜெய்ஸிங்கும் மோகன் தாஸும் வெளியில் இருக்கிறார்கள் என்ற நினைப்பு மட்டும் அவனுக்குச் சிறிது ஆறுதல் அளித்தது. ஆனால் அதுவும் பூரணமாக ஏற்படாத ஆறுதல். 'ஜெய்ஸிங் ஜெய்மல்லின் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டவன். ஜெய்மல்லின் பேச்சுக்கெதிராக அவன் பேச்சை யார் நம்புவார்கள்? மோகன்தாஸ் எங்கிருக்கிறானோ? சாரங்பூரிலேயே இருந்தாலும் நான் சிறைப்பட்டிருப்பது அவனுக்கு எப்படித் தெரியப்போகிறது? யாரோ மகாதேவ் ஸிம்ஹன் சிறைப் பட்டிருப்பதாக ஜனங்கள் பேசிக்கொண்டால் அது நான்தான் என்பதை அவன் எப்படி உணர்ந்து கொள்வான்?' என்று எண்ணித் தன்னைச் சூழ்ந்து கவிந்திருந்த இருளில் எந்தவித ஒளிக் கோட்டையும் காணாதவனாய் ரதன் நம்பிக்கை இழந்து நின்றான். இவ்வளவு பாதகமான சூழ்நிலையில் ஜெய்மல் தன் விசாரணையைத் துரிதப்படுத்த மாட்டான் சிறைக்குள்ளேயே மடிந்து போகத்தான் விடுவான் என்று தீர்மானித்தான்.

இது சாதாரண மனிதனின் நினைப்பு. ஆனால் குற்ற வாளியின் உள்ளம் இந்த வழிகளிலா வேலை செய்யும்? ஜெய்மல் தீர யோசித்திருந்தானானால் ரதன் வந்த முடிவுக்குத்தான் வந்திருப்பான். நிதானமான புத்தியுடன் அவன் ஆராய்ந்திருந்தால் ரதனைச் சிறையிலடைத்த பின் விஷயத்தை ஆறப் போட்டு மறைத்து விடுவதே சிறந்த மார்க்கம் என்பதை உணர்ந்திருப்பான்.

ஆனால், 'மொகலாய சைன்னியத்தின் உபசேனாதிபதியைத் துணிகரமாகச் சிறையில் அடைத்துவிட்டோமே, யாருக்காவது உண்மை தெரிந்துவிட்டால் நம் கதி என்ன?' என்ற திகிலில் இருந்த அவன் உள்ளம், மேற்கொண்டு செயலுக்கே தூண்டியது. மறுநாளே விசாரணையை முடித்து ரதன் சந்தாவத்தின் வாழ்க்கையையும் முடித்துவிடுவதிலேயே முனைந்திருந்த அவன் காலையில் எழுந்திருந்ததும் சாரங்பூரின் நீதி ஸ்தலத்தைக் கூட்டும் ஏற்பாட்டில் முழுக்கவனத்தையும் செலுத்தினான். நீதிஸ்தலத்தில் ஆஜர்படுத்த வேண்டிய தஸ்தாவேஜுகள் துரிதமாகத் தயார் செய்யப்பட்டன. சாரங்பூரின் பெரிய நீதிபதியான மௌல்வி, சேனாதிபதி ஜெய்மல் முன் ஆஜர் செய்யப்பட்டார். ஜெய்மல் கைதியைப் பற்றிய விவரங்களை அவருக்கு அறிவித்தான். அது சம்பந்தமான தஸ்தாவேஜுகளையும் அவரிடம் ஒப்படைத்தான். "மௌல்வி சாகிப்! கைதி எவ்வளவு அபாயமானவன் என்பதைப்பற்றி நான் உமக்குச் சொல்லியாகி விட்டது. மொகலாய சாம்ராஜ்யத்தின் மிகப் பெரிய எதிரிகளில் ஒருவனை விசாரிக்கும் பொறுப்பை உம்மிடம் ஒப்படைக்கிறேன் என்பது ஞாபகமிருக்கட்டும். நீதிஸ்தலத்தில் நீங்களும் உம்முடன் விசாரணைக்கு அமரக்கூடிய இதர காஸிகளும் செய்யும் முடிவுகளுக்கு நீங்கள்தாம் நாளை ஜவாப் சொல்லும்படியிருக்கும். நீதி சரியில்லாத பட்சத்தில்,அதாவது மொகலாய சாம்ராஜ்யத்தின் நன்மைக்குப் பாதகமாயிருக்கும் பட்சத்தில் ஔரங்கசீப் சக்கரவர்த்தியவர்கள் நடந்துகொள்ளகூடிய முறையைப்பற்றி நான் உங்களுக்கு அதிகம் விளக்கவேண்டிய அவசியம் இல்லை. சக்கரவர்த்தியவர்களின் கருணையை எவ்வளவோ நீதிபதிகள் ருசி பார்த்திருக்கிறார்கள். ஆகையால் விசாரணை துரிதமாகவும் தீர்ப்பு ஒழுங்காகவும் இருக்கட்டும்" என்று ஜெய்மல் பிரதம நீதிபதியவர்களை எச்சரித்தான்.

மௌல்வி சாகிப் அவர்கள் தமது வெள்ளைத் தாடிக்கு மேல் மினுக்கு மினுக்கென்று மின்னிக்கொண்டிருந்த இரு கண்களைச்

சிறிது உயர்த்திச் சேனாதிபதியைப் பார்த்தார். சேனாதிபதி இனிமேல் விசாரணையாகப் போகும் வழக்குக்குத் தீர்ப்புச் சொல்வதோடு தாம் சரியாக நடந்து கொள்ளாவிடில் தம் கதியைப் பற்றியும் தீர்ப்புச் சொல்லுகிறான் என்பதை ஸ்பஷ்டமாகத் தெரிந்து கொண்ட மௌல்வி, "சேனாதிபதி சாகிப்! நம்முடைய நீதி என்றாவது அலம்கீர் சக்கரவர்த்தியவர்களுக்காவது எல்லாம் வல்ல அல்லா (ஸல்) வின் உபதேசங்களுக்காவது விரோதமாக இருந்ததுண்டா? பாபிகளின் தரப்பில் இந்தக் கை தீர்ப்பு எழுதவே எழுதாது. பயம் வேண்டாம். விசாரணை அல்லா (ஸல்) கருணையால் சீக்கிரமாகவே முடியும். இன்று பகலுக்குமேல் விசாரணையை வைத்துக்கொள்ளுங்கள். அதற்குள் நீதி ஸ்தலத்தைக் கூட்டி விடுகிறேன். ஸலாம் சாகிப் ஸலாம்" என்று நீதிபதியவர்கள் தரையைத் தொட்டுத் தொட்டு ஸலாம் செய்தார்.

சேனாதிபதிக்கும் நீதிபதிக்கும் நடந்த பேட்டியின் விளைவாக முன்கூட்டியே முடிவு செய்யப்பட்ட வழக்கின் விசாரணை அன்று பிற்பகல் சாரங்பூரின் பெரிய மஜ்லிஸ் கட்டிடத்தில் ஆரம்பமாயிற்று. இவ்வளவு சீக்கிரம் விசாரணையை எதிர்பார்க்காத ரதனுக்கு இந்த விசாரணை மிகவும் ஆச்சரியத்தைக் கொடுத்தது.

மொகலாய சிப்பாய்கள் இருவர் அறைக்குள் வந்து அவனை விசாரணைக்குப் புறப்படும்படி ஆக்ஞாபித்த பிறகு தான், ஜெய்மல் தன்னைத் தீர்த்துவிடத் துரிதப்படுத்துகிறான் என்ற உண்மை ரதனுக்கு விளங்கியது. ஆகவே பதில் ஏதும் சொல்லாமல் சிப்பாய்களைப் பின் தொடர்ந்தான். சிறையை விட்டுப் புறப்படு முன்பு சாதாரணக் கைதிகளுக்குள்ள சகல மரியாதைகளும் அவனுக்கு நடந்தன. கை கால்களையும் உடலையும் சேர்த்து அப்படி இப்படி அசைய முடியாதபடி அவனைப் பெரிய சங்கிலியால் பிணைத்தார்கள். ரதன் உடம்பில் அப்பொழுது சக்தி பெரிதும் வறண்டு போயிருந்தது. அகிலாவிடம் மனஸ்தாபப் பட்டுக் கிளம்பின நிமிஷம் முதல் அன்ன ஆகாரமில்லா

மலிருந்ததால் தொண்டை வறண்டு கிடந்தது.பேசவும் சக்தியற்ற நிலையில் அவனைச் சிறைச்சாலை வண்டியில் இரண்டு சிப்பாய்கள் பிடித்துத் தள்ளி, வண்டியை தெருக்கள் வழியாக ஓட்டிச் சென்றார்கள். மேல் பக்கம் மூடாத அந்த வண்டியின் பக்க மரத்துண்டுகளைப் பிடித்துக் கொண்டு ஏதோ யோசனையில் ஆழ்ந்தவனாய்த் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டே ரதன் நீதி ஸ்தலத்துக்குச் சென்றான். நீதி ஸ்தலத்தின் வாசலில் வண்டியிலிருந்து இறங்கியதும் ரதன் ஒருமுறை சுற்று முற்றும் பார்த்துவிட்டு உள்ளே நுழைய எத்தனித்தவன் ஒரு விநாடி தாமதித்தான். வாசலில் இருந்த கும்பலின் ஓர் ஓரத்தில் முக்காடிட்ட உருவம் ஒன்று நின்றிருந்தது. அவன் பார்வை அந்தத் திக்கில் பாய்ந்ததும் அந்த உருவமும் முக்காட்டை சிறிது விலக்கி, முகமலரைக் காண்பித்தது. கண்களில் நீர் வழிந்தோட அகிலா நின்றிருப்பதை ரதன் கண்டு அசைவற்று நின்றான். 'அகிலாவுக்கு இந்திரஸிங் உண்மையைச் சொல்லியிருப்பாரா?' என்று ஏதோ நினைக்க ஆரம்பித்தவனை, 'ஏன் நிற்கிறாய்? போ போ' என்று சிப்பாய்கள் நீதி மன்றத்துக்குள் தள்ளிக்கொண்டு சென்றார்கள்.

நீதி ஸ்தலமாக உபயோகிக்கப்பட்டு வந்த பெரிய மஜ்லிஸ் மொகலாய சிற்பத் திறமையின் அத்தாட்சியாக விளங்கியது. கண்டிக் கற்களால் பெரிய பெரிய கமான்கள் பிடித்து உயரமாக எழுப்பப்பட்டிருந்த பிரும்மாண்டமான சுவர்களில் சித்திர வேலைப்பாடுகள் அபூர்வமாகச் செய்யப்பட்டிருந்தன. அராபிய பிம்பங்களும், ஹிந்து பிம்பங்களும் பெரிது பெரிதாகத் தூண்களில் கடையப்பட்டிருந்தமையால் நீதிஸ்தலம் சிறிது பயங்கரமாகவே காட்சியளித்தது. அந்த மஹாலின் ஒரு கோடியிலிருந்த பெரிய மேடையின் மீது பிரதம நீதிபதி மௌல்வி சாகிப் அமர்ந்திருந்தார். நரை திரைகள் அரும்பிய வெள்ளை வெளேரெனக் காட்சியளித்த அவர் உடலைப் பெரிய வெண்பட்டுச் சொக்காயொன்றும், தலையை வெள்ளைத் தொப்பி யொன்றும் மூடியிருந்தன. அவருடன் அமர்ந்திருந்த மற்ற மூன்று

காஸிகளும் ஒரே வெள்ளை மயமாகவே இருந்தார்கள். அந்த மேடையிலேயே நீதிபதிகளின் வரிசையில் ஒரு மஞ்சத்தில் ராணுவ உடைகளுடன் ஜெய்மல் உட்கார்ந்திருந்தான்.

இத்தகைய நீதி மன்றத்துக்குள் நுழைந்த ரதன்சந்தாவத் தன் உடலைச் சுற்றி வளைத்திருந்த சங்கிலியை ஒரு முறை பார்த்துக் கொண்டான். பின்பு ஜெய்மல்லை ஒரு முறை கண்களால் சுட்டெரித்து விடுபவன்போல் பார்த்தான். நீதிபதிகளை அவன் கண்கள் மிகுந்த இகழ்ச்சியுடன் ஒரு முறை வட்டமிட்டன. கைதியாகத் தன்னந்தனியே அங்கு நின்ற அந்தச் சமயத்தில், தான் ஸலூம்ப்ராவின் வம்சத்தில் உதித்தவன் என்ற நினைப்பு அவன் தலையை உயர்த்தியே நிற்க வைத்தது. வம்சப்பெருமை நினைவுக்குவரவே ரதன் சந்தாவத் சங்கிலியின் பிணைப்புகளை ஓர் உலுக்கு உலுக்கி உடலை ஒருமுறை விறைத்துத் தலையைத் தூக்கிக்கொண்டு மிகக் கம்பீரமாகவும் அலட்சியத்துடனும் நீதி ஸ்தலத்தில் நின்றான். அவன் கம்பீரத்தைப் பார்த்த மௌல்வி சாகிப்பின் கண்களில் கூட சிறிது ஆச்சரியம் உதயமாயிற்று. ஆனால் அந்த ஆச்சர்யத்தை மௌல்வி சாகிப் மறைத்துக் கொண்டு, தமக்கு எதிலிருந்த தஸ்தாவேஜுகளைப் புரட்டி விசாரணையை ஆரம்பித்தார். விசாரணை ரகசியமாகவே நடந்தது. பொது மக்கள் நீதி ஸ்தலத்தில் அநுமதிக்கப்படவில்லை.

மௌல்வி சாகிப் ஒரு முறை கனைத்துக் கொண்டு, "உங்கள் பெயரென்ன?." என்று முதல் கேள்வியை வீசினார்.

"ரதன் சந்தாவத் ஸலூம்ப்ரா" என்று கைதி சொன்ன பதிலை ஆமோதிப்பதுபோல அந்த மஹாலின் சுவர்கள் "ரதன் சந்தாவத் ஸலூம்ப்ரா, ரதன் ஸலூம்ப்ரா!"என்று எதிரொலி செய்தன.

மௌல்வி சாகிப்புக்கும் மற்ற நீதிபதிகளுக்கும் தூக்கி வாரிப் போட்டது. ஆனால் மௌல்வி சாகிப் மெள்ளச் சமாளித்துக் கொண்டு, "அபாண்டமான பொய்கள் இந்த நீதி ஸ்தலத்தில் ஏறாவென்பது உங்களுக்குத் தெரியுமா?" என்றார்.

ரதன் மௌல்வியைப் பார்த்து சிறிது நகைத்து, "தெரியும் மௌல்வி சாகிப்! இந்த நீதி ஸ்தலத்தின் அஸ்திவாரமே பொய் யாயிருக்கும்போது மற்ற பொய்களுக்கு இதில் இடமில்லை. என்பது எனக்குத் தெரியும். ஆகையால்தான் உண்மையைச் சொன்னேன்" என்றான்.

மௌல்வியும் இதர காஸிகளும் சங்கடத்தால் ஆசனங்களில் சிறிது அசைந்து கொடுத்துக் கொண்டார்கள். மௌல்வி சாகிப் தமது சிறிய கண்களால் மீண்டும் ரதனைக் கூர்ந்து கவனித்துச் சொன்னார்;"மஹாதேவ்ஸிங்! இந்த நீதி ஸ்தலத்தை அவமதிப்பதாலோ அபாண்டமான பொய்யைச் சொல்வதாலோ எங்களை ஏமாற்றித் தப்பிவிடலாம் என்று நினைத்தால் அது மிகவும் பிசகான நினைப்பு என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். இதோ எங்கள் முன்னிருக்கும் தஸ்தாவேஜுகளில் உங்களை பற்றிய பூரா விவரங்களும் இருக்கின்றன. நீங்கள் தயால்ஸாவின் படையைச் சேர்ந்த மஹாதேவ் ஸிம்ஹன் என்பதற்குச் சகல ருசுக்களும் இருக்கின்றன. உமது அறையில் உம்மாலேயே கட்டிவைக்கப்பட்டு உம்மாலேயே உம்மைக் கைது செய்பவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட கடிதங்கள் இந்த நீதி ஸ்தலத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. உம்மை குறிப்பிட்டு தயால்ஸா எழுதிய கடிதங்கள் இரண்டு அவற்றில் காணப்படுகின்றன. இதெல்லாம் ஒருபுறமிருக்க உம்மைக் கைது செய்ய வந்த ஜெய்ஸிங்கினிடம் நீர்தான் மஹாதேவ் ஸிம்ஹன் என நீரே சொல்லிக் கைதானதாக ஜெய்சிங்குடன் வந்த மொகலாயச் சிப்பாய்கள் இருவர் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார்கள். இவை யனைத்தும் பொய்யென்று சொல்லுகிறீர்களா? உம்மீது குற்றத்தை ஸ்தாபிக்க இந்த ருசுக்களே போதாதா?"

மௌல்வி சாகிப்பின் இந்தக் குற்றச்சட்டுகளும் ருசுக்களும் ரதனைச் சிறிதும் பாதிக்கவில்லை. ரதன் மௌல்வியை நோக்கிச் சொன்னான்; "மௌல்வி சாகிப்! நீங்கள் இதுவரை கூறிய விஷயங்களில் தவறு ஏதும் இல்லை. என்னிடம் நீங்கள் குறிப்பிட்ட கடிதங்கள் இருந்ததும் உண்மைதான். என்னைக் கைது

செய்ய வந்த ஜெய்ஸிங்கிடம் நான் மஹாதேவ் ஸிம்ஹனாக நடித்தது உண்மைதான். ஆனால் நான் மஹாதேவ் ஸிம்ஹன் அல்லவென்ற விஷயம் ஜெய்ஸிங்குக்கு நன்றாகத் தெரியும். ஜெய்ஸிங்கை இப்பொழுது அழைத்து விசாரியுங்கள். நான் உண்மையில் ரதன் சந்தாவத்தா அல்லவா என்பதை அவன் உங்களுக்குச் சொல்வான்.''

மௌல்வி சாகிப் ஜெய்ஸிங்கை அழைக்கும்படி உத்தரவிட்டார். அதற்குள் ஜெய்மல் மௌல்வி ஆசனத்துக்காக எட்டிச் சாய்ந்து அவர் காதில் ஏதோ ஓதினான். அதைக் கேட்டதும் மௌல்வியின் முகத்தில் சிறிது அசடு தட்டினாலும் தொண்டையைக் கனைத்து அதனைச் சமாளித்துக் கொண்டு, ''அவசியமில்லை அவசியமில்லை'' என்று சொன்னார். பிறகு ரதனைப் பார்த்து ''மஹாதேவ்ஸிங்! உம்மைக் கைது செய்த ஜெய்ஸிங் அவசர வேலையாக ஆஜ்மீர் போயிருக்கிறார். அவசியமானால் அவருடன் கூட வந்திருந்த மொகலாயச் சிப்பாய்களை அழைத்து விசாரிக்கலாம்'' என்றார்.

''மௌல்வி சாகிப்! இந்த நீதி மன்றத்தில் இது நான் எதிர்பார்த்த விஷயந்தான். என்னை அடையாளம் கண்டு பிடிக்கக்கூடிய சாட்சியை நான் அழைக்கச் சொல்கிறேன். என்னை அடையாளம் தெரியாதவர்களை அழைப்பதாகச் சொல்கிறீர். இந்த நீதிமுறை ஒழுங்குதானா என்பதை யோசித்துப் பாருங்கள்.''

''மஹாதேவ்ஸிங்! இந்த நீதிஸ்தலத்தைப்பற்றி அவதூறு கூறுவது உமக்கு எத்தகைய லாபத்தையும் அளிக்காது என்பதை ஏற்கனவே சொல்லியிருந்தும் உமது பிடிவாதம் போகவில்லை. இந்த நீதிஸ்தலத்தில் வாதம் பலிக்கலாம்; பிடிவாதம் பலிக்காது. நீர் இப்பொழுது சொல்லவேண்டிய சமாதானமெல்லாம் உம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்களைப் பற்றிதான். பலமுறை நீர் எதிரி தரப்பில் சக்கரவர்த்திக்கு எதிராகப் போரிட்டதாக உம்மேல் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. அதற்கென்ன சமாதானம் சொல்கிறீர்?'' என்றார் மௌல்வி.

''மௌல்வி சாகிப்! பிடிவாதம் உங்களுக்கா எனக்கா என்பதை யோசியுங்கள். நான் மஹாதேவ் ஸிம்ஹன் அல்ல என்பதை ஏற்கனவே சொல்லியும் அந்தப் பெயரைக் கொண்டே என்னை அழைக்கிறீர்கள். இது பிடிவாதமில்லா விட்டால் இதன் பெயர் என்ன? நான் மஹாதேவ்ஸிம்ஹன் அல்லவென்று பிரமாணம் செய்தபின் நான் உண்மையில் மஹாதேவ் ஸிம்ஹனா அல்லவாவென்பதைப்பற்றி முதலில் இந்த நீதி ஸ்தலம் ஆராயவேண்டும். அதுதான் ஒழுங்கான நீதிமுறை, குற்றங்களைப்பற்றிப் பேசுகிறீர்கள். நீங்கள் குறிப்பிடும் குற்றங்கள் மஹாதேவ் ஸிம்ஹன் என்ற ஒருவரால் செய்யப் பட்டதற்கு உங்களிடம் ருசுக்கள் இருக்கின்றன. நான் மஹாதேவ் ஸிம்ஹன் அல்லவென்று கூறும்போது அந்தக் குற்றங்கள் என்னை எப்படிச் சேரும்? இந்த வழக்கு நீங்கள் நினைப்பதுபோல் அவ்வளவு எளிதல்ல. அவசரப் பட்டு யாருடைய துர்போதனை யாலாவது அநீதியை நீங்கள் ஸ்தாபிக்கும் பட்சத்தில், என்னை மகாதேவ் ஸிம்ஹனாகத் தண்டிக்கும் பட்சத்தில் நீங்கள் சக்கரவர்த்திக்கு ஒரு நாள் பதில் சொல்லவேண்டிவரும். சக்கரவர்த்தியின் மிகப் பலமான வாட்களில் ஒன்றை அழித்த தற்காக உங்கள் நீதிபதிப் பதவி மட்டுமல்ல, வெள்ளைத் தலைகளும் உங்களை விட்டுச் சிட்டாய்ப் பறந்துவிடும், ஜாக்கிரதை!'' என்று கண்களில் நெருப்புப் பொறி பறக்க வாதித்தான் ரதன் சந்தாவத்.

இதற்குமேல் மௌல்வி தமது பேச்சில் மரியாதையைக் கைவிட்டு,

''சரி, நீ இப்பொழுது யாரென்று சொல்கிறாய்?'' என்று ஏக வசனத்தில் ஆரம்பித்தார்.

''ஹாராவளிப் பிரதேசத்திலுள்ள சக்கரவர்த்தி சைன்னியத்தின் உபசேனாதிபதி ரதன் சந்தாவத் நான். ஸலூம்பராவின் உத்தம வமிசத்தில் உதித்தவன்.''

''உன்னை அடையாளம் கண்டுபிடிக்ககூடியவர்கள் யாராவது இருக்கிறீர்களா?''

''எவ்வளவோ பெயர்கள் இருக்கிறார்கள். சக்கரவர்த்தியவர்கள் இருக்கிறார்கள். சின்ன நவாப் அக்பர், அஸீம் இவர்கள் இருக்கிறார்கள் சேனாதிபதி டைபர்கான் இருக்கிறார்...'' என்று அடுக்கிக் கொண்டே போனான் ரதன்.

மௌல்வியின் இதழ்களில் புன்முறுவல் அரும்பிற்று. பக்கத்திலிருந்த நீதிபதிகளைப் பார்த்து துப்பறியும் நிபுணர் போல் லேசாகச் சிரித்துத் தாம் ஏதோ கோட்டையைப் பிடிக்கிறவர்போல் கனைத்துவிட்டு ரதனைப் பார்த்து கேட்டார். ''நீ சொல்லிய பிரமுகர்கள் யாரும் இங்கில்லை, நன்றாக யோசித்துச் சொல். உன்னை ரதன் சந்தாவத்தாக அடையாளம் கண்டுபிடிக்கக் கூடியவர்கள் சாரங்கபூரில் யாருமே இல்லையா?''

ரதன், மௌல்வியின் புன்சிரிப்புக்கு அர்த்தம் புரிந்து கொள்ளாமலே, ''இங்கு யாரும் கிடையாது.'' என்று பதில் சொன்னான். கிழப்பழமான மௌல்வியின் கண்களில் தீப் பொறி பறந்தது.

''டேய்! உன் வாயாலேயே உன் பொய் வெளியாகி விட்டது. இதோ எங்கள் பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் சேனாதிபதியவர்கள் யார் தெரியுமா உனக்கு? அவர்தாம் ஜெய்மல் ஸிம்ஹன். நீ சொல்லும் அதே ஹாராவளியில் ரதன் சந்தாவத் ஸலூம்ப்ராவுடன் தோளுக்குத்தோள் நின்று போர் புரிந்தவர். ரதன் சந்தாவத்துடன் பல வருஷம் நெருங்கிப் பழகிய நண்பர். அவரை இங்கு வைத்துக்கொண்டே எவ்வளவு அபாண்டமான பொய்கள் சொல்லி எங்களை ஏமாற்றப் பார்க்கிறாய்! இந்த நீதிஸ்தலத்தின் நேரத்தை அனாவசியமாக வீணாக்குகிறாய். இப்பொழுதாவது உண்மையை ஒப்புக் கொள்கிறாயா?'' என்று மௌல்வி கடுமையாகப் பேசினார். ஜெய்மல் புன்முறுவலுடன் ஆசனத்தில் சாய்ந்து கொண்டான்.

ரதன் சந்தாவத்தின் கோபம் எல்லை மீறிவிட்டது. ''மௌல்வி சாகிப்! நீர் சொன்னதில் ஒரு பாதி உண்மை. உமது

அருகில் உட்கார்ந்திருக்கும் ஜெய்மல் ஸிம்ஹனுக்கு என்னை நன்றாகத் தெரியும். ஆனால் அவன் என் நண்பனல்ல.நான் ஹாராவளியை விட்டுக் கிளம்பியதற்கும் அவனே காரணம். நான் இப்பொழுது மரணமடைந்தால் அவனுக்கு லாபமிருக்கிறது. அவனுடைய ஜாகீர்கள் அவனிடமே தங்கும். ஆனால் ஒருவேளை ராஜபுத்திரர்களின் கூட்டத்தில் பிறந்த தோஷம், அவன் உடம்பில் இன்னும் சிறிது க்ஷத்திரிய ரத்தம் ஓடலாம். ஒருவேளை நல்ல உணர்ச்சிகள் இன்னும் அவன் மனத்தில் இருக்கலாம். அவன் குலத்தின்மேல் ஆணையாக, அவன் பிறந்த ராஜபுத்திரக் கூட்டத்தின்மேல் ஆணையாக, க்ஷத்திரிய தர்மத்தின்மேல் ஆணையாக, அவன் பதில் சொல்லட்டும், கேளுங்கள் அவனை. நான் ரதன் சந்தாவத்தா அல்லவா என்று கேளுங்கள்''என்று கூறினான்.

அவன் ஆவேசத்தைக் கண்டு நடுங்கிய மௌல்வி, ஜெய்மல்லை நோக்கினார். ஜெய்மல் வாய்விட்டுச் சிரித்தான். ''இதற்கு நான் பதில் சொல்ல வேண்டுமா?'' என்று அலட்சிமாகக் கேட்டான்.

''வேண்டாம், வேண்டாம், அவசியமில்லை'' என்று மௌல்வி சொல்லிவிட்டு ரதனை நோக்கினார். ரதன் மீண்டும், ''கேளுங்கள் அவனை, நீங்கள் செலுத்துவதாகச் சொல்லும் நீதியை முன்னிட்டுக் கேளுங்கள். நேர்மையாக அவன் பதில் சொல்லட்டும்'' என்று கூவினான்.

''உஸ்..'' என்று மௌல்வி கடிந்து கொண்டார். பிறகு ரதனைப் பார்த்து எதுவும் கேட்காமலே தம் சகாக்களான காஸிகளுடன் கலந்து கொண்டு, ''கைதி! உன் விசாரணை முடிந்தது. உனக்கு மரணதண்டனை விதிப்பதைத் தவிர வேறு வழியில்லை. இன்று தண்டனையை நிறைவேற்றப் பொழுதில்லை. இரவு நெருங்கிவிட்டது. நாளை வெள்ளிக்கிழமை நமாஸ் தினம். காருண்ய சக்கரவர்த்தியின் அரசாட்சியில் நமாஸ் தினத்தில் உயிர்ச்சேதம் செய்வதில்லை. நாளைக்கு மறுதினம்

சனிக்கிழமை பிற்பகல் உன் தலையைச் சீவும்படியாக உத்தரவிடுகிறோம்'' என்று தீர்ப்புக் கூறினார்.

''மௌல்வி! இது நீதிஸ்தலமல்ல. கொலைக்களம், நீங்களும் கொலையாளி உத்தியோகத்திற்கே லாயக்கானவர்கள்; ஆகையால் உங்கள் தீர்ப்பைப்பற்றி எனக்குக் கவலை யில்லை. ஒரே மனிதன், அதுவும் என் ஜன்ம வைரி. அவன் சாட்சியத்தால் என்னைக் கொலை செய்கிறீர்கள். மொகலாயர்களுக்கும் ரதனுக்கும் இருந்த பந்தம் இத்துடன் அறுந்து விட்டதென்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். மொகலாயர்களுக்கு ஜெயமளித்து வந்த ஒரு வாளையும் முறித்து விட்டீர்கள் என்பது நினைவிருக்கட்டும். மொகலாய சாம்ராஜ்யத்துக்கே இன்று இந்த நீதிஸ்தலம் என்ற கொலைகளம் சதிசெய்து விட்டதென்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். மௌல்வீ! உமக்கும் உம் பக்கத்திலிருக்கும் இந்தத் தலையாட்டி காஸிகளுக்கும் இந்த ஜெய்மல்லுக்கும் சீக்கிரமே சரியான சன்மானம் கிடைக்கும் என்பதை நினைவில் வைத்துக்கொள். நான் சொல்வதில் சிறிதும் பிசகில்லை. நான் இறந்தாலும் சத்தியம் இறக்காது. அது கண்டிப்பாய் ஒருநாள் வெளிப்படும். அந்த நாளும் அதிக தூரத்திலில்லை. உண்மை வெளிப்பட்டு உம் சிரம் தூக்கில் ஆடும்போது இன்று நீ செய்த அநீதியை நினைத்து உலகம் உன்னைப் பார்த்துச் சிரிக்கும்'' என்று மிக வேகமாகச் சொல்லிவிட்டு மேற்கொண்டு அந்தச் சபையைப் பார்க்க இஷ்டமில்லாதவனாய் வாசலை நோக்கித் திரும்பினான் ரதன். காவலாளிகள் மீண்டும் அவனைச் சிறைக்குக் கூட்டிச் சென்றார்கள். சிறையை அடைந்த ரதன் தன் விதியை நினைத்துச் சிரித்தான். ''முடிவு இதுதான் போலிருக்கிறது. இன்னும் ஒரேநாள். அப்புறம் ரதன் சந்தாவத்தின் வாழ்க்கைப் படலத்தின் அஸ்தமனம்'' என்று சொல்லிக் கொண்டான்.

அத்தியாயம் 20

இதோ என் மனம் சொல்லுமே!

மாலை மறைந்து மை இருள் சூழ்ந்துவிட்டது. பட்டப் பகலிலேயே லேசாக இருட்டடித்துக் கிடக்கும் சிறைச்சாலை இரவின் காரிருளில் நரகத்தைவிடப் பயங்கரமாகக் காட்சி யளித்தது. சிறைச்சாலை வெளித்தாழ்வாரங்களின் மூலைகளில் எரிந்து நின்ற பந்தங்களில் மங்கலான வெளிச்சம், பாராக் கொடுத்துக் கொண்டிருந்தவர்களின் மீது பல கோணங்களில் விழுந்து அவர்கள் நிழல்களை சில சமயம் வெகு நீளமாகவும் சில சமயம் வெகு குட்டையாகவும் சுவர்களின் மீது வீசி, ஏதோ பேய்களின் நர்த்தனம் நடப்பனபோல் பீதியை எழுப்பின. சிறைச் சாலைக்குப் புது விருந்தினர்கள் வரும்போது காவற்காரர்கள் கையில் பிடித்துச் சென்ற விளக்கு அறைக் கம்பிகளின் மேல் விழுந்து அறைக்குள்ளிருந்த சுவரில்,கம்பிகளின் நிழல் ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலைக்குச் சஞ்சரிப்பது போன்ற பிரமையை ஏற்படுத்திக்கொண்டிருந்தது.

இயற்கையும் செயற்கையும் கலந்ததால் எழும்பிய இந்த விசித்திரங்கள் ஏதும் ரதன் சந்தாவத்தின் கண்களில் படவே இல்லை. திறந்திருந்த கண்ணுக்கெதிரில் சிறையில் இல்லாத பிம்பங்களே நின்ற அவன் அறிவையும் இந்திரியங்களையும் மாறி மாறி இன்பக் கயிறுகளாலும், துன்பக் கயிறுகளாலும் இழுத்துக் கொண்டிருந்தன. தெருக்களில் அடிக்கடி சப்தித்துக் கொண்டிருந்த நகராட்சி டமாரம் மட்டும் அவன் காதில் ஒவ்வொருமுறை லேசாக விழுந்து கொண்டிருந்தது. சமுத்திரத்தில் விழுந்து விட்டவன் எப்படி சிறு துரும்பையும் பெரிய ஆதாரமாக மதிப்பானோ, அதே மாதிரியே ரதனும் அந்த டமார சப்தத்தில் தன் விடுதலைக்கு மார்க்கம் உண்டா என்று நினைக்க ஆரம்பித்தான். யுத்தம் மூளும் சமயங்களில் சைன்னியத்திலிருந்து ரஜா வாங்கிச் சென்ற

வீரர்களையும் மற்றபடி வேறு அலுவலாகச் சென்ற சிப்பாய்களையும் உடனே சைன்னியத்தில் வந்து ஆஜராகும்படி உத்தர விடுவதற்கே நகராட்சி டமாரத்தை அடிப்பது வழக்கம். இந்த உத்தரவின் காரணமாக மோஹன்தாஸும் திரும்ப சைன்னியத்தில் ஆஜர் கொடுத்துத்தானே ஆகவேண்டும் என்ற சிந்தனை ரதனுடைய சித்தத்தில் சிறிது சபலத்தை உண்டாக்கியது. அந்த நினைவு அடுத்த விநாடி மறைந்து விட்டது. அவனது அகக் கண்முன் அகிலா பூர்ண எழிலுடன் எழுந்து நின்றாள்.

மரணத் தறுவாயில் மனம் தனக்குப் பிடித்தமான பொருளையே தழுவி நிற்கும். அடுத்த நிமிஷம் உலகத்தின் எல்லாப் பந்தங்களையும் விட்டுச் சிட்டாகப் பறந்துவிடப் போகிறோமே என்ற நினைப்பில் இப் பந்தங்களை உயிர் இறுகப் பிடித்துக் கொள்கிறது. ஒரு நிமிஷ சந்தர்ப்பம் அகப்பட்டாலும் அதைப் பூராவாக உபயோகித்து அநுபவிக்க ஆத்திரப்படும் கள்ளக் காதலன்போல், மரணத்தறுவாயிலிருக்கும் மனமும் உடலின் பாசங்களை உள்ளவரையில் அநுபவித்துத் தீர்த்துவிட ஆசைப்படுகிறது. இந்தத் தத்துவத்தை யொட்டித்தான் இறக்கும் தறுவாயிலிருப்பவர்களுக்கு அவர்கள் ஆசைப்படும் உணவுப் பதார்த்தங்களைக் கொடுத்துவிட வேண்டுமென்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் தத்துவத்தையொட்டியேதான் உலகத்தின் சகல பாகங்களிலும் மரண தண்டனையை நிறைவேற்றுமுன், ''கடைசியாக உனக்கு ஏதாவது கோரிக்கை இருந்தால் சொல்லிவிடு'' என்று கேட்கும் பழக்கமும் ஏற்பட்டது. இறுதிச்சமயத்தில் இஷ்டப் பொருள்மீது இச்சை ஏற்படுவது இயற்கையின் தருமம். ஆகையால் ரதன் நம்பிக்கை இழந்து நின்ற அந்தச் சமயத்தில், அகிலாவின் அழகிய உருவம் அவன் மனத்தில் எழுந்து ஆறுதலை அளித்துக் கொண்டிருந்ததில் ஆச்சரியமென்ன இருக்கிறது?

ரதனுடைய அந்த இன்பக் கனவைச் சிறைச்சாலைக் கதவின் பூட்டிலிருந்தும் சங்கிலியிலிருந்தும் கிளம்பிய சத்தம்

சட்டென்று கலைத்தது. இந்தச் சமயத்தில் காவலாளி எதற்காகக் கதவைத் திறக்கிறான் என்று அவன் யோசிக்குமுன்பே சிப்பாய் அவன் அறைக்குள் நுழைந்து, ''மஹாதேவ் சாகிப்! தங்களைத் தங்கள் மனைவியார் பார்க்க வந்திருக்கிறார்கள்'' என்றான்.

ரதன் அந்தச் சிப்பாயைக் கோபத்துடன் நோக்கி, ''சிப்பாய்! என்ன விளையாட்டு இது?'' என்றான்.

''விளையாட்டல்ல சாகிப்! நிஜமாகவே வந்திருக்கிறார்கள். பிரதம நீதிபதி மௌல்வி சாகிபே தங்களைப் பார்க்க அநுமதி அளித்திருக்கிறார்'' என்றான்.

''என் மனைவியா! இதென்னடா கேலிக்கூத்து? எனக்கு மனைவி இனிமேல் மரணம்தான்...'' என்று சொல்லிய ரதனை சிப்பாய் இடைமறித்து, ''அந்த மனைவி நாளன்றைக்கு. இன்று உங்கள் பூலோக நாயகியே வந்திருக்கிறார்கள், சாகிப்! உங்களுக்குக் கொடுத்திருக்கும் அவகாசமோ மிகக் குறைவு. அதை என்னோடு பேசிக்கழிப்பதைவிட மனைவியோடு பேசிக் கழியுங்கள்'' என்று கூறிச் சிரித்துவிட்டு விளக்குடன் வெளியே சென்றான்.

அடுத்த சில நிமிஷங்களில் அகிலாதேவி சிறைக்குள் நுழைந்தாள். உள்ளே நுழைந்ததும் தன் முகத் தாமரையையும் செழுமையாய், கருமையாய் வளர்ந்திருந்த கேச பாரங்களையும் மறைத்து நின்ற முகத் திரையைச் சிறிது விலக்கினாள்.

அகிலாவின் சிலம்பு ஓசை கேட்டுத் திரும்பிய ரதன் அவளைக் கண்டு அசைவற்று நின்றான். நீர் தேங்கிய அவள் கண்களைக் கண்டான். சூரிய வெப்பத்தில் சிக்குண்ட ரோஜாப் புஷ்பம் போல, துக்க அக்கினியால் மெருகு குன்றி வாடி வதங்கியிருந்த அவள் கபோலங்களைக் கண்டான். இரண்டு நாட்களில் ஒரு பெண் இவ்வளவு தூரம் எப்படி இளைத்துப் போனாள் என்று அவன் மனம் பதறியது. அகிலா ஓர் அடிகூட எடுத்து முன்னால் வைக்கவில்லை. அவனை ஒரு முறை கூர்ந்து

கவனித்துவிட்டு நின்ற இடத்திலேயே தலையைக் குனிந்து கொண்டு குழந்தைபோல் விக்கி விக்கி அழ ஆரம்பித்தாள். சந்தர்ப்பம் எதுவானால் என்ன? சயன அறையானாலென்ன, சிறைச்சாலையானால் தானென்ன? பெண்ணிடம் ஆண் வலியச் செல்லவேண்டுமேயொழிய, பெண் தானாக ஆண் பிள்ளையிடம் வந்து ஸ்பரிசிப்பாளா? மௌல்வியிடம் பிசைஷ வாங்கிச் சிறையைத் தேடி இரவில் வந்த அகிலாவுக்கு ரதனை நோக்கி அந்த இரண்டடி எடுத்து வைக்க முடியாமலா போய்விட்டது? இல்லவே இல்லை. இயற்கையின் நீதி அது. பெண் தர்மம் அவனை நாடி அலையச் செய்தது. அவனை நாடி அடைந்ததும் பெண் மனம் அவனைக் கிட்டே அழைத்ததே தவிர, தானாக அவனை நெருங்க இஷ்டப்படவில்லை. ரதன் சந்தாவத்தே அவளை மெல்ல நெருங்கி வந்து அவள் தோள்களின்மேல் தன் இரண்டு கைகளையும் வைத்து "இதென்ன பைத்தியம் அகிலா! இங்கு எதற்காக நீ வந்தாய்? நீ வரக்கூடிய இடமா இது?" என்றான்.

முகத்தை அவனுக்காக அவள் சிறிது உயர்த்தினாள். "நீங்கள் மாத்திரம் இருக்கக்கூடிய இடமா இது?" என்று நடுங்கும் அவள் உதடுகள் உச்சரித்தன. உதடுகளின் நடுக்கம் உடம்பிலும் ஊடுருவி நிற்பதைத் தோள்களின் அசைவுகளிலிருந்து ரதன் தெரிந்து கொண்டான். மெல்ல அவன் கைகள் அவளைத் தன்னை நோக்கி இழுத்து அணைத்துக் கொண்டன. அவளைவிடச் சற்று உயரத்திலிருந்த அவன் தலை நன்றாகக் குனிந்து, விசாலமான தன் மார்பில் இழைந்து நின்ற அவள் கன்னத்தில் லேசாக உதடுகளால் தடவி விட்டு அவள் கழுத்துக்கருகில் புதைந்தது.

வெட்கம் மீறிய ஒரு சந்தர்ப்பம்! அபாயம், இந்த உயிர் இன்னும் ஒருநாள்தான் என்ற அநித்தியத்தால் ஏற்பட்ட ஒரு துடிப்பு ஆகிய இந்தக் கூரிய கத்திகள் அவள் வெட்கச் சீலையைத் தயை தாட்சண்யமின்றிக் கிழித்து எறிந்ததால், அகிலாவின் கைகள் இரண்டும் உயர எழும்பி அவன் தலையை இன்னும் கீழே இழுத்து, பெருமூச்சால் எழும்பி எழும்பித் தாழ்ந்து கொண்டிருந்த

மார்பில் பலமாக அணைத்துக் கொண்டன. புயலால் பாதிக்கப் படாத மலைக்குகையில் நிம்மதியாகப் புரண்டு உறங்கும் சிங்கம் போல அவன் தலை, அவள் மார்பில் நிம்மதியுடன் பதிந்து புரண்டது. அவனுடைய கரங்கள் அவள் இடுப்பைச் சுற்றி வளைத்து ஆறுதலாக மெல்ல அவளைத் தடவித் தடவிக் கொடுத்தன. இரண்டு நாள் பிரிந்திருந்த இரு தேகங்களும் மீண்டும் பிரிந்து விடுமோ என்ற பயத்தில் ஒன்றுடன் ஒன்று இழைந்து இணைந்து கொண்டன. இதில் இருவர் மனங்களும் சிறிது ஆறுதலையும் பெற்றன.

மனம் பேறு, உடல் பேறு, ஒன்றுக்கொன்று சம்பந்தமற்றது என்று சொல்வதில் அர்த்தமில்லை. உடலுக்கு ஒரு சுகம் கிடைத்தால் அது மனதுக்கு ஆறுதலளிக்கிறதே. சாப்பாட்டில் ஆனந்தம், சயனத்தில் ஆனந்தம் என்று உடலின் சுகத்தி லெல்லாம் மனம் சுகப்படும்போது மனத்திலிருந்து உடலைப் பிரித்து வேதாந்தம் பேசுவதால் பிரயோசனமென்ன? மரணத் தறுவாயிலும் துன்பத்தைத் துச்சமாக நினைக்கப் புருஷனுக்கு உறுதியூட்டும் ஸ்திரீ ஆலிங்கனத்தின் அமரசக்தி ஒரு பிரகிருதி விசித்திரம். மனம் வேறு, தேகம் வேறு என்ற வேதாந்தத்தை உடைத்தெறிய இந்தச் சக்தியைவிட ஒரு பெரிய சக்தி உலகத்தில் கிடையாது. பிரியமுள்ள பருவ மங்கையின் அணைப்பில், ஆணுக்கு அணைந்துவிடாத துன்ப அக்கினி உலகத்தில் எதுவுமே இல்லை.

நேரம் போவது தெரியாமல், உணர்ச்சிகளின் சம்பாஷணையைத் தவிர வெளிப்படையான பேச்சேதுமில்லாமல் கட்டித் தழுவி நின்ற அக்காதலரிருவரும் இவ்வுலகையே மறந்தனர். இந்த இன்பப் பிணைப்பிலிருந்து சுயநிலையை முதலில் அடைந்தவன் ரதன் சந்தாவத்துதான். மெள்ள தலை நிமிர்ந்து நின்றான். அவள் கபோலங்களை மெள்ளத் தடவி முகத்தை நிமிர்த்தி, "அகிலா! மிகப் பயங்கரமான இச்சிறைக்கு ஏன் வந்தாய்?" என்று கேட்டான்.

அவள் உடனே பதில் சொல்லவில்லை. அவன் மார்பில் தலையைத் திரும்பவும் சாய்த்துக் கொண்டாள். சிறிது மௌனத்திற்குப் பின் சொன்னாள்: "உங்களுக்கு உண்மை தெரியாது போலிருக்கிறது. தெரிந்தால் இப்படிப் பரிவுடன் என்னிடம் பேசமாட்டீர்கள். என் முகத்தில்கூட விழிக்க மாட்டீர்கள்."

"அகிலா எனக்குத் தெரிய வேண்டியது ஒரு உண்மைதான். அதைத் தெரிந்து கொண்டு விட்டேன். மற்ற உண்மைகள் எப்படியிருந்தாலென்ன? உன் அன்பை இழந்து விட்டேனோ என்று பயந்தேன். அதை இழக்கவில்லை என்ற உண்மை தெரிந்த பிறகு என் உயிரைப்பற்றிக்கூட எனக்குக் கவலை இல்லை"என்று ரதன் சொன்னதும் அகிலா மீண்டும் அழ ஆரம்பித்துவிட்டாள்.

"இந்தா அகிலா! எதற்காக அழுகிறாய்? வா இப்படி" என்று அவளை அறையின் ஓரத்துக்கு அழைத்துக் கொண்டு போய் அங்கிருந்த மஞ்சத்தில் தனக்கு அருகில் உட்காரவைத்துக் கொண்டான். "அகிலா எனக்கு என்ன குறைச்சலென்று அழுகிறாய்? இதோ பார். நான் ராஜீயக் கைதி என்பதற்காக எனக்கு மஞ்சம் கொடுத்திருக்கிறார்கள். கொடுஞ்சிறையிலும் சௌக்கியமாகத்தானிருக்கிறேன்" என்று சொல்லிக் கொண்டே அவளைத் தன் மார்பில் சார்த்திக் கொண்டான். அவன் கை, கலைந்திருந்த அவள் முடியைக் கோதிவிட்டு கண்களில் வழிந்த நீரைத் துடைத்தது. கை துடைக்காமல் விட்ட கன்னத்தில் வழிந்திருந்த நீர்த்துளிகளை அவன் உதடுகள் துடைத்தன.

அகிலா, அவன் கம்பீரமான முகத்தை ஒரு முறை ஏறிட்டுப் பார்த்தாள். "நான் என்ன குழந்தை என்று நினைத்துச் சமாதானம் சொல்லுகிறீர்களா? இந்தச் சிறைகளில் கிடைக்கும் சௌக்கியம் எப்பேர்ப்பட்டதென எனக்குத் தெரியாதென்று நினைக்கிறீர்களா?" என்று சொன்னவள் முகத்தை அவன் மார்பில் புதைத்துக்கொண்டு, "என்னை மன்னித்து விடுங்கள். உங்கள் உயிருக்கு உலை வைத்த யமன் நான்தான்" என்று சொல்லித் தேம்பினாள்.

"நீயாவது என் உயிருக்கு உலை வைப்பதாவது! இதெல்லாம் விதி அகிலா. மனிதன் உயிரை நீக்கவோ அவனுக்கு உயிரைக் கொடுக்கவோ பரம்பொருளுக்குத்தான் சக்தி உண்டு. இதற்கா அழுகிறாய்? என் உயிர் என்ன அவ்வளவு உயர்ந்தது? என்னை பற்றிய உண்மையை நீ அறிந்தால் என் முகத்தில்கூட விழிக்க மாட்டாய்! உத்தமியான உன் கண்ணீர் என் பாவத்தையெல்லாம் அழிக்கட்டும் அகிலா!" எனறான் ரதன்.

"ஐயோ! இதெல்லாம் என்ன வேதாந்தம்? நான் செய்தது என்ன என்பதை அறியாமலே பேசுகிறீர்களே. நான்தான் உங்களைக் காட்டிக் கொடுத்துச் சிறைக்கனுப்பினேன் என்பது உங்களுக்குத் தெரியுமா? இப்பொழுதாவது உண்மையைத் தெரிந்து கொள்ளுங்கள். நான் உத்தமியா என்பதை யோசித்துப் பேசுங்கள். என்னை எது வேண்டுமானாலும் செய்யுங்கள். எத் தண்டனை வேண்டுமானாலும் விதியுங்கள்" என்றாள் அகிலா.

"எந்தத் தண்டனைக்கும் உட்படுவாயா?"

"விதித்துப் பாருங்கள்"

மீண்டும் அவன் கரங்கள் அவளை இறுகத் தழுவின. "வீண் பழி சொல்லும் உன் உதடுகளுக்குத்தான் முதலில் தண்டனை" என்று அவன் வாய் அவள் காதுக்கு மட்டும் கேட்கும்படியாக முணுமுணுத்தது. பிறகு அவள் உதடுகளிலிருந்து வெகுநேரம் பேச்சே கிளம்பவில்லை.

பேச்சுக் கிளம்பியபோது அவள் வாயிலிருந்து வந்த வார்த்தைகள் இவைதாம்: "இந்தப் பைத்தியம் பிடித்துவிட்டால் ஆண்களுக்குச் சுயநிலையே மறந்து போய்விடுமோ? அபாயத்திலும் இதென்ன விளையாட்டு..."

"அபாயந்தான். அதை மறக்க இது உபாயமில்லையா? மனிதன் சதா துன்பத்தையே நினைத்துக் கொண்டிருந்தால் இன்பப்படும் நேரம் எது அகிலா?"

அவன் தைரியத்தை நினைத்து ஆச்சரியப்பட்டாள் அகிலா. சிறையிலிருப்பவன், அதுவும் இன்னும் ஒரு நாளில் உயிர்விடப்

போகிறவன், தான் ஏதோ தன் சொந்த அரண்மனை யிலிருக்கிற மாதிரி நடந்து கொள்வது அவளுக்கு ஆச்சரியத்திலும் ஆச்சரிய மாயிருந்தது. அதைப்பற்றி வாய்விட்டும் சொன்னாள்.

நாளைக்கு மறு நாளைப்பற்றி என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்றாள்.

''நாளையைப் பற்றியே எனக்குக் கவலை இல்லையே. அதற்கு மறுநாளைப் பற்றி என்ன கவலை? அகிலா! நீ அருகிலி ருக்கும்போது அந்த யோசனையில் நான் காலத்தை விரயமாக்கு வானேன்? யுத்த வீரன் உயிர் என்றும் நிலையற்றது. அதைப்பற்றிக் கவலைப்பட்டு என்ன பயன்? சுவர்க்கத்திலிருப்பவன், 'அடுத்த விநாடி நரகத்தில் விழுந்தால் என்ன செய்வது?' என யோசிப்பது மடத்தனமல்லவா? அகிலா, நீ அருகிலிருந்தால் உன்னைப் பற்றித்தான் எனக்கு யோசனை, நீ என் மேல் கடிந்து கொண்டதால் ஏற்பட்ட கவலை இன்று போய் விட்டது. இதைவிட பாக்கியம் எனக்கு என்ன வேண்டும்?''

''ஐயோ! இதென்ன பாக்கியம்! இதென்ன பேச்சு! என்மேல் உங்களுக்குச் சிறிதும் கோபமில்லையா?''

''எதற்காகக் கோபம்? நீ செய்ததெல்லாம் தவறான ஓர் அபிப்பிராயத்தில் செய்தாய். அது தவறு என்று தெரிந்ததும் என்னிடம் வந்துவிட்டாயே.''

''நான் வந்து பயனென்ன? உங்கள் உயிரைக் காப்பாற்ற முடியுமா? உலை வைக்கத்தான் என்னால் முடிந்தது. உங்கள் உயிரையே பலி கொடுக்க முன் வந்தேனே. என்ன பெண் ஜன்மம்! பெண்கள் பொறாமைத் தீக்குச் சரியான விட்டில்கள். ஐயோ! அந்த இந்திரஸிங்கின் பெண்ணைப் பார்த்ததும், அவளுக்குத்தான் நீங்கள் சொந்தம் என்று நினைத்ததும் என் உடல் எப்படிப் பதறியது? ஏன் பதறியதோ? கணவனை வேசி வீட்டுக்குத் தலைமேல் சுமந்து சென்ற கற்புக்கரசி பிறந்த நாட்டிலேதானே நானும் பிறந்தேன்? எனக்கு ஏன் அந்தப் பொறுமை இல்லை?

ஆழமான பக்தியில்லை? நான் ஒரு பெண் என்று நினைக்கிறீர்களா? இல்லை இல்லை. பேயினும் கேடு கெட்ட ஒரு ஜன்மம்'' என்று அகிலா கூறினாள். மலைச்சுனை போல் அவள் கண்கள் நீரைக் கொட்டின.

''அகிலா, நீயும் அந்த உத்தமிக்குச் சிறிதும் குறைந்தவளல்ல. என்மேல் மிதமிஞ்சிய அன்பிருந்ததால்தானே உன் உள்ளம் அப்படித் துடித்துக் கொதித்து எழுந்தது? இன்னொருத்தியின் கணவன் மணமாகாதது போல் நடித்து ஏமாற்றினான் என்ற நினைப்பில் யார்தான் வேறு விதமாக நடந்திருக்க முடியும்?''

''நீங்கள்தான் மணமாகவில்லையென்று சொன்னீர்களே. அந்த உண்மையை என் பாழும் மனம் கேட்கவில்லையே. பொய்யைத்தானே நிஜமென்று நம்பியது? நேற்று இந்திரஸிங் வந்து உண்மையைச் சொல்லாதிருந்தால் பொய்யைத்தானே நான் நிஜமென்று நினைத்திருப்பேன். உண்மைக்கும் பொய்க்கும் வித்தியாசம் தெரியாத மனம் தூய்மையானதா?''

''அகிலா! இந்த வருத்தமே உன் தூய்மைக்கு அத்தாட்சி. தூய்மையற்ற மனம் தவற்றை உணர்ந்து தவிக்காது. நீ உத்தமியாகையால் உன் மனம் சிறு தவற்றையும் பெரிதாகக் காட்டுகிறது. பெரிய பெரிய தவறுகளைச் செய்துவிட்டு மனத்தில் ஈரமில்லாமல் எவ்வளவு பேர் நடமாடுகிறார்கள் தெரியுமா? அகிலா! நீ தவறு ஏதாவது செய்தால் என்னிடம் மிதமிஞ்சிய அன்பினால் செய்தாய். இஷ்டப்பட்ட புருஷனிடம் அன்பை அதிகமாகச் செலுத்துவது குற்றமில்லையே. அகிலா! உன்னைப் போலப் பெண்கள் ஆயிரத்தில் ஒருவர் கூடக் கிடையாது. உன்னிடம் கெடுதல் எப்படி ஒட்டும்? தாமரை இலையில் தண்ணீர் எப்படி ஒட்டுவதில்லையோ, அம்மாதிரியே உன்னைப் போன்ற உத்தம ஸ்திரீகளிடம் கெடுதல் ஒட்டுவதில்லை. உன்னைப் போன்ற பெண்கள்தாம் இந்த நாட்டுக்கு ஜீவசக்தி அளிக்கிறார்கள். உன் மனத்தில் தூய்மையும் அன்பும் இல்லா விட்டால், இந்தச்

சிறையை நாடி நீ வர வேண்டிய அவசியமென்ன? அதுவும் என் மனைவி என்ற பெயரில்..."

"மனைவி என்ற பெயரிலா! மனம் இணங்கியபின் மனைவிதானே!"

"அகிலா! அப்படி உன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளாதே. என் உயிர் இன்னும் ஒரு நாள் இருக்கப்போகிறது.அதற்குப்பின் உன் வாழ்க்கை..."

"உங்களுடன் சுவர்க்கத்தில்..."

"இதென்ன பைத்தியம் அகிலா?" என்று ரதன் சொன்னானே தவிர அவன் கைகள் அணைப்பைப் பலப்படுத்திக் கொண்டன.

அகிலா சொன்னாள்: "நான் ராஜபுத்திர ஸ்திரீயென்பதை மறந்து விட்டீர்களே. இன்னொரு புருஷன் என் தேகத்தைத் தொட அனுமதிப்பேன் என்கிறீர்களா?"

நேரம் போவது தெரியாமல் பேசிக்கொண்டிருந்த அவ்விருவர்களையும் காவலாளி வந்து கலைத்து, "நாழிகையாகிவிட்டது" என்றான். "இதோ ஒரு நிமிஷம்; வந்து விட்டேன்" என்று அகிலா கேட்டுக் கொண்டாள். காவலாளி அகன்றதும் ரதன் முகத்தோடு தன் முகத்தை இணைத்துக் கொண்டு, "நீங்கள் யார்? உங்கள் பெயரென்ன? இனி மேலும் உண்மையைச் சொல்லமாட்டீர்களா?" என்று கெஞ்சினாள்.

"சொல்ல எனக்குத் தைரியமில்லை அகிலா. என் பெயரைக் கேட்டதும் என்னைப் பெரிதும் நீ வெறுப்பாய். மரணத் தறுவாயில் உன் வெறுப்பைப் பெற இஷ்டம் இல்லை" என்றான் ரதன்.

"ஐயோ! உங்களை ஒரு நாளும் வெறுக்கமாட்டேன். என்னை நம்புங்கள். நீங்கள் யாராயிருந்தாலும் வெறுக்கமாட்டேன். சந்தேகமிருந்தால் என் மனத்தைக் கேளுங்கள். நான் உங்களை வெறுக்க முடியாதென்று இதோ என் மனம் சொல்லுமே" என்று அவன் கரத்தைப் பிடித்துத் தன் இருதயத்தில் வைத்துக் கொண்டாள் அகிலா.

அவன் கை அவள் இதய சோதனையிலிருந்ததேயொழிய உண்மையைச் சொல்ல அவன் மனம் இடங்கொடுக்கவில்லை. "அகிலா! நான் இறக்கும்வரையில் உன் அன்பு எனக்கு இருக்கட்டும். இறக்கும் முன் ஒரு கடிதத்தை எழுதி வைத்து விட்டு இறக்கிறேன். அதில் என்னைப்பற்றிய முழு விவரங்களும் இருக்கும். இதற்குமேல் என்னை வற்புறுத்தாதே அகிலா" என்றான் ரதன்.

காவலாளி மீண்டும் வரும் சத்தம் அவர்களை எச்சரித்தது. ரதன் எழுந்து அவள் சேலையின் முந்தானையை இழுத்துத் தலைக்குமேல் போர்த்திவிட்டு, "அகிலா! தைரியமாகப் போய் வா. நீ க்ஷத்திரிய ஸ்திரீ. ராஜபுத்திர ஸ்திரீகள் மரணத்தைக் கண்டு பயப்பட மாட்டார்கள். இந்தப் பூமியின் துன்பங்களைத் தங்கள் இரத்தத்தால் தீர்த்த ராஜபுத்திர ஸ்திரீகளை மனத்தில் நினைத்துக் கொள். அவர்களால்தான் இந்த பூமி ஜீவபூமியாக இருந்து வருகிறது. அவர்கள் வம்சத்தில் பிறந்த உனக்கு நானா தைரியம் சொல்ல வேண்டும்? வீரனின் மனைவியாக நடந்துகொள். போய்வா அகிலா" என்றான்.

பேசமுடியாமல் அகிலா அவன்மீது ஒருமுறை பரிதாபத்துடன் கண்களைத் திருப்பினாள். காவலாளியும் அவளை அழைத்துச் செல்ல விளக்குடன் உள்ளே நுழைந்தான்.

அத்தியாயம்-21

இரண்டு கைதிகள்

சென்ற அத்தியாயத்தின் சம்பவங்கள் நிகழ்ந்த அதே இரவில் சாரங்கபூருக்கு இரண்டு காத தூரத்துக்கு அப்பாலிருந்த ஒரு டேராவில் இரண்டு பேர் ஒருவரையொருவர் கவலை தோய்ந்த முகத்துடன் உற்றுப் பார்த்துக் கொண்டு நின்றார்கள். சிறிது நேரத்திற்கெல்லாம் அவர்களில் ஒருவன் பெருமூச்சு விட்டு ஏதோ யோசனையுடன் தலையை அசைத்து, டேராவின் ஒரு மூலையில் இருந்த இடைவெளியின் வழியாக வெளியே நோக்கினான். கண்ணுக்கெட்டும் தூரம் வரையில் ஒரே டேராக்களும் விளக்கு களும் காவல் வீரர்களின் நடமாட்டமுந்தான் தெரிந்தன. இவ்வளவு கெடுபிடியான காவலிலிருந்து யமனால்கூடத் தப்ப முடியா தென்பதைத் தெரிந்துகொண்ட அந்த வீரன், திரும்பி டேராவின் மத்திக்கு வந்து தனது ஆசனத்தில் அமர்ந்து எதிரே நின்ற அந்த மற்றொரு வீரனைப் பார்த்து, "தப்ப எந்த விதமான வழியும் இல்லை மோஹன்தாஸ்" என்றான்.

"அது தெரிந்த விஷயந்தானே ஜெய்சிங் மகராஜ்!" என்றான் மோஹன்தாஸ். அவன் பேச்சில் பெரிய அலுப்பு தொனித்தது. "நாமே இந்த ஸ்திதியில் இருக்கிறோம். ரதன் மகாராஜின் நிலைமையோ மிகவும் அபாயகரமானது. ஜெய்மல் அவரை உயிருடன் வைப்பான் என்று எனக்குத் தோன்றவில்லை" என்றான் மோஹன்தாஸ் தொடர்ந்து."

"அதில் என்ன சந்தேகம் மோஹன்தாஸ்? தன் ஜன்ம வைரியைத் தொலைக்க இந்த ஒரு சந்தர்ப்பந்தானே ஜெய்மல்லுக்கு? அதை அவன் கைவிடுவானா?" என்றான் ஜெய்சிங்.

ரதனைப் பற்றிய யோசனையில் மீண்டும் சிறிது நேரம் இருவரும் மௌனம் சாதித்தனர். பிறகு ஜெய்சிங் கேட்டான். "நீ எப்படி இவர்களிடம் சிக்கிக் கொண்டாய் மோஹன்தாஸ்?"

"ரதன் மஹராஜை சாரங்கபூரில் தேடினேன். அகப்பட வில்லை. சரி, அவர் செல்லவேண்டிய இடம் உஜ்ஜயினிதானே என்று உஜ்ஜயினிக்கு பிரயாணமானேன். நடுவழியில் நேராகச் சிங்கத்தின் வாய்க்குள் நுழைவதுபோல தயால்ஸா சைன்னி யத்தின் வாய்க்குள் நுழைந்துவிட்டேன். அன்று முதல் காவலில்தான் இருக்கிறேன். நீங்கள் ஏன் சிறைப் பட்டிருக்கிறீர்கள்?"

"நான் அகப்பட்டுக் கொண்டதற்கு அந்த மடையன் ஜெய்மல்தான் காரணம். எதிரி சைன்னியம் சாரங்கபூர் ரஸ்தாவைக் கத்தரித்து விட்டது என்பதைக்கூட அறியாமலே என்னை ஆஜ்மீருக்கு அனுப்பியிருக்கிறான். இவ்வளவு முட்டாளான ஒருவன் தயால்ஸாவிடமிருந்து எப்படி சாரங்கபூரைக் காப்பாற்றப் போகிறான்? அது கிடக்கட்டும் மோஹன்தாஸ், இந்த தயால்ஸாவைப் பார்த்திருக்கிறாயா?"

"இங்கு கைதியான பிறகு பார்க்கவில்லை. நாமும் ராஜபுத்திரர்களாக மானத்துடன் சித்தூரிலிருந்த காலத்தில் பார்த்ததுதான்."

"பின் உன்னை யார் விசாரித்துக் காவலில் வைத்தது?"

"நம்மைப் போன்ற கைதிகளையெல்லாம் தயால்ஸா நேரில் விசாரிப்பதில்லை. யாராவது உபசேனாதிபதி விசாரிப்பான். அவன் முடிவுக்கு இரண்டாவது கிடையாது. அவன் சிறை வைத்தால் வைத்தது; விடுதலை செய்தால் செய்தது. விடுதலைக்கும் ஒரு மார்க்கம் உண்டு."

ஜெய்சிங்கின் கண்களில் சிறிது நம்பிக்கை உதயமாயிற்று. "அது என்ன மார்க்கம்?" என்று கேட்டான்.

"தயால்ஸா சைன்னியத்தில் சேர்ந்து மொகலாயருடன் போராடுவதாயிருந்தால் விடுதலை கிடைக்குமாம்" என்றான் மோஹன்தாஸ்.

"அதெப்படி முடியும் மோஹன்தாஸ்? மொகலாயர்களிடம் சேவை செய்துகொண்டிருப்பவன் யுத்த சயமத்தில் அவர்களைக் கைவிட்டு எதிரி பக்கம் சேருவது க்ஷத்திரிய தர்மமாகுமா?"

''ஆகாதல்லவா? ஆகையால்தான் கைதியாயிருக்க வேண்டு மென்று சொல்கிறார்கள். நாம் நிரந்தரக் கைதிகளாகக் கையைக் கட்டிக் கொண்டு இங்கே உட்கார்ந்துவிடலாம். அங்கு ரதன் மஹராஜ் தலையை ஜெய்மல் நிம்மதியாகச் சீவிவிடுவான். ஒருவேளை யுத்தம் முடிந்து நாம் விடுதலையடைந்தால் மீண்டும் மொகலாயர்களிடம் சேவைக்கு அமர்ந்து நிரந்தர அடிமைகளாகக் காலத்தைக் கழித்து விடலாம்'' என்று மோஹன்தாஸ் மிகுந்த அலுப்புடன் கூறினான்.

ஜெய்ஸிங் மஞ்சத்திலிருந்து எழுந்து வந்து மோஹன்தாஸின் தோள் மேல் அன்புடன் கையை வைத்தான். ''மோஹன்தாஸ்! எனக்கு ரதனிடம் பிரியமில்லையென்று நினைக்கிறாயா? என் உயிர் கொடுத்தாவது அவனை விடுவிக்க முடியுமானால் கண்டிப்பாய் விடுவிப்பேன். ஆனால் கடமையைக் கெடுத்துக்கொண்டு அவனை விடுவிக்க முடியாது. அந்த மாதிரி விடுதலை பெறுவதை ரதன் விரும்புவானென்று நினைக்கிறாயா?'' என்று கேட்டான் ஜெய்ஸிங்.

மோஹன்தாஸ் மிகுந்த வருத்தத்துடன் தலையை அசைத்தான். ஜெய்ஸிங் சொல்வது முற்றும் உண்மை என்பது அவனுக்குத் தெரியும். மோஹன்தாஸ் அந்த நேரத்தில் அகிலா தேவியை சபித்தான். 'எந்த வேலையில் ரதன் மஹராஜ் அகிலா தேவிக்காகப் பந்தயம் போட்டாரோ அந்த வேளையிலிருந்து அவரைச் சனியன் பிடித்துக் கொண்டு விட்டது' என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். கடைசியில் ஏதோ யோசனையுடன். ''மஹாதேவ்ஸிம்ஹன் உண்மையில் ரதன் சந்தாவத் என்பது ஜெய்மல்லைத் தவிர யாருக்குமே தெரியாதா?'' என்று கேட்டான்.

''சாரங்கபூரில் யாருக்கும் தெரிய நியாயமில்லை. ரதனே என்ன காரணத்தாலோ தன் பெயரை அடியோடு மறைக்கிறானே'' என்றான் ஜெய்ஸிங்.

இவர்கள் இந்த சம்பாஷணையில் இருக்கையில் டேராவைக் காவல் புரிந்த வீரன் ஒருவன் உள்ளே நுழைந்து, ''உங்கள் விசாரணை இன்னும் சற்று நேரத்தில் ஆரம்பமாகும். புறப்படச் சித்தமாயிருங்கள்'' என்று ஆக்ஞாபித்துச் சென்றான். ஜெய்சிங் புறப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டான். டேராவின் நடுத்தூணில் தொங்கவிட்டிருந்த தனது போர்ச் சட்டையை மாட்டிக் கொண்டான். ''மோஹன்தாஸ்! நான் சென்று வருகிறேன். திரும்ப என்னை இதே டேராவில் காவல் வைப்பார்களோ என்னவோ, சொல்ல முடியாது. நாம் சந்திப்பது இதுவே கடைசி முறையாயிருக்கலாம்'' என்று சொல்லிவிட்டுக் கிளம்பத் தயாரானான் ஜெய்சிங்.

''எல்லாம் கடவுள் செயல்'' என்றான் மோஹன்தாஸ்.

உள்ளே நுழைந்த காவலாளி தன்னைப் பின்தொடரும்படி ஜெய்சிங்குக்கு சைகை காட்டினான். ஜெய்ஸிங் பேசாமல் அவனைப் பின் தொடர்ந்தான். கூடாரத்துக்கு வெளியில் அவனை ஏற்றிச் செல்ல ஒரு குதிரை சேணம் போட்டுத் தயாராக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. ஆயுதம் தாங்கிய வீரர்கள் இருவர் அக் குதிரைக்குப் பக்கத்தில் காவல் புரிந்து நின்றனர்.

''ஜெய்ஸிங்! நீங்கள் தப்பிச் செல்ல முயல்வதில்லையென்று க்ஷத்திரிய தர்மத்தின்மேல் உறுதி கூறும் பட்சத்தில், உங்கள் கைகளைக் கட்ட வேண்டிய அவசியமிருக்காது. உங்கள் சம்மதம் எப்படி?'' என்றான் அவ்விரு வீரர்களில் ஒருவர்.

அவர்கள் கோரிகையை மறுப்பதால் பலனேதுமில்லையென்பதைத் தெரிந்து கொண்ட ஜெய்ஸிங், அவர்கள் கேட்டபடி உறுதி கூறிக் குதிரைமேல் ஏறி லகானைப் பிடித்துக் கொண்டான். காவல் வந்த வீரர்களிருவரும் அவனிடம் மிகுந்த மரியாதையுடனே நடந்து கொண்டனர்.

''இப்போது நாம் எங்கு போகிறோம்?'' என்று ஜெய்ஸிங் கேட்டான்.

''விசாரணைக்கு'' என்றான் வீரர்களில் ஒருவன்.

''விசாரிக்கக்கூடிய தலைவர்கள் இந்தக் கூடாரங்களில் யாருமில்லையா?''

''எவ்வளவோ பேர் இருக்கிறார்கள்.''

''அப்படியானால் நாம் குதிரைமேல் செல்லவேண்டிய அவசியம்?''

''நாம் போய்ச் சேரவேண்டிய இடம் சிறிது தூரத்திலிருப்பதால்தான்.''

''அந்த இடம் எது?''

''சீக்கிரம் தெரிந்து கொள்வீர்கள்.''

ஜெய்ஸிங், தன்னை யார் விசாரிக்கப் போகிறார்கள்; எங்கே கொண்டு போகிறார்கள் என்ற விஷயங்களை அறிய எவ்வளவோ முயன்றும் பயனில்லை. காவல் வந்தவர்கள் கலகலப்பாய்ப் பேசினார்களேயொழிய, அவர்கள் வாயிலிருந்து உதவும்படியான எந்தத் தகவலையும் வரவழைக்க ஜெய்ஸிங்கால் முடியவில்லை. ஆகவே அவன் பேச்சை நிறுத்திக்கொண்டு மௌனமாகவே பிரயாணம் செய்தான். இப்படிச் சிறிது நேரம் பல கூடாரங்களைத் தாண்டி வளைந்து வளைந்து பிரயாணம் செய்த பிறகு ஒரு பெரிய டேராவுக்கு முன்னால் குதிரைகள் நின்றன. ஜெய்ஸிங் குதிரையிலிருந்து இறங்கினான். காவல் வந்தவர்களில் ஒருவன் மற்றவனை ஜெய்ஸிங்குக்குக் காவல் வைத்துவிட்டுக் கூடார வாயிலில் நின்ற வீரனிடம் ஒரு கடிதத்தை நீட்டினான். அந்தக் கடிதத்துடன் உள்ளே சென்ற காவலாளி திரும்பிவந்து, ''எஜமான் கைதியைச் சிறிது நேரத்தில் பார்ப்பார்கள்'' என்று கூறிச் சற்றுத் தாமதிக்கும்படி உத்தரவிட்டான். ஜெய்ஸிங் கூடாரத்தின் உள்ளறைக்கு முன்னால் சிறிது நேரம் காக்க வேண்டியதாயிற்று. கொஞ்ச நாழிகைக் கெல்லாம் தலையிலிருந்து கால்வரை போர்க்கோலம் அணிந்த ஒருவன் வெளியே வந்து உள்ளறையை மறைத்து நின்ற படுதாவை விலக்கி உள்ளே செல்லும்படி ஜெய்ஸிங்குக்குச் சமிக்ஞை செய்தான்.

இவர்களுடைய ஆர்ப்பாட்டம் மொகலாயர்களுடைய ஆர்ப்பாட்டத்தைவிட மிகக் கடுமையாயிருப்பதைப் பார்த்து

ஆச்சரியப்பட்டுக்கொண்டே ஜெய்ஸிங் உள்ளே நுழைந்தான். கூடாரத்தின் உட்பக்கம் மிக விசாலமாயிருந்தது. நடுவில் இரண்டு மூன்று மஞ்சங்கள் போட்டிருந்தன. அந்த மஞ்சங்களில் ஒன்றில் உட்கார்ந்து இன்னொரு மஞ்சத்திலிருந்த சதுரங்கப் பலகையில் காய்களை நகர்த்திக் கொண்டிருந்தார் ஒரு பெரிய மனிதர். அவருக்கு இரண்டு பக்கத்திலும் பூர்ணமாக ராணுவ உடைகளை அணிந்த இருவர் பயபக்தியுடன் நின்று கொண்டிருந்தார்கள். சதுரங்கம் ஆடிக்கொண்டிருந்த மனிதர் தாமே இரண்டு பக்கத்துக் காய்களையும் நகர்த்தி ஆடுவதைக் கண்டு ஜெய்ஸிங் ஆச்சரியப் பட்டான். 'சதுரங்கம் இரண்டு பேர் ஆடுகிற ஆட்டமல்லவா? ஒருவரே தம் இஷ்டப்படி காய்களை நகர்த்தினால் என்ன அர்த்தம்?' என்று ஜெய்ஸிங் யோசித்தான். சதுரங்கம் ஆடிக்கொண்டிருந்த மனிதர், கைதி விசாரணைக்கு வந்திருப்பதைச் சிறிதும் லட்சியம் செய்யாமல், குனிந்த தலை குனிந்தபடியே வெகு நேரம் காய்களை நகர்த்திக் கொண்டிருந்தார். தலை குனிந்திருந்தபடியால் அவர் முகம் ஜெய்ஸிங்குக்குச் சிறிதுகூடத் தெரியவில்லை. ஆனால் ராணுவ உடை தரித்துப் பக்கத்தில் இருந்த ஒரு மனிதன் முகத்தைக் கண்டு மட்டும் சற்று ஜெய்ஸிங் பிரமித்தான். ரதன் சந்தாவத்தை தான் கைது செய்துகொண்டு போனபோது மால்தேவன் வீட்டில் சந்தித்த இந்திரஸிங் இங்கு என்ன செய்கிறார் என்று யோசித்துக் கொண்டே இருக்கையில், இந்திரஸிங் மெதுவாகக் குனிந்து சதுரங்கமாடிக் கொண்டிருந்தவரிடம் காதில் ஏதோ ரகசியமாகச் சொன்னார். சதுரங்கத்தில் லயித்திருந்த மனிதர் மெள்ளத் தலையைத் தூக்கி ஜெய்ஸிங் இருந்தபக்கத்தில் தமது கண்களைத் திருப்பினார். ஜெய்ஸிங் ஸ்தம்பித்துப் போனான். யாருடைய பெயர் ஔரங்கசீப்புக்கு சிம்ம சொப்பனமோ அந்த மந்திரி தயால்ஸாவின் தீக்ஷண்யமான கண்கள் தன்னை ஊடுருவிச் செல்வதை ஜெய்சிங் கண்டான்.

அத்தியாயம் 22

தயால்ஸாவின் சதுரங்கம்

தயால்ஸாவை அறியாதவர்கள் அந்தக் காலத்தில் பாரத பூமியில் யாருமே இல்லை. நேரில் பார்த்தவர்கள் சில பேர்தான். நேரில் பார்க்காவிட்டாலும் அவர் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் பயபக்தியுடன் தலைவணங்கிய ஹிந்துக்கள் அனந்தம். ஔரங்கசீப்பின் கொடுமையைத்தடுத்து நிறுத்தக் கடவுள் அனுப்பிய ஒரு ஆயுதமாகவே ஹிந்துக்கள் தயால்ஸாவைக் கருதி வந்தார்கள். ஹிந்துக்களுக்கு இழைக்கப்பட்ட ஒவ்வொரு அநீதிக்கும் பதில் அநீதியைத் தயால்ஸா இழைத்ததாகச் சரித்திரம் கூறுகிறது. கொடுமைக்குப் பதில் கொடுமை செய்யலாமா என்ற சந்தேகத்தை முன்னிட்டுச் சில சரித்திர ஆசிரியர்கள் தயால்ஸாவின் முறை களை ஆட்சேபித்து எழுதியிருக்கிறார்கள். ஆனால், கர்னல் டாட் என்ற ஆசிரியர் மட்டும் தயால்ஸா இம்முறைகளைக் கையாள முனைந்ததற்கு ஔரங்கசீப்பின் எல்லை கடந்த குரூரந்தான் காரணம் என்று கூறுகிறார். சரித்திர ஆசிரியர்களின் அபிப்பிராயங்கள் சில விஷயங்களில் வேறுபட்டிருந்தாலும் நமது கதை நடக்கும் காலத்தில் ராஜபுதனம் பிழைத்ததற்குத் தயால்ஸா ஒரு முக்கிய காரணம் என்பதை மட்டும் எந்தச் சரித்திர ஆசிரியரும் மறுக்கவில்லை.

இப்பேர்ப்பட்ட மந்திரி தயால்ஸா ராணுவ இனத்தைச் சேர்ந்தவரல்ல. அவருடைய பெரியோர்கள் பரம்பரையாக ராஜாங்க வரிவசூலையும் நீதி நிர்வாகத்தையுமே கவனித்து வந்தார்கள். தாயல்ஸாவும் வெகுநாள் சாதாரண மந்திரியாகவே இருந்து வந்தார். ஆனால், ராஜபுதனத்தின் நிலைமையும் இந்துக்களின் மேல் மொகலாயர் விளைவித்த கொடுமைகளும் அவரை இராணுவ மார்க்கத்தில் திருப்பின. ராணுவ மார்க்கத்தில் திரும்பிய சில நாட் களுக்குள்ளேயே தயால்ஸாவின் ராணுவத்திறமை எத்தன்மைய

தென்பதை ராஜபுதனம் புரிந்துகொண்டது. யுத்த முன்னணிக்கு செல்லாமல் டேராவுக்குள் உட்கார்ந்து அமைதியுடன் திட்டமிட்டுச் சைன்னியங்களை நடத்தி அவர் பெற்ற வெற்றிகள் அனந்தம். அவர் வெற்றிகளால் மொகலாய சாம்ராஜ்யத்தின் அஸ்திவாரம் கிடுகிடு என்று ஆடத் தொடங்கியது. சாதாரண மந்திரியொருவன் திடீரென்று ராணுவத் தலைவனாகி அமானுஷ்யமான காரியங் களை எப்படிச் சாதிக்கிறான் என்பதை ஔரங்கசீப்பே பலமுறை நினைத்து ஆச்சரியப்பட்டார்.

அப்பேர்ப்பட்ட தயால்ஸாவின் முன்னிலையில் விசாரணைக்கு நின்ற ஜெய்ஸிங் அவரை நன்றாக உற்றுப் பார்த்தான். தயால்ஸாவை அவன் பார்ப்பது முதல் தடவையல்ல. ஏற்கெனவே இரண்டொருமுறை பார்த்திருக்கிறான். ஆனால் அவர் புகழ் இவ்வளவு உச்சியை அடைந்தபின் பார்ப்பது இதுதான் முதல் தடவை. தயால்ஸா பலிஷ்டனான மனிதரல்ல. ஒல்லியாய் உயரமாகத்தானிருந்தார். ஆனால் அவர் முகத்தையும் தீக்ஷண்யமாக ஜொலிக்கும் அவர் கண்களையும் பார்ப்பவர்கள் மிகப்புத்தி கூர்மையுள்ள ஒருமனிதர் முன்னால் தாங்களிருப்பதை உணர்ந்து கொள்வார்கள். தயால்ஸாவின் கண்கள் மனிதனுடைய இருதயத்தை ஊடுருவிப் பார்க்கும் சக்தியுள்ளவை. முகமோ அவர் மனத்துக்குள் எழும் உணர்ச்சிகளைச் சிறிதும் பிரதிபலிக்காத ஒரு கற்சிலை.

தயால்ஸா, ஜெய்ஸிங்கை ஒரு நிமிஷ நேரம் உற்று நோக்கிவிட்டுப் பக்கத்திலிருந்து ஒரு கடிதத்தை எடுத்துப் பார்த்தார். ஜெய்ஸிங்கிடமிருந்து தயால்ஸாவின் வீரர்கள் கைப்பற்றிய ராஜாங்கக் கடிதம் அது. அதைக் கூர்ந்து கவனித்த தயால்ஸா, "என்ன ஜெய்ஸிங்! இந்தக் கடிதத்தை ஆஜ்மீரில் யாரிடம் சேர்க்க உமக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது?" என்று கேட்டார். ஜெய்ஸிங் உடனே பதில் சொல்லவில்லை. சற்று ஏதோ யோசித்தான். பிறகு தயால்ஸாவை நோக்கி, "மந்திரியவர்களே! நான் கடமையில் நம்பிக்கையுள்ள ராஜபுத்திரன். நான் மொகலாயர் களிடம் சேவை செய்து ஊதியம் பெறுகிறேன். அந்த இடத்தைப்

பற்றிய எந்தத் தகவலையும் நீங்கள் என்னிடமிருந்து எதிர்ப்பார்க்க வேண்டாம்'' என்றான்.

தயால்ஸாவின் உதடுகளில் புன்முறுவல் தோன்றிற்று. ''ஜெய்ஸிங்! நானும் ஒரு ராஜபுத்திரன் என்பதை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். அதுவும் மொகலாய சம்பந்தத்தால் சிறிதும் கறைபடாத ராஜபுத்திரன் என்பதும் ஞாபகமிருக்கட்டும். ஆகையால் க்ஷத்திரிய தர்மத்துக்கு மீறிய எதையும் நான் உம்மிடமிருந்து அறியப் பிரியப்படவில்லை. தவிர எனக்குத் தெரியாத எதையும் உம்மால் சொல்லவும் முடியாது. உதாரணமாக இதோ பாருங்கள். இந்தக் கடிதத்தின் முத்திரைகளை நான் உடைக்கவில்லை. ஆனால் இதிலிருக்கும் விஷயம் எனக்குத் தெரியும். இதோ கடிதத்தை நீங்களே பாருங்கள்'' என்று ஜெய்ஸிங்கிடம் கடிதத்தை நீட்டினார்.

ஜெய்ஸிங் கடிதத்தை வாங்கி முத்திரைகளைப் பார்த்தான். ஜெய்மல் வைத்த முத்திரைகள் ஒன்றுகூடக் கலையாமலிருந்தன. கடிதத்தைத் திருப்பித் தயால்ஸாவிடம் கொடுத்தான். தயால்ஸா, அந்தக் கடிதத்தை ஒரு மூலையில் விட்டெறிந்துவிட்டு ஜெய்ஸிங்கைப் பார்த்து, ''அந்தக் கடிதத்தை நவாப் ஆஸீமிடம் கொடுக்கும்படி ஜெய்மல் உங்களுக்கு உத்தரவிட்டிருக்கிறான். ஆனால் ஆஸீம் ஆஜ்மீரில் இல்லையென்பது உங்களுக்கு தெரியுமா?'' என்று கேட்டார்.

ஜெய்ஸிங்குக்கு ஆச்சரியத்தின் மேல் ஆச்சரியமாகி விட்டது. தனக்கு ஜெய்மல் இட்ட உத்தரவைத் தயால்ஸா எப்படித் தெரிந்துகொண்டார் என்று யோசித்தான். தயால்ஸா மேற் கொண்டு சொன்ன விஷயங்கள் அவனுக்குப் பிரமிப்பை அளித்தன. ''இந்தக் கடிதத்தை நீங்கள் ஆஜ்மீருக்குக் கொண்டு போயிருந்தால் உமக்கு அங்கு காத்திருந்தது சிறைவாசம் என்பது உமக்கு எப்படித் தெரியப் போகிறது? ஒரு எதிரியை ஜெய்மல் சாரங்கபூரில் ஒழித்து விட ஏற்பாடு செய்தான். இன்னொரு எதிரியான உம்மை ஆஜ்மீரில் சிறைப்படுத்த ஏற்பாடு செய்திருந்

திருக்கிறான். ஆஜ்மீரில் இப்பொழுதிருப்பது ஆஸீமல்ல. டைபர்கான் அங்கிருக்கிறான். ஆஸீமுக்குப்பதில் ஆஜ்மீரில் தற்சமயம் டைபர்கான் தலைவனாகையால் இந்தக் கடிதத்தை நீர் டைபர்கானிடம் சேர்ப்பிக்கும்படியாயிருக்கும். டைபர்கான் உம்மை உடனே சிறைப்படுத்த இதில் ஏதாவது செய்தி இருக்குமென்பதில் எனக்குச் சந்தேகமில்லை'' என்றார் தயால்ஸா.

''இப்பொழுது நவாப் ஆஸீம் எங்கிருக்கிறார்?'' என்று ஜெய்ஸிங் கேட்டான்.

''உதயசாகரத்தின் கரையில் நிற்கும் படைகளுக்கு இப்பொழுது ஆஸீம்தான் தலைவன்!'' என்றார் தயால்ஸா.

ஜெய்மல்லின் திட்டங்களை நன்றாகப் புரிந்து கொண்டான் ஜெய்ஸிங். டைபர்கானும் ஜெய்மல்லும் நகமும் சதையும் போன்றவர்களாகையால் சாரங்கபூரில் நடந்த விஷயங்களை டைபர்கானுக்கு எழுதியனுப்பி ரதனுக்கு ஒரு சாட்சியான தன்னை நிர்மூலமாக்கிவிட ஜெய்மல் சூழ்ச்சிசெய்திருக்கிறான் என்பதை ஜெய்ஸிங் புரிந்து கொண்டான். ரதனை ஒழிப்பதில் டைபர்கானுக்கும் ஜெய்மல்லுக்கும் உள்ள சந்தோஷம் தெரிந்ததுதானே! இத்தனையிலும் ஜெய்ஸிங்குக்கு ஒரு சந்தேகம் மட்டும் இருந்தது. 'சாரங்கபூரில் கைதாயிருப்பவன் ரதன் சந்தாவத் என்பது இந்த தயால்ஸாவுக்குத் தெரியுமா?' என்று ஜெய்ஸிங் நினைத்தான்.

அவன் நினைப்பை முன்பாகவே உணர்ந்து கொண்ட தயால்ஸா, ''ஜெய்சிங்! ஜெய்மல் சிறை செய்திருக்கும் மஹாதேவ்சிங் உண்மையில் ரதன் சந்தாவத் என்பது எனக்குத் தெரியும்'' என்றார். இதைக் கேட்டதும் ஜெய்ஸிங் மட்டுமன்றித் தயால்ஸாவுக்கு அருகில் நின்ற இந்திரசிங்கும் போர்க்கோலம் அணிந்த இன்னொரு வீரனும் ஆச்சரியத்தால் ஏற்பட்ட மித மிஞ்சிய பிரமிப்புடன், ''என்ன!'' என்று ஒரே சமயத்தில் கூவினார்கள்.

தயால்ஸா மஞ்சத்தில் சாய்ந்து கொண்டு சிரித்தார். ''இவர் மந்திரியா மந்திரவாதியா?'' என்று ஜெய்ஸிங் சந்தேகப்பட்டான். தயால்ஸா அந்த மூவரையும் பார்த்து விட்டுச்சொன்னார்; ''இதில் பெரிய ஆராய்ச்சி ஒன்றுமில்லை. நிகழ்ச்சிகளை ஒன்றுடன் ஒன்று கோர்த்துப் பாருங்கள். அகிலாவை மயக்கிச் செல்லக் கிளம்பிய ரதன் சந்தாவத் என்ன காரணத்தாலோ சாரங்கபூருக்கு வந்திருக்கிறான். என்ன மஹாதேவ்சிங்! நீ எந்த இடத்தில் ரதன் சந்தாவத்திடம் உன் கடிதங்களையும், அந்த மோஹராச் சிமிழையும் ஒப்படைத்தாய்?'' என்று பக்கத்திலிருந்த வீரனைக் கேட்டார்.

தயால்ஸா யாரைக் கேள்வி கேட்டாரோ அந்த மனிதனுடன்தான் மால்தேவ் வீட்டில் இந்திரசிங் சண்டை செய்தார் என்பதை ஜெய்ஸிங் தெரிந்து கொண்டான். ''சாரங்கபூருக்கு அருகில் ரஸ்தா பிரியும் இடத்திற்கு அருகே உள்ள பழைய கட்டடத்தில் காயமாகக் கிடந்தபொழுது ஒப்படைத்தேன்.'' என்று தயால்ஸாவுக்குப் பதில் கூறினான் மஹாதேவ்சிங்.

''உன்னுடைய போர்ச்சட்டையைப் போட்டுக்கொண்டு ரதன் சந்தாவத் சாரங்கபூர் போயிருக்கிறான். அங்கிருந்த மொகல் சிப்பாய்கள் அவன் சட்டையைக் கண்டு ஏமாந்து துரத்திக் காயப்படுத்தியிருக்கிறார்கள். காயத்துடன் சென்ற ரதன்சந்தாவத் எப்படியோ ஓடி அகிலா இருக்கும் தர்மசாலையில் விழுந்திருக்கிறான். அகிலாவின் தகப்பனாரும் அகிலாவும் அவன் சட்டையையும் சட்டைப் பையிலிருந்த கடிதங்களையும் கண்டு அவன் நம்மைச் சேர்ந்தவனென்று ஏமாந்து போய் காப்பாற்றி பராமரித்திருக்கிறார்கள்...'' என்று தயால்ஸா சொல்லிக் கொண்டு போகையில் ஜெய்சிங் இடை மறித்து, ''இந்த விஷயங்களை நீங்கள் நேரில் பார்த்தது போல் கூறுகிறீர்களே எப்படி'' என்றான்.

''நேரில் பார்க்கவில்லை. வேறு விதமாக எப்படி நடந்திருக்க முடியும்? கடிதங்களை ரதன் சந்தாவதிடம் ஒப்படைத்ததாக மகாதேவ் ஸிம்ஹன் சொல்லுகிறான். மஹாதேவ் ஸிம்ஹன் மயக்கமாகவே விழுந்திருந்தபோது அவனைக் கண்டுபிடித்த

எனது வீரர்களோ அவன் காயத்தின்மீது சந்தாவதர்கள் அடையாளமுள்ள போர்ச்சட்டை கட்டப்பட்டிருந்ததாகத் தெரிவித்தார்கள். அப்படியானால் மகாதேவ்ஸிம்ஹன் சட்டையை ரதன் சந்தாவத் அணிந்திருக்கவேண்டும். மகாதேவ் ஸிம்ஹனை மீண்டும் மொகலாயர் தாக்கிக் காயப்படுத்தியதாகவும் தாங்கள் பராமரித்திருப்பதாகவும் ஒற்றர்களிடம் அகிலா செய்தியனுப்பியிருக்கிறாள். அவள் கடிதம் வந்தபோது மகாதேவ் ஸிம்ஹன் என் கூடாரத்தில் மரணப்படுக்கையாகப் படுத்திருந்தான். மீதியை ஊகிப்பதில் என்ன கஷ்டம்?'' என்றார் தயால்ஸா.

அந்த மனிதரின் தீக்ஷண்ய புத்தியையும் சம்பவங்களை ஒன்றுடன் ஒன்றைச் சேர்த்துச் செய்யும் முடிவுகளையும் கண்டு ஜெய்ஸிங் அசந்து போனான்.

தயால்ஸா மேலும் சொன்னார்; ''மகாதேவ் ஸிம்ஹனாக ரதன் கைதாகி வந்திருப்பதைப் பார்த்த ஜெய்மல், அவனை அந்தப் பெயரிலேயே விசாரித்து ஒழித்துவிடக் கங்கணம் கட்டிக் கொண்டான். என்னிடம் கிடைத்திருக்கும் தகவல் உண்மை யானால், நாளன்றைக்கு, அதாவது சனிக்கிழமை பிற்பகல், ரதன் சந்தாவத்தின் தலை மண்ணில் உருளும். ஸலூம்ப்ராவின் உத்தம வம்சம் அவனுடன் முடிந்துவிடும்'' என்று முடித்துவிட்டு, அந்த முடிவை நினைத்து வருத்தத்தால் பெரு மூச்சு விட்டார் தயால்ஸா.

ஜெய்ஸிங்கின் தலையில் பெரிய சம்மட்டியை எடுத்து அடித்த உணர்ச்சி ஏற்பட்டது. ரதன் சந்தாவத்தை அவ்வளவு துரிதமாக ஒழிக்க ஜெய்மல் ஏற்பாடு செய்யத் துணிவான் என்று ஜெய்ஸிங் நம்பவே இல்லை. நம்பியிருந்தால் ஜெய்மல் அல்ல; டைபர்கானே வந்து உத்தரவிட்டாலும் ரதனை விடுவிக்காமல் சாரங்கபூரை விட்டு அகன்றிருக்கமாட்டான். ஜெய்மல் ரதனைச் சிறையில் அடைத்து மறைத்து விடத்தான் முயலுவான். நாம் நவாப் ஆஸிமிடம் விஷயத்தைத் தெரிவித்து ரதனை விடுவிக்கலாம் என்ற நினைப்பில்தான் ஜெய்ஸிங் ஆஜ்மீர் கிளம்பினான். ஜெய்மல்லின்

சதிச்செயல் ஜெய்ஸிங்குக்கு வெட்ட வெளிச்சமாகி விடவே, அவன் முகத்தில் சொல்லவொண்ணாத கோப ஜ்வாலை வீசியது.

அதைக்கண்ட தயால்ஸா, ''ஜெய்ஸிங்! கோபப்பட்டுப் பயனில்லை. ஜெய்மல்லை ஒழித்து ரதன் சந்தாவத்தை விடுவிக்கவே இப்போது முயல வேண்டும். உமக்கு ரதன் சந்தாவத்திடம் அன்பு உண்டா?'' என்றார்.

''அதில் உங்களுக்குச் சந்தேகமிருக்கிறதா?'' என்று ஜெய்ஸிங் கேட்டான்.

''இல்லை ஜெய்ஸிங்! என் அபிப்பிராயத்தை ஊர்ஜிதம் செய்யவே அந்தக் கேள்வியைக் கேட்டேன். நீங்களும் மோஹன்தாஸும் என்னுடன் ஒத்துழைப்பதானால் ரதனை விடுவிக்கலாம்'' என்றார் தயால்ஸா.

''ரதன் உங்களுடைய எதிரியின் படையிலிருப்ப வனாயிற்றே. உங்களுக்கு அவன்மேல் இவ்வளவு தயவு பிறக்கக் காரணம் என்ன?'' என்றான் ஜெய்ஸிங்.

''அவன் மூதாதைகள்தான் காரணம். ரதன் மறைந்தால் ராஜபுத்திரர்களின் மிகச்சிறந்த கிளையொன்று மறைந்துவிடும். அதுவும் ரதன் சந்தாவத் மிகச்சிறந்த சேனாதிபதிகளில் ஒருவன். மொகலாயர் சூதுவாதுகளைச் சகிக்காமல் அவனே தன் தாய் நாட்டுக்குச் சேவை செய்ய ஒரு நாள் வரலாம். ஜெய்மல் எனக்கு ஒன்றுவிட்ட சகோதரன்தான். ஆனால் அவன் அழிந்தாலும் எனக்குக் கவலையில்லை. ஹிந்து சமூகத்தின் புதல்வர்களும் வீர மரபுகளும் அழிவதை நான் விரும்பவில்லை. க்ஷீணித்துவரும் ஹிந்து சமூகத்தையும் மொகலாயர்கள் கற்பழிக்க முயலும் நமது ஸ்திரீ ரத்தினங்களையும் பாதுகாக்க எவ்வளவோ ராஜபுத்திரர்கள் தேவை. அப்படி எண்ணும்போது நான் ரதன் சந்தாவத்தை மறைய எப்படி அனுமதிப்பேன்?''

அவருடைய சமூக பக்தியைக் கண்டு ஜெய்ஸிங் தலை குனிந்தான். அவருடைய வார்த்தை ஒவ்வொன்றும் அவன்

ரத்தத்தில் சுரீல் சுரீலெனப் பாய்ந்தது. இறுதியில் சொன்னான். ''மஹாராஜ்! எனக்கும் இந்த அபிப்பிராயங்கள் உண்டு...'' என்று இழுத்தான்.

''மொகாலாயரிடம் ஊதியம் பெற்றுவிட்டோமே என்று ஏங்குகிறீரா ஜெய்ஸிங்? மொகலாயர் கொடுக்கும் பணம் என்ன அவர்கள் பாட்டன் வீட்டுச் சொத்தா? இங்கிருக்கும் ஜனங்களைச் சூறையாடியும் கோவில்களை நாசம் செய்தும் ஜிஸியா வரி விதித்தும் கிடைத்த பணந்தானே? அந்தப்பணத்தை ஊதியமாக இதுவரை பெற்றதே பாபம். அந்தப் பாபத்திற்குத் தாய்நாட்டுச் சேவைதான் பிராயச்சித்தம். அது கிடக்கட்டும். எல்லாவற்றுக்கும் மேலாக உமது நண்பன் ரதன் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. என்ன சொல்கிறீர்கள்?''

ஜெய்ஸிங் வேறு வழியில்லாமல், ''தங்கள் இஷ்டப்படி நடக்கச் சித்தமாயிருக்கிறேன்'' என்றான்.

இந்திரஸிங், மஹாதேவ்ஸிம்ஹன், ஜெய்ஸிங் எல்லாரையும் சுற்றிலும் உட்காரும்படி கூறிவிட்டுத் தயால்ஸா சதுரங்கப் பலகையை எடுத்துக்கொண்டார்.

''ஜெய்ஸிங்! சதுரங்கப் பலகையில் இரண்டுபேர் ஆட்டத்தையும் நான் ஒருவன் தான் ஆடுகிற வழக்கம். அப்படி ஆடினால்தான் எதிரி நாமாக இருந்தால் என்ன செய்வோம் என்பதை அறிந்து அதற்கேற்ப காய்களை நகர்த்தி ஜயிக்கலாம். போர்த்தந்திரமும் ஒரு சதுரங்கந்தான் இதோ பாருங்கள்; இதுதான் சாரங்கபூர். இது ஜெய்மல் இருக்கும் இடம்'' என்று ஒரு காயைக் கட்டத்தில் நிறுத்தினார் தயால்ஸா.

'' ஜெய்மல் இருப்பது அந்த இடமல்லவே'' என்றான் ஜெய்சிங்.

''இப்பொழுது அவன் சேனாதிபதி மாளிகையில் இல்லையென்றும் வஸந்த மஹாலில் இருப்பதாகவும் நம்

ஒற்றர்களிடமிருந்து செய்தி கிடைத்திருக்கிறது. ஆகையால்தான் காயைச் சாரங்கபூரின் தெற்கு மூலையில் வைத்தேன். அது அப்படியே இருக்கட்டும். இதோ அதற்கு நேர் எதிர்ப்பக்கத்திலிருந்து ஐந்நூறு பேர் கொண்ட சிறுபடை சாரங்கபூரை நோக்கி வருகிறது.இது தான் டைபர்கான் அனுப்பியுள்ள சிறு உதவி படை'' என்று சில காய்களை நகர்த்திவிட்டு '' இப்பொழுது நாம் என்ன செய்யவேண்டும் ஜெய்சிங்?'' என்று கேட்டார். ஜெய்சிங் மௌனமாக இருக்கவே அவரே பதில் சொன்னார். ''டைபர்கானின் ஐந்நூறு சிப்பாய்கள் நாளை இரவு ஆரம்பத்தில் சாரங்கப்பூர் ரஸ்தாவில் வருவார்கள். அங்கே அதை நமது குதிரைப் படையினர் மடக்கி நிர்மூலம் செய்வார்கள். பின்பு அவர்கள் உடைகளை அணிந்த நமது வீரர்களில் ஐந்நூறு பேர் சாரங்கபூருக்குள் நுழைந்து, டைபர்கான் படை வீரர்களாக நடித்துச் சிறைச்சாலையையும், சேனாதிபதி மாளிகையையும் தங்கள் வசப்படுத்திக் கொள்வார்கள். தந்திரமான இந்த இரண்டு இடங்களும் சாரங்கப்பூர் வடக்குக் கோட்டை வாசலில் இருக்கின்றன. சிறைச்சாலையைக் கைவசப்படுத்திக் கொண்டதும் ரதன் சந்தாவத் விடுதலை செய்யப்படுவான். நமது வீரர்களில் சிலர் பின்தொடர ரதன், வஸந்த மஹாலுக்குச் சென்று ஜெய்மல்லைக் கவனித்துக் கொள்வான். மீதி வீரர்கள் நள்ளிரவில் வடக்கு வாசலுக்கு வந்து கோட்டைக் கதவுகளைத் திறக்க ஏற்பாடு செய்வார்கள். அவர்கள் கதவு திறக்கும் சமயத்தில் என் சைன்னியம் வடக்குக் கோட்டை வாசலுக்கு வெளியில் தயாராயிருக்கும். பிறகு சாரங்கபூரைப் படு தூளாக்குவது பிரமாதமான காரியமல்ல'' என்றார்.

இந்தத் துணிகரமான திட்டத்தைக் கேட்டுப் பிரமித்து நின்ற ஜெய்ஸிங்கை நோக்கி, ''ஜெய்ஸிங்! நான் அனுப்பும் போலி மொகலாயப் படையைத் தலைமை வகித்து நடத்தப் போவது மோஹன்தாஸ். நீர் சாதாரண வீரனாக அந்தப் படையுடன் சென்றால் போதுமானது. மோஹன்தாஸ் ஒருவன் மேலேதான் ஜெய்மல்லுக்கு இப்பொழுது சந்தேகம் கிடையாது. மோஹன்தாஸ்

இவ்வளவு நாள் ரதன் நாடகத்தில் சம்பந்தப்படாமல் தலைமறைவாயிருந்ததும் ஒரு காரியத்துக்கு நல்லதுதான்'' என்று தயால்ஸா தமது திட்டத்துக்கு முடிவு கட்டினார்.

அத்தியாயம் 23

வஸந்த மஹால்

வெள்ளி இரவும் மெள்ள நெருங்கி வந்தது. அபாயத்துக்கு முன் ஏற்படும் ஓர் அசட்டு நிம்மதி சாரங்கபூரில் பரவிக் கிடந்தது. படைத்தலைவனே, கேளிக்கைக்கூடமான வஸந்தமஹாலுக்குச் சென்றுவிட்டதால், உடனடியாக அபாயம் ஏதுமில்லை என்ற நினைப்பில் ராணுவ வீரர்கள் காவல் மும்மரத்தை ஆங்காங்கு சிறிது தளர்த்தியிருந்தனர். கொஞ்சம் நஞ்சம் விழித்துக்கொண்டிருந்த உபசேனாதிபதியும் டைபர்கான் அனுப்பிய சிறு படை தங்கு தடையின்றி வந்து சேர்ந்துவிட்ட தைரியத்தில் கால்களை நன்றாக நீட்டி மஞ்சத்தில் சாய்ந்துவிட்டான். நித்திராதேவியும் ஊர் மக்களின் கண் இமைகளை வருடிக்கொடுத்தாள்.

சிறைச்சாலைகூட, கூச்சல் ஏதுமின்றி நிம்மதியாயிருந்தது. அன்று நமாஸ் தினமாகையால் குற்றவாளிகளுக்குக் கசையடி கொடுப்பதையும் அதிகாரிகள் நிறுத்தியிருந்தார்கள். பாராக்காரர்கள் 'உஷார்' கொடுக்கும் சப்தத்தைத் தவிர எந்தச் சப்தமும் கேட்காமலிருந்த சிறைச்சாலையின் அறையில் தன்னந்தனியாக உட்கார்ந்திருந்த ரதன் மனம் மட்டும் இந்த நிம்மதியில் ஈடுபடாமல் ஏதேதோ எண்ணிச் சுழன்று கொண்டிருந்தது. எல்லோருக்கும் மங்களகரமான வெள்ளி இரவு தனக்கு மாத்திரம் பெரிய சனியனாகவா வந்து வாய்க்கவேண்டும் என்று ரதன் நினைத்தான். யுத்த அரங்கத்தில் மடிய வேண்டிய க்ஷத்திரியன் குற்றவாளியாகத் தலை சீவப்படவேண்டிய துர்ப்பாக்கியத்தை நினைத்துப் பெருமூச்சுவிட்டான். எல்லாவற்றிற்கும் மேலாக

ஜெய்மல்லைப் பழிவாங்காமல் போகிறோமே என்ற துக்கம் மேலோங்கி நீண்டதொரு பெருமூச்சாக வெளிவந்தது.

இப்படி யோசனையில் ஆழ்ந்திருந்த ரதனுக்கு மோஹன்தாஸ் திடும் பிரவேசமாகத் தன் அறைக் கதவைத் திறந்து நுழைந்ததே ஆச்சரியமாயிருந்தது. அத்துடன் என்றும் ஓங்கிப் பேசியறியாத மோஹன்தாஸ், "கைதி! வெளியே வா!" என்று அதட்டலான குரலில் கட்டளையிட்டதைக் கேட்க அவனுக்கு ஆச்சரியத்தின் மேல் ஆச்சரியமாய்ப் போய்விட்டது. தன்னை அந்தக்குரலில் கூப்பிட நிச்சயமாக மோஹன்தாஸுக்குப் பைத்தியந்தான் பிடித்திருக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் மெள்ள அறையை விட்டு வெளியே வந்த ரதன் சந்தாவத் மோஹன்தாஸின் முகத்தை ஏறெடுத்துப் பார்த்தான். மோஹன்தாஸின் கண்களில் பைத்தியத்தின் வெறியை அவன் காணவில்லை. எச்சரிக்கையின் தீக்ஷண்யத்தைக் கண்டான். நிலைமை வெகு அபாயமானதாகையாலும் துளி சந்தேகத்துக்கு இடமிருந்தாலும் தயால்ஸாவின் திட்டம் காற்றில் பறந்து விடுமாகையாலும் மோஹன்தாஸ் மிகுந்த முன் ஜாக்கிரதையுடன் நடந்து கொண்டு, ரதனைக் கேவலம் ஒரு கைதியாகவே நடத்திச் சென்றான். ரதனை முன் விட்டு உருவின வாளுடன் பின் தொடர்ந்து மோஹன்தாஸ் சிறைச்சாலையின் வாசலுக்கு வந்ததும் ரதனுக்குச் சைகை காட்டி சிறைச்சாலைக்குத் தென்புறமிருந்த ரஸ்தாவுக்கு அழைத்துச் சென்றான். வாசலில் உருவின வாளுடனிருந்த சில வீரர்கள் ரதனைக் காவல்புரியும் முறையில் பின்தொடர்ந்தனர்.

மரங்கள் அடர்ந்த சிறு பாதைதான். அந்த ரஸ்தா ஏற்கனவே இருந்த இருட்டின் பயங்கரத்தை மரங்களின் நிழல் அதிகரித்தது. அந்த இருட்டின் பாதுகாப்புக்கு வந்ததும் மோஹன்தாஸ் பேச ஆரம்பித்தான். "மஹாராஜ் இப்பொழுது தங்களிடம் அதிகமாகப் பேச அவகாசமில்லை. தங்களைத் தப்பவைத்த மார்க்கத்தையும் இப்பொழுது கேட்காதீர்கள். வெகு சீக்கிரம் நீங்களே அதைத் தெரிந்து கொள்வீர்கள். நான் இங்கு தங்கும் ஒவ்வொரு நிமிஷமும் நம் இருவருக்கும் பெரிய ஆபத்துதான். தவிர நான் செய்ய வேண்டிய காரியங்களும் இன்னும் சில இருக்கின்றன. இதோ இந்த வாளை எடுத்துக்கொள்ளுங்கள். இவர்களெல்லாம் நமது நண்பர்கள். இவர்களில் சிலரை அழைத்துக்கொண்டு வஸந்த மஹாலுக்கு செல்லுங்கள். இந்த ரஸ்தாவுடன் நேராகச் சென்றால் வஸந்த மஹாலுக்கு கொண்டுபோய்விடும். அங்கு இப்பொழுது ஜெய்மல் தனியாகவே இருக்கிறான். வாயிலில் இருக்கும் காவலாளிகளுக்கு ஏதாவது சால்ஜாப் சொல்லிவிட்டு ஜெய்மல்லைப் பழி வாங்குங்கள். அட, மறந்துவிட்டேனே. அந்த உடைகளைக் களைந்து இதோ இந்த மொகலாய உடைகளை அணிந்துகொள்ளுங்கள்" என்று சொல்லி ஒரு சிறுமூட்டையையும் நீண்டதொரு வாளையும் ரதனிடம் கொடுத்தான்.

இவ்வளவு முன்னேற்பாட்டுடன் நடந்து கொள்ள மோஹன்தாஸுக்கு எப்பொழுது புத்தி வந்தது என்று ஆச்சரியப் பட்ட ரதன், "இதெல்லாம் என்ன மர்மம் மோஹன்தாஸ்?" என்று கேட்டான்.

"மஹாராஜ், நான்தான் சொன்னேனே, அதிகம் பேச இப்பொழுது அவகாசமில்லையென்று, ஜெய்மல் உங்களை ஒழித்துவிட்டதாக நினைத்து நிம்மதியாக உறங்குகிறான். சீக்கிரம் செல்லுங்கள். அவனைப் பழிவாங்க வேறு அவகாசம் கிடைப்பது அபூர்வம்" என்று துரிதப்படுத்தினான் மோஹன்தாஸ். ஜெய்மல்லின் பெயர் ரதன் சந்தாவத்தின் புத்தியை உஷ்ணப்படுத்திவிட்டதால், துரிதமாக உடையை மாற்றிக் கொண்டு வஸந்த மஹாலை நோக்கிப் புறப்படலானான். மோஹன்தாஸுடன் வந்த வீரர்களில் சிலர் அவனைப் பின்தொடர்ந்தார்கள். மோஹன்தாஸ் நொடிப் பொழுதில் பக்கத்திலிருந்த சந்துகளில் மறைந்துவிட்டான்.

வஸந்த மஹாலின் வாசலில் பாராக் கொடுத்துக் கொண்டிருந்த வீரர்களைத் தாண்டுவதில் ரதனுக்கு எந்தவித இடைஞ்சலும் ஏற்படவில்லை. அந்த மாதிரி வீரர்களை அதிகாரம்

செய்தே பழகிய ரதன் அதட்டலான குரலிலேயே, "சேனாதிபதி எங்கே இருக்கிறார்?" என்று கேட்டான். அவன் அணிந்திருந்த மொகலாய உடையையும் அவன் பின்னால் தொடர்ந்து வந்த வீரர்களையும் பார்த்த பாராக்காரர்கள் சற்றுப் பயத்துடனேயே, "மஹராஜ்! எஜமான் மாடியில் யாரோ ஓர் அம்மாளுடன் பேசிக்கொண்டிருக்கிறார்கள்" என்றான்.

"அவசரமாக எஜமானைப் பார்க்கவேண்டும். வழியைக் காட்டு. எஜமான் அம்மாளுடன் பேசி முடியும் வரையில் நான் அறைக்கு வெளியே காத்திருக்கிறேன்" என்றான் ரதன்.

"அது அவசியமில்லை மஹராஜ்! பக்கத்து அறையில் உட்கார இடமிருக்கிறது, வாருங்கள்" என்று சொல்லி ரதனைப் பாராக்காரன் மாடிமேல் அழைத்துச் சென்று பக்கத்து அறையில் உட்கார வைத்துக் கீழே சென்று விட்டான். 'ஸ்திரீயுடன் தனித்திருக்கும் ஜெய்மல் யாரையும் உள்ளே விட வேண்டா மென்றும் உத்தரவு போடாமல் இவ்வளவு அசிரத்தையுடன் இருக்கும் காரணம் என்ன?" என்று யோசித்த ரதன் பக்கத்தறை யிலிருந்து காதில் விழுந்த இரண்டொரு வார்த்தைகளைக் கேட்டுப் பெரிய அதிர்ச்சியடைந்தான்.

"இதென்ன ஆச்சரியம் அகிலா! நீ சாரங்கபூருக்கு எப்பொழுது வந்தாய்? இங்கு இந்த நேரத்தில் எதற்காக வந்தாய்? நீ இருக்குமிடத்தைச் சொல்லியனுப்பினால் நான் ஓடிவர மாட்டேனா?" என்றான் பக்கத்தறையிலிருந்த ஜெய்மல்.

இரண்டு அறைகளுக்கும் இடையில் இருந்த சுவர் மெல்லியதாயிருந்தபடியாலும் இடையிலிருந்த சாளரமும் ஒருக்களித்திருந்தபடியாலும் பக்கத்தறைப் பேச்சு ரதனுக்கு நன்றாக காதில் விழுந்தது. மெள்ள ஆசனத்தை விட்டு எழுந்து ஒருக்களித்திருந்த சாளரத்தின் வழியாகப் பக்கத்தறைக்குள் நடக்கும் நாடகத்தைக் கவனிக்கலானான்.

ஜெய்மல் நன்றாக மஞ்சத்தில் சாய்ந்து கால்களை நீட்டிக் கொண்டிருந்தான். அகிலா அவனுக்கு சிறிது தூரத்தில் தலை

குனிந்து நின்று கொண்டிருந்தாள். தன்னைக் கோட்டைச் சுவருக்கு வெளியே தூக்கி எறிய உத்தரவிட்ட அதே அகிலா, இன்று தன் எதிரில் பணிப்பெண்ணைப்போல் நிற்பதை ரசிக்கும் பாவனையில் சிரித்துக்கொண்டே ஜெய்மல் தன் கேள்வியைத் திருப்பினான்: "நீ சாரங்கபூருக்கு எப்பொழுது வந்தாய் அகிலா? நான் கேட்பது உன் காதில் விழவில்லையா?"

"எப்பொழுது வந்தாலென்ன, எப்படி வந்தாலென்ன ஜெய்மல்? இந்தச் சமயம் சாரங்கபூரில்தான் இருக்கிறேன்" என்று தலைகுனிந்தபடியே சொன்னாள் அகிலா.

"என்னைப் பார்க்க வெட்கமாயிருக்கிறதா அகிலா? ஏன் தலை குனிந்தபடியே பேசுகிறாய்? நான் என்ன உனக்குப் புது மனிதனா? இப்படி உட்கார்" என்று சரசமாகப் பேசினான் ஜெய்மல்.

அகிலா உட்காரவில்லை, "நான் உட்கார வரவில்லை ஜெய்மல். உன்னிடம் ஓர் உதவியை நாடி வந்தேன். உன்னை உஜ்ஜயினியில் அவமானப்படுத்திய பிறகு, உன் உதவியை நான் கோருவது அவ்வளவு உசிதமல்லவென்று எனக்குத் தெரியும். இருந்தாலும் நான் ஒரு பெண்; நீ ஒரு க்ஷத்திரியன். அபலையான ஸ்திரீக்கு க்ஷத்திரிய குலத்தில் பிறந்தவன் உதவவேண்டிய தர்மமிருக்கிறது என்பதை நம்பி வந்தேன்" என்றாள் அகிலா.

"என்ன ஒருதலைப் பக்ஷமான தர்மம் பார்த்தாயா அகிலா! ஆண்பிள்ளையை அவமானப்படுத்தக்கூடாது என்ற தர்மம் பெண்ணுக்குக் கிடையாது. ஆனால் பெண்ணைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பை மாத்திரம் ஆண்பிள்ளையின் தலையில் கட்டியிருக்கிறார்கள். நமது மூதாதையர்களுடைய புத்திசாலித் தனத்துக்கு அளவே இல்லை" என்றான் ஜெய்மல் இகழ்ச்சியாக.

"மூதாதையர்களை ஏன் தூற்றுகிறாய் ஜெய்மல்? உன் மூதாதையர்கள் உன்னைப் போல் மொகலாயருக்கு அடிமை யாகவா இருந்தார்கள்? சுதந்தரர்களான ஜனங்களுக்கு நிரந்தரமான தர்மங்களை ஏற்படுத்தினார்கள். நேர்மையுள்ள ஜனங்களுக்கு

அந்த தர்மங்களால் கெடுதல் ஏதுமில்லை. நீயும் மொகலாயர் பக்கம் சேரவில்லை என்று வைத்துக் கொள். நானோ மாமாவோ உன்னை ஏன் வெறுக்கப்போகிறோம்? நீ உஜ்ஜயினிக்கு வந்த காரியம் நேர்மையற்றது. ராஜஸ்தானத்தை மொகலாயர்களுக்கு அடிமைப்படுத்த வந்தாய். அதனால்தான் நாங்கள் அப்படி நடந்துகொண்டோம். உன்னிடம் எனக்கு எந்த விரோதமும் கிடையாது ஜெய்மல். ராஜபுத்திரனான நீ, எதிரி கையாளாக ஜன்மபூமிக்கு துரோகம் செய்கிறாயே என்ற பரிதாபந்தான்'' என்றாள் அகிலா. அவள் குரலில் துக்கம் பரிபூரணமாகக் கலந்திருந்தது.

ஜெய்மல் வாய்விட்டு சிரித்தான். ''ராஜஸ்தானத்துக்காவது சுதந்திரமாவது? மொகலாயர் வல்லமையை நீ அறியமாட்டாய் அகிலா'' என்றான்.

''நீ உணர்ந்து கொண்டதே போதும் ஜெய்மல். சுதந்தரமில்லா விட்டால் ராஜஸ்தானம் அழியட்டுமே'' என்றாள் வெறுப்புடன்.

''பத்தினி வாக்கு பலித்துவிடப் போகிறது! ராஜஸ்தானம் அழியப்போவது நிச்சயம். அவ்வளவு தீர்க்க தரிசனமில்லாமலா நான் மொகலாயர் பக்கத்தில் சேர்ந்தேன்?''

''ராஜஸ்தானம் அழியாது ஜெய்மல். இந்தப் பாரதமும் அழியாது. ஜீவபூமியான இந்த நாடு பிறர் ஆதிக்கத்தால் சுரணை கெட்ட சமயங்களிலெல்லாம் யாராவது ஒரு வீரன் ஹிந்து சமூகத்தில் எழுந்து, தன் ரத்தத்தைக் கொட்டி, இந்தப் பூமியில் என்றும் ஜீவதாதுக்கள் இருக்கும்படி செய்வான். யாராவது ஒரு பதிவிரதை இந்த மண்ணில் பிறந்து இதற்கு உயிர் கொடுப்பாள்.''

''ஜீவபூமியா!'' அந்த வார்த்தை ஜெய்மல்லைத் தூக்கி போட்டது'' அட! நான் வேறொரு சந்தர்ப்பத்தில் சொன்ன அந்த வார்த்தை உனக்கு எப்படித் தெரிந்தது? வேறொரு பைத்தியக் காரனை மொகலாய சாம்ராஜ்யத்திலிருந்து ஒழிக்க இதே

பொய்யைத்தான் நானும் சொன்னேன். அது உனக்கெப்படித் தெரிந்தது? சுத்த வீரர்கள்! பதிவிரதைகள்! நல்ல விசித்திரம். இவர்களெல்லாம் கதைகளில்தான் ஜீவிக்கிறார்கள்'' என்று ஜெய்மல் உரக்கச் சிரித்தான்.

''உண்மைச் சம்பவங்களிலிருந்துதான் கதைகள் பிறக்கின்றன ஜெய்மல்! கதையில் கற்பனை மலையளவு இருக்கலாம்; உண்மையும் ஓரளவு இருக்கத்தான் செய்யும்'' என்றாள் அகிலா.

ஜெய்மல் இந்த வீண் தர்க்கத்தை வளர்க்க இஷ்டப்படவில்லை. ''அது கிடக்கட்டும் அகிலா இங்கு வந்த காரியத்தைச் சொல்'' என்றான்.

''உன்னிடம் ஓர் உதவியை நாடி வந்தேன்.''

''என்ன உதவி?''

''ஒரு மனிதனுக்கு உயிர்ப்பிச்சை.''

''யார் அவன்?''

''உன்னால் சிறையிடப்பட்டிருக்கும் மஹாதேவ்ஸிம்ஹன்.''

ஜெய்மல் ஆசனத்தைவிட்டுச் சரேலென எழுந்தான். முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க, ''யாரை விடுவிக்கச் சொல்லுகிறாய்? என் ஜன்ம வைரியையா? எதற்காக விடுவிக்கச் சொல்லுகிறாய் சொல்! அவனுக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்?'' என்று கேட்டுக்கொண்டே அகிலாவை நெருங்கினான்.

அகிலாவின் கண்களில் நீர் துளித்தது. ''ஜெய்மல்! அவருக்கும் எனக்கும் என்ன சம்பந்தமா? நாங்களிருவரும் ஒருவர்தான். அவர் என் பிராணன் ஜெய்மல். அவருக்கு உயிர்ப் பிச்சையளித்தால் எனக்கே உயிர்ப்பிச்சை யளித்தவனாவாய்'' என்று விக்கி விக்கிச் சொன்னாள் அகிலா.

ஜெய்மல் அவளை மிகுந்த குரூரமாக உற்றுப்பார்த்தான். ''அவன் உன் பிராணனா! அவன் யார் தெரியுமா உனக்கு?''

''யாராயிருந்தாலென்ன? என் அன்பு பூராவும் அவர்மேல் இருக்கிறது. யாருக்கும் பணியாத அகிலா உன் காலடியில்பணிந்து பிச்சை கேட்கிறாள்; மறுக்காதே ஜெய்மல்.''

''உம்!... யாராயிருந்தாலென்னவா? யாராயிருந்தாலும் அக்கறையில்லையா?''

''இல்லை.''

''உன்னைக் கற்பழித்துத் தூக்கி வருகிறேனென்று சபதம் போட்டவனும், மொகலாயருக்கு என்னைவிடப் பெரிய கையாளானவனுமான ரதன் சந்தாவத்தாக இருந்தால்கூட அக்கறையில்லையா?'' என்று ஜெய்மல் இரைந்தான்.

அகிலா அவன் காலடியிலிருந்து எழுந்தாள். ''என்ன சொன்னாய் ஜெய்மல்? அவன் ரதன் சந்தாவத்தா? மஹாதேவ் ஸிம்ஹன், ரதன் சந்தாவத்தா?''

''சந்தேகமென்ன? இப்பொழுதே சிறைக்குப் போய் அவனைக் கேட்டுப் பார். எனக்கு உபதேசித்த க்ஷத்திரிய தர்மத்தை அவனுக்கு உபதேசம் செய். 'அபலையான ஒரு பெண்ணை ஏமாற்றுவதும், கற்பழித்துத் தூக்கிவரச் சபதம் போடுவதும் க்ஷத்திரிய தர்மமா? என்று அந்த அதமனைக் கேள்'' என்றான் ஜெய்மல்.

அகிலாவுக்கு அப்படியே மூச்சு நின்றுவிடும்போல் ஆகிவிட்டது. ''அவர் ரதன் சந்தாவத்தா! மொகலாய சேனதிபதி ரதன் சந்தாவத்தா!'' என்று திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டு நின்றாள். கண்களிலிருந்து நீர் ஊற்றுப் போல் பிரவகித்தது. தான் காதலித்த ஒரே மனிதன் ராஜஸ்தானத்தின் விரோதி என்ற எண்ணம் பெரிய இடிபோல் அவள் இருதயத்தையே உடைத்து விடும் போலிருந்தது. மேற்கொண்டு எதுவும் பேசாமல் அந்த

அறையை விட்டு வெளியே கிளம்பத் திரும்பினாள். ஜெய்மல் அவளை மறிக்க முயன்றாள்.

''என்னைத் துன்புறுத்தாதே ஜெய்மல், என் புத்தி அடியோடு குழம்பியிருக்கிறது'' என்று சொல்லி ஓர் அடி எடுத்து வைத்தாள்.

''பொறு அகிலா! கேவலம் இந்த ரதன் சந்தாவத்துக்காக மனத்தை ஏன் புண்படுத்திக் கொள்கிறாய்? உன்அன்புக்கு அவன் தகாதவன். நீ அவனை மறந்துவிடு. உனக்குச் சகல சௌபாக்கி யங்களும் கிடைக்கும் வழியை நான் சொல்கிறேன்'' என்றான் ஜெய்மல்.

அகிலா தன் கண்ணீரைப் புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டு ஒரு முறை ஜெய்மல்லை ஏறிட்டுப் பார்த்தாள். ''நீ ராஜபுத்திர வம்சத்தில் பிறந்தவனா ஜெய்மல்?'' என்று கேட்டாள்.

ஜெய்மல்லின் கோபம் எல்லை கடந்தது. ''என்ன பேசுகிறாய் என்பதை யோசித்துப் பேசு'' என்று இரைந்தான்.

அகிலாவின் கண்களிலும் தீப்பொறி பறந்தது. ''ஜெய்மல்! நீ ராஜபுத்திர வம்சத்தில் பிறந்தவனாயிருந்தால்; ராஜபுத்திர ஸ்திரீகளின் குணம் உனக்குத் தெரிந்திருக்க வேண்டுமே. ராஜபுத்திர ஸ்திரீகள் ஒரு புருஷன்மேல் மனம் வைத்தபின் அதை அந்த ஆயுட்காலத்தில் மாற்றமாட்டார்கள் என்று உனக்குத் தெரியாதோ?''

''அப்படியானால் ராஜபுதனத்தின் விரோதியான ரதன் இப்பொழுது சுதந்திரமாயிருந்தால் அவனைக் கல்யாணம் செய்து கொண்டு விடுவாயா?''

''அவரை நான் என்ன செய்வேன், என்ன செய்யமாட்டேன் என்பதெல்லாம் என் சொந்த விஷயம் ஜெய்மல். அதைப்பற்றி இப்பொழுதென்ன பேச்சு? அவரை விடுவிக்க உனக்கு

இஷ்டமிருந்தால் சொல்.''

''இன்னுமா அவனை விடுவிக்க இஷ்டப்படுகிறாய்? உனக்கு அவன் செய்த துரோகத்துக்கு அவனை தூக்கிலிட வேண்டியது அவசியமில்லையா? ஒரு பெண்ணை ஏமாற்றித் தூக்கிச் செல்ல முயன்றவனுக்குத் தூக்குமேடையைவிட சரியான தண்டனை உண்டா அகிலா?''

''என்னை ஏமாற்றித் தூக்கிச்செல்ல முயன்றதற்குத் தூக்கில் போட வேண்டுமானால், முதலில் உன்னைத்தான் தூக்கில் ஏற்றவேண்டும் ஜெய்மல். நீதான் அந்தப் பணியை முதலில் துவங்கியவன். நான் உன்னையே மன்னித்து விட்டேன்.''

''அப்படியானால் அவனைத் தப்பிவிக்க எந்தத் தியாகத்திற்கும் நீ தயார் போலிருக்கிறதே!''

''சந்தேகமென்ன ஜெய்மல்? அது என் கடமையல்லவா?''

''என்ன கடமை?''

''கணவனுக்கு மனைவி செய்யவேண்டிய கடமை.''

''ஓகோ! கல்யாணமாகு முன்பே நீங்கள் கணவன் மனைவியாகி விட்டீர்களா?'' என்று சொல்லி இகழ்ச்சியாகச் சிரித்த ஜெய்மல், ''அகிலா! நீ இவ்வளவு தூரம் மன்றாடுவதால் அவனை விடுவிக்க முயல்கிறேன். ஜன்ம வைரிக்கு நான் உயிர்ப்பிச்சையளிப்பது எவ்வளவு பெரிய தியாகம் என்பதை நான் உனக்குச் சொல்லத் தேவையில்லை. அதற்குப் பதில் நீயும் சிறிது தியாகம் செய்வதானால் ரதன் ஒருவேளை உயிர் தப்பலாம்'' என்றான் ஜெய்மல்.

''என்ன செய்ய வேண்டுமென்கிறாய்?'' என்று அகிலா கேட்டாள்.

''அகிலா! எனக்கு உன்மேலிருக்கும் பிரியம் எப்படிப்பட்ட தென்று உனக்குத் தெரியாததல்ல. நீ எதற்காக இந்த ரதன் சந்தாவத்துக்காகப் பிராணனை விடுகிறாய்? நான் உனக்கு மாமன் முறை. நாம் பந்துக்கள். நீ எனக்கு மனைவியாயிருக்கச் சகலத்திலும் தகுதியுள்ளவள்...'' என்று சொல்லிக்கொண்டு போன ஜெய்மல்லை அகிலா இடைமறித்து, ''நான் உனக்குத் தகுதி யென்பதைத் தீர்மானித்துக் கொண்டாயே தவிர, நீ எனக்குக் கணவனாயிருக்கத் தகுதிதானா என்பதை யோசித்தாயா? பிதற்றாதே ஜெய்மல். க்ஷத்திரிய தர்மத்தை உத்தேசித்தாவது விடுதலை செய். பொய்ப் பெயரால் ஒரு மனிதனைச் சிறையிலடைத்து உயிரை வாங்க முயலும் உனக்கு நான் மனைவியாவது சாத்தியமா? அப்புறம் என்னைப் பார்த்து ராஜபுதனம் சிரிக்காதா? ஜெய்மல்? நீ எப்படி ராஜபுத்திர வம்சத்தில் பிறந்தாய்! நல்ல உணர்ச்சிகளே உடம்பில் ஊறாத உன் மாதிரி மனிதர்கள் செல்லரிப்பது போல் ஹிந்து சமூகத்தை அரித்து விடுகிறார்கள். கேவலம், அபலையான ஒருபெண்ணின் கஷ்டத்தை உன் சுகத்திற்காகத் திருப்ப யத்தனிக்கிறாயே. உனக்கு வெட்கமில்லையா? உன்னுடன் பேசிப் பயனென்ன? உடம்பில் இயற்கையாயில்லாத நல்லுணர்ச்சிகளை என் உபதேசமா உண்டாக்கிவிடும்? நான் வருகிறேன்'' என்று சீறிவிட்டு வெளியே செல்லக் கிளம்பினாள்.

ஜெய்மல் மிகுந்த கோபத்துடன், ''அகிலா! எங்கே செல்ல முயலுகிறாய்? நில்'' என்று அவளை வழிமறிக்க முயன்றான்.

''வழியை! விடு ஜெய்மல், நான் பெரிய தர்மசாலையில் தான் இருக்கிறேன். வேண்டுமானால் நாளை உன் வீரர்களை அனுப்பி என்னைக் கைது செய். பெண்ணிடம் உன் வீரத்தைக் காட்டதே'' என்று சொல்லிவிட்டு மனவேதனையால் தளர்ந்த கால்களுடன் தள்ளாடி வெளியே நடந்து சென்றாள்.

அவள் அறையைவிட்டுச் சென்றதும் ஜெய்மல் தானே உரக்கச் சொல்லிகொண்டான். ''நல்ல வேளை! ரதன், மஹாதேவ் ஸிம்ஹனாக மாட்டிக்கொண்டான். இல்லாவிட்டால் அவன் பந்தயத்தில் ஜயித்து என் ஜாகீர்களை விழுங்கியிருப்பான். இந்தப்

பைத்தியம் அகிலாவும் அவனிடம் பைத்தியமாயிருக்கிறாளே. இனி ரதன் எங்கே தப்பப்போகிறான். கடவுளே வந்தாலும்அவனை இனித் தப்பவிடமாட்டேன்'' என்றான்.

''கடவுளை அவ்வளவு சாமான்யமாக நினைக்காதே ஜெய்மல்'' என்ற வார்த்தைகளைக் கேட்டுத் திடுக்கிட்டு வாசற் படியை நோக்கிய ஜெய்மல், ரதன் சந்தாவத் வெகு சாவதானமாக உள்ளே நுழைவதைக் கண்டான்.

அத்தியாயம் 24

வஞ்சத்துக்குப் பரிசு

பிசாசை நேரில் கண்டவன்கூட அவ்வளவு தூரம் அரண்டிருக்கமாட்டான். ரதன் சந்தாவத்தைக் கண்ட ஜெய்மல்லின் முகத்தில் அவ்வளவு தூரம் கிலி படர்ந்தது. பயத்தால் அவன் இந்திரியங்கள் செயலிழந்து நின்றன. நாக்குப் பேச மறுத்தது. மெள்ளச் சமாளித்துக்கொண்டு ''நீயா! ரதன் சந்தாவத்தா?'' என்று நடுங்கும் குரலில் கேட்டான்.

ரதன் முகத்தில் இகழ்ச்சிதான் பூரணமாய்ப் பிரதிபலித்தது. ''என் பெயர் உனக்கு ஞாபகம் வந்துவிட்டதா ஜெய்மல்?'' என்று சற்றுக் கேலியாகவே கேட்டான்.

''நீ இங்கு எப்படி வந்தாய்? யார் உன்னை விடுதலை செய்தது?'' என்று ஜெய்மல் கேட்டுக்கொண்டே மெள்ள மஞ்சத்தின் பக்கம் நகர்ந்து உட்கார்ந்து, தன்னைச் சிறிது திடப்படுத்திக் கொண்டான்.

''எப்படி வந்தாலென்ன ஜெய்மல்? நீ எதிர்பாராத பேர்வழிகளெல்லாம் இன்று உன் அறைக்கு விஜயம் செய்ய வேண்டுமென்பது கடவுளின் சித்தம் போலிருக்கிறது. அகிலாதேவி வந்து போய்விட்டாள். அடுத்தபடியாக யாரை நீ விடுவிக்க மறுத்தாயோ, யாரைத் தூக்கிலேற்றிவிடத்திட்டம் போட்டாயோ அப்பேர்ப்பட்ட நானே வந்து விட்டேன். நீ ஒரு முக்கிய விஷயத்தை மறந்து விட்டாய் ஜெய்மல்'' என்று ரதன் சொல்லிகொண்டே மஞ்சத்திலொன்றை இழுத்துப் போட்டுக் கொண்டே ஜெய்மல்லுக்கு எதிரில் உட்கார்ந்தான்.

ரதனின் நிதானமும், சாவதானமான பேச்சும் ஜெய்மல்லுக்கு பெரிய பீதியை விளைவித்தன. இருந்தாலும் தைரியத்தைச் சிரமப்பட்டு வரவழைத்துக் கொண்டு, ''என்ன அந்த முக்கிய விஷயம்?'' என்று கேட்டான்.

''வேதாந்த சம்பந்தமான ஓர் உண்மை'' என்றான் ரதன்.

''கேலி செய்கிறாயா ரதன்?''

''கேலியல்ல ஜெய்மல்! நீ ஒரு முக்கிய உண்மையை மறந்துவிட்டாய். கடவுள் விதித்துள்ள ஆயுசு முடியுமுன் எந்த மனிதனும் சாகமாட்டான் என்பது மறுக்கமுடியாத உண்மை. உன்னைப் போன்ற அயோக்கியன் கூட அதை ஒப்புக்கொண்டு தான் ஆகவேண்டும். நாளைப் பிற்பகல் என்னைச் சாகடித்து விடலாமென்று நீ மனப்பால் குடித்தாய், முடிந்ததா பார். இதோ கல் மாதிரி நானே உன்னிடம் வந்திருக்கிறேன் ஜெய்மல்! உயிரைக் கொடுப்பவன் கடவுள்; அவன் ஒருவனால்தான் அதைத் திருப்பி வாங்க முடியும். வைத்தியர்கள் கைவிட்ட வியாதி யஸ்தர்கள், எவ்வளவு பேர் பிழைக்கிறார்கள். என்னைப்போல் தூக்குமேடைக்கு அனுப்பப்படும் எவ்வளவு பேர் தப்பி ஓடி விடுகிறார்கள். இதற்கெல்லாம் காரணம் என்ன? அவர்கள் ஆயுசு முடியவில்லை; அவ்வளவுதான்! இப்பொழுது புரிகிறதா ஜெய்மல்?'' என்று ரதன் கேட்டான்.

ஜெய்மல்லுக்கு ஒன்றும் புரியவில்லை. அவனுக்குப் புரிந்த தெல்லாம் ரதன் தன்னைக் கேலி செய்கிறான் என்பதுதான். ''விளையாட இது சமயமில்லை ரதன்'' என்று கோபத்துடன் சொல்லிவிட்டு ஜெய்மல் சுவரில் தொங்கிக்கொண்டிருந்த தனது வாளின் மீது பார்வையைச் செலுத்தினான். அவன் பார்வையைத் தொடர்ந்த ரதன், ''அதற்கு இப்பொழுது அவசியமில்லை ஜெய்மல். சும்மா உட்கார். உன்னிடம் எழுதுகருவிகள் இருந்தால் அவற்றை எடுத்துவா'' என்றான்.

ரதனுடைய போக்கு இன்னதென்று ஜெய்மல்லுக்குப் பிடிபடவே இல்லை. மெள்ள எழுந்து சென்று எழுதுகருவிகளை எடுத்து வந்தான். தன்னுடைய ஒவ்வோர் அசைவையும் ரதனுடைய கண்கள் விடாமல் தொடருவதைக் கண்ட ஜெய்மல் காவலாளி களைக் கூப்பிடவோ வேறெவ்வித நடவடிக்கை எடுக்கவோ தைரிய மற்றவனாய்ப் பிரமை தட்டி எதிர் மஞ்சத்தில் சாய்ந்துகொண்டான். ரதன் மேற்கொண்டு எதுவும் பேசாமல் எழுத ஆரம்பித்தான். இரண்டு கடிதங்கள் எழுதி முடித்ததும் அவற்றை மடித்துக் கையில் வைத்துக்கொண்டு, ''ஜெய்மல்! இனி நாம் அகிலா சம்பந்தமான விஷயத்தைப் பேசி முடிப்போம். நாமிருவரும் அக்பருக்கு எதிரில் ஹாராவளியில் போட்ட பந்தயம் உனக்கு ஞாபகமிருக்கி றதல்லவா?'' என்று கேட்டான்.

''அதை எப்படி மறக்க முடியும்?'' என்றான் ஜெய்மல்.

''முடியாது முடியாது. சற்று முன்பு அகிலாவிடம் அதை நீயே ஞாபகப்படுத்தினாயே. அந்தப் பந்தயத்தின்படி அகிலாவை நான் என் வசப்படுத்திக்கொண்டால் உன் ஜாகீர்கள், இதர சொத்து சுதந்தரங்கள் எல்லாம் என்னைச் சேர வேண்டுமல்லவா?''

''நீ சிறையிலிருந்து தப்பி வந்ததுமல்லாமல் என்னை ஒட்டாண்டியாக்கலாமென்று கனவு காண்கிறாயா ரதன்?''

''ஜெய்மல்! உனக்கு இன்னும் அதில் சந்தேகமா? அகிலாவின் அன்பு என் வசமானால் நீ உன் ஜாகீர்களை எனக்குக் கொடுத்துவிட வேண்டியதுதானே? அதற்கு அக்பரே சாட்சியாயிற்றே.''

''ரதன்! பந்தயத்தில் நீ எப்படி ஜயித்தாய்? உண்மையாய் உன் ஒழுங்கான பெயரில் சென்று ஜயித்தாயா? பொய்ப்பெயர் வைத்துக் கொண்டு ஒரு பெண்ணை ஏமாற்றி வலையில் போட்டுக் கொண்டாய். இது தர்ம மார்க்கமா?''

''ஜெய்மல்? தர்மத்தைப் பற்றி நீ எதற்காகப் பேசுகிறாய்? பந்தயத்தின் விதிகளில் நான் அகிலாவை எப்படி ஜயிக்க வேண்டும் என்று எந்த நிபந்தனையும் கிடையாது. எப்படியாவது அகிலாவை வசப்படுத்த வேண்டும் என்பதுதான் பந்தயம். நான் ஜயித்துவிட்டேன் என்பதையும் நீயே சற்றுமுன் தெரிந்து கொண்டாய். ஆகையால் இப்பொழுது நான் அக்பரிடம் சென்றால் உன் ஜாகீர்கள் என் வசம் வந்துவிடும்; தெரியுமா?'' என்றான் ரதன்.

ஏதோ மேலே பேசப்போன ஜெய்மல்லைக் கையமர்த்தி, ''ஜெய்மல்! அவசரப்படாதே. இதோ இந்தக் கடிதங்களைப் படித்துப்பார்'' என்று தன் கையிலிருந்த இரண்டு கடிதங்களையும் ஜெய்மல்லிடம் வீசி எறிந்தான் ரதன். ஏதும் புரியாமல் ஜெய்மல் கடிதங்களைப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தான். படிக்கப் படிக்க அவன் முகத்தில் ஆச்சரியரேகை பெரிதாகப் படர்ந்தது, படித்து முடித்ததும், ''இதற்கென்ன அர்த்தம் ரதன்?'' என்றான்.

''பந்தயத்தில் தோல்வியை நான் ஒப்புக்கொள்கிறேன் என்று அர்த்தம். உன் ஜாகீர்கள் தப்பினது மட்டுமல்ல ஜெய்மல், என் சொத்து, சுதந்தரம், மொகலாயர் எனக்களித்த ஜாகீர்கள் எல்லாவற்றையும் உனக்குக் கொடுத்துப் பத்திரம் எழுதியு மிருக்கிறேன். பந்தயத்தில் நான் தோற்றதாக அக்பருக்கும் ஒரு கடிதம் எழுதியிருக்கிறேன். அத்துடன் மொகலாய சைன்னியத் திலுள்ள என் உபசேனாதிபதிப் பதவியையும் ராஜிநாமாச் செய்தி ருக்கிறேன். உன் சொத்துக்கள் தப்பிவிட்டன. வேறு சொத்துக்களும் சேர்ந்துவிட்டன. எவ்வளவு சேர்ந்திருந்தாலென்ன, அவற்றை அநுபவிக்கக் கொடுத்து வைக்கவேண்டாமா?'' என்றான் ரதன்.

''ஏன், அநுபவிக்காமலென்ன?'' என்று ஜெய்மல் கேட்டான்.

''அநுபவிப்பதற்கு ஆயுசு வேண்டாமா?'' என்று ரதன் சிரித்தான்.

''என்ன சொல்லுகிறாய் ரதன்?'' என்று பீதியுடன் கேட்டான் ஜெய்மல்.

''ஜெய்மல்! நான் உன்னைப் போல் அநியாயம் செய்பவனல்ல. உனக்குச் சரியான நியாயம் வழங்கவே இங்கு வந்திருக்கிறேன். நியாயமாகப் பார்க்கப் போனால் உன் ஜாகீர்களே உனக்குத் தங்குவது கஷ்டம். பந்தயத்தில் உண்மையில் நான்தான் ஜயித்திருக்கிறேன். அகிலா எனக்கு வசப்பட்டுவிட்டாள் என்பதை அவள் வாயாலேயே சற்றுமுன் தெரிந்துகொண்டிருக்கிறாய். அவள் வார்த்தையைவிட பந்தயத்தில் நான் ஜயித்ததற்கு வேறு என்ன ருசு வேண்டும்?''

''அப்படியானால் உன் ஜாகீர்களை ஏன் விட்டுக்கொடுக் கிறாய்?''

''நீ இன்று உண்மை பேசியதால் - என், நீ சில நாட்களாகவே உண்மைதான் பேசுகிறாய் ஜெய்மல்! அன்று ஹாராவளியில் சொன்னாய், 'இந்த ஜீவபூமியில் பதிவிரதைகள் இருப்பார்கள்' என்று. உன் பந்தயமில்லாவிட்டால் நான் அகிலாவை எங்கே சந்திக்கப் போகிறேன்? இன்று மற்றொரு தரம் உண்மையை நீயே சொல்லி விட்டாய். நான் ரதன் சந்தாவத் என்று இப்பொழுதுதான் அகிலா அறிந்தாள். இந்த மாதிரி திரும்பத் திரும்ப நீ சொன்ன உண்மை களுக்காகவே நான் தோல்வியை ஒப்புக்கொண்டு என் ஜாகீர்களை உனக்குப் பரிசளிக்கிறேன். நான் செய்து கொண்டது கேவலமான பந்தயம். அதை நினைக்க நினைக்க இவ்வளவு கேவலமாக இருந்தோமே என்ற வெறுப்பே என்னைக் கவ்வுகிறது. இந்த மாதிரி பந்தயத்தில் வெற்றியடைவது சுத்த வீரனுக்கு அழகல்லவென்றே வெற்றியை உனக்கு அளிக்கிறேன்'' என்றான் ரதன்.

அவன் வார்த்தைகளால் ஜெய்மல்லுக்குச் சிறிது நம்பிக்கை பிறக்கவே, ''ரதன் நாமிருவரும் ஏதோ தவறாக நடந்துகொண்டு

விட்டோம். இனிமேல் நண்பர்களாக இருப்போமே. நீ ரதன்தான் என்று நான் பகிரங்கமாக ஒப்புக்கொண்டு உன்னை விடுதலை செய்கிறேன். என்ன சொல்கிறாய்'' என்றான்.

ரதன் இதழ்களில் புன்முறுவல் உதயமாயிற்று. ''ஜெய்மல்! உன் உண்மைக்குப் பரிசளித்ததை கேட்டாயே ஒழிய உன் வஞ்சகத்துக்கு நான் வைத்திருக்கும் பரிசு என்னவென்று கேட்கவில்லையே'' என்றான் ரதன்.

ஜெய்மல் விழித்தான். ''என்ன விழிக்கிறாய் ஜெய்மல்! நீ செய்த வஞ்சகம் சாமானியமானதா? யோசித்துப் பார். உஜ்ஜ யினிக்கு நான் சென்றால் என்னைக் கொன்றுவிடுவார்கள் என்று தெரிந்தும் ஹாராவளியிலிருந்து என்னைக் கிளப்பினாய். நான் யாரென்று தெரிந்தும் நீதி ஸ்தலத்தில் தெரியாதது போல் பாசாங்கு செய்து என்னைத் தூக்குமேடைக்கு அனுப்பமுயன்றாய். அகிலா என்னைக் காதலிக்கிறாள் என்று தெரிந்தும் அவள் மனத்தில் என்னைப் பற்றி வெறுப்பேற்படக் கூடிய விஷயத்தைப் புகுத்தினாய். அதுவும் பலிக்காமல் போகவே என் உயிருக்காக அவள் கற்பை விலை பேச முயன்றாய். இத்தனை வஞ்சகத்துக்கும் என்ன பரிசு வேண்டும், நீயே சொல். தூக்கில் தொங்க இஷ்டமா, அல்லது என் வாளினால் உயிர்விட இஷ்டமா?'' என்று கேட்டுக்கொண்டே ரதன் எழுந்தான்.

''ரதன்! இங்கு நீயே சேனாதிபதி போலவும் நான் உன் கையில் சிக்கியிருப்பது போலவும் பேசுகிறாயே. ஒரு குரல் கொடுத்தால் உன் கதி என்னவாகும் தெரியுமா?'' என்று ஜெய்மல் கேட்டான்.

ரதன் கண்கள் ஆச்சரியத்தால் மலர்ந்தன, ''ஏது ஜெய்மல்! வரவர உன் உடம்பில் தைரியமும் ஊறுகிறாற்போல தோன்றுகிறதே. ரதனை உனக்கு இன்றுதான் தெரியுமா? மொகலாய வீரர்கள் அத்தனை பேரையும் நீ கூப்பிட்டாலும் உன் உயிர் என்னிடமிருந்து தப்பாது. வீண் பேச்சு வேண்டாம். வாளை

எடுத்துக்கொள், நமது பந்தயத்தின் கடைசி அத்தியாயம் முடியட்டும்'' என்றான்.

வேறுவழியின்றி ஜெய்மல் வாளை எடுத்துக்கொண்டான். ரதன் சந்தாவத்தும் வாளை உருவிக் கையில் பிடித்துக் கொண்டு சண்டைக்கு அனுகூலமாக மஞ்சங்களையெல்லாம் ஒரு புறமாகத் காலால் தள்ளி இடம் ஏற்படுத்திக் கொண்டான். அடுத்த கணம் ஜன்மவைரிகள் இரண்டு பேர்களுடைய வாள்களும் ஒன்றுடன் ஒன்று மோதின. ரதன் சந்தாவத் வெகு அலட்சியமாக வாளைச் சுழற்றினான். ஜெய்மல்லைச் சமாளிப்பதை அவன் ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. ஏதோ குழந்தையுடன் விளையாடு வது போல் ஜெய்மல்லை அறைமூலைக்கு ஓட்டியும் தான் பின் வாங்கிஅறைக்கு நடுவே இழுத்தும் அசர அடித்தான். ஜெய்மல்லின் கை நடுங்க ஆரம்பித்தது. மறு நிமிடம் அவன் வாள் பறந்து அறையின் ஒருமூலையில் சென்று விழுந்தது. அவன் வலது கையில் ரதன் வாள் பாய்ந்து ரத்தம் ஆறாக கொட்டிக் கொண்டிருந்தது. அதே சமயம் வடக்குக்கோட்டை வாசலில் 'டுமீல்' 'டுமீல்' என்று கிளம்பிய பீரங்கிச் சத்தத்தைக் கேட்டு இருவரும் அசைவற்று நின்றனர்.

ரதன் மிகுந்த கோபத்துடன் ஜெய்மல்லைப் பார்த்து, ''ஜெய்மல்! கோட்டை வாசல் தாக்கப்படுகிறது. எந்த மடையன் உன்னைச் சேனாதிபதியாக நியமித்தான்? எதிரி இவ்வளவு அருகில் இருக்கையில் வஸந்த மஹாலில் தூங்க ஒரு சேனாதிபதி! இதற்கு ஔரங்கசீப்பே உன்னை தூக்கில் போடுவான். என் கையால் சாகவேண்டாம். எப்படியாவது தொலைந்துபோ! உன் கை வெட்டித் தொங்கட்டும். ஊர் அமளிப்படும் போல் தோன்றுகிறது. அகிலாவின் கதி என்ன ஆயிற்றோ பார்க்கிறேன்'' என்று கூறிவிட்டு ரத்தம் தோய்ந்த உருவிய வாளுடன் சரசரவென்று வெளியே சென்றான் ரதன்.

சற்றுநேரத்துக்கெல்லாம் உள்ளே நுழைந்த பாராக்காரன் மீது ஜெய்மல் தன் கோபம் முழுவதையும் திருப்பி, ''நீங்கள் காவல் புரியும் லக்ஷணம் நன்றாயிருக்கிறது. அதோ போகிறானே, அவனைப் பிடியுங்கள், மடையர்களா!'' என்று கூவினான்.

காவலாளியும் அவனைப் ''பிடி பிடி'' என்று கூச்சல் போட்டுக்கொண்டே ரதனைத் துரத்தினான்.

அத்தியாயம் 25

போக இடமில்லை அகிலா!

சாரங்கபூர் திமிலோலப்பட்டது. ராஜபுத்திரப் படைகள் நதியின் புதுவெள்ளம் போல் அதிவேகமாக வடக்குக்கோட்டை வாசலுக்குள் பிரவேசித்துவிட்டன. இந்தச் சைன்னியப் பிரவாகத்தை மொகாலயப் படைகள் ஆங்காங்கு சிறிது தேக்கி யுத்தம் புரிந்து கொண்டிருந்தாலும் தயால்ஸாவின் படையின் தாக்குதல் சமாளிக்க முடியாததாயிருந்தது. மாறுவேஷம் பூண்டு ஏற்கனவே உள்ளேயிருந்த தயால்ஸாவின் ஐந்நூறு வீரர்கள் தந்திரமான இடங்களையெல்லாம் திறந்து விட்டபடியால் எதிரிகள் பிரவேசம் மிகச் சுலபமாகி விட்டது.

எங்கும் ஒரே கூச்சல்! தாக்கும் ஆயுதங்களின் சப்தம் ஒருபுறமும், மாண்டு விழும் குதிரைகளின் மரணக் கூச்சல் மற்றொருபுறமும் மிகப் பயங்கரமாகக் கிளம்பிக்கொண்டிருந்தன. தயால்ஸாவின் பீரங்கிக்குண்டுகளால் தகர்க்கப்பட்ட கட்டிடங் களின் உச்சிகள் பிளந்து விழுவதாலும், அவற்றின் கீழ் நசுக்கப் பட்ட ஜனங்களின் கூக்குரலாலும், தீப்பிடித்து எரியும் கட்டிடங்களின் மரத்துண்டுகள் 'படீல் படீ'லென வெடிப்பதாலும் ஏற்பட்ட நாலாவித சப்தங்கள் காதைச் செவிடுபடஅடித்தன. எங்கும் ஒரே ரகளை! ஒரே சண்டை! இந்தப் பிரளயத்தில் குழந்தை குட்டிகளைக் காப்பாற்ற ஓடும் சாதாரண ஜனங்களின் குழப்பம்!

யுத்தம் மும்மரமாக நடந்தது. கிடைத்த கொஞ்சம் அவகாசத்தில் உபசேனாதிபதியும் வீரர்களைத் திரட்டிச் சிறிது

எதிர்ப்பைக் காட்டினான். ஆனால் தயால்ஸாவின் பெரும் சைன்னியம் பிரவகித்துக்கொண்டே இருந்தது. வஸந்த மஹாலி லிருந்து கிளம்பிய ரதன் சந்தாவத் நிலைமையை ஒருவிதமாக ஊகித்துக்கொண்டான். தயால்ஸாவின் யுத்த தந்திரம் அவனுக்குப் பெரிய ஆச்சரியத்தை விளைவித்தது. 'எதிரியின் படை அருகிலி ருந்தால் ஆஜ்மீர் ரஸ்தாவில் போக்குவரத்து இருக்காதே. அதிலிருந்தே நிலைமையை ஊகித்து எச்சரிகையுடன் பாது காப்பைப் பலப்படுத்தியிருக்கலாமே. ஒருவருக்கும் தெரியாமல் தயால்ஸா உள்ளே நுழைந்த மர்மமென்ன? ஒரு நாள் முற்றுகைக் கூட இல்லாமல் தயால்ஸா உள்ளே எப்படி நுழைந்தார்? தயால்ஸா மந்திரவாதியா அல்லது ஜெய்மல்தான் தூங்கிவிட்டானா?' என்று ஏதேதோ எண்ணியவனாய்ச் சாரங்கபூர் தெருக்களில் வெகுவேக மாக நுழைந்து சென்றான். தயால்ஸா மாறுவேஷத்தில் அனுப்பிய சிறு படையின் மர்மம் ரதனுக்கு எப்படித் தெரியும்?

இத்தனை யோசனையிலும் ரதனுக்கு ஒருவிஷயம் நன்றாக விளங்கியது. தயால்ஸாவின் பீரங்கிகள் சாரங்கபூரின் தெற்கு, கிழக்கு, வடக்கு மூலைகளில் குறிவைத்துச் சுடப்பட்டனவே யொழிய மேற்குத் திசையில் மட்டும் பிரயோகிக்கபடவே இல்லை. பெரிய தர்மசாலை மேற்குமூலையில் இருப்பதாலும் அகிலா இங்கே அங்கே தங்கியிருக்கும் விஷயம் தயால்ஸாவுக்குத் தெரியுமாகையாலும் தயால்ஸா அந்தத் திக்கில் பீரங்கி பிரயோகத்துக்கு அனுமதிக்கவில்லையென்பதை ரதன் புரிந்து கொண்டான். தயால்ஸா ஊரின் மேற்கு எல்லைக்குள் நுழை வதற்குள் அகிலாவுக்கு மொகலாயத் துருப்புகளால் தீங்கு ஏற்பட்டால் என்ன செய்வது என்ற திகிலுடன் பெரிய தர்ம சாலையை நோக்கி ஓடினான். மோஹன்தாஸ் அனுப்பிய நாலைந்து வீரர்களும் அவனைத் தொடர்ந்து சென்றனர். தர்மசாலைக்குப் போகும் நேர் ரஸ்தாவில் சென்றால், சண்டையிடும் துருப்பு களுக்கிடையில் அகப்பட்டுக் கொள்ளநேரிடுமாகையால், தர்ம சாலைத் திக்கைக் குறிவைத்துக்கொண்டு சிறுசந்துகளில் நுழைந்து ரதன் சென்றான்.

தர்மசாலைக்குச் சிறிது தூரத்திலிருக்கும்போதே அங்குள்ள நிலைமையைத் தெரிந்து ரதன் ஒரு கணம் தனது நடைவேகத்தை தளர்த்தி யோசிக்க ஆரம்பித்தான். 'தர்மசாலை மொகலாயத் துருப்புகளால் சூழப்பட்டிருந்தது. அகிலா அங்கிருக்கும் விஷயம் உபசேனாதிபதிக்கு எப்படியோ தெரிந்திருக்கவேண்டும். அகிலாவைச் சிறைப்படுத்தி அவளைப் பந்தயமாக வைத்து எதிரியுடன் பேரம் பேசலாமென ஏற்பாடு போலிருக்கிறது' என்று ரதன் நினைத்தான். எதற்கும் தர்மசாலையில் நிலைமை எப்படி யிருக்கிறதென்று கவனிப்போம் என்று தன்னுடன் வந்த வீரர்களை வாசலில் நிற்க வைத்துவிட்டுத் தர்மசாலைக்குள் நுழைந்தான். அவனை யாரும் தடை செய்யவில்லை. அவனது மொகலாய உடை அவன் எந்த இடத்தில் நுழைவதற்கும் அநுகூலமாயிருந்தது. மாடிப்படிகளில் சரசரவென்று ஏறி ரதன் ஓடினான். மாடிப்படியின் உச்சியிலிருந்த கதவு நன்றாகத் திறந்திருந்தது. உள்ளே அகிலா, அவள் தகப்பனார், பண்டித்ஜீ மூவரையும் நோக்கியவண்ணம் மால்தேவ் நின்று கொண்டிருந்தான். ஓகோ! இது இவன் விஷமமா?' என்று நினைத்தபடி என்ன தான் நடக்கிறது என்பதைக் கவனிக்க ரதன் சிறிது ஒதுங்கி நின்றான்.

''அகிலா! இதில் உனக்கு என்ன ஆட்சேபனை இருக்க முடியும்? நான் உன் உறவினனல்லவா? என் ஒருவனைத் தவிர உன்னை யார் இந்தச் சந்தர்ப்பத்தில் காப்பாற்ற முடியும்?'' என்றான் மால்தேவ்.

அகிலா பண்டித்ஜீயைப் பார்த்தாள். பண்டித்ஜீ மிகுந்த இகழ்ச்சியுடன் மால்தேவை நோக்கினார். அந்தச் சங்கடமான நிலைமையிலும் பண்டித்ஜீயின் ஹாஸ்யம் அவரை விடவில்லை. ''உனக்கென்ன குறைச்சல் அகிலா? வரவர உனக்கு உறவினர் சகாயம் அதிகமாகிக்கொண்டு வருகிறது. சற்றுமுன்தான் ஜெய்மல் உன் மாமனென்று சொல்லிக்கொண்டு உன்னைக் கல்யாணம் செய்து கொள்ளப்பார்த்தான். அடுத்த மாப்பிள்ளையாக இதோ உன் அத்தான் வரம் கேட்கிறான். பேசாமல் உன் உறவினர்களைக் கூட்டி ஒரு சுயம்வரம் வைத்துவிடலாம் போலிருக்கிறது'' என்றார்.

மால்தேவுக்குக் கோபம் தலைக்குமேல் ஏறினாலும் அதை அடக்கிக்கொண்டு, ''பண்டித்ஜீ! உங்களுக்குச் சம்பந்தமில்லாத விஷயங்களில் நீர் தலையிடாதிருப்பது நல்லது. உறவினராகிய எங்களைவிட உங்களுக்கு அகிலாவிடம் என்ன சிரத்தையிருக்க முடியும்?'' என்றான்.

''அகிலாவுக்கு உன்னைவிட அவள் தகப்பனார் நெருங்கிய உறவல்லவா?'' என்று பண்டித்ஜீ கேட்டார்.

மால்தேவ் விழித்தான். ''விழிக்காதே மால்தேவ். அவருக்கு உன்னை போன்ற பேடிகளைக் கண்டால் பிடிப்பதில்லை. அவருக்கு தம் பெண்ணிடம் சிரத்தையிருக்கு மென்று நீ நம்பும் பக்ஷத்தில் வந்த திசையைப் பார்த்துக் கொண்டு நடையைக் கட்டலாம்'' என்றார் பண்டித்ஜீ.

''இது வாஸ்தவந்தானா?'' என்று அகிலாவின் தகப்பனாரைப் பார்த்து மால்தேவ் கேட்டான். பெரியவர் ஒரு விநாடி அவனைக் கூர்ந்து நோக்கிவிட்டு, ''மால்தேவ்! பைத்தியம் மாதிரி உளறாதே. அகிலாவை மணம்செய்து கொள்ள விரும்புகிறவன் பெரிய வீரனாயிருக்க வேண்டும். பிரதி யுபகாரத்தை எதிர்பாராமல் தங்களைக் காப்பதற்கு உயிரையும் விடக்கூடிய புருஷனையல்லவா ஸ்திரீகள் விரும்புவார்கள். அபாயத்தில் பேரம் பேசும் அற்பர்களை வீர ஸ்திரீகள் விரும்பு வார்களா? நீயே யோசித்துப்பார்'' என்றார்.

''அது முடியாது'' என்றார் பண்டித்ஜீ.

''எது?'' என்று பெரியவர் கேட்டார்.

''யோசித்துப்பார் என்று சொன்னீர்களே அது. மால்தேவின் தலையில் யோசனை பிறப்பதற்கு வேண்டிய முக்கிய வஸ்து இல்லை'' என்று பண்டித்ஜீ சொல்லிவிட்டுத் தமது இகழ்ச்சியின் எல்லையைக் காட்டினார்.

மால்தேவின் பொறுமை இந்த தாக்குதல்களால் உடைந்து விட்டது. ''நீங்களிருவரும் மால்தேவிடம் விளையாடுவதாக நினைக்கிறீர்கள். நீங்கள் என்னிடம் விளையாடவில்லை.

அகிலாவின் உயிருடன் விளையாடுகிறீர்கள். இல்லை, இல்லை மானத்தோடு விளையாடுகிறீர்கள். என்னை மணக்க அகிலா சம்மதித்தால் ஒரு கணத்தில் வாசலிலுள்ள மொகலாய வீரர்கள் மறைவார்கள். இல்லையேல் இப்பொழுதே உபசேனாதிபதியின் வீட்டுக்கு அவள் செல்ல நேரிடும். அப்புறம் அவள் யாரை மணப்பாள்? ஆபத்தில் பேரம் பேசாத வீரனை மணப்பாளா? வீணாக வார்த்தைகளைக் கொட்டி வினையைச் சம்பாதித்துக் கொள்ளவேண்டாம். மால்தேவ் பைத்தியமாயிருக்கலாம். ஆனால் அவன் உங்கள் ஜாதி, ராஜபுத்திரன்...'' என்று ஆத்திரத்துடன் பேசிக்கொண்டே போனவனை அகிலாவின் கூரிய சொற்கள் தடுத்தன. ''நீ ஒரு ராஜபுத்திரனா'' என்றாள் அகிலா.

''நான் ராஜபுத்திரன் இல்லையா அகிலா! நான் யாரென்பதைக் காட்டுகிறேன். இதோ அடுத்த விநாடியில் நீயும் உன் தகப்பனும் இந்தப் பைத்தியப் பண்டித்ஜீயும் மொகலாயச் சிப்பாய்களுக்கிடையில் தத்தளிக்கும்போது மால்தேவ் யாரென்பதைத் தெரிந்துகொள்வாய்'' என்று சொல்லிக்கொண்டே மால்தேவ் சிப்பாய்களைக் கூப்பிட ஜன்னலை நோக்கி ஓர் அடி எடுத்து வைத்தான். இதுவரை இந்த வேடிக்கையைப் பார்த்துக் கொண்டிருந்த ரதன், ''அவசரப்படாதே மால்தேவ்!'' என்று சொல்லிய வண்ணம் கையில் உருவிப் பிடித்திருந்த ரத்தம் தோய்ந்த வாளைச் சிறிது திருப்பிக்கொண்டே மால்தேவை அணுகினான்.

உள்ளேயிருந்த நான்கு பேரும் பிரமித்துப் போனார்கள். ''மஹாதேவ்ஸிங்!'' என்று மால்தேவ் பயத்துடன் கூவினான். அகிலாவின் மனத்தில் பெரும் குழப்பம். பெரியவர் அசைவற்று நின்றார். பண்டித்ஜீயின் ஹாஸ்யங்கூடப் பறந்து போயிருக்க வேண்டும். அவர் முகத்திலிருந்து இகழ்ச்சி மறைந்து ஆச்சரியத்துக்கு இடமளித்தது.

ரதன் மற்றவர்களைக் கவனிக்காமல் மால்தேவை அணுகினான். ''மால்தேவ்! சாரங்கபூரில் நமது நாடகங்கள் முடிந்து

விட்டன தெரியுமா?'' என்றான். மால்தேவுக்கு ஏதும் புரியாததால் விழித்தான். ''நீ அகிலாவைக் கைது செய்து இப்பொழுது என்ன பயன் மால்தேவ்? அடுத்த ஜாமத்திற்குள் சாரங்கபூர் தயால்ஸாவின் வசமாகிவிடும். உன்னையும் ஜெய்மல்லையும் போன்ற மடையர்களை நம்பிய மொகலாயர்கள் எப்படி உருப்பட முடியும்? சாரங்கபூர்க்கோட்டை சாமான்யமானதா? அதில் திடும் பிரவேசமாக நுழைந்த தயால்ஸாவிடமிருந்து நீயும் வாசலி லிருக்கும் எழுபது எண்பது சிப்பாய்களும் எப்படித் தப்பமுடியும்? மால்தேவ் எந்தப் பக்கத்திலும் வெளியேற முடியாது. இந்தச் சமயத்தில் அகிலாவை விரோதம் செய்து கொண்டு முட்டாள் தனத்தால் தலையை இழக்காதே. பேசாமல் வீரர்களை அனுப்பிவிடு'' என்று யோசனை கூறி வாள்பிடித்த கையை மால்தேவின் தோளின்மேல் ஊன்றினான் ரதன்.

''மஹாதேவ்ஸிங்! எனக்கும் சிறிது புத்தியிருக்கிறது-'' என்று மால்தேவ் ஆரம்பித்தான். ''அப்படியா!...'' என்றார் பண்டிதஜீ.

அவரை லக்ஷ்யம் செய்யாமலே மால்தேவ் சொன்னான். ''மஹாதேவ்ஸிங்! நீ எப்படிச் சிறையிலிருந்து தப்பினாய் என்பது எனக்குத் தெரியாது. நீ புத்திசாலியானதால் யோசித்துப்பார் தயால்ஸாவின் பீரங்கிக்குண்டுகள் மேல் திசையில் விழவே இல்லை. அகிலாவைக் காப்பாற்றுவதில் தயால்ஸா அவ்வளவு அக்கறை காட்டுகிறார். அந்த அக்கறையே எனக்குப் பாதுகாப்பு. நான் அகிலாவைச் சிறை செய்து மேற்கு வாசலால் வெளியே செல்ல முடியும். தயால்ஸாவின் படைகள் முக்கால்வாசி உள்ளே நுழைந்து விட்டதால் இந்தப்பக்கத்தில் சைன்னிய நடமாட்டம் இல்லை. தயால்ஸா இந்தத் தர்மசாலைக்கு வருமுன் அகிலா என் பாதுகாப்பில் வெகுதூரத்தில் இருப்பாள். இப்பொழுது என்ன சொல்கிறாய்?'' என்றான்.

ஒரு மனிதனுடைய அயோக்கியத்தனம் எவ்வளவு தூரம் செல்லும் என்பதைத் தெரிந்துகொண்ட ரதன், ''மால்தேவ்! அவசரப்படாதே. உன் அண்ணன் சொல்வதைக்கேள்'' என்றான்.

''அண்ணனா!''

''ஆம்! ரதன் சந்தாவத்தும் நீயும் அண்ணன் தம்பிமாதிரி என்று ஏற்கெனவே நீ சொல்லியிருக்கிறாய்; நினைவிருக்கிறதா?''

''ஆம்! அதற்கென்ன?''

''அப்படியானால் நான்தான் உன் அண்ணன். நான் தான் ரதன் சந்தாவத். ரதன் சந்தாவத்தின் வார்த்தையை மீறுவது எவ்வளவு அபாயம் என்பதை ராஜபுதனம் அறியும்.''

''பொய்! பொய்! நீயாவது ரதன் சந்தாவத்தாவது!'' என்று மால்தேவ் கூறினான். பெரியவரும் பண்டிதஜீயும் அதிர்ச்சியால் குனிந்திருந்த தலைகளை நிமிர்த்தினார்கள்.

''உனக்குச் சந்தேகமிருந்தால் என் உயிருக்காகச் சற்று முன் ஜெய்மல்லிடம் மன்றாடிய அகிலாவைக் கேட்டுப்பார். அதிலும் சந்தேகம் தீராவிட்டால் வலதுகை வெட்டப்பட்டு நிற்கும் ஜெய்மல்லைப் போய் வஸந்த மஹாலில் சந்தித்து விசாரித்துப் பார். இதோ இந்த வாளில் இருப்பது ஜெய்மல்லின் ரத்தம். அதில் உன் ரத்தமும் கலக்கவேண்டுமென்று ஆசைப்படுகிறாயா?'' என்று சொல்லி, ரதன் வாளின் நுனியை மால்தேவ் கழுத்துக்காகச் சிறிது நீட்டினான்.

மால்தேவுக்கு இதுவரையில் புரியாத பல உண்மைகள் புரிந்தன. சேனாதிபதி மாளிகையில் ஜெய்மல் முதல் முதலில் ரதனைச் சந்தித்தபோது திடுக்கிட்டதை நினைத்துப் பார்த்தான். ஆனால் இதைப்பற்றியெல்லாம் யோசிக்க அப்பொழுது அவகாசமில்லை. ஆகவே பேச்சைத் திருப்பினான். மால்தேவ். ''ஓகோ! நீதான் ரதன்சந்தாவத்தா? அகிலாவை நீ அடித்துக் கொண்டு போகப் பார்க்கிறாயா? பந்தயத்தில் ஜயிக்க இது ஒரு வழி போலிருக்கிறது!''

''பந்தயத்தில் நான் ஜயிக்கவில்லை மால்தேவ். நான் தோற்றதாக ஒப்புக்கொண்டு ஜெய்மல்லுக்கு என் சொத்து சுதந்திரம் பூராவையும் எழுதிக் கொடுத்துவிட்டேன். மொகலாய

சைன்னியத்தில் என் உபசேனாதிபதிப் பதவியையும் ராஜிநாமா செய்துவிட்டேன். ஆகையால் இப்பொழுது பந்தயமில்லை; பதவியுமில்லை. கடமை ஒன்றுதானிருக்கிறது!'' என்றான் ரதன்.

''என்ன கடமை?''

''ஒவ்வொரு ராஜபுத்திரனும் பெண்களுக்குச் செய்ய வேண்டிய கடமை. அகிலாவைக் காப்பாற்றித் தயால்ஸாவிடம் ஒப்படைத்துவிட்டால் என் கடமை முடிந்தது'' என்று ரதன் பதில் சொன்னான்.

அதுவரை அவனைப்பார்க்காத அகிலா அவன் முகத்தை ஏறெடுத்துப் பார்த்தாள். அந்தப் பார்வையில் ஓர் ஆறுதல் இருந்தது. அன்பும் கலந்திருந்தது. ஆனால் அவளை ரதன் திரும்பியும் பார்க்கவில்லை.

''மால்தேவ்! நீயும் ஒரு க்ஷத்திரியன். உனக்கும் அந்தக் கடமை உண்டு. சிப்பாய்களை அனுப்பிவிடு. வா ஜன்னலுக்கு'' என்றான் ரதன்.

''முடியாது, ரதன் சந்தாவத்! என்னை ஏமாற்ற யாராலும் முடியாது. சிப்பாய்கள் இதோ உள்ளே வரப்போகிறார்கள் பார். அப்புறம் உங்கள் சாமர்த்தியம். எண்பது வீரர்களை உன் வாள் சமாளிக்குமா பார்ப்போம்'' என்று ஜன்னலை நோக்கி நகர்ந்தான் மால்தேவ். ரதனின் இடது கை அவன் தோளை இரும்பாகப் பிடித்துக்கொண்டது. வலது கையிலிருந்த வாள் கீழே இறங்கி அவன் இடுப்பில் ஊன்றியது. அந்த நிலையிலேயே ரதன் அவனை ஜன்னலுக்காக இழுத்துச் சென்றான். ''சிரி, மால்தேவ்! உன் சிப்பாய்களிடம் நீ மகிழ்ச்சியுடன் இருப்பதாகக் காட்டு. அவர்களை யுத்தரங்கத்துக்குப் போகும்படி சொல். வேறு ஏதாவது ஒரு வார்த்தை பேசினாலும் சரி, வேறு எந்த சைகையைச் செய்தாலும் சரி, இந்த இடத்திலேயே பிணமாகிவிடுவாய். உம்! பேசு!'' என்று அதட்டினான்.

மால்தேவ் ஜன்னலுக்கு வெளியே கழுத்தை நீட்டி சிப்பாய்களைப் போய்விடும்படி சமிக்ஞை செய்தான். மேலே ரதன்

மால்தேவின் தோளின்மேல் கை போட்டுக்கொண்டிருப்பதையும், மால்தேவ் சந்தோஷத்துடன் தங்களைப் போகச் செல்வதையும் பார்த்து வீரர்கள் திருப்தியுடன் திரும்பினார்கள். அவர்களுள் ஒருவன், ''எஜமான் வந்த காரியம் பூர்த்தியாகிவிட்டது போலிருக்கிறது; ரொம்ப ஜோரிலிருக்கிறார்'' என்றான். மால்தேவ் இருந்த ஜோர் அவனுக்கு என்ன தெரியப்போகிறது?

சிப்பாய்கள் மறைந்ததும், ''இனிமேல் என்ன செய்வதாக உத்தேசம்'' என்று மால்தேவ் கேட்டான்.

''தயால்ஸாவின் படைகள் இங்கு வந்து நம்மைக் கைது செய்யும்வரையில் காத்திருப்பதாக உத்தேசம்'' என்று ரதன் பதில் கூறினான்.

அகிலா முதன் முதலாக அப்போதுதான் பேசினாள். ரதன் மேல் அவளுக்கிருந்த கோபம், அவன் பந்தயத்தைக் கேட்டதால் ஏற்பட்ட உள்ள அதிர்ச்சி எல்லாம் அவன் அபாயத்தை நினைத்து மறைந்துவிட்டன. ''ஐயோ! போய் விடுங்கள். மாமா உங்களை லேசில் விடமாட்டார். சீக்கிரம் சென்றுவிடுங்கள்'' என்று சொன்னாள். அவள் குரல் விக்குவதையும், கண்களில் நீர் பெருகுவதையும் பண்டித்ஜீ கண்டார்.

ரதன் அவளைத் திரும்பிப் பார்க்காமலே, ''போக வேண்டிய இடம் எதுவும் இல்லை அகிலா!'' என்று சொல்லிக் கொண்டு உருவின வாளுடன் வாசற்படியில் காவலாய் நின்றான்.

அத்தியாயம் 26

மன்னிப்பு

அகிலா எதிப்பார்த்ததுபோல் தயால்ஸா ரதனுக்கு எந்தவிதக் கெடுதரையும் விளைவிக்கவில்லை. கைதுசெய்த ஜெய்மல்லைக் கூட விடுதலை செய்து ஆஜ்மீருக்கு அனுப்பி விட்டார். மால்தேவும் ஜெய்மல்லுடன் ஆஜ்மீருக்குச் சென்று விட்டான். அடுத்த சில நாட்களில் சாரங்கபூரில் நிம்மதியைப பரப்புவதிலேயே தயால்ஸா காலங்கழித்தார். அவர் திட்டங் களுக்கு அகிலாவின் மனப்போக்குத்தான் பெரிய இடைஞ்சலாக நின்றது.

தயால்ஸா சாரங்கபூரை வெகு சுலபமாக அடக்கிவிட்டார். ஆனால் தம் மருமகளின் கோபத்தை மட்டும் அவரால் அடக்க முடியவில்லை. ரதன் சந்தாவத்தை மன்னித்துவிடும்படி எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தார். அவள் அசையவில்லை. ''யாரும் அஞ்சாத தயால்ஸாவே கெஞ்சும்போது நீ பிடிவாதம் செய்வது நியாயமல்ல'' என்று பண்டித்ஜீ கூட எவ்வளவோ மன்றாடினார். ஆனால் பெண்ணின் பிடிவாதத்தை யார்தான் அடக்கமுடியும்? தயால்ஸா வாவது ரதனை மன்னிக்கும்படி மன்றாடினார்; ரதன் அவ்வளவு கூடக் கேட்கவில்லை. ஒரூர ஒரு தடவை பார்த்துப் பேச அனுமதி கேட்டான்; அவ்வளவுதான். அதற்கும் அவள் சம்மதிக்க வில்லை. அவள் பிடிவாதத்தால் தம்முடைய திட்டங்கள் சிதறிப் போவதை தயால்ஸா அறிந்தார். ரதன் சந்தாவத்தை ராஜபுத்திரர்கள் பக்கம் இழுத்துவிட வேண்டுமென்பது தயால்ஸாவின் வெகு நாளைய ஆவல். தயால்ஸா ராணுவ மந்திரி இல்லையே தவிர ராஜபுதனத்தின் சரித்திரத்தையும் அதன் பலவீனங்களையும் நன்றாய் அறிந்திருந்தார். மிகத் திறமைசாலியான ராஜபுத்திரர்கள் பரஸ்பர விரோதத்தால் பிரிந்து மொகலாயரிடம் சேவகத்துக்கு அமர்ந்ததாலேயே புகழும் பலமுமிக்க ராஜபுத்திர சைன்னியம் பலவீனப்பட்டதென்பதை தயால்ஸா சந்தேகமறப் புரிந்து

கொண்டிருந்தார். மற்ற ராஜபுத்திரர்கள் சேவகத்துக்கு அமர்ந்ததை விட, ரதன் சந்தாவத் மொகலாயரிடம் சேர்ந்ததால் ராஜபுதனத்துக்குப் பெரும் நஷ்டம். ராஜபுத்திர சைன்னியத்தில் சித்தூர் ராணாவுக்கும் சேனாதிபதி ஸவால்தாஸுக்கும் அடுத்தபடி நடத்தக்கூடியவர்கள் யாருமே இல்லை. ஹாராவளியில் இருந்து மொகலாய சைன்னி யத்தை உடைக்க வேண்டுமானால், மலைசூழ்ந்த உதயஸாகரச் சமவெளி யில் தம் படைகளைப் புகவிட வேண்டும். அப்போதுதான் ராணாவும் பெரிய சேனாதிபதியும் மலைகளிலிருந்து தாக்குவதற்கும் பின் பக்கத்தில் தம் படைகள் புகுந்து சண்டையிடுவதற்கும் முடியும் என்று தயால்ஸா எண்ணினார். இதற்காக அவர் ரதன் சந்தாவத்தைத் தமது பக்கம் இழுப்பதே மிகக் கஷ்டமாயிற்று ''மொகலாயர்களிடம் சம்பளம் வாங்கிவிட்டு அவர்களுக்கு எதிராக வாளை உருவ மாட்டேன்'' என்று ரதன் திட்டமாக சொல்லிவிட்டான். ஆனால் சாணக்கியனான தயால்ஸா அவனைத் தம் பக்கம் திருப்புவதற்கு வேண்டிய முயற்சிகளை வெகு தந்திரமாகச் செய்து முடித்தார். கைதியான ஜெய்மல்லை எல்லோருடைய அபிப்ராயத்திற்கும் விரோதமாக விடுதலை செய்தார். அந்த விஷயத்தில் இந்திரஸிங்குக்குக் கூடக் கோபந்தான். ''இவனை எதற்காக விடுதலை செய்கிறீர்கள்?'' என்று இந்திரஸிங் நேரடியாகவே கேட்டார்.

''இவன் ரதன் சந்தாவத்தின் விரோதியல்லவா?'' என்றார் தயால்ஸா.

''அதற்காகவா விடுதலை செய்கிறீர்கள்? ரதன் உங்கள் மருமகளை காப்பாற்றியதற்கு இதுதான் பிரதி உபகாரமா?''

''ஆம்!''

இந்திரஸிங் கோபத்தால் வெடித்துவிடும் நிலமைக்கு வந்துவிட்டார். தயால்ஸா அவரைப் பார்த்து புன்முறுவல் செய்து, ''இந்திரஸிங்! ரதன் சந்தாவத்தின் ராஜிநாமாக் கடிதம் ஜெய்மல்லிடம் இருக்கிறது தெரியுமா?'' என்று கேட்டார்.

''தெரியும்.''

''ஜெய்மல், ரதன் சந்தாவத்தின் விரோதி. ரதன் மொகலாய சைன்னியத்திலிருந்து ஒழிந்தால் ஜெய்மல்லுக்கும் நிம்மதி; டைபர்கானுக்கும் நிம்மதி. ஜெய்மல்லை நான் விடுதலை செய்தால் அவன் நேராக டைபர்கானிடம் சென்று ராஜிநாமாக் கடிதத்தைக் கொடுப்பான். அப்பேர்ப்பட்ட ஓர் ஆயுதத்தை டைபர்கான் உபயோகப்படுத்தாமல் இருப்பானா? ரதன் பதவியை உடனே தொலைப்பதன்றி, நவாப்பிடம் சொல்லி ரதன் அங்கு தலையைக் காட்டினால் அவன் தலையை சீவிவிடவும் ஏற்பாடு செய்வான். அப்புறம் ரதன் அங்கு செல்லமுடியாது. இந்த ஏற்பாட்டால் மொகலாயர்கள் ஒரு சிறந்த சேனாதிபதியை இழப்பார்கள்; ராஜபுத்திர சைன்னியத்துக்கோ ஒரு சேனாதிபதி கிடைப்பான்'' என்றார் தயால்ஸா.

தயால்ஸா எதிர்ப்பார்த்தபடிதான் சகலமும் நடந்தன. டைபர்கான், ஜெய்மல் இவர்கள் முயற்சியால் ரதன் சந்தாவத்தின் பதவிபோயிற்று. அவனைச் சிறை செய்பவர்களுக்கு ஏராளமான பொன் பரிசளிப்பதாக டைபர்கான் பறையறிவித்தான். இந்தச் செய்தியை தயால்ஸாவே ரதனிடம் தெரிவித்தார். இத்தனை நாள் அவரை எதிர்த்து நின்ற ரதன் சந்தாவத் மெள்ள அவர் இஷ்டத்துக்கு இணங்கினான்.. ''ரதன் சந்தாவத்தின் வாள் அவர்களுக்குத் தேவையில்லை என்றால் அது ராஜபுதனத்துக்குப் பிரயோசனப் படட்டும்'' என்றான்.

''இப்பொழுதுதான் ஒரு நல்ல காரியத்துக்குப் ப்யன்படப் போகிறது ரதன்! தாய்நாட்டுக்கு உபயோகப்படாத வாள் ஒரு சுத்த வீரன் வாளல்ல. ராஜபுதனம் நம்மை ஏன் பெற்றெடுத்தது? ஹாராவளியிலுள்ள மொகலாய சைன்னியத்தை நாம் உடைத்து விட்டால் மொகலாய சாம்ராஜ்யத்தின் முதுகெலும்பை உடைத்தது போலாகும். அதன் பிறகு...''

''பிறகு என்ன?''

''ராஜபுதனம் புனிதப்படும். அதன் குழந்தைகள் நிம்மதியாக தூங்குவார்கள். பெண்கள் பயமின்றி சஞ்சரிப்பார்கள். ஜனங்கள் எல்லோரும் மதமாற்றமின்றித் தங்கள் தெய்வங்களைத் தொழு வார்கள். செத்துக்கிடக்கும் ராஜபுதனத்துக்கு உயிர் வந்துவிடும்.''

''ஜீவபூமியான பாரதத்துக்கு ராஜபுதனம் உயிர்நிலை யாகும்'' என்றான் ரதன் பெருமூச்சுடன்.

''அப்படியானால் சம்மதிக்கிறாயா ரதன்?'' என்று தயால்ஸா கேட்டார்.

''சம்மதிக்கிறேன். ஆனால் ஒரு நிபந்தனை!''

''என்ன அது?

''யுத்தத்துக்கு புறப்படும் முன் அகிலாவை ஒரு முறை பார்க்கவேண்டும்..''

''கண்டிப்பாய் ரதன். இதென்ன பிரமாத நிபந்தனை? தேச விடுதலைக்காகப் போரிடச்செல்லும் வீரனைப் பார்க்க எந்தப் பெண் மறுப்பாள்?'' என்றார் தயால்ஸா.

ஆனால் தயால்ஸா நினைத்தது போல் அந்தக் காரியம் அவ்வளவு சுலபமாக முடியவில்லை. என்ன சொல்லியும் அகிலா அவனைப் பார்க்க முடியாதென்று ஒரே பிடிவாதமாக மறுத்து விட்டாள். ஒரு பெண்ணின் பிடிவாதம் தமது காரியத்துக்குக் குறுக்கே நிற்பதைக் கண்டு தயால்ஸாவின் பொறுமைகூடக் கலைய ஆரம்பித்து. ''ரதனை நீ பார்க்க மறுக்கக் காரணம் என்ன?'' என்று வழக்கத்துக்கு விரோதமாகச் சற்று அதட்டலாகவே கேட்டார் தயால்ஸா.

ஏதோ யோசனையிலிருந்த அகிலா திரும்பி, ''என்ன கேட்டீர்கள் மாமா?''

''நீ ஏன் ரதனைப் பார்க்க மறுக்கிறாய்?''

''ஜஸ்வந்த் சிம்மன் மனைவி ஏன் கோட்டைவாசலை அடைத்துக் கணவனைப் பார்க்க மறுத்தால்?'' என்று அகிலா பதில் கேள்வி கேட்டாள்.

''ஜஸ்வந்த சிம்மன் மொகலாயரிடம் தோற்றுத் தலை நகருக்குத் திரும்பினான்....''

''இவர் மொகலாயரின் கையாள் அல்லவா?''

''யார் மொகலாயரின் கையாள் இல்லை அகிலா? நமது மூதாதையர்கள் இல்லையா? சித்தூர் ராணாக்களில் எவ்வளவு பேர் மொகலாயருக்குக் கைக்கட்டிச் சேவகம் செய்யவில்லை? அதற்காகப் பிந்திய பரம்பரைக்கு மன்னிப்பே இல்லையா? காலம் மாறுகிறது. அத்துடன் ரதனும் மாறுகிறான். ராஜபுதனத்துக்கு அவன் சேவை செய்யச் சந்தர்ப்பம் வேண்டும். அந்தச் சந்தர்ப்பத்தை ஏன் அளிக்க மறுக்கிறாய்.''

அகிலா கோபத்துடன் மாமனை உற்றுப்பார்த்தாள். ''அவர் ராஜபுதனத்துக்காகப் போராட உத்தேசமா அல்லது ஒரு பெண்ணுக்காகப் போராட உத்தேசமா?'' என்று கேட்டாள்.

''அகிலா! மனிதனென்றால் ஆசாபாசங்கள் இல்லாமலிருக்காது. மனிதன் அவற்றால் சில வேளைகளில் திருந்தலாம். திருந்தக்கூடியவனுக்கு வழிவிடுவதுதான் விவேகம்; வழி மறுப்பது அவிவேகம்.''

''விவேகமுள்ள மனிதன் தானாகவே திருந்தலாமே.''

''பெண் குறுக்கிடும் போது புருஷன் விவேகம் மறைகிறது. ஏனென்றால் பெண்களுக்கு விவேகம் குறைவு. அதுவும் ஒரு புருஷன் மீது ஆசை ஏற்படும்போது விவேகம் மிகக் குறைந்து விடுகிறது. பிடிவாதந்தான் மிஞ்சுகிறது'' என்றார் தயால்ஸா.

அகிலாவின் உதடுகளில் சிறிது புன்முறுவல் தவழ்ந்தது. ''உங்கள் பிடிவாதத்தைவிட என் பிடிவாதம் பெரிதென்று நினைக்கிறீர்களா மாமா?''

''என் பிடிவாதம் தேசசேவைக்கு அநுகூலமாயிருக்கும். உன் பிடிவாதம் அதற்கு இடைஞ்சலாய் இருக்கிறது. இதுதான் வித்தியாசம்'' என்றார் தயால்ஸா.

அகிலா சிறிது யோசித்தாள். ''சரி. அவரை அனுப்புங்கள்'' என்று முடிவில் சொன்னாள். தயால்ஸா அவள் அறையைவிட்டு அகன்ற சிறிது நேரத்திற்கெல்லாம் ரதன் உள்ளே நுழைந்தான்.

அகிலா அவனை கம்பீரமாக ஏறெடுத்துப் பார்த்தாள். உள்ளே இருந்த கடின மனம் அவள் நாணத்தைப் பெரிதும் கரைத்துக் கோபத்தை விழிகளில் நிரப்பியிருந்தது. முதல் கேள்வியை அவளே கேட்டாள்; ''என்னை ஏன் பார்க்க விரும்பினீர்கள்?'' என்று.

ரதன் அவளைப் பார்க்கவில்லை. வேறு எங்கேயோ பார்வையை ஓட்டிக்கொண்டே, நீ ஏன் என்னைப் பார்க்க விரும்பவில்லை?'' என்று கேட்டான்.

''அற்பத்தனமாக நடந்துக் கொள்ளும் எந்த ராஜபுத்திரனையும் நான் பார்க்க விரும்புவதில்லை'' என்றாள் அகிலா.

வார்த்தைகளை ஈட்டிகள் போல் பாய்ச்சுவதில் ரதனும் சளைத்தவனல்லவென்பதை அகிலா அவனது அடுத்த கேள்வியில் தெரிந்து கொண்டாள்.

''அப்படியானால் ஜெய்மல்லை ஏன் வலியச் சென்று பார்த்தாய்?'' என்று ரதன் கேட்டான். அகிலா தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டாள். இதே புருஷனுக்காகத் தான் ஜெய் மல்லிடம் சொன்ன வார்த்தைகள் அனைத்தும் அவள் நினைவில் எழுந்தன. அவள் பதில் பேசவில்லை.

''ஏன் அகிலா! சுடும் உன் நாக்கு குளிர்ந்து விட்டதா? பதில் சொல், எதற்காக ஜெய்மல்லைப் பார்த்தாய்? யாருக்காக அவனிடம் மன்றாடினாய்? இந்த அற்பனுக்காகத்தானே? நான் ரதன் சந்தாவத் என்று அவன் சொன்னபிறகும் எதற்காக என் விடுதலையைக் கோரினாய்? இந்த மாதிரி என்னை சித்ரவதை செய்வதற்கா? நான் தவறுதான் செய்தேன். ஆனால் அதற்காக மன்னிப்பு இல்லையா? அகிலா? ரதன் யாரிடமும் கெஞ்சினதில்லை. உன்னிடம் கெஞ்சு கிறேன். பழைய விஷயங்களை எல்லாம் மறந்துவிடு. உன் ஒரு

வார்த்தை எனக்கு புதுவாழ்வு அளிக்கும். உன்னைத் தூக்கி வருவதாக கேவலமான பந்தயந்தான் போட்டேன். ஆனால் அதை என் சொத்துக்களால் அழித்துவிட்டேன். என் ஜாகீர்களை ஜெய்மல்லுக்குக் கொடுத்துவிட்டேன். சொத்தைத் துறந்தேன். என் பந்தயத்தைச் சொத்தால் துடைத்தேன். அதனால் ஏற்பட்ட அற்பத்தனத்தை, பாபத்தை, என் ரத்தத்தால் துடைக்கவே ஹாராவளி செல்கிறேன். இதோ உன் முன் நிற்பவன் மொகலாய சேனாதிபதி ரதன் சந்தாவத் அல்ல. வாள் ஒன்றையே சொத்தாகக் கொண்ட ராஜபுதனத்தின் ஓர் ஏழை வீரன். அவனை மன்னிக்க உனக்கு என்ன தடை?'' என்று உணர்ச்சியுடன் கூறினான் ரதன்.

எந்த ரதன் சந்தாவத் போரில் இறங்கினால் படைகள் கலங்கினவோ, அப்பேர்ப்பட்ட வீரன், தன் முன்னிலையில் தன் மன்னிப்பை நாடிக் கலங்கி அநாதையைப் போல் நிற்பதைப் பார்க்க அவள் கண்களில் நீர் துளித்தது. அவள் பதில் முன்னைவிட மெதுவாக வெளிவந்தது. ''நீங்கள் யார் என்ற உண்மையை ஏன் முன்பே என்னிடம் சொல்லவில்லை? பொய்ப்பெயர் சொல்லி ஏன் ஏமாற்றினீர்கள்?'' என்றாள்.

''அகிலா! நன்றாகச் சம்பவங்களை யோசித்துப்பார். நானா பொய்பெயரைச் சொன்னேன்? காயம் பட்டு உன் காலடியில் விழுந்த நான் ஸ்மரணை தப்பிவிட்டேன். என் பையிலிருந்த கடிதங்களையும் என் போர்ச் சட்டையையும் பார்த்து நீங்களே என்னை மகாதேவ்ஸிம்ஹனென்று தீர்மானித்துக் கொண்டீர்கள். நான் விழித்தவுடன் உன் தகப்பனார் என்ன சொன்னார் தெரியுமா? 'மகாதேவ்சிங் நீங்கள் யாரென்பது எனக்குத் தெரியும். உங்களுக்குப் பதில் ரதன் சந்தாவத் இந்தப் படுக்கையில் இருந்தால் அவனை இப்பொழுதே யமலோகம் அனுப்பி விடுவேன் என்றார். நீங்கள் இருந்த நிலை அபாயம். நான் வரும் தகவலை முன்பே அறிந்திருந்தீர்கள். நான் உண்மையைச் சொன்னால் உயிருடன் தப்பிக்கமுடியாது. ஆகையால் நீங்கள் அளித்த பெயரை மௌனமாக ஒப்புக்கொண்டேன். இப்பொழுது நினைக்கும் போது அந்தப் பெயரை ஏன் அங்கீகரித்தோம் என்று

வேதனை உண்டாகிறது. ஆனால் உன்னிடத்தில் எவ்வளவோ தடவை உண்மையைச் சொல்ல முயன்றேன். ஆனால் உன்னிடத்தில் ஏற்பட்ட அன்பு என் நாக்கைக் கட்டிவிட்டது. அந்த அன்பை இழந்து ஜீவிக்க நேரிடுமே என்ற பயம் என்னை கோழையாக்கிவிட்டது. அதை நினைக்கும் போதே எனக்கு அவமானமாயிருக்கிறது அகிலா. அதை யுத்தத்தில் என் ரத்தத்தால் துடைத்துவிடுகிறேன். ரதன் அபக்கியாதி அத்துடன் ஒழியட்டும். சந்தாவத்களின் வம்சத்துக்கு ஏற்பட்ட இழுக்கும் மறையட்டும். போருக்குச் செல்பவனுக்கு மன்னிப்பை மறுக்காதே'' என்று ரதன் கேட்டான்.

''என் மன்னிப்பு அவ்வளவு அவசியமா?'' என்றாள் அகிலா தரையைப் பார்த்துக் கொண்டே.

''ஆம் அகிலா. உன் விஷயத்தில் நான் தவறு செய்தேன். ஆனால் உன்னாலேயே ராஜபுதனத்தின் சேவைக்குத் திரும்பினேன். தன்னிடம் சேரும் பாபிகளையும் தன்னைப் போல் பரிசுத்தமாக்கிக் கங்கையைப் போல் உன் அன்பினால் என் அறிவீனத்தை அழித்தாய். உன்னைப் போன்ற பெண்களால்தான் இந்த பாரதம் ஜீவிக்கிறது அகிலா! உன்னைப் போன்றவர் பாரதத்தின் ஜீவன். இதனால்தான் இது ஜீவபூமி. உன்னைப் போன்ற பெண்ணின் இதயத்தில் வெறுப்புக்கு இடமில்லை. என்னை மன்னித்துவிடு. வா என் அருகில்'' என்றான்.

அகிலா மெள்ள அவனை அணுகி, நீர் தோய்ந்த கண்களுடன் அவனை ஏறெடுத்துப் பார்த்து, பெண்களின் உறுதி, ஆண்கள் கண் எதிரில் வராதிருக்கும் மட்டுந்தான். இதைத் தெரிந்து தானே என்னைப் பார்க்க பிடிவாதம் செய்தீர்கள்?'' என்றாள்.

''உன் பிடிவாதத்தின் முன் என் பிடிவாதம் என்ன செய்யும். இவ்வளவு நாட்களாக என்னை எப்படிப் பார்க்காமலிருந்தாய் அகிலா?'' என்றான் ரதன். அவன் கைகள் அவளைச் சுற்றின.

''மாமாவின் பிடிவாதத்திற்கு முன்னால் நமது பிடிவாதம் உறைபோடக் காணாதே. உங்களை நான் பார்க்கத்தான் வேண்டு

மென்று அவர் எவ்வளவு மன்றாடினார் தெரியுமா?'' என்றாள் அகிலா. அவன் கைவளையத்தில் லேசாகச் சுழன்று கொண்டே.

''எல்லா பிடிவாதங்களும் வேண்டித்தானிருக்கின்றன அகிலா. ராஜபுதனத்துக்கு எதிராக வாள் பிடிப்பவனை பார்க்க மாட்டேன் என்ற பிடிவாதம் இல்லாவிட்டால் நான் திரும்பியிருக்க மாட்டேன். ராஜபுதனத்திலிருந்து எதிரிகளைத் துரத்தாமல் தூங்க மாட்டேன் என்ற தயால்ஸா பிடிவாதமாயிருக்கா விட்டால் இன்று ராஜபுதனமும் தலைதூக்கியிருக்காது. நல்ல விஷயங்களில் பிடிவாதம் இருக்க வேண்டியதுதான் அகிலா. அப்பொழுதுதான் இந்த பூமி ஜீவபூமியாகும். நல்லது விதைத்தால் நல்லது விளையும். சொர்க்கபூமியாகக் கூட ஆகும். அது இருக்கட்டும். நீ என்னை மன்னித்துவிட்டாயா சொல். உன் அழகிய உதடுகளால் ஒரு முறை அந்த வார்த்தையைச் சொல்!''

''சொல்லவேண்டுமா?''

''சொல், இல்லாவிட்டால்...''

''உஸ்! மாமா வெளியிலிருக்கிறார், இடம், பொருள், ஏவல்...''

''இடம் எனக்கு இதுதான் பொருள் நீதான். இங்கு எனக்கு ஏவல் உன் மாமாதான்.''

''என்ன அவசரம்? இத்தனை நாள் பொறுத்தவர் யுத்தம் முடியட்டுமே...'' என்றாள் அகிலா.

வெளியே இருந்த தயால்ஸா தமக்குள் சிரித்துக் கொண்டே, ''யுத்தம் முடிந்த மாதிரிதான். இனிமேல் மொகலாயர்களை முறியடிப்பது வெகு சுலபம்'' என்று சொல்லிக்கொண்டார். அந்தச் சமயம் படியேறி உள்ளே போகவந்த பண்டித்ஜீயை தயால்ஸா தடுத்து. ''சந்தர்ப்பம் சரியாயில்லை'' என்றார்.

ஹாஸ்ய புருஷரான பண்டித்ஜீக்கா அர்த்தம் புரியாது. வாய்விட்டுப் பெரிதாகச் சிரித்தார். ரதன் உதயசாகரத்தில் சிரித்த சிரிப்பைவிட அது கொஞ்சம் பலமாகவே இருந்தது!

முற்றிற்று